கதையை ஆரம்பிக்கும் முன் ஒரு சிறு முன்னுரை.

நமது இரு பெரும் இதிகாசங்களில் ஒன்றான 'ராமாயணம்' என்ற காவியத்தை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இராம காதையில் நான்கு சகோதரர்கள் வருவார்கள். அவர்களுக்குத் திருமணமும் நடக்கும்.

பரதன், சத்ருக்கனன் இவர்கள் இருவரும் மனைவியுடன் அயோத்தியில் வாசம் செய்வார்கள். அவர்கள் மனைவியைப் பிரியவில்லை. சீதையோ, 'ராமன் எங்கே நானும் அங்கே' என்று ராமனைப் பின் தொடர்ந்து வனவாசம் சென்று விடுவாள். ஆக ராமனும் மனைவியைத் திருமணம் ஆனவுடன் பிரியவில்லை.

வனவாசத்தின் இறுதியின்போது ராவணன் சீதையைக் கடத்திச் செல்ல அவர்கள் இருவரும் பிரிந்து சேர்ந்த பெரும் சோகத்தைப் பற்றியே நாம் அனைவரும் பேசியிருக்கிறோம்.

ஆனால் திருமணமான உடனேயே தன் புது மனைவியான 'ஊர்மிளை'யைப் பிரிந்து தன் தமையனைக் காவல் காக்க தொடர்ந்து சென்றானே லட்சுமணன்...! அவனது துயரைப் பற்றி அவனைப் பிரிந்து வாழ்ந்த 'ஊர்மிளை'யின் பிரிவுத் துன்பத்தைப் பற்றி நம்மில் எத்தனை பேர் நினைத்துப் பார்த்திருக்கிறோம்?

ஊர்மிளையைப் பிரிந்து சென்ற லட்சுமணன் அவன் சந்தித்த இலங்கைப் போரில் உயிர்தப்பி மனைவியைக் காண வரும் வரை ஊன் உருகக் காத்திருந்தாளே... 'ஊர்மிளை...' அவளுடைய கதைதான் இது.

நமது நாட்டில் எத்தனையோ லட்சுமணன்கள் எல்லையைக் காவல் காக்க தாலிகட்டிய சில நாள்களிலேயே புது மனைவியைப் பிரிந்து செல்கிறார்கள்.

அந்த ராணுவ வீரர்களின் மனைவிகளான 'ஊர்மிளை'களுக்கு இந்தக் கதை சமர்ப்பணம்.

- முத்துலட்சுமி ராகவன்

# காத்திருந்தேன் கார்கிலிலே...



1

பனிமூட்டம் வெண்பொதியாய் சாலையில் கவிந்திருந்தது. உடலைத் துளைக்கும் டிசம்பர் குளிரிலிருந்து தப்பிக்க கனமான உல்லன் ஸ்வெட்டர்களை அணிந்து கொண்டு டில்லிவாசிகள் நடந்து கொண்டிருந்தனர். அந்தக் குளிர் காலத்தில் அவசரமாய் அந்தக் கூட்டம் நடந்தது. ராணுவத் தலைமையகத்திலிருந்து வந்த அதி முக்கிய தகவலொன்றை பிரதமர் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதித்தார். அரசாங்கத்தின் முக்கிய தூண்களாக விளங்கும் முக்கிய அமைச்சர்கள் மட்டும் கலந்து கொண்ட ரகசியக் கூட்டம் அது.

அந்த முக்கிய தகவல் கூறியது. இந்திய அரசுக்குச் சொந்தமான கார்கில் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் கால் வைத்திருக்கிறது.

அதே நேரத்தில் தமிழ்நாட்டில் திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள தாடிக் கொம்பு என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஊர்மிளா திண்டுக்கல்லில் உள்ள கல்லூரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

''அம்மா... இங்கே வைத்திருந்த என் பேனா எங்கே...?''

''ஏண்டி கத்தறே... உன் அப்பாதான் பால் கணக்கு எழுத எடுத்தார். அவரிடம் போய் கேளு'' சத்தியவதி சிடுசிடுத்தாள்.

''காலேஜுக்குக் கிளம்பும்போதுதான் எல்லாத் தொல்லையும் அப்பா... அப்பா...'' என்று அழைத்தபடி ஊர்மிளா வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து கொண்டு மாட்டுக் கொட்டிலுக்குச் சென்றாள். பால்கார முனியன் பாலை அளந்து கேனில் ஊற்றிக் கொண்டு இருக்க, அருகே ஓர் நோட்டில் பால் கணக்கை எழுதிக் கொண்டிருந்த ஜனார்த்தனம் நிமிர்ந்து ஊர்மிளாவைப் பார்த்து,

''என்னடாம்மா காலேஜுக்குப் போகலையா?'' என்று வினவினார்.

தகப்பனாரைக் கண்டதும் வேகம் மட்டுப்பட்டு தயங்கி நின்ற ஊர்மிளா, ''இல்லப்பா... என் பேனா...'' என்று இழுத்தாள்.

''ஓ...'' என்று கையிலிருந்த பேனாவைப் பார்த்த ஜனார்த்தனம்.

''இது உன் பேனாவா... அவசரத்தில் எடுத்து வந்துட்டேன்'' என்று அவள் கையில் கொடுத்தவர்,

''என்டாம்மா... உன் அம்மா எதுவும் சொன்னாளா?'' என்று கேட்டார்.

''இல்லையேப்பா.. என்ன விசயம்?''



''உங்க அம்மாகிட்டப் போய் கேளு சொல்வா. தம்பி சாப்பிட்டு விட்டானான்னு பார்த்தியா? விளையாட்டுப் பையன் விளையாடிக்கிட்டே இருக்கப் போகிறான்.''

''சாப்பிட்டுட்டான்ப்பா, ஸ்கூலுக்குக் கிளம்பிக்கிட்டு இருக்கான்.''

தந்தைக்கு பதில் சொல்லிவிட்டு உள்ளே வந்தவள் சத்தியவதியைப் பார்த்து, ''அம்மா அப்பா என்கிட்ட என்ன சொல்லச் சொன்னார்?'' என்று கேட்டாள்.

சத்தியவதி அவளுக்கான மதிய உணவை டப்பாவில் போட்டபடி,

''சாயந்திரம் சீக்கிரம் வரச் சொன்னார்...'' என்றாள்.

''அது பிரச்னையில்லைம்மா... ஃபைனல் இயர் எக்ஸாம்தான் நடக்குது.. மதியம் வரைதானே பரிட்சை இருக்கும். மதியத்திற்கு மேல் லீவ்தானே.. நீ ஏன் வீணாய் மதியச் சாப்பாட்டைக் கட்டிக் கொடுக்கிறே... சரி சாயந்திரம் என்ன விசேஷம்.''

''உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள்...''

''என்னது... ஏன் என்கிட்ட முதலிலேயே சொல்லவில்லை?''

''ஏண்டி படிப்பு இந்த வாரத்தோடு முடியுது.. அப்புறம் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே.''

''அது சரி... அதுக்கு வேற ஆளைப்பாரு... எனக்கும் வேலைக்குப் போகணும். இல்லேன்னா மேலே படிக்கணும்.''

''படிச்ச வரை போதும். நல்ல இடத்திலிருந்து கேட்டு வருகிறார்கள் அவங்க வந்து பார்த்து உன்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லி விட்டால் உடனே கல்யாணம்தான்.''

''எனக்குப் பிடிக்க வேணாமா?''

''உனக்கென்ன தெரியும். பாவம் சின்னப் புள்ளை நீ.''

''சின்னப் பிள்ளைக்கு எதுக்குக் கல்யாணம் பண்றீங்க.''

''போடி வாயாடி.. இதைப் போய் உங்கப்பா கிட்ட கேளு.. டேய் பலராமா... டிபன் டப்பாவை எடுத்துக் கிட்டியா...''

மகனை அதட்டினாள் சத்தியவதி.

ஊர்மிளாவின் மனம் சிணுங்கியது.

மாப்பிள்ளைக்கு பெண்ணைப் பிடித்திருந்தால் போது மாம். அவளுக்கு அவனைப் பிடிக்க வேண்டாமா? தன் தம்பி பலராமனின் திருமணத்தின்போது அவனிடம் இப்படிச் சொல்வார்களா? ஒரு திருமணத்தில் துணையை நிர்ணயிக்கும் உரிமை ஆண்களுக்கு மட்டும் வழங்கப் படுவதேன்? பெண்களுக்கு அந்த உரிமை மறுக்கப் படுவதேன்?'

''அக்கா... நான் கிளம்பிட்டேன்'' பலராமன் கத்தினான்.

''ஏண்டா கூச்சல் போடறே. நான் என்ன செவிடா?'' ஊர்மிளா தம்பி மேல் எரிந்து விழுந்தாள்.

''ஏய்.. உன் கோபத்தை அவன்கிட்ட ஏண்டி காட்டுற?'' சத்தியவதி அதட்டினாள்.

''அம்மா.. மாப்பிள்ளை யார்.. என்ன வேலை பார்க் கிறான்னுகூட சொல்ல மாட்டியா?''

''மிலிடிரியில் வேலை பார்க்கிறார்... ஊர் சோழவந்தான் பக்கத்தில் இருக்கும் மேலக்கால்... ஒரே தங்கை, அப்பா அம்மா மட்டும்தான்.. போதுமா...'' என்று கேட்டவாறு உள்ளே வந்தார் ஜனார்த்தனம்.



தாயிடம் மல்லுக்கு நின்றவள் தகப்பனிடம் எதிர்த்துப் பேச முடியாமல் தலை குனிந்தவாறு, ''நான் காலேஜ் போகிறேன்'' என்று மெதுவான குரலில் கூறிக் கொண்டே கிளம்பினாள்.

பலராமன் பின்னே அமர்ந்து கொள்ள ஸ்கூட்டியைக் கிளப்பியவள் விரைவாக ஓட்டிச் சென்று மறைந்தாள்.

''என் கிட்டத்தான் உங்க மகளுக்கு வாய் கிழியும். உங்ககிட்ட வாய் அடைச்சுக்கும்... நானுன்னா இந்த வீட் டில் எல்லோருக்கும் தொக்கு'' என்று குமைந்தாள் சத் தியவதி.

''எல்லோரும்ன்னு என்னையும் ஏண்டி சேர்த்துச் சொல்றே.. நான்தான் நீ உட்காருன்னா உட்காருகிறேன். எந்திரின்னா எந்திரிக்கிறேனே...'' என்று கொஞ்சலாய் கூறினார் ஜனார்த்தனம்.

''சரி... சரி... தள்ளியே நின்னு பேசுங்க. பிள்ளைகள் படிக்கப் போய் விட்டாப் போதுமே. உங்களுக்குக் கட்ட விழ்த்து விட்ட மாதிரி இருக்கும். சாயந்திரம் ஊர் மிளாவைப் பார்க்க வர்றவங்களுக்கு அவளைப் பிடிச்சிப் போயி...''

''பிடிக்காமல் எப்படிப் போகும்? என் மகள் அழகென்ன அறிவென்ன?''

''தெரியுதில்ல... அவ கல்யாணம் பண்ணி புருஷன் வீட்டுக்குப் போயிட்டா பலராமன் படிக்க எப்படி டவுனுக் குப் போவான்? ரெண்டு புள்ளைகளையும் டவுனுக்கு அனுப்பி படிக்க வைக்கிறோம்... இப்ப அவன் அக்கா பின்னாலே வண்டியில் உட்கார்ந்து போய் வந்திடறான். நாள பின்ன எப்படி போய் வருவான்? அடுத்த வருசம் பத் தாவது வேற வந்திடுவான். கவர்ன்மெண்ட் எஸ்.எஸ்.எல்.சி.

பரிட்சை... டியூசனுக்கெல்லாம் போகணும். உங்களுக்கு அந்த நினைப்பெல்லாம் இருக்கறதில்லை.''

''அதுக்காக என் மகள் உன் மகனுக்கு டிரைவர் மாதிரி வண்டியோட்டிக்கிட்டே இருக்க முடியுமா?''

''என் மகனாயில்ல... உங்களுக்கு மகள் தான் உசத்தி.''

''ஆமாண்டி. அவள்தான் எனக்கு உசத்தி. அவ பிறந்த பின்னால் தான் இரண்டு கறவை மாடு இருபது கறவை மாடாச்சு. பத்து ஏக்கர் நிலம் முப்பது ஏக்கராச்சு. ஓட்டு வீடு காரை வீடாச்சு.''

''ஆமாம்.. அவ பிறந்து வந்துதான் காடுகளுக்குப் போய் உழைச்சா. மாடு, கன்றை குளிப்பாட்டி சாணி பொறுக்கி வரட்டி தட்டினாள். ஆணும், பெண்ணுமாய் நாம் ரெண்டு பேரும் உழைச்சோம். முன்னுக்கு வந்தோம். அதை விட்டுட்டு அவ பிறந்தாளாம். இவர் வளர்ந்தாராம்'' முகவாயைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள் சத்தியவதி.

''மெல்லடி... மெல்ல.. நாடி பிச்சுக்கப் போகுது... என் மகளை நான் அப்படித் தாண்டி தாங்கிப் பேசுவேன்... உனக்கென்ன? பலராமன் படிப்புக் கெடக்கூடாது அவ்வளவுதானே.. அவனுக்கும் ஓர் வண்டியை வாங்கிக் கொடுத்துடறேன்.. அவன் பாட்டுக்குப் போய் வரட்டும். என்ன நான் சொல்றது சரிதானே... இப்ப இட்லியைப் போடு பசி பிடுங்குது.''

கல்லூரியில் கடைசி ஆண்டின் இறுதித் தேர்வை எழுதிக் கொண்டிருந்த ஊர்மிளாவிற்கு மனம் சரியில்லை.

பொதுவாகவே கல்லூரியின் கடைசி ஆண்டின் கடைசி நாளில் பிரியும் மாணவ மாணிகளின் வேதனை



சொல்லில் உரைக்க முடியாததாக இருக்கும். அத்தோடு மாலை பெண் பார்க்கும் படலம் வேறு மனதை அழுத்தியது.

''பேசாமல் மௌன ராகம் சினிமாவில் ரேவதி செய்தது போல வீட்டுக்கு நைட் பத்து மணிக்கு போடி.''

ஐடியா கொடுத்தாள் ஷகிலா. ஊர்மிளாவைச் சுற்றியிருந்த மற்ற தோழிகள் அதுதான் சரியென்றார்கள்.

''சேச்சே... அது தப்பு. என்னைப் பெற்றவர்களைப் பற்றி வந்தவர்கள் என்ன நினைப்பார்கள்? அப்பா அம்மாவிற்கு தலை குனிவை உண்டாக்க என்னால் முடியாது.''

''மாப்பிள்ளை என்ன வேலை பார்க்கிறான்னு சொன்னே?''

''மிலிடிரியாம்...''

''அப்போ... மீசையும் கீசையுமா ஒரு முரட்டு ஆள் வந்து உன்னை அலேக் பண்ணப் போறான்னு சொல்லு...''

''ச்சீ... ஏண்டி நீ வேற... நானே இந்தக் கல்யாணத்தை எப்படி அவாய்ட் பண்ணலாம்ன்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன். நீ அலேக் பண்ணுகிற வரை போயிட்ட?''

''பேசாமல் பெண் பார்க்கிறவங்க முன்னாடி போய் நில்லு. எப்படியும் உனக்குப் பிடிச்சிருக்கான்னு ஒரு வார்த்தை கேட்பாங்க... கேட்பாங்க இல்ல...?''

தந்தையின் நினைவில் மனம் கனிந்தது ஊர்மிளாவிற்கு.

''எங்கப்பா என்னிடம் கட்டாயம் கேட்பார்...''

''அப்போது மாப்பிள்ளை பிடிக்கவில்லைன்னு பட்டுன்னு சொல்லி விடு.''

தோழிகள் சொல்லிக் கொடுத்தார்கள். எல்லாரும் கூடிக் கூடிப் பேசி கடந்த நாள்களின் மகிழ்வை நினைவில் கொண்டு வந்து மனமேயில்லாமல் பிரிந்தார்கள்.

ஊர்மிளா வீடு திரும்பும்போது மணி மூன்றாகி விட்டிருந்தது. பலராமன் வீட்டினுள்ளேயிருந்து ஓடி வந்து கொண்டிருந்தான். வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திப் பூட்டியவள் சாவியை எடுத்துக் கொண்டு,

"எப்ப வந்த... எப்படி வந்தே?'' என்று கேட்டாள்.

"மதியம் ஸ்கூல் கட். அப்பா வந்து கூட்டி வந்தார்'' என்றான் அவன் வகுப்பை கட் பண்ணிய சந்தோசத்துடன்.

"ஏண்டா என்னைத்தானே பெண் பார்க்க வருகிறார்கள். நீ ஏன் வகுப்பைக் கட்டடிக்கணும்?'' என்று கடிந்து கொண்டாள் ஊர்மிளா.

"நீ மட்டும் மாப்பிள்ளையைப் பார்ப்பாய். நான் பார்க்க வேண்டாமா?'' என்று அவன் பதில் சொல்லவும் வீட்டில் பட்சணம் செய்ய உதவிக்கு வந்திருந்த பக்கத்து வீட்டுப் பெண்கள் சிரித்தார்கள்.

"ஏண்டா... அவ கட்டிக்கப் போற.. நீ யாரு?''

"நான் அவரோட மச்சினன் தெரியுமா?'' என்றபடி அவன் வெளியே ஓடிவிட்டான்.

"பலராமனுக்கு கொண்டாட்டத்தைப் பாரு. அக்காவுக்குக் கல்யாணமின்னதும் இவனில்ல கிடந்து குதிக்கிறான்.''

அவர்கள் தங்களுக்குள் பேசிச் சிரித்துக் கொண்டார்கள். ஊர்மிளாவின் மனதில் தம்பியின்பால் அன்பு சுரந்தது.

வீட்டில் பட்சண வாடை நிரம்பியிருந்தது.

"ஏண்டி இப்படி மரமாட்டம் நிற்கிற... போ... போய் முகம் கழுவி பட்டுப் புடவை கட்டி.. தலையைப் பின்னி பூ வைச்சுக்க. நான் வந்து பீரோவில் இருக்கிற நகைகளை எடுத்துப் போட்டு விடறேன்'' சத்தியவதி விரட்டினாள்.

ஊர்மிளா முகம் கழுவி தலை வாரிப் பின்னினாள். தாய் எடுத்துக் கொடுத்த பட்டுச் சேலையைக் கட்டிக்



கொண்டாள். உள்ளே வந்த சத்தியவதி கட்டி வைத்திருந்த மல்லிகைச் சரத்தை அவள் தலை நிறைய நீண்டு தொங்கும்படி அழகாக வைத்து விட்டாள்.

மகளின் காதுகளுக்கு கல் தொங்கட்டான்கள் போட்டு விட்டுக் கழுத்திற்கு கல் அட்டிகையும் ஆரமும் அணிவித்து விட்டு, கைகளுக்கு கல் வளையல்களை போட்டு விட்டவள் மகளின் அழகைக் கண்டு பிரமித்தாள்.

"என் கண்ணே! என் கண்ணே பட்டு விடும் போலிருக்குடி... எவ்வளவு அழகா அம்சமா இருக்கடி ராஜாத்தி... போ.. போய் தம்பியைக் கூட்டிக் கிட்டு பெருமாள் கோவிலுக்குப் போய் விட்டு சீக்கிரம் வந்துவிடு. அம்மாவும் கூட வருவேன்... ஆனால் வேலை தலைக்கு மேல இருக்கு...''

தாடிக் கொம்பு என்ற அந்தக் கிராமத்தில் பிரசித்திப் பெற்ற பெருமாள் கோவில் இருந்தது. தேய்பிறை அஷ்டமி சமயத்தில் அங்குள்ள பைரவர் சன்னிதியில் முறையிட்டால் வராத கடன்கள் வசூலாகும். கடன்கள் சீக்கிரம் அடையும். தொல்லைகள் தீரும் என்பது காலம் காலமாகத் தொன்று தொட்டு இருந்து வரும் நம்பிக்கை.

ஊர்மிளாவின் குடும்பம் யாதவ குலத்தைச் சேர்ந்தது. அவர்களுக்கு கிருஷ்ணன் தான் குலதெய்வம். வீட்டில் எந்த நல்ல காரியம் நடந்தாலும் அதற்கு முன்னர் பெருமாள் கோவிலுக்குப் போய் வணங்கி விட்டுத்தான் ஆரம்பிப்பார்கள். ஊர்மிளாவுக்கோ நாராயணக் கடவுள் ஓர் நண்பன். பேசாமல் கடவுளிடம் போய் மனதைச் சொல்லலாம் என்று தம்பியைத் தேடிப் பிடித்து கோவிலுக்கு அழைத்தாள்.

"அக்கா... இப்பவே கல்யாணப் பெண் மாதிரி இருக்க...'' என்று அதிசயித்தவனிடம்,

"வாடா கோவிலுக்குப் போய் வரலாம்" என்று அழைத்தாள்.

எப்போதும் மறுக்கும் விளையாட்டுப் பிள்ளையான அவன் இப்போது தமக்கையின் மேல் எழுந்த திடீர் அன்பால் பேசாமல் தமக்கையின் கை பிடித்துக் கொண்டு கோவில் சென்றான்.

மனமுருக பெருமாளின் சன்னிதியில் நின்று அவள் வேண்டிக் கொண்டிருக்கும்போதே பலராமனை அவனது நண்பன் ஒருவன் அழைக்க அவன் ஓடி விட்டான்.

கண் மூடி பெருமாளிடம் மனதில் இருப்பதைக் கொட்டிக் கொண்டிருந்த ஊர்மிளா தம்பி சென்றதை அறியவில்லை.

வேண்டி முடித்து தீபாராதனை தட்டைத் தொட்டு அதன் ஜோதியை கண்ணில் ஒற்றிக் கொண்டு திரும்பியவள்,

"வாடா போகலாம்" என்றபடி அருகிலிருந்தவனின் கரம் பிடித்து இழுத்தாள்.

"எங்கே போவது என்பதைச் சொன்னால் தேவலை" என்ற கனத்த ஆண் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பியவள் பதறிப்போய் அந்தக் கரத்தை விட்டாள்.

அங்கே உயரமாய் ஆஜானுபாகுவாய் பெரிய மீசையோடு ஒட்ட வெட்டப்பட்ட தலை முடியோடு அவள் அறியாத ஆண் ஒருவன் நின்றிருந்தான்.




இந்திய எல்லைப் பகுதியில் பதட்டம் நிலவியது. பனி, மழை என்று பாராமல் இரவு, பகல் கண் விழித்துக்



காவல் காத்தும் இந்திய மண்ணில் பாகிஸ்தானியர் கால் ஊன்றி விட்டனரே என்ற ரத்தத் துடிப்பு ஒவ்வொரு இந்திய ராணுவ வீரனுக்குள்ளும் கொதித்துக் கொண்டிருந்தது.

இந்திய ராணுவம் போருக்கான தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அரசாங்கத்திடமிருந்து செய்தி வரலாம் என்று அவர்கள் காத்திருந்தனர்.

தமிழ்நாட்டில் சோழவந்தானுக்கருகே உள்ள மேலக்கால் கிராமத்தில் வைகை ஆட்சி செய்தது. மேலக்கால் கிராமத்து வாய்க்கால் நீரைக் குடித்தால் தேங்காய் தண்ணீர் குடித்தது போலிருக்கும் என்று அக்கிராம மக்கள் பெருமைப் படுவார்கள். சுற்றியுள்ள நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அங்கிருந்துதான் நல்ல தண்ணீர் அனுப்பப்பட்டு வந்தது. வைகை ஆற்றுப் பாசனத்தில் மூன்று போகம் பயிர் செய்யும் செழுமையான பூமி அது.

பொன் விளையும் பூமியான அந்தக் கிராமத்தில் நாற்பது ஏக்கர் வயலுக்குச் சொந்தக்காரர் ஆன தயாநிதியின் வீட்டில் அன்று ஒரு விசேஷம். அவரது மூத்த மகனுக்கு பெண் பார்க்க கிளம்பிக் கொண்டு இருந்தார்கள்.

''அண்ணே... இது உங்களுக்கே நல்லாயிருக்கா? கூடப் பொறந்த பொறப்புத்தான் உசத்தி... சித்தப்பன் மகள்ன்னா தள்ளி வைக்கணுமின்னு முடிவே பண்ணிட்டிங்களா... என் மருமகனுக்கு பெண் பார்க்க செவ்வந்தி வரலாம் நான் வரக்கூடாதா.. அவ கிட்ட மட்டும் தகவல் சொல்லிட்டு என்னை எப்படி நீங்க மறக்கலாம்?'' என்று அவரின் ஒன்று விட்ட தங்கை வம்பு வளர்த்துக் கொண்டு நின்றாள்.

தயாநிதியின் தங்கை செவ்வந்திப் பேசியவளை முறைத்தாள்.

"ஆளுக்கு ஆள் உரிமை கொண்டாடுங்கடி... அக்கா, தங்கச்சி முறையில் ஊரில் ஆயிரம் ஜனம் இருக்கு.... அம்புட்டு பேரும் வண்டியைக் கட்டிக்கிட்டு கல்யாணத்துக்கு வாங்கடி... இப்போ உன்னைக் கூப்பிட்டுப் போனால் மத்த உறவு முறைக்கு யார் பதில் சொல்றது...?"

"செவ்வந்தி சொல்றதும் சரிதானே... இப்ப தயாநிதிக்கு ஒரே மகன், ஒரே மகள்தான்... ஆனா ஒன்றுவிட்ட அண்ணன், தங்கச்சி ஆயிரம் பேர் இருப்பாங்க... கூடப் பிறந்ததுன்னா லட்சுமணனும், சுபத்திராவும் தானே" கூட்டத்தில் யாரோ ஒருவர் நியாயம் சொன்னார்.

தயாநிதியின் மனைவி ஈஸ்வரி கையைப் பிசைந்தாள். கணவன் வீட்டுச் சொந்தக்காரர்களில் யாரை விட்டுப் போவது? யாரைக் கூட்டிப் போவது? தயாநிதி துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வாசலுக்கு வந்தார். சத்தம் போட்டுக் கொண்டிருந்த சித்தப்பன் மகளைப் பார்த்தார்.

"பாரும்மா... உன்னை மட்டுமென்ன ஊரையே நம்ம லட்சுமணனுக்கு பெண் பார்க்க கூட்டிக்கிட்டுப் போக நான் ரெடி. ஆனால் பொண்ணு வீட்டுக்காரங்க சாப்பாடு போட ரெடியாயிருக்க வேண்டாமா? அந்தப் பெண்ணையே நிச்சயம் பண்ணப் போறோம்ன்னாக்கூட ஊரே போய் இறங்கலாம். வெறுமனே பொண்ணுப் பார்க்கப் போகிறதுக்கு கூட்டமா போனா சரி வருமா? லட்சுமணன் பொண்ணைப் பார்க்கணும். அவனுக்கும் பிடிச்சிருக்கணும். அப்புறம்தானே மத்ததெல்லாம்... இப்ப பொறுமையா இருங்க... என் மகனுக்கு பொண்ணு பிடிச்சிருச்சுன்னா அந்த ஊரையே ஒரு கலக்கு கலக்கிட்டு வந்திடலாம்... என்ன நான் சொல்றது?"



கூடியிருந்த உறவுக்காரர்கள் சமாதானம் ஆகினர். ஈஸ்வரிக்கு 'அப்பாடா' என்றிருந்தது. கிராமங்களில் இது ஒரு அன்புத் தொல்லை. கிராமம் முழுவதும் ஒருவருக்கொருவர் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். இதில் தனி ஒரு ஆள் பட்டினி கிடந்தாலும் சாப்பாடு கொடுத்து தூக்கி விட ஊரே ஒன்று சேரும். அதே போல விருந்து சமைத்தாலும் பகிர்ந்து சாப்பிட ஊரே வந்து விடும். கிராமத்தில் தனிமை என்பது யாருக்கும் கிடையாது.

எல்லோரையும் எவ்வளவுதான் காரணம் சொல்லி தடுத்து நிறுத்தினாலும் நெருங்கிய சொந்தங்கள் என்று டாடா சுமோவில் அடைந்த தங்கை குடும்பத்தாரையும், தம்பி வீட்டாரையும் எண்ணினால் பதினைந்து பேரைத் தாண்ட 'கடவுளே' என்று பெருமூச்சு விட்டபடி பெண் பார்க்கப் போகும் மகனிடம்,

"உனக்கு இடம் இருக்குமாடா?" என்று வினவினார் தயாநிதி.

"டிரைவர் பக்கத்தில் ரிசர்வ் செய்திட்டேன்ப்பா. நீங்கள் யார் மடியிலாவது உட்காரப் பாருங்கள்" என்றவாறு லட்சுமணன் முன் பக்கம் டிரைவர் அருகே ஏறி அமர்ந்தான்.

தயாநிதி யார் மடியில் உட்கார்ந்தால் தாங்குவார்கள் என்று பார்த்து தாய்க்குப் பின் தாரம் தானே தாங்க வேண்டும் என்று மனைவியின் மடிமீது அமர்ந்தார். ஒரு வழியாய் டாடா சுமோ கிளம்பியது.

"ஏண்டா மகனே... பொண்ணு போட்டோ கீட்டா பார்த்தியா?" என்று வினவினார் கலைமதி, லட்சுமணனின் சித்தப்பா.

"எங்கே சித்தப்பா... அந்தப் பழக்கமெல்லாம் அவங்க குடும்பத்தில் கிடையாதாம். நேரே பார்த்தால் போதுமாம்.." அலுத்துக் கொண்டான் அவன்.

"இது என்னடி அதிசயமா இருக்கு... அந்தக் காலத்தில் உன் சித்தப்பா என் போட்டோவ மட்டும் பார்த்திட்டு நேரே மணமேடைக்கு வந்து தாலி கட்டிட்டாரு..." பெருமையுடன் கூறினாள் சாந்தா லட்சுமணின் சித்தி.

"அந்தக் கொடுமைய ஏண்டி இப்ப ஞாபகப்படுத்தற... டேய் மவனே போட்டாவக் காட்டி ஏமாத்திட்டாங்கடா... அந்த மூஞ்சி வேற... இந்த மூஞ்சி வேற..." கலைமதி தலையில் அடித்துக் கொள்ள சாந்தா காளி அவதாரம் எடுத்தாள்.

"ஏன்... அந்த மூஞ்சிக்கு இந்த மூஞ்சி பத்தலையோ... இஞ்சி தின்ன குரங்கு மாதிரி மூஞ்சியை வைச்சுக்கிட்டு பேச்சைப்பாரு பேச்சை..."

சற்று நேரம் அவர்கள் பஞ்சாயத்து நடந்து முடிய தயாநிதியின் தங்கை செவ்வந்தி வேறு ஒன்று ஆரம்பித்து வைத்தாள்.

"லட்சுமணனுக்குத்தான் அசலூரில் பொண்ணு எடுக்கிற கஷ்டம் வந்திருச்சு... ராமசாமிக்குத்தான் பிரச்னையே இல்லை. கைமேல் வெண்ணையாக என் பொண்ணு சீதா இருக்காளே..."

ராமசாமி கலைமதியின் மகன்.

"ஆமாம். கேணச்சி நான்தானே.. ஈஸ்வரி அக்கா மகனுக்கு ஊர் ஊரா வலைவீசி பொண்ணு தேடுவாங்க... என் மகனுக்கு மட்டும் உன் பொண்ணா... அதுக்கு வேற ஆளைப்பாரு..." சாந்தா கூறினாள்.

அவ்வளவு தான் செவ்வந்தி சீறிப் பாய்ந்து விட்டாள்.

"அம்மாடி சாந்தா அடங்கு... இங்கே ஈஸ்வரி மகனுக்கும், சாந்தா மகனுக்கும் பொண்ணு கொடுக்கணும்னு நான் தவம் கிடக்கலை. என் பெரியண்ணன் மகனுக்கும், சின்னண்ணன் மகனுக்கும் பொண்ணு கொடுக்கத்தான் தவம் கிடக்கிறேன்" என்று அவள் போட்டுத் தாக்க இப்போது ஈஸ்வரிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.



"ஆமாம்மா... உன் அண்ணன் மகன் வானத்தில் இருந்து பொத்துன்னு குதிச்சான். பத்து மாசம் சுமந்து பெத்தது நான்ம்மா. பத்தியச் சாப்பாடு சாப்பிட்டதும் நானும்மா. வார்த்தை வளர்க்காதே."

செவ்வந்தியின் கணவன் சுந்தரம் மனைவியை அடிக்க வந்தார்.

"ஏண்டி உன் அண்ணன் மகன் என் பொண்ணைக் கட்டிக்க தவமிருக்கனும்.. அதை விட்டுட்டு நீ பொண்ணைக் கொடுக்க தவமிருப்பியா..."

மீண்டும் கலவரம் ஆரம்பிக்க இது எதையும் கவனிக்காத கலைமதியின் பத்து வயது மகன் ராமசாமி செவ்வந்தியின் எட்டு வயது மகள் சீதாவுடன் மிட்டாயைக் காக்காய் கடி கடித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வாடகைக் காரின் டிரைவர் கலவரத்தில் பயந்து போய் அடிக்கடி பின் பக்கம் பார்த்துக் கொண்டே வண்டியை ஓட்ட, லட்சுமணன்,

"டிரைவர் சார் இதையெல்லாம் கண்டுக்காதீங்க.. இதெல்லாம் சும்ம்ம்ம்மா..." என்று ஆறுதல் கூறினான்.

"எப்படித் தம்பி... வெட்டு, குத்து வந்திரும் போல இருக்கே..." டிரைவர் பயந்த குரலில் கூறினார்.

"இப்ப நிலைமை சரியாகனும் அவ்வளவுதானே... நான் சொல்வதை அவங்க பக்கம் திரும்பிச் சொல்லுங்க.." லட்சுமணன் டிரைவரின் காதில் ரகசியமாய் எதையோ கூறினான்.

டிரைவர் பின் பக்கம் திரும்பிப் பார்த்துக் கூறினார்.

"அடடா... என்ன சார் இந்தச் சத்தம் போடறீங்க... இந்த மேலக்கால் ஆளுகளுக்கே பந்த பாசம் கிடையாது போல இருக்கே.."

அவ்வளவுதான் ஆளுக்கு ஆள் ஒருவரோடு ஒருவர் சண்டை போடுவதை விட்டு விட்டு ஒற்றுமையாய் டிரைவர் மேல் பாய்ந்தார்கள்.

"யாரைப் பார்த்து பந்த பாசம் இல்லாதவங்கன்னு சொன்னே.. என் மேல் தூசு பட்டாலும் என் அண்ணன்களுக்குப் பொறுக்காது.. என் மதனிகளோ அதைவிட உயிரை விடுவாங்க" செவ்வந்தி சிலிர்த்துக் கொண்டாள்.

"அதானே.. என் நாத்தனார் மட்டும் குறைஞ்சவளா... ஊரில் ஒருத்தர் அவ பிறந்த வீட்டைப் பார்த்து ஒரு பேச்சு பேசிட முடியுமா... தடியைத் தூக்கிக்கிட்டு வந்திடுவாளே..." சாந்தா பெருமையாகக் கூறினாள்.

"எதற்குடி அடுப்பெரிக்கவா?" என்று கலைமதி கேட்க...

"நீங்க வேற மச்சான்... மண்டையை உடைக்கத்தான்" என்றார் சுந்தரம்.

"அனுபவம் பேசுது போல..." என்றான் லட்சுமணன் கேலியாக. டிரைவர், "எப்படி சார் இவ்வளவு கரெக்டா இவங்களை எடை போட்டு வச்சிருக்கீங்க?" என்று வியந்தான்.

"ஏன்னா நான் ஒரு மிலிடிரிமேன். மிலிடிரியில் எல்லா ஸ்டேட்காரங்களும் இருப்பாங்க. எல்லா பாஷையும் பேசுவோம். இந்து, முஸ்லீம், கிறிஸ்டியன்னு வேற வேற மதம். ஆனால் போர்ன்னு வந்திட்டால் நாங்க எல்லோரும் இன்டியன் ஆர்மிங்கற நினைப்பு மட்டும்தான் இருக்கும்.



எங்களுக்குள் அடிச்சுக்கிட்டாலும் எதிரியை அடிக்க நாங்கள் ஒன்று படுவோம். எங்கள் தாய்நாடு இந்தியா. அதன் ஒரு துகள் மண்ணைக் கூட காப்பாற்ற வேண்டியது ராணுவ வீரர்களான எங்கள் கடமைன்னு போராடுவோம்."

திண்டுக்கல்லைத்தாண்டி பத்து கிலோ மீட்டரில் இருந்தது தாடிக் கொம்பு. தூரத்திலேயே பெருமாள் கோவில் தெரிய அதன் விசேஷம் அறிந்தவர்களான அவர்கள் கன்னத்தில் போட்டுக் கொண்டனர்.

"இந்த ஊர் பெருமாள் கோவில் சுற்று வட்டாரத்திலேயே பெயர் பெற்றது" என்றார் தயாநிதி.

"ஏண்ணே.. இங்க பக்கத்திலதானே 'அகரம்'கிற ஊர் இருக்கு? அகரத்து முத்தாழம்மன் திருவிழான்னா தமிழ்நாட்டுக்கே தெரியுமே... பல்லி மூலமா அம்மா உத்திரவு தந்தால்தான் காப்பு கட்டி திருவிழாவைக் கொண்டாடுவார்களாம். வெறும் களிமண்ணில் அம்மன் சிலையைச் செய்வார்களாம். திருவிழா முடிஞ்சு அம்மன் சிலையை தாடிக் கொம்பு, அகரம் ஊர்களுக்குப் பின்னாலிருக்கிற ஆற்றில் கரைப்பார்களாம். உடனே மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டிடுமாம்" செவ்வந்தி விவரிக்க ஈஸ்வரியும், சாந்தாவும் 'ஆ'வென்று வாய் பிளந்து கேட்டுக் கொண்டு வந்தார்கள்.

சுபத்ரா தந்தையின் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். அவர் காதில் கிசுகிசுத்தாள்.

"ஏம்ப்பா இவங்களா இத்தனை நேரம் குடுமிப்பிடி சண்டை போட்டாங்க..."

ஊரின் உள்ளே கார் நுழைந்தது. செவ்வந்தி கேட்டாள்.

"ஏண்ணே.. பொண்ணு பார்த்திட்டு காபி பலகாரம் விழுங்கிட்டுக் கிளம்ப எவ்வளவு நேரமாகுமோ என்னவோ...

இவ்வளவு சக்தி வாய்ந்த கோவில் இருக்கிற ஊருக்கு வந்திருக்கிறோம். முதல்ல சாமியைக் கும்பிட்டுட்டு அப்புறம் பொண்ணு பார்க்கப் போகலாமே.''

''அதுதான் சரி. ஏம்பா டிரைவர் தம்பி வண்டியை கோவில் வாசலுக்கு விடு'' ஈஸ்வரி உத்தரவிட்டாள்.

லட்சுமணன் தயாநிதியின் முகம் பார்க்க,

''என்னை ஏண்டா பார்க்கிற.. அதான் உங்க அம்மாவும், சித்தியும், அத்தையும் ஒன்னு சேர்ந்திட்டாங்கல்ல.. இனி என் பேச்சு எடுபடுமா?'' என்றார் அவர்.

வண்டி கோவில் வாசலில் நின்றது. அனைவரும் திபு திபுவென இறங்க தயாநிதி ''அம்மாடி'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார். வாசலில் அர்ச்சனைத் தட்டு வாங் கும் இடத்தில் குடும்பச் சண்டை ஆரம்பித்துவிட டிரை வர் வண்டிக்குள்ளேயே பதுங்கினார். வாண்டுகளோடு சுபத்திரா கோவிலைச் சுற்றிப் பார்க்கச் சென்று விட்டாள்.

லட்சுமணன் திரும்பிப் பார்த்தான். பெரியவர்கள் இன் னும் சமரசம் ஆகவில்லை. தோளைக் குலுக்கிக் கொண்டு கோவிலுக்குள் சென்று பார்க்கலாம் என்று சென்றான்.

உட்பிரகாரத்தில் பெருமாளின் சந்நிதியில் கைகுவித்து வேண்டிக் கொண்டிருந்த அந்த இளம் பெண்ணின் தோற்றம் அவனைக் கவர்ந்து இழுத்தது.

மாம்பழ வண்ணத்தில் அரக்குச் சிகப்பில் கரையிட்ட பட்டுப் புடவை உடுத்தி நீண்ட பின்னலில் மல்லிகை சரிய அவள் கண் மூடி தெய்வத்தைக் கும்பிட்ட தோற்றம் அவனை ஈர்த்தது.

'எவ்வளவு அழகான பெண்' என்று வியந்து கொண் டான் அவன். 'இவ்வளவு நீண்ட பின்னல் எப்படி வந்தது...



ஒரு வேளை சவுரி முடியோ என்று நினைத்தவனுக்கு ஜடையை இழுத்துப் பார்க்க கை துறுதுறுத்தது. 'என்ன வேலை செய்கிறோம்' என்று நினைத்துக் கொண்டான் அவன்.

ஒரு ராணுவ வீரனாக இருந்து கொண்டு கோவிலுக்குள் வந்து முன்பின் தெரியாத பெண்ணை 'சைட்' அடித்துக் கொண்டிருக்கிறான். அதுவும் எதற்கு அந்த ஊருக்கு வந்திருக்கிறான். திருமணத்திற்குப் பெண் பார்க்க..!

தன்னைத்தானே கடிந்து கொண்டவன் பார்வையைத் திருப்ப முனைந்தபோது அந்தப் பெண் வேண்டுதலை முடித்துக் கண் திறந்தாள். அர்ச்சகரின் கையிலிருந்த தீபாராதனைத் தட்டைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அவர் கொடுத்த குங்குமத்தைப் பெற்றுக் கொண்டு நெற்றியில் இட்டுக் கொண்டவள் திரும்பினாள்.

அவளை ஒருதரம் நேருக்கு நேர் பார்த்துவிடும் ஆசை யில் அவன் தயங்கி நிற்க அவள் அவன் முகம் பாராமல் கையைப் பிடித்து இழுத்து ''வாடா போகலாம்'' என்றாள்.

அவளது கை மென்மையாய் இருந்தது. அவள் பிடியில் தன் கரம்... உடலில் உஷ்ணம் பாய,

''எங்கே என்பதைச் சொன்னால் தேவலை'' என்றான் அவன்.

அவள் பதறிப்போய் அவன் முகம் பார்த்துக் கையை விட்டாள். முகம் ரத்தமாய் சிவந்துவிட,

''நான்... நான்... என் தம்பியென்று நினைத்து... அவன் எங்கே?'' என்று தடுமாறினாள்.

லட்சுமணன் உல்லாசமாய் சிரித்தான். அவன் சிரிப்பில் வசீகரிக்கப்பட்ட ஊர்மிளா உறைந்து போனாள். யார் இவன்?

"உன் தம்பி எங்கேயென்று எனக்கு எப்படித் தெரியும். ம்ம்ம்?" என்று அவன் புருவம் உயர்த்தி வினவ அவள் உடல் 'ஜிவ்'வென்று ஆனது.. அடுத்த நொடி அங்கிருந்து ஓடி மின்னலாய் மறைந்தாள்.

சமரசம் ஆன பெரியவர்கள் வாண்டுகளை கூவி அழைத்தபடி வந்தனர். பெருமாளை வணங்கி முடித்த பின் டாடா சுமோவில் ஏறி பெண் வீட்டிற்குச் சென்றனர்.

அசிரத்தையாய் லட்சுமணன் அமர்ந்திருந்தான். அவன் மனமெல்லாம் அந்தப் பெண் நிறைந்திருந்தாள்... எழுந்து வீட்டிற்கு வண்டியை விடச் சொல்லலாமா என்று அவன் யோசிக்கும்போது,

"பெண்ணைப் பார்த்துக்கடா" என்று தயாநிதி அதட்டினார். விருப்பமில்லாமல் விழி உயர்த்தியவன் ஆனந்த அதிர்ச்சியில் ஆழ்ந்தான். எதிரே விரல்கள் நடுங்க காபி தம்ளரை நீட்டிக் கொண்டிருந்தது அவன் கோவிலில் பார்த்த அதே பெண்தான்.

அதே நேரம் நடுக்கத்துடன் விழியுயர்த்திய அவள் கண்களிலும் ஆச்சரியம் வழிந்தது.

இருவர் விழிகளும் கலந்தன. அவை கேட்டுக் கொண்டன.

"கடைசியில் நீதானா என்னைப் பார்ப்பது?"




விழி உயர்த்திப் பார்த்தவள் விழிகளைத் தாழ்த்திக் கொண்டு வீட்டிற்குள் சென்று மறைந்தாள். அவள் பின்னாலேயே பார்வையால் துழாவியவன் உள்ளே எக்கிப் பார்க்க முனைய,



"பார்த்து மாப்பிள்ளை கழுத்து சுளுக்கிக்கிறப் போகுது... ஏங்க... பொண்ணு பார்க்க வந்தால் பொண்ணு அங்கே உட்காரணும்.. நாங்க நாலு வார்த்தை அது பேசிக் கேட்கணும். அதை விட்டு விட்டு என்னவோ மின்னலைப் பெண் பார்க்கப் போனது போல உள்ளே ஓடிப் போயிருச்சுன்னா என்ன அர்த்தம். பாருங்க என் மச்சான் மகன் உள்ளே எட்டிப் பார்த்து கழுத்து சுளுக்கிக்கிறதை.. கொஞ்சம் உங்க பெண்ணை 'வாம்மா மின்னலு'ன்னு கூப்பிடுங்க. நாள பின்ன பொண்ண நான் நல்லா பார்க்கலைன்னு மாப்பிள்ளை சொல்லிட்டாப்புலன்னா... யாருக்கு கஷ்டம்?" என்று சுந்தரம் லட்சுமணனை கேலியாகப் பார்த்தபடி ஜனார்த்தனத்திடம் கூறினார்.

ஜனார்த்தனம் சிரித்தபடி சத்தியவதியைப் பார்த்து,

"ஊர்மிளாவைக் கூப்பிடு புள்ள. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க முன்னாடி வந்து உட்காரச் சொல்லு. வெட்கப்படாமல் வரச் சொல்லு. நாமள்ளாம் இருக்கோமில்ல அப்புறம் என்ன பயம்?" என்றார்.

சத்தியவதி உள்ளே சென்று மகளை அழைத்து வந்தாள். தனியே உட்கார ஊர்மிளா நடுங்க அருகில் ஆதரவாய் அவளது மாமா மகள் கயல் விழி உட்கார்ந்தாள். லட்சுமணன் அவளைப் பார்வையால் விழுங்க ஊர்மிளா பதற்றமாய் உணர்ந்தாள். கயல்விழி அவள் காதோரம் கிசுகிசுத்தாள்.

"ஏய்ய்.. எங்க அண்ணன் உன்னை வைச்ச கண்ணை எடுக்காம பார்த்துக்கிட்டு இருக்கார் பாரு..."

"உங்க அண்ணனா?"

"பின்னே என் அத்தை மகளைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவர் என் அண்ணன்தானே?"

செவ்வந்தி தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

''ஏம்மா நீங்க ரெண்டு பேரும் ரகசியம் பேசிக்கிறதுக்கா நாங்க வந்து உட்கார்ந்திருக்கிறோம்?'' ஏம்மா ஊர்மிளா நீ என்ன படிப்பு படிக்கிற? காலேஜுக்கு போறயாமே?''

ஊர்மிளா தயங்கியபடி, ''பி.எஸ்ஸி'' என்றாள்.

''என்னது காதில் விழுகலையே.. எஸ்.எஸ்.எல்.சி.யா?''

லட்சுமணன் ஊர்மிளாவின் உதவிக்கு வந்தான்.

''அத்தை அவங்க படிச்சிருக்கிறது பி.எஸ்ஸி. எஸ்.எஸ்.எல்.ஸின்னா பத்தாவது. அதுக்கு காலேஜுக்கு எல்லாம் போக வேண்டியதில்லை.''

செவ்வந்தியின் முகம் கடுத்தது.

''எனக்குத் தெரியாதா? பொண்ணு வாயைத்திறந்து பேசினால்தானே தொண்டை கீச்சுத் தொண்டையா நல்ல தொண்டையான்னு தெரியும்? ஏம்மா பொண்ணு சமையெல்லாம் தெரியுமா?''

சத்தியவதி அவசரமாய் கூறினாள்.

''செல்லமாய் வளர்ந்த பொண்ணு. படிக்கிற பொண்ணு.. சமைக்கத் தெரியாதுங்க.. ஆனால் சொல்லிக் கொடுத்தால் பழகிக்கும்.''

''அது சரி.. மகனுக்குக் கல்யாணமாகி மருமகள் வந்தாலாவது வேலை கொஞ்சம் ஒயும்ன்னு எங்க அக்கா காத்துக்கிட்டு கிடக்காப்புல.. இங்க என்னன்னா சமையல் பண்ண சொல்லிக் கொடுக்கணுமாம். நல்ல கதையா யில்ல இருக்கு'' சாந்தா இடைக்குத்து குத்தினாள்.

ஈஸ்வரி எதுவும் சொல்லாமல் ஊர்மிளாவைக் கண்ணாரப் பார்த்தாள். அவளது அழகும் அடக்கமும் அவளை மிகவும் கவர்ந்தது. மேலக்கால் கிராமத்திலேயே தன்



மகன்தான் அழகு என்ற எண்ணம் அவளுக்கு உண்டு. இப்போது இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு போனால் இந்த சுற்று வட்டாரத்திலேயே அவளது மருமகள்தான் அழகு என்று சொல்வார்கள். பட்டப் படிப்பு படித்திருக்கிறாள். ஒரே பெண் பிள்ளை என்பதால் சீர் வரிசை சிறப்பாகச் செய்வார்கள். அவளுக்கு திருப்தியாக இருந்தது.

தயாநிதியின் கணக்கும் அதுதான். குடும்பத்திற்கு மூத்த பெண் ஒரேயொரு தம்பி மட்டும்தான். அவனும் வயதில் சிறியவன் வசதியான விவசாயக் குடும்பம். நகை, நட்டு, சீர் என்று கேட்பதற்கும் அதிகமாகவே செய்வார்கள். அவருக்கும் பரம திருப்தி, எனவே

''சமையல் பண்ணிப் போடத்தான் மருமகளைத் தேடுகிறோமா... லட்சுமணன் கூட சந்தோசமா குடித்தனம் பண்ணத்தானே தேடுகிறோம். சமைக்கத் தெரியாட்டி என்ன... நம்ம வீட்டுக்கு வந்த பின்னால் மெதுவா பழகிக்கட்டும்'' என்று மறைமுகமாகத் தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

ஜனார்த்தனம், சத்தியவதியின் முகங்கள் மலர்ந்தன.

சாந்தா, செவ்வந்தியின் முகங்கள் சுருங்கின.

''ஏம்மா... ஜடை இவ்வளவு நீளமா இருக்கே. ஒட்டு முடியா?'' என்றவாறு செவ்வந்தி ஊர்மிளாவின் பின்னலைப் பிடித்து இழுக்க வலியால் ஊர்மிளாவின் முகம் சிணுங்கியது.

லட்சுமணம் தன் அத்தையை அதட்டினான்.

''அத்தை என்ன வேலை செய்யறீங்க...''

சத்தியவதி சிரித்துக் கொண்டே நிலைமையைச் சமாளித்தாள்.

''ஊர்மிளாவுக்கு நீளமான தலை முடிங்க... ஒட்டு முடியெல்லாம் வைச்சுப் பின்னி விடலை. சொந்த முடிதான்...''

'எவ்வளவு நீளமான முடி' சாந்தாவுக்கு வயிறு எரிந்தது.

''அதுசரிங்க... அதுக்காக ஜடையை இழுத்துப் பார்க்காமல் இருக்க முடியுமா? இழுத்துப் பார்த்தால்தானே உண்மையும், பொய்யும் தெரியும்'' என்றாள் அவள் ஓரகத்தியின் அதிர்ஷ்டத்தை எண்ணி பொறாமைப் பட்டபடி. பெண்களின் சாகசத்தைப் பெண்களே அறிவார்கள். ஈஸ்வரி விழிப்படைந்தாள்.

''சாந்தா.. அந்தப் பொண்ணு முகத்தைப் பாரு. பொய்யே தெரியலை...'' என்று கூறியவள் சத்தியவதியைப் பார்த்துச் சிரித்தபடி.

''எங்க சுபத்ராவும் இப்படித்தான் படிப்பு, படிப்புன்னு தான் இருக்கும் சமையல் தெரியாது. இப்ப என்ன.. எனக்கு ரெண்டு பொண்ணுன்னு நினைச்சிட்டுப் போறேன்.. சொல்லிக் குடுத்தா கத்துக்கப் போவுது. படிச்ச புள்ளதான் பக்குன்னு பிடிச்சுக்குமே'' என்றாள்.

சாந்தா செவ்வந்தியின் காதில்,

''சரியான இடத்தை வளைச்சுப் பிடிச்சிட்டாங்க... பாரேன். இடம் கைநழுவிப் போய் விடக் கூடாதுன்னு உங்க பெரியண்ணனும், மதனியும் வரிஞ்சு கட்டிக்கிட்டு வக்காலத்து வாங்குறதை...'' என்றாள்.

''அதுதானே... கொஞ்சமாவது மாப்பிள்ளை வீடாய் லட்சணமாய் இருக்குதுகளா.. ஆளாய் பறக்குதுக.. இதுகளும் வாய் திறக்காமல்.... என்னையும் பேச விடாமல்.. நல்லா பொண்ணு பார்க்க வந்தோம்.'' செவ்வந்தி அவள் மனத்தாங்கலை வெளியிட்டாள்.



''அப்புறம் மாப்பிள்ளைக்கு பொண்ணு பிடிச்சிருக்கான்னு ஒரு வார்த்தை கேட்டுட்டிங்கன்னா...'' ஜனார்தனம் இழுத்தார்.

''அதெல்லாம் ஊருக்குப் போய் கடிதம் போடுவோம்'' என்று வெடுக்கென்று செவ்வந்தி கூறினாள்.

தயாநிதி அவசரமாய் பதில் சொன்னார்.

''ஊருக்குப் போய் என்ன பதில் போடறது? லட்சுமணன் கிட்ட இங்கேயே ஒரு வார்த்தை கேட்டு விட்டால் போகிறது.. என்னடா உனக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்கா?''

லட்சுமணன் ஊர்மிளாவைப் பார்த்துக் கொண்டே கூறினான்.

''அப்பா எனக்கு பொண்ணுகிட்ட ஒரு நிமிஷம் தனியாப் பேசணும்.''

அங்கிருந்த அனைவருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

''என்னது... டேய் அண்ணன் மகனே. இது என்ன ஊரில் இல்லாத பழக்கம் பழகிட்டு வந்திருக்கிற... காலக் கொடுமை'' செவ்வந்தி போர்க்கொடி தூக்கினாள்.

''நல்லாயிருக்கு. நம்ம ஊரில் நாலு பேர் கேட்டால் சிரிக்கப் போறாங்க. இதுக்கு எதுக்கு நம்ம துணை? அவன் தனியாவே வந்திருக்கலாமே'' சாந்தா இதுதான் சமயமென்று இடைச்செறுகு செறுகினாள்.

ஈஸ்வரி மௌனம் சாதிக்க தயாநிதி, ஜனார்த்தனத்தைப் பார்த்தார். அவரோ, ''அதுக்கென்ன பேசிட்டுப் போறாங்க.. படிச்ச புள்ளைக... கலந்து பேசி முடிவெடுக்கட்டும்... சத்தியா... பின்னாடி முற்றத்தில் நாற்காலிகளை எடுத்துப் போடு... கயல்விழி பலராமா.. ஊர்மிளா கூட துணைக்குப் போங்க... பேசட்டும்'' என்றார் எளிதாக.

அந்தச் சந்திப்பு விந்தையானதாக இருந்தது. ஒரு பக்கம் மாட்டுக் கொட்டில்... மறுபக்கம் வைக்கோல் போர். வீட்டின் பின்பக்கப் படிகளில் கயல்விழியும், பலராமனும் உட்கார்ந்து கொண்டிருக்க, கதவின் பின்னால் இருந்து சத்தியவதி கண்காணித்துக் கொண்டிருந்தாள். எதிரே யிருந்த சேரில் அமர்ந்திருந்த ஊர்மிளா தலை குனிந் திருந்தாள்.

'இதுவா தனியாகப் பேசுவது?' என்று சலிப்பாக இருந்தது லட்சமணனுக்கு. இதற்கும் உள்ளே பத்துப்பேர் நடுவில் அமர்ந்து இருந்ததற்கும் பெரிய வித்தியாசம் எதுவுமில்லை என்று தோன்றியது.

ஓர் வார்த்தை... ஒரேயொர் வார்த்தை தனிமையில் அவ ளிடம் உதிர்க்க முடியாத இந்த சூழ்நிலை அவனுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

ஊர்மிளாவை ஊன்றிப் பார்த்தான். அவள் நிமிரவே யில்லை.

''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?'' என்று மெது வாகக் கேட்டான்.

அவள் மௌனமாக இருந்தாள். அவனே தொடர்ந்து பேசினான்.

''ஆனால் எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. உங்களை கோவிலில் பார்த்தபோதே... 'வேறு பெண்ணை பார்க்க வேண்டியிருக்கே. திரும்பிப் போய் விடலாமா'ன்னு நினைச்சேன். இங்கே வந்து பார்த்தால்.. மை குட்னஸ்.. நீங்களே நான் பார்க்க வேண்டிய பெண்ணாய் நிற்கறீங்க... எனக்கு வானத்தில் பறப்பது போல இருந்தது.''

அவளது விழிகள் சற்று மேல் நோக்கி உயர்ந்தன.



''நீங்கள் அழகாக இருக்கிறீர்கள். படித்திருக்கிறீர்கள். ஒரு ஆண் தனக்கு வரவேண்டிய மனைவி எப்படி இருக்க வேண்டுமென்று நினைக்கிறானோ அப்படியெல்லாம் நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால்.. நான் உங்களுக்கு அப்படித் தெரிகிறேனா?''

அவள் இப்போது நிமிர்ந்து அவனை நேருக்கு நேர் பார்த்தாள்.

''உங்கள் மனதுக்கு பிடிக்கவில்லையென்றால் என் னிடம் இப்போதே சொல்லி விடுங்கள். ஏன்னா எனக்கு உங்களைப் பிடித்திருக்குன்னு நான் எல்லோர் முன்னாடி யும் சொல்வதற்கு முன்னால் உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா என்பது எனக்குத் தெரிய வேண்டும்.''

அவன் கண்களில் மதிப்பு உதயமானது.

''சப்போஸ் உங்களுக்குப் பிடிக்கவில்லைன்னா என் னிடம் சொல்லிடுங்க நான் எனக்குப் பிடிக்கவில்லைன்னு சொல்லி...''

''சொல்லி என்னைக் காப்பாற்றி விடுவீர்கள் அப்படித் தானே.''

'பேசா மடந்தை பேசி விட்டதா?' லட்சுமணன் ஆச் சர்யமாய் நோக்க ஊர்மிளாவின் கண்களில் இப்போது காதல் வந்திருந்தது.

''எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது.''

அந்த வார்த்தைகளை ஏன் சொன்னாள் என்று அறி யாமல் தன் வசம் இழந்த நிலையில் ஊர்மிளா அதைக் கூறினாள். ஒருவேளை பெற்றவர்கள் கேட்காத சம்மதத்தை அவன் கேட்டானே என்ற மகிழ்வில் கூறி இருக்கலாம். மாப்பிள்ளையின் சம்மதம் மட்டுமே பிரதானமாய் இருந்த

திருமணத்தில் மணமகளின் சம்மதத்தை பிரதானமாய் அவன் நினைத்தானே அதனால் கூறி இருக்கலாம். அங்கீகாரம் தேடும் பெண்மை அது மறுக்கப்படும்போது நெருப்பாகிறது. சிறு துளியளவு அங்கீகாரம் கிடைத்து விட்டாலும் அது குளிர் நீராகி விடுகிறது. ஊர்மிளாவின் கொதித்த நெஞ்சம் குளிர்ந்திருந்தது.

லட்சுமணன் பெண்களின் மனோதத்துவம் அறிந்தவன். சரியான இடத்தில் தன் வார்த்தைகளை பிரயோகித்து வெற்றி பெற்று விட்டான்.

முகம் முழுக்க சந்தோஷத்துடன் இருவரும் உள்ளே வர அனைவரும் அவர்கள் முகம் பார்த்தார்கள்.

''அப்பா எனக்குப் பெண்ணைப் பிடிச்சிருக்கு'' என்றான் லட்சுமணன். ஊர்மிளையின் மத்தாப்பூ ஒளிரும் முகம் அவன் உள்ளத்தை உணர்த்த ஜனார்த்தனம் மனைவியின் முகத்தைப் பார்த்தார். அதில் சம்மதம் தெரிய,

''அப்போ ஒரு நல்ல நாளாய் பார்த்து நிச்சயம் பண்ணிடலாம்'' என்று தயாநிதியிடம் கூறினார்.

''இன்னொரு நாள் எதுக்கு? இன்னைக்கே நல்ல நாள் தானே... லட்சுமணன் ஒரு மாத லீவில் வந்திருக்கிறான். சட்டு புட்டுன்னு கல்யாணத்தை நடத்தினால்தானே அவனுக்கு சௌகர்யமாயிருக்கும்'' என்றவர் மனைவியைப் பார்த்து,

''அந்தப் பையை எடுத்து வந்து எல்லாத்தையும் எடுத்து வை'' என்றார்.

ஈஸ்வரி எழுந்து சென்று காரிலிருந்த பெரிய பையை எடுத்து வந்து பிரித்து உள்ளேயிருந்து பெரிய தாம்பாளத் தட்டை எடுத்து வைத்தாள். அதில் பட்டுச்சேலை, பூ,



பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கை சுற்றிவர அழகாக அடுக்கினாள்.

சாந்தாவும், செவ்வந்தியும் வாய் பிளந்தனர்.

''ஏன் மதனி புதுச்சேலை எடுத்திட்டு வந்திருக்கீங்க. எங்ககிட்ட மூச்சுக்கூட விடவில்லையே...'' செவ்வந்தி கண் விரித்தாள்.

''பையனுக்கு லீவு குறச்ச நாள் தான் கிடைச்சிருக்கு. பொண்ணைப் பிடிச்சிருந்தா நல்ல காரியத்தை சட்டு புட்டுன்னு முடிச்சிரணும். தள்ளிப் போடக் கூடாது... அதனால் நேத்தே மதுரைக்குப் போய் பட்டுச் சேலை எடுத்துட்டு வந்திட்டேன். ஒரு முடிவுக்கு வராம சேலை, பூவெல்லம் கொடுக்கக் கூடாதுன்னுதான் உங்கிட்டக் கூட மூச்சு விடவில்லை'' என்று எடுத்துக் கூறினார் தயாநிதி.

''தாய்மாமன் இல்லாம நிச்சயதார்த்தமா?'' சாந்தா வழி கண்டு பிடித்த சந்தோசத்தில் கூவினாள்.

''அதுக்கென்ன... என் உடன் பிறப்புக்கு உடன் பிறப்பா எங்க நாத்தனார் வீட்டுக்காரர் இருக்கார்... அண்ணா நீங்க வந்து சபையில லட்சுமணனுக்கு தாய் மாமனா உட்காருங்க... நீங்க வேற என் கூடப் பிறந்தவங்க வேறயா'' ஈஸ்வரி செவ்வந்தியின் கணவர் சுந்தரத்தை தாய் மாமனாக்க செவ்வந்தி மகிழ்ந்து போனாள் அவள் வாய் அடைத்துக் கொண்டது.

''நம்ம ஊர் ஜனத்துக்கு என்ன பதில் சொல்றது?'' என்று சாந்தா அடுத்த கணையை விட,

''கல்யாணத்துக்கு வாங்கன்னு சொல்றது'' என்று செவ்வந்தி பதில் கொடுக்க சாந்தா தனிமரமாகி விட்டதை உணர்ந்து வாய் மூடிக் கொண்டாள்.

தேங்காய் பழம் வெற்றிலை வைத்த புடவைத் தட்டை தயாநிதி கொடுக்க ஜனார்த்தனம் வாங்கிக் கொண்டு திருமணத்தை உறுதி செய்தார். அன்றிலிருந்து ஆறாவது நாள் முகூர்த்தம் குறிக்கப்பட்டது. மணமகனின் ஊரான மேலக்காலிலேயே திருமணத்தை நடத்த முடிவானது.

''அவ்வளவு சீக்கிரமா?'' என்று கூறிய சாந்தாவிடம்,

''பொண்ணுக்கு நகையெல்லாம் ஏற்கனவே செஞ்சு வைச்சிருக்கோம் பண்ட பாத்திரமும் சேர்த்து வைச்சாச்சு. புதுசா எதுவும் வாங்க வேண்டியதில்லை. பொண்ணை அழைச்சுக்கிட்டு வரச் சொல்ற நாளில் வந்து சேருகிறோம்'' என்றாள் சத்தியவதி.

''பொண்ணை அழைக்க நாங்களே மேளதாளத்தோடு கார் கொண்டு வருவோம்...'' என்றார் தயாநிதி.

காலையில் கல்லூரிக்குப் போக விழித்தவள் மாலையில் புகுந்த வீட்டிற்குப் போகும் நாள் முடிவாக நாணத்தில் ஆழ்ந்தாள். மாப்பிள்ளை வீட்டாருக்கு அவசரமாய் விருந்து சமைக்கப் பட்டு பரிமாறப்பட்டது.

லட்சுமணன் கை கழுவ வரும்போது அண்டாவில் தண்ணீர் மட்டும் இருக்க குவளையைக் காணாமல் விழிகளால் தேடினான். அருகில் பூவாசம் வந்தது. கொலுசு சத்தம் சமீபித்தது. வளையல்கள் கைகளில் குலுங்க ஊர்மிளா குவளையுடன் வந்து நீட்டினாள். லட்சுமணன் கிறங்கடிக்கும் பார்வை ஒன்றைப் பார்த்தபடி,

''ஏன் கைகழுவ தண்ணீர் ஊற்ற மாட்டாயாக்கும்'' என்றான். அவள் வெட்கத்தில் கன்னம் சிவக்க தண்ணீர் ஊற்ற கை கழுவியவன் கண் இமைக்கும் நேரத்தில் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு ஒன்றும் தெரியாதவன் போல் உள்ளே சென்று விட்டான்.



கையில் இருந்த குவளை நழுவ ஊர்மிளா செதுக்கி வைத்த சிலையாய் திகைத்து நின்று விட்டாள்.




ஒரு புயலாய் வந்து அவள் மனதை சூறையாடி விட்டுச் சென்று விட்டான் லட்சுமணன்.

ஊர்மிளா தன் வசம் இழந்தாள். நேற்று வரை தோன்றாத தவிப்பு இன்று அவளிடம் தோன்றியிருந்தது. அவள் எண்ணம் கவர்ந்த கள்வன் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டான்.

'திருடன்' அவள் வாய் முணுமுணுத்தது. ஒரு வினாடியில் என்ன காரியம் செய்து விட்டான்? யாராவது பார்த்திருந்தால் என்ன நினைத்திருப்பார்கள் என்று எண்ணமிடும்போதே,

'அதுதான் உன் பயமா?' என்று அவள் மனம் வினவியது.

'ஆக யாரும் பார்க்கவில்லையென்றால்... இது சரி அப்படித்தானே?' மனம் கேலி செய்ய முகம் சிவந்து நகம் கடித்தாள். தன்னை யாரும் கவனிக்கிறார்களா என்ற சுற்று முற்றும் கவனித்துக் கொண்டாள். யாரும் பார்க்கவில்லையென்று அறிந்ததும் முற்றத்தில் போடப்பட்டிருந்த கல் உரலில் அமர்ந்து கொண்டாள். கிராமத்தின் நெல் குற்ற என்று போடப்பட்டிருக்கும் கல் உரலும், மாவாட்ட என்று போடப்பட்டிருக்கும் கல் உரலும் உட்கார்ந்து கொள்ள அவ்வளவு வாகாக கூடை நாற்காலி, மோடா போல்

சௌகரியமாக இருக்கும். அதில் அமர்ந்து கொண்டு ஊர்மிளா தன்னுடைய புதிய உலகத்திற்குள் புகுந்து கொண்டாள்.

எப்படிக் கோவிலில் அவன் கையைப் பற்றினோம்? அதுவும் 'நாராயணா நல்ல வழி காட்டு' என்று வேண்டி முடித்து விட்டு அவன் கையைப் பற்றி இழுத்தோமே... அது எப்படி. அதுதான் தெய்வத்தின் கட்டளையா? 'எங்கேயென்று சொல் வருகிறேன்' என்றானே... அதுவும் எப்படி... தான் எங்கே கூப்பிட்டாலும் வர எப்படி அவன் தயாரானான்?

பெற்றவர்களே தன் விருப்பத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் 'நீ சின்னப் பெண். நல்லது கெட்டது உனக்கென்ன தெரியும்' என்று கூறி விட்டபோது அவன் மட்டும் அவள் விருப்பத்தை மட்டும் பெரிதாக எண்ணி 'எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. ஆனால் உனக்குப் பிடிக்காவிட்டால் சொல்லிவிடு. உன் மேல் பழி விழாமல் நான் பழி ஏற்றுக் கொண்டு எனக்குப் பிடித்திருக்கும் உன்னைப் பிடிக்கவில்லையென்று சொல்லி விடுகிறேன்' என்றானே... இவனை விட அவளை மதிக்க, மரியாதை கொடுக்க வேறு ஒரு ஆண் மகன் பிறந்து அல்லவா வர வேண்டும்.

பாரதி சரியாகத்தான் பாடியிருக்கிறான்.

'கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் தான் கள்வெறி கொள்ளுதடி' அவனுக்குக் கள்வெறி வந்ததோ இல்லையோ அவளுக்கு வந்தது. அவன் இதழ் தொட்ட கன்னம் நினைவுச் சின்னமாகியது.

அடிக்கடி கண்ணாடியில் தன் கன்னம் பார்த்துக் கொள்வதே அவள் வேலையானது. மற்ற நேரங்களில் தன்



னிச்சையாய் கைகள் கன்னம் வருட அந்த இனிய கணத்தை நினைவில் கொள்வாள். உடலில் பரபரப்பு உற்பத்தியாகி அவள் மூச்சடைக்கும்.

''ஊர்மிளா... ஏண்டி இங்கதானே உட்கார்ந்திருக்கிறே... இந்தக் கத்து கத்துகிறேன்.. ஏன்னு ஒரு வார்த்தை கேட்கிறயா?'' என்று சத்தியவதி முதுகில் ஒரு போடு போட ஊர்மிளா பதறி எழுந்தாள்.

''அம்மா.. என்னம்மா... நான் வந்து..'' என்று பதறி நின்றாள்.

சத்தியவதிக்கு மகளின் நிலை நொடிப் பொழுதில் விளங்கியது. அவளும் மகள் வயதைக் கடந்து வந்தவள் தானே... திருமணம் பேசி முடித்த நாள்களை வாழ்ந்தவள் தானே... மகளின் மனம் புரிய மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

''எதுக்கும்மா பயப்படறே.. அப்பா டவுனுக்குப் போகக் கூப்பிடறார். வந்து என்னன்னு கேளு...''

ஊர்மிளா தந்தையின் முன் வந்து நின்றாள். மகளின் முகம் பார்த்த ஜனார்த்தனம்.

''ஏம்மா.. அம்மா உனக்கு நாலு பட்டுச்சேலை எடுக்கனும்கிறா... அப்படியே பழைய நகைகளை மாற்றி விட்டு புதிதாய் வாங்கி விடலாம்கிறா. கிளம்பு போய்விட்டு வந்துவிடலாம்...''

''ஏம்பா? இருக்கிற சேலையும் நகையும் போதுமே...''

சத்தியவதி மகளின் அருகே வந்து அவள் முடி கோதினாள்.

''அப்படி இல்லைம்மா... எங்களுக்கு இருக்கிற ஒரே பெண் பிள்ளை நீ. வீட்டில் நடக்கப் போகிற முதல்

கல்யாணம் இது... பழைய பட்டுச் சேலைகளோடவா அனுப்புறது... புதுசா நாலு வாங்கிடலாம்...''

''நகையெல்லாம் நல்லாத்தானம்மா இருக்கு?''

''இருக்கும்மா.. உன் பாட்டி நகை பத்து பவுனுக்கு இருக்கில்ல.... அதை மட்டும் மாத்திடலாம்...''

''பணம் நிறைய ஆகுமேம்மா...''

''சேர்த்து வைச்ச பணத்தை பொண்ணு கல்யாணத்துக்கு செலவு செய்யாம எப்போ செய்வது?''

''பலராமனுக்கு வேண்டாமா?''

''அவனுக்குத்தான் சொத்து இருக்கிறதே. நீ கிளம்பும்மா.''

தந்தையின் பைக்கில் தாய் அமர்ந்துகொள்ள தன் ஸ்கூட்டியில் தம்பியை ஏற்றிக் கொண்டு அவள் கிம்பத் தயாரான போது ஜனார்த்தனத்தின் செல் ஒலித்தது. எடுத்துப் பேசியவர்,

''அதற்கென்ன மச்சான். நாங்களும் டவுனுக்குத்தான் கிளம்பிக் கிட்டு இருந்தோம்... என்ன விசயம்ன்னா கேட்கறீங்க... பொண்ணுக்கு இன்னும் புதுசா நாலு பட்டுச் சேலை வாங்கனும்... அப்புறம் எங்க அம்மாவோட அந்தக் காலத்து நகை பத்து பவுனிருக்கு அதை மாற்றி புதுசா வாங்கனும்ன்னு என் வீட்டுக்காரி சொன்னாள். இப்ப என்ன திண்டுக்கல்லில் வாங்குற சேலையையும், நகைகளையும் மதுரையில் வாங்கினால் வேணாம்னு இருக்கா.. உடனே கிளம்பி வாரோம்.''

செல்லை அணைத்தவர் மனைவியை இறங்கச் சொன்னார். செல்போனில் திண்டுக்கல் டிராவல் ஏஜன்ஸிக்கு போன் பண்ணி வாடகைக் கார் ஒன்றை அனுப்பச் சொன்னார். காரணம் கேட்ட மனைவியிடம்,



''சம்பந்தக்காரங்க பேசறாங்கடி. முகூர்த்த சேலை எடுக்கணுமாம். நம்மளயெல்லாம் மதுரைக்கு வரச் சொல்றாங்க... போய் இன்னும் நல்ல துணிமணியைக் கட்டிக்கிட்டு நகைகளை போட்டுக்கங்க...'' என்றவாறு தன் வண்டியை வீட்டின் முன் வராண்டாவிற்கு தள்ளி பூட்டி விட்டு நிமிர்ந்தார்.

''அப்பா.. நீங்களும் நானும் வேற துணி போட்டுக்க வேணாமா?'' என்று கேட்ட பலராமனிடம்,

''நாமள்ளாம் ஆம்பளை சிங்கங்கள்டா. நாம் என்ன துணி போட்டுக்கிட்டாலும் எடுபடும். அவங்க ரெண்டு பேரும் பொம்பளைக பாரு... நல்ல சேலை கட்டி நகை போட்டுக்கிட்டாத்தான் பார்க்க முடியும்'' என்று சிரித்தவாறு கூறினார் ஜனார்த்தனம்.

''ஆமாமாம்.. கசங்கின அழுக்குப் பிடிச்ச வேட்டி, சட்டையைப் போட்டுக்கிட்டு தலையில் எண்ணெய் வைக்காம முடி வெட்டி தாடி மழிக்காம பரட்டைத் தலையும், எண்ணெய் வழியற முகமும் அழுக்கு வேட்டி சட்டையோடு உங்க அப்பாவை வரச் சொல்லு... பார்ப்போம். இந்த ஆம்பளை சிங்கத்தின் அழகை... இதோ பத்து கிலோ மீட்டரில் இருக்கிற திண்டுக்கல்லுக்குப் போக காலையில் எழுந்ததில் இருந்து ஷேவ் பண்ணுகிறார்.. பண்ணுகிறார் - ஒரு மணி நேரம் பண்ணுகிறார். அப்புறம் குளிச்சு முடிச்சு உடம்பெல்லாம் பவுடரைக் கொட்டி மூஞ்சியில் அரிதாரம் மாதிரி அப்பிட்டு... பீரோவைக் குடைஞ்சு... பட்டு ஜரிகை வச்ச வேட்டியை செலக்ட் பண்ணி கட்டிக்கிட்டு கண்ணாடியில திரும்பித் திரும்பி தன்னைத்தானே பார்த்துக்கிட்டார் பாரு... கல்யாணம் மகளுக்கா, இல்ல இவருக்கான்னு சந்தேகமே வந்திருச்சு.

இப்ப அளக்கிறதைப் பாரு ஆம்பளை சிங்கம்ன்னு...'' சத்தியவதி சிலிர்த்தாள்.

வாசலில் டாக்ஸி ஒன்று வந்து நிற்க வீடு பரபரப் பானது. கண் இமைக்கும் நேரத்திற்குள் ஊர்மிளா சுடி தாரிலிருந்து புடவைக்கு மாறினாள். கண்ணாடி பார்த்து இன்னம் கொஞ்சம் பவுடர் பூசினாள். மனதின் ஓரத்தில் 'அவன் வருவானா?' என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் யாரிடம் கேட்பது?

சத்தியவதி மகளின் கை, கழுத்து, காதுகளுக்கு பொருத்தமான புதிய நகைகளை அணிவித்து விட்டாள். மகளை ஒரு தரம் தள்ளி நின்று ஏற இறங்கப் பார்த்தாள்.

பிஸ்கெட் கலரில் கருநீல பார்டரில் ஜரிகை இழை யோடிய காஞ்சி காட்டன் புடவை. கருநீல நிறத்தில் கைகளுக்கு ஜரிகைக் கரையிட்ட ஜாக்கெட் கழுத்தில் வெள்ளைக்கல் அட்டிகை. காதுகளில் வெள்ளைக் கல் பதித்த வேலைப்பாடுகளுடன் கூடிய தோடு. கைகளில் பொன் வளையல்களும் கல் வளையல்களும் கலந்து விளையாடின. ஏதோ ஒன்று குறைவது போல் தோன்ற மகளின் கழுத்திலிருந்த செயினை அவிழ்த்து விட்டு சின்னக் காசுகள் கோர்த்த நீண்ட காசு மாலை வடிவிலான ஆரத்தை அணிவித்து விட்டாள் சத்தியவதி.

''என்னம்மா கழுத்து நிறைய நகையிருப்பது போலி ருக்கே...'' என்று மகள் சிணுங்க..

''நீ வாழப்போகிற வீட்டில் இருக்கிறவங்க எல்லோரும் நல்லவங்களா தெரியறாங்கம்மா. ஆனா உன் மாமனாரின் தம்பி பொண்டாட்டியும், தங்கச்சிகாரியும் வில்லங்கம் பிடிச்சவங்களா இருக்கிறாங்களே... வீட்டுக்குள்ள நகையை பூட்டி வச்சா அவங்க கண்ணுக்கு எப்படித் தெரியும்?



பூட்டிக்கிட்டு வந்தால்தானே தெரியும் அவங்க பாட்டுக்கு பொண்ணு கழுத்தில் நகை பத்தாதுன்னு பேசிட்டா என்ன செய்யறது... நீ சின்னப் பிள்ளை... உனக்கு ஒண்ணும் தெரியாது. பேசாமல் வா..'' என்று அதட்டினாள் சத்தியவதி.

'நான் சின்னப் பிள்ளையா?' என்ற கோபக்கேள்வி எழும்போதே அவளை நாற்காலியில் அமர வைத்து 'நீ உலகம் தெரிந்தவள்' என்ற விதமாய் பேசிய 'அவனின்' நினைவு எழுந்தது.

'இன்று அவனைப் பார்க்க முடியுமா?' மனம் ரகசியமாய் வினவியது.. தெரியவில்லையே என்று கூறிக் கொண்ட வள் தாயைப் பின் தொடர்ந்தாள்.

''ஹேண்ட் பேக் எதுக்கும்மா - வச்சிட்டு வா'' என்று தாய் கூற,

''இருக்கட்டும்... புள்ள எங்கே போனாலும் பேக் இல்லாம போகாது அந்தப் பழக்கத்தில் கொண்டு வந்திருக்கும்.. வைச்சிருக்கட்டும்'' என்றார் ஜனார்த்தனம்.

கார் கிளம்பி ஓடியது.

''ஏங்க... பூ வாங்கனும். எங்கே வாங்கலாம்?'' என்று சத்தியவதி கேட்க ''மதுரைக்குத் தானே போகிறோம். அங்கேயில்லாத பூவா? ஊருக்குள் நுழைந்ததும் முதலில் கண்ணில் தென்படுற பூக்கடையில் வாங்கிக்கலாம்'' என்று பதில் கூறினார் ஜனார்த்தனம்.

தாய், தந்தையின் பேச்சுக்களை செவிமடுத்துக் கொண் டிருந்த ஊர்மிளாவின் மனம் எதிர்பார்ப்பில் அல்லாடியது.. 'அவன் வருவானா.. மாட்டானா.'

கார் மதுரைக்குள் நுழைந்தது. பூக்கடை ஒன்றின் அருகே நின்றது. சத்தியவதி இறங்கிப் பேரம் பேசி பூ

வாங்கி வந்து மகளின் தலையில் வைத்து விட்டாள். ஜனார்த்தனம் போனை எடுத்து தயாநிதியின் செல்போனின் எண்களை அழுத்திப் பேசினார்.

''மச்சான் நாங்க எல்லாம் மதுரைக்குள்ள நுழைஞ்சாச்சு.. என்ன.. நீங்களும் வந்திட்டிங்களா.. நல்லதாப் போச்சு. எந்த ஜவுளிக்கடை.. ம்ம்.. இந்தா வந்திட்டோம்.''

என்னவோ முன்னாலேயே தயாநிதி சொன்ன ஜவுளிக்கடை இருந்தது போலவும் இவர் தாவிக் குதித்து ஓடப் போவது போலவும் ஒரு காலை காருக்குள் வைத்துக் கொண்டு மற்றொரு காலை வெளியில் தரையில் வைத்துக் கொண்டு அவர் பேசினார். சத்தியவதி சிரித்தாள்.

''இறங்கி இப்படியே ஓடியே ஜவுளிக்கடைக்குப் போகப் போறீங்களா? ஒழுங்காய் உட்காருங்க.''

அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி ஜனார்த்தனம் உள்ளே ஒழுங்காக அமர்ந்தார். அவர் முகத்தில் பெண்ணைப் பெற்றவரின் தவிப்பு இருந்தது.

நகரின் மிகப் பெரிய ஜவுளிக்கடையின் வாசலில் கார் நின்றது. அவர்கள் இறங்க வாசலிலேயே காத்துக் கொண்டிருந்த தயாநிதி எதிர்கொண்டழைத்தார். வருங்கால மாமனாரைக் கண்டதும் மரியாதையுடன் தாயின் பின்னால் மறைந்து கொண்டாள் ஊர்மிளா.

''வாம்மா தங்கச்சி, வாங்க மச்சான், டேய் பலராமா... எங்கே என் மருமகளைக் காணோம்'' என்று அவர்களை வரவேற்ற தயாநிதி வினவினார்.

''இதோ என் பின்னாலதான் ஒளிஞ்சுக்கிட்டு இருக்காண்ணே.. உங்களைப் பார்த்ததும் வெட்கம் வந்திருச்சு'' என்று சிரித்தபடி சத்தியவதி கூற தயாநிதி கடகடவென்று சிரித்தார்.



''மாமனார்ன்னா தகப்பன்தான்ம்மா. அப்பாகிட்ட பொண்ணுக்கு என்ன பயம்?'' என்று அவர் கூறவும் ஊர்மிளா தயங்கியவாறு அவர் முன் வந்தாள்.

தயாநிதிக்கு மனம் நிறைந்து விட்டது. படித்த பெண் போலவா இந்தப் பெண் இருக்கிறது. எவ்வளவு பதவிசு.. எவ்வளவு அடக்கம்?

அவர்கள் பட்டுப் புடவைகள் உள்ள பகுதிப் போகும் போது அங்கே கும்பலாய் மேலக்கால் பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஒருவர் கூறும் புடவையை மற்றவர் நொட்டை சொல்ல ஒரு பானிபட் போர் ஆரம்பிப்பதற்கான அறிகுறி தென்பட்டது.

அந்தக் கூட்டத்தில் அவனைத் தேடிய ஊர்மிளாவின் கண்கள் சோர்ந்தன. அவன் அங்கு இல்லை. அவன் வரவில்லையா?

காற்றுப் போன பலூனாய் அவள் உற்சாகம் வடிந்துவிட இயந்திரம் போல் தாயின் பின்னே சென்றாள். அதற்குள் அவர்களைப் பார்த்து விட்ட ஈஸ்வரி, ''இந்தா என் மருமகளே வந்தாச்சு... ஆளாளுக்கு ஏன் அடிச்சுக்கறீங்க? அதுக்குப் பிடிச்சதை அதுவே எடுத்துக்கட்டும்'' என்ற போருக்கு தடை விதித்தாள்.

''இது என்ன அக்கா ஊரில் இல்லாத பழக்கமாகவே எல்லாமே நடக்கிறது. நாம பார்த்து எடுத்துக் கொடுக்கிறதுதான் முகூர்த்தச் சேலை...'' என்று ஊர்மிளாவை முறைத்தாள் சாந்தா.

மருமகளை அருகில் இழுத்து நிறுத்திக் கொண்ட ஈஸ்வரி.

''பாரும்மா.. இந்தச் சேலைகளில் உனக்கு எது பிடிச்சிருக்கோ அதைக் காட்டு. விலையைப் பத்திக் கவலைப் படாதே'' என்றாள்.

அப்போது, "உன் மருமகளுக்குப் பிடித்தால் மட்டும் போதாது அம்மா எனக்கும் பிடிக்க வேண்டும். முக்கியமாக எனக்கு மட்டும்தான் பிடிக்க வேண்டும். ஏன்னா நான்தானே பார்க்கப் போகிறவன்" என்ற குரல் அவள் காதுக்கு மிக அருகில் ஒலித்தது.

அடுத்த நொடி அவள் உடலில் ஆனந்த வெள்ளம் பாய்ந்தது. திரும்பிப் பார்க்க அவள் திரும்ப வெகு அருகில் நின்று கொண்டிருந்த அவன் மீது மோதிக் கொண்டாள்.

அவள் உடலில் மின்சாரம் பாய அவள் தடுமாற அவன் அதைக் கவனிக்காதவன் போல் கூட்டத்தைச் சாக்கிட்டு அவள் அருகில் இன்னும் நெருங்கி நின்று கொண்டு,

"அந்த மெரூன் கலர் புடவையை எடுங்க" என்றான்.

அந்தப் புடவையை விரித்துப் பார்க்கும்போது அவள் கரம் மீது அவன் கரம் உரச ஊர்மிளா தவித்துப் போனாள்.

"இந்தக் கலர் எனக்குப் பிடிச்சிருக்கு. உனக்குப் பிடிச்சிருக்கா?" என்று அவன் அத்தனை பேர் முன்னிலையிலும் அவளைப் பார்த்துக் கேட்க அவள் என்ன சொல்ல என்று தெரியாமல் தாயின் முகம் பார்த்தாள்.

"இந்தக் கலர்தான் உனக்குப் பிடிக்குமேம்மா.. அதையே எடுத்துக்கலாம்" என்று கூறிய சத்தியவதி.

"என்ன மதினி நான் சொல்றது?" என்று ஈஸ்வரியிடம் கேட்டாள்.

"எல்லாமே சீமைச் சித்ராங்கியா இருக்காங்க" என்று செவ்வந்தியின் காதைக் கடித்தாள் சாந்தா.

"அதையேன் கேட்கிற.. இன்னும் பொண்ணையே கட்டலை.. இவ என் மருமகள்ங்கிறா... அவ என் மதினிங்கிறா.. காலக் கொடுமை.." என்றாள் செவ்வந்தி.



புடவை எடுத்து முடித்த பின் அனைவரும் சாப்பிட ஓட்டலுக்குப் போனார்கள். இயல்பாய் லட்சுமணன் ஊர்மிளாவின் அருகே சாப்பிட அமர்ந்து விட்டான். ஊர்மிளா எழுந்திருக்க முடியாமல் அவள் சுவரோரம் மாட்டிக் கொள்ள அவள் அவளுக்கு விருப்பமான சிறையில் மாட்டிக் கொண்டாள்.




ஊர்மிளா தவித்துப் போனாள். அவள் எழுந்திருக்க வேண்டுமானால் அவன் வழிவிட வேண்டும். அவனோ 'வழிவிடவா நான் இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறேன்?' என்பது போல் சட்டமாய் அமர்ந்திருந்தான். அத்தோடு விட்டானா? பலராமனை அழைத்து எதிரே உட்கார வைத்துக் கொண்டான். நான்கு நபர்கள் அமரும் இடத்தில் மூன்று பேர் அமர்ந்திருக்க மீதமிருக்கும் சேரில் கையில் இருந்த பைகளை வைத்து விட்டான். வேறு வழியில்லாமல் மற்றவர்கள் மற்ற இடங்களில் அமர்ந்தார்கள். சர்வர் அருகே வரவும் பலராமனை நோக்கி,

"உனக்கு என்ன பிடிக்கும்?" என்று கேட்டான் லட்சுமணன்.

"எனக்கு நெய் ரவா தோசை, சில்லி பரோட்டா பிடிக்கும் மாமா" என்றான் அவன் உற்சாகமாக.

"அப்புறம் உன் அக்காவுக்கு என்ன பிடிக்கும்?" அவன் மேல் இதமான பவுடர் வாசனை வந்து கொண்டிருந்ததை உணர்ந்த ஊர்மிளா அந்த மயக்கத்திலிருக்க, பலராமன்.

''பிரைட் ரைஸ், புரோட்டா ரெண்டும் பிடிக்கும்'' என்றான். சர்வரிடம் ஆர்டர் கொடுத்துவிட்டு பலராமனிடம் அவன் படிப்புப் பற்றிக் கேட்டுக் கொண்டே சேரை அவள் பக்கம் நெருக்கமாய் தள்ளிப் போட்டுக் கொண்டான் லட்சமணன்.

கையோடு கை உராய ஆரம்பிக்க அவள் கையை நகர்த்திக் கொள்ள முயன்றாள். விடாமல் அவன் கரம் இறுக்கமாகப் பற்ற,

''என்ன இது... நகர்ந்து உட்காருங்கள்'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''எங்கே நகர்வது... இடமில்லையே'' என்றான் அவன் விசமப் புன்னகையுடன். ஊர்மிளா பல்லைக் கடித்துக் கொண்டு.

''உங்கள் நாடகமெல்லாம் தெரியும். பெரியவங்கள்ளாம் இருக்காங்க உங்களுக்குப் புண்ணியமாப் போகும் நகர்ந்து உட்காருங்க'' அவள் ரகசியக் குரலில் கெஞ்சினாள்.

''நாளைக்குக் கோவிலுக்கு வருகிறேன்னு சொல்லு நகர்ந்து உட்காருகிறேன்'' என்று கிடுக்கிப் பிடி போட்டான் அவன்.

''எந்தக் கோவிலுக்கு?''

''உங்கள் ஊர் பெருமாள் கோவிலுக்கு.''

''அதுக்குத்தான் தினமும் வருவேனே...''

''நான் வரும் நேரத்தில் வரவேண்டுமே...''

''எந்த நேரமாம்...?''

''சாயந்திரம் ஆறு மணி...''



''சரி. இப்போது நகர்ந்து உட்காருங்கள்'' அவர்கள் ரகசியம் பேசிக் கொண்டிருக்கும்போதே உணவு வகைகள் வந்துவிட பலராமனின் கவனம் சாப்பாட்டில் திரும்பியது. ஊர்மிளாவின் முன்னால் அவருக்கு ஆர்டர் கொடுத்திருந்தவைகளை லட்சமணம் நகர்த்தி வைத்தான். லேசாய் நகர்ந்து கொள்வது போல் பாவனை செய்தான். குருமாக் கிண்ணத்தை எடுக்க, தண்ணீர் எடுக்க அவன் கரம் பட்டுக் கொண்டே இருக்க ஊர்மிளா ரகசியமாய் முறைத்தாள்.

''ஏன் முறைக்கிற...?''

''இன்னைக்கு என்ன உராயும் படலமா?''

''ஆமாம்ன்னு வைச்சுக்கயேன்...''

''ரொம்பத்தான் தைரியம் உங்களுக்கு... முந்தாநாள் அப்படித்தான்...''

''ஏன் பாதியில் முழுங்கிட்ட... விஷயத்தைச் சொல்லு...''

''ராஸ்கல்'' என்று தணிந்த குரலில் திட்டினாள் ஊர்மிளா. அவன் வாய்க்குள் சிரித்தான்.

''ராஸ்கல்தான்... உன்னுடைய ராஸ்கல்...''

ஊர்மிளாவுக்கு புரோட்டா இனித்தது. அன்று மாலை வீடு திரும்பும் போது அவள் மனம் சிறகடித்துக் கொண்டிருந்தது.

மறுநாள் கண் விழித்ததில் இருந்து அவள் பதட்டமாக இருந்தாள். எப்போதும் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கும் நேரம் அன்று நகராமல் அப்படியே நின்று போனது போல் அவளுக்கு இருந்தது.

ஜனார்த்தனம் அன்று காலையிலேயே கோவிலுக்கு பத்தரிகைகளை வைத்துக் கும்பிடப் போயிருந்தார். திரும்பி வந்ததும் அவசரமாய் சாப்பிட்டு முடித்தவர்,

"சத்தியா கிளம்பு... நம்ம உறவு முறைகளுக்கு நாமே நேரில் போய் பத்திரிகை வைக்கணும். முதல் பத்திரிக்கை பெருமாளுக்கு வைத்தாகி விட்டது... இரண்டாவது பத்திரிகை தாய்மாமனுக்கு வைக்கணும். இன்னைக்கு சாயந்திரத்துக்குள்ள பத்திரிகை வைச்சு முடிச்சிரணும்" என்று பரபரத்தார்.

"எதுக்குப் பதட்டப்படறீங்க... நம்ம நெருங்கிய சொந்தக்காரங்க எல்லாம் இருபது கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில்தான இருக்கிறாங்க. அண்டை அசலூருக்கு ஊர்மிளா தபாலில் அனுப்பிடுவா. நாம நிதானமா பத்திரிகை வச்சிட்டு வரலாம்" கணவனை அமைதிப் படுத்திய சத்தியவதி ஊர்மிளாவைப் பார்த்து,

"இட்லி அவிச்சு வைச்சிருக்கேன். மதியத்துக்கு சோறு, குழம்பு ஆக்கி வச்சிருக்கேன். அப்பளத்தை பொரிச்சுக் கிட்டு தம்பியும் நீயும் சாப்பிடுங்க. ராத்திரி சோறாக்க வந்திடுவேன்... பால்கார முனியன் கிட்டச் சொல்லி யிருக்கேன். அவன் பால் கறந்ததும் பால் கணக்கை மட்டும் எழுதி வைச்சிரு... பத்திரமா இருக்கணும். பல ராமா... விளையாடப் போகாமல் அக்காகூடவே இருக் கணும்" அவர்கள் கிளம்பி விட்டனர்.

மாலை நெருங்க நெருங்க பயம் கலந்த பரபரப்பில் ஊர்மிளாவின் நாக்கு மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டது. தொண்டை வறண்டது. முனியன் வந்து பால் கறந்து போனதும் மணியைப் பார்த்தாள். ஐந்து என்றது சுவர் கடி காரம். முகம் கழுவி தலை வாரிப் பின்னினாள். பாவாடை தாவணி உடுத்தியிருந்தாள். பலராமனைப் பார்த்து,

"கோவிலுக்குப் போய் விட்டு வரலாமாடா?" என்று கேட்டாள்.



"கூட வருகிறேன்... ஆனால் கோவில் வாசலில் என் பிரண்டு இருப்பான். அவன் கூட விளையாடிக்கிட்டு இருப்பேன். நீ சாமி கும்பிட்டு விட்டு வா..."

"சரி.. கூடவா..."

அக்காவுடன் பேசிக் கொண்டே வந்த பலராமன் கோவில் வாசலில் நண்பனைக் கண்டதும் ஓடிவிட்டான். நடுக்கத்துடன் கோவில் படியைத் தொட்டுக் கும்பிட்ட வள் உள்ளே சென்று பெருமாளைச் சேவித்தாள். அருகே யாரோ வந்து நிற்பது உணர்ந்து கண் திறந்தாள். அவன் நின்று கொண்டிருந்தான். அர்ச்சகர் அவளை சிறு வயதி லிருந்து அறிந்தவர். எனவே கோவிலை வலம் வருவது போல் நகர்ந்து சென்று கோவிலின் சுற்றுப் பிரகாரத்திற்கு வந்து விட்டாள். பின்னால் அவன் காலடியோசை கேட்டது.

"இங்கே உட்காரலாமா?"

"ம்ம்ம்."

அமர்ந்தார்கள். கோவில் தூணில் சாய்ந்து அமர்ந்து கொண்டவன் அவள் மறைவாய் அமர்ந்ததைக் கண்டு,

"என்ன?" என்று வினவினான்.

"இது நான் பிறந்து வளர்ந்த ஊர்..."

"நான் இல்லையென்று சொன்னேனா?"

"ச்சு... யாராவது தெரிந்தவர்கள் பார்த்து விட்டால்..."

"என்ன ஆகும்? உன் வீட்டில் போய் உங்கள் மாப் பிள்ளையோடு உங்கள் பெண் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள்ன்னு சொல்லுவார்கள்."

"இன்னும் மாப்பிள்ளையாகவில்லை."

"என் முகத்தைப் பார்த்துச் சொல்.. நான் உன் அப்பா வின் மாப்பிள்ளை இல்லைன்னு..."

''நான் அப்படிச் சொன்னேனா?''

''வேறு எப்படிச் சொன்னாய்?''

''சண்டை போடத்தான் வரச் சொன்னீர்களா?''

''இப்படி பயந்து நடுங்கினால் வேறு என்ன செய்வது?''

''கல்யாணத்திற்கு இன்னும் இரண்டே நாள்தான் பாக்கி. அதற்கு முன்னால் பேசணும்னு அவசரப்பட்டால் நானும் வேறு என்னதான் செய்வது?''

லட்சுமணன் அவள் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தான்.

''ம்ம்... ஏன் பேச மாட்டாய்... நாளை மறுநாள் கல்யாணம் முடிஞ்சா அதற்கப்புறம் ஒரு இருபது நாள்தான் உன் கூட இருக்க முடியும்... அப்புறம் கேம்புக்குப் போயிடணும். திரும்ப வர ஒரு வருஷம் ஆகும். இரண்டே நாள்தான்னு நீ நினைக்கிறாய்.. இரண்டு நாள்களான்னு நான் மலைக்கிறேன். கழியும் ஒவ்வொரு நாளும்.. நான் உன்னைப் பிரிந்து செல்லும் நாளைக் கிட்டே கொண்டு வந்து கொண்டிருக்கிறது... ஒரு ராணுவ வீரனின் தவிப்பு உனக்குத் தெரியுமா? உணர முடியுமா?''

''கல்யாணம் முடிஞ்ச உடனே போய் விடுவீங்களா?'' ஊர்மிளா பதறிப் போய் கேட்டாள்.

''இருபது நாள் கழித்துத்தான் போவேன்...''

விதியின் கணக்கை அறியாமல் அவள் விரல் பிடித்துச் சொன்னான் அவன். இப்போது அவள் விரலை உருவிக் கொள்ளவில்லை. சுற்றுப்புறத்தைப் பார்க்கவில்லை., மெல்ல நகர்ந்து அவன் தோள் சாய்ந்து கொண்டாள். அவன் இன்பமான இதத்தை உணர்ந்தான்.

''என்ன கருணை பொங்கி வழிகின்றது?''



''என் கூட ஒன்னும் பேச வேணாம்...''

''எதுக்குக் கோபம்?'' இதமாய் வினவினான் அவன்.

''விட்டு விட்டு ஊருக்குப் போகிறவர் எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கணுமாம்.''

''அப்போ கல்யாணத்தை நிறுத்திவிடலாமா?''

''என்னது?'' பதறி எழுந்தாள் அவள்.

''இப்ப என்னத்துக்கு எழுந்திரிக்கிற... உட்காரு... ஏய்ய்... அழுகறியா... ஊர்மிளா.. என்னைப் பாரேன்'' அவள் கண் துடைத்து விட்டான்.

''ஊர்மிளா. பிரிகிற துன்பம் உனக்கு மட்டும்தானா? எனக்கில்லையா? பிரியப் போகிறோம் என்பதால் கல்யாணத்தைத் தவிர்த்து விடணுமா? ராணுவ வீரனும் மனிதன்தானே... அவனுக்கு ஆசா பாசம் இருக்கக் கூடாதா? காதல் வரக்கூடாதா? பெண்டாட்டி, பிள்ளைகள்னு வாழணும்னு ஆசை வரக்கூடாதா?''

ஊர்மிளா தேம்பி அழுக ஆரம்பித்து விட்டாள்.

''இங்கே பார் பிரிகிற நாளை நினைத்துக் கொண்டிருந்தால் வாழ்கிற நாளில் நிம்மதி இருக்காது. எங்கே என்னைப் பார். உண்மையிலேயே என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?''

''பிடிக்காமலா நீங்கள் வரச் சொன்ன நேரத்திற்கு கோவிலுக்கு வந்து உட்கார்ந்திருக்கிறேன்...''

லட்சுமணன் அவள் விரலோடு விரல் கோர்த்து விளையாடிக் கொண்டே ''உனக்கு என்ன நிறம் பிடிக்கும்?'' என்று கேட்டான்.

''அடர்ந்த சிவப்பு, கடலின் நிறம், அப்புறம் பிங்க்... உங்களுக்கு?''

''பாரேன் எனக்குப் பிடித்த நிறங்கள்தான் உனக்கும் பிடித்திருக்கிறது...''

''பொய்...''

''மெய்...''

''அடேங்கப்பா... நான் பார்த்தாலும் பார்த்தேன். உங்களைப் போல ஒரு சாகசக்காரரைப் பார்த்ததேயில்லை...''

''இதற்கே இப்படிச் சொல்கிறாயே... இன்னும் எவ்வளவோ இருக்கிறது.''

''சை... கோவிலில் உட்கார்ந்து கொண்டு பேசும் பேச்சா இது...?''

''ஏன்.. அப்படி நான் என்ன சொல்லிவிட்டேன். இன்னும் எனக்குப் பிடித்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், இடங்கள்ன்னு எவ்வளவோ இருக்குன்னு சொன்னேன்.''

அவன் கண்களில் குரும்பு கொப்பளித்தது. 'நீ சொல்வது தான் உண்மை'யென்று சொல்லாமல் சொன்னது. அவன் வார்த்தைகளில் பொய்யான மறுப்பு இருந்தது. அவள் விரல் பற்றியிருந்த கரங்களின் விளையாட்டில் சிறு அழுத்தம் கூடியிருந்தது. ஊர்மிளா அவனது சேட்டையை ரசித்தாள்.

''கள்ளன்...''

''யார்...?''

''வேறு யாராம்... நீங்கள்தான்?''

''எதைத் திருடிவிட்டேன்... இல்லை எதை நீ திருடவிட்டாய்?''

''ஆரம்பிச்சாச்சா...''

''எதை? முறைக்காதே... நீதானே சொன்னாய்.''



''எதற்கெடுத்தாலும் டபுள் மீனிங்...''

''இதோ பார்... என் மனதில் ஒன்றுமில்லை. நான் சாதாரணமாகத்தான் பேசுகிறேன்.. நீதான் எதையோ அர்த்தப்படுத்திக் கொள்கிறாய்...?''

''யார்.. நான்! வேறு அர்த்தம் எடுத்துக் கொள்கிறேன்?''

''ஆமாம்.''

''யு ஆர் ஸோ இன்னொஸன்ட்?''

''எஸ்...''

''அப்படியே முதுகில் ஒரு அறை விட்டுவிடுவேன்.. படவா...''

அவள் அவன் கைகளில் 'நறுக்'கென்று கிள்ள அவன் வலிதாங்க முடியாதவன் போல் ''ஸ்ஸ்'' என்றான். அவள் பதறிப் போனாள். அவசரமாய் அவன் கைப்பிடித்துப் பார்த்தாள்.

''வலிக்கிறதா?''

''ஆமாம்.''

அவள் கிள்ளிய இடத்தை நோக்கி வாய் குவித்து ஊதினாள். அவன் அவள் இதழ்களில் அடிபட்ட கரத்தை வைத்தான். ஊர்மிளா முகத்தை உயர்த்திக் கொண்டாள்.

''என்ன இது..?''

''அடிபட்ட இடத்தை வாயினால் ஊதினால் வலி ஆறுமா? ஒத்தடம் கொடுத்தால்தானே ஆறும்.''

அவள் எழுந்து கொண்டாள். அவன் அவள் கரம் பிடித்து உட்கார வைத்தான். அவன் விழிகளில் ஏக்கம் இருந்தது.

''அதற்குள் கிளம்புகிறாயே... இன்னும் கொஞ்ச நேரம் என்னோடு பேசிக் கொண்டிரேன்...'' அவன் வார்த்தைகளில் கோரிக்கை இருந்தது.

''இல்லை.. வேண்டாம்.. எனக்கு மனதை என்னவோ பண்ணுகிறது... இது கோவில்... மனதால்கூட தவறு நினைக்கக் கூடாது.''

''காதல் தவறு இல்லை ஊர்மிளா.''

''புரிகிறது... இருந்தாலும்... மனது பூராவும் பக்தி இருக்க வேண்டிய இடத்தில் காதல் வரக்கூடாது இல்லையா.''

''அப்படியானால் என்னைப் போகச் சொல்கிறாயா?''

''இல்லை... வீட்டுக்கு வாருங்கள்...''

''எப்படி?''

''அது உங்கள் சாமர்த்தியம். உங்களுக்கா வழி கண்டு பிடிக்கத் தெரியாது? கள்ளன் ஆயிற்றே...''

அவள் பின்னல் ஆட பிரிந்து ஓடினாள். கோவில் வாச லில் கதை பேசிக் கொண்டிருந்த தம்பியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய் விட்டாள். ஒவ்வொரு வினாடியும் மனது அவன் வரவிற்காகக் காத்திருந்தது. 'வருவான்...' மனது கூறியது. அவன் கள்ளன். எப்படியும் வந்து விடுவான். சற்று நேரத்தில் வாசலில் பேச்சுக்குரல் கேட்டது. எட்டிப் பார்த்தாள்.

''வாங்க மாப்பிள்ளை.. சங்கடப்படாதீங்க... இது உங்கள் வீடு போல'' என்று யாரிடமோ கூறிக் கொண் டிருந்த ஜனார்த்தனம் ஊர்மிளாவைப் பார்த்ததும்,

''பாரும்மா... மாப்பிள்ளைத் தம்பி வந்திருக்கார். பக்கத்து ஊருக்குப் பத்திரிகை கொடுக்க வந்தாராம்... போற வழியில் நம்ம ஊர் பெருமாளைக் கும்பிட வந் திருக்காரு. கோவிலுக்குள்ள போய்விட்டு வர்றதுக்குள்ள பாரு... யாரோ விசமக்கார பயபுள்ள... தம்பியோட பைக் டயரை பஞ்சர் பண்ணி விட்டானாம். நாங்க வரும்போது



வண்டியை உருட்டிக்கிட்டு எதிரே வர்றாரு... ராத்திரி நேரமாச்சே. எங்கே போய் பஞ்சர் ஒட்டுவது... அதான் ராத்திரி நம்ம வீட்டில் தூங்குங்க தம்பி... விடியற் காலையில நானே வந்து வண்டியை சரி பண்ணித் தரேன்... போகலாம்ன்னு சொல்லிக் கூப்பிட்டு வந்தேன். மாப்பிள்ளை சங்கோஜப்பட்டுக்கிட்டு வரமாட்டேன் னார்... வலுக்கட்டாயமாய் இழுத்துக் கொண்டு வந்திருக் கேன்'' என்றார் ஊர்மிளாவிற்குச் சிரிப்பு வந்தது.

'சங்கோஜமா... இவனுக்கா.... கள்ளன்..'




லட்சமணன் ஒன்றும் தெரியாத அப்பாவி போல் மிகப் பவ்யமாய் அவள் முகம் பாராமல் நின்று கொண் டிருந்தான். சத்தியவதி பரபரப்பாய் சமையலறைக்குள் போய் அடுப்பைப் பற்ற வைத்தாள்.

''ஏண்டி ஊர்மிளா... மாப்பிள்ளை ராத்திரிக்கு சோறு சாப்பிடுவாரா. பலகாரம் சபப்பிடுவாரான்னு தெரியலையே.. போய் அப்பாகிட்ட கேட்டுக்கிட்டு வா.''

ஊர்மிளா வெளியே வந்தாள். வீட்டின் முன்பக்க காம்பவுண்டின் உள்ளே பிளாஸ்டிக் நாடாவால் பின்னப் பட்ட மடக்கு கட்டிலை விரித்துப் போட்டு அதன் மேல் லட்சமணனுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார் ஜனார்த்தனம். மகளைக் கண்டதும் ''என்னம்மா?'' என்று கனிவாக வினவினார்.

''அம்மா, அவருக்கு என்ன பிடிக்கும்ன்னு கேட்டுக் கிட்டு வரச் சொன்னாங்க.''

அதற்குள் வாசலில் யாரோ அழைக்கவும் எழுந்து சென்ற ஜனார்த்தனம்,

''மாப்பிள்ளை கிட்டேயே கேட்டுக் கொள்ளம்மா'' என்றபடி சென்று விட்டார். ஊர்மிளா அவனைப் பார்க்க அவன் புருவம் உயர்த்தி சல்லாபப் பார்வை பார்த்தான். 'திருடன்' மனதிற்குள் மீண்டும் கூறிக் கொண்டாள். 'அப்பா முன்னால் அடக்க ஒடுக்கமாய் உட்கார்ந்திருந்த தென்ன... இப்போது இந்தப் பார்வை பார்க்கிறானே...' மனது இப்படிக் கூறினாலும் பதிலுக்கு அதே பார்வையை திருப்பித் தாரமலிருக்க அவளால் முடியவில்லை. அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது. கண்கள் மின்னின.

''ஸோ... இது கோவில் இல்லை வீடு... நீ சொன்னபடி வந்து விட்டேன். போதுமா? இதற்கு எனக்கு என்ன தருவாய்?''

''என்ன வேண்டும்?'' கேட்கும்போதே அவன் என்ன கேட்கப் போகிறான் என்பதை யூகித்தாள். அவள் யூகம் மெய்யானது.

''நீதான் வேண்டும்.''

அவள் உதடு கடித்தாள். உடலில் உஷ்ணம் பரவியது.

''தெரியுமே... இப்படித்தான் கேட்பீர்கள் என்று... சரி உங்களுக்கு என்ன பிடிக்கும்...''

அவள் எதிர்பார்த்த பதில் வந்தது.

''உன்னைத்தான் பிடிக்கும்.''

''ப்ளீஸ். அம்மா உள்ளே இருக்கிறாங்க. அப்பா வாசலில் இருக்கார்.'' அவன் சட்டென்று கோபமானான்.

''ஏய்... என்னடி நினைச்சுக்கிட்டு இருக்கே... கோவிலில் சாமி இருக்கார்ன... சரி... வீட்டுக்கு வந்தால்



அப்பாம்மாங்கிற... எல்லார் வீட்டிலயும் தான் அப்பாம்மா இருக்காங்க. அதுக்காக...?''

அவனது சிடுசிடுப்பின் காரணம் புரிந்தது. தவிப்பை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஊர்மிளா சுற்று முற்றும் பார்த்தாள். அப்பா வந்தவருடன் பேசிக் கொண்டே எங்கோ சென்றிருந்தார். இருள் கவிந்திருந்தது. வாசல் விளக்கு இன்னும் போடப்படவில்லை. அவனது கட்டில் இருந்த இடம் இருளின் போர்வைக்குள் இருக்க ஊர்மிளா சட்டென குனிந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். எதிர்பாராத பரிசினால் அவன் திக்கு முக்காடிப் போய் அவள் கை பிடித்து இழுக்க அவன் மடியில் விழுந்தாள்.

உயரமாய் கட்டப்பட்டிருந்த காம்பவுண்டு சுவர் அவர்களை முழுவதும் மறைக்க அவன் மடியில் விழுந்தவள் எழுந்திருக்கும் முன் அவன் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்தன. எழுந்திருக்க முடியாமல் அவன் கைச்சிறையில் அடங்கியவளின் இதழோடு இதழ் பதித்து இறுக்கி அணைத்துக் கொண்டான் லட்சுமணன். ஒரு பெரிய அலையொன்று அடித்துச் செல்வதைப் போல் உணர்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கிவிட்ட ஊர்மிளா அவன் அணைப்பில் அடங்கிப் போனாள். உள்ளேயிருந்து சத்தியவதியின் குரல், ''ஊர்மிளா'' என்று அழைக்க பெருந்தூக்கத்திலிருந்து விழித்தவள் போல் உலுக்கி தன்னிலைக்கு வந்தாள். அவசரமாய் அவன் அணைப்பிலிருந்து விலகி வீட்டினுள்ளே ஓடினாள்.

''என்ன வேண்டுமாம்?''

'நான்தான் வேண்டுமாம்' என்று சொல்லத் துடித்த நாவை கட்டுப்படுத்திக் கொண்டு,

''எது செய்தாலும் சரிங்கிறார் அம்மா'' என்றாள்.

''அப்படியா... சரி நான் கோதுமை மாவை பிசைந்து தர்றேன். நீ உருண்டை போட்டு பூரிக்கு தேச்சுக்குடு. அதற்குள் நான் குருமா ரெடி பண்ணி விடுகிறேன்.''

வீடு திரும்பிய ஜனார்த்தனம்.

''அடடா... என்ன மாப்பிள்ளை இருட்டுக்குள் உட் கார்ந்திருக்கீங்க...'' என்றபடி வாசல் விளக்கைப் போட ஒளி வெள்ளம் பாய்ந்தது. லட்சுமணனின் மடியில் ஊர்மிளா வின் தலையிலிருந்து விழுந்த மல்லிகைப் பூ ஒன்று சிரித்துக் கொண்டிருந்தது. அலுங்காமல் அதை எடுத்துச் சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். அவன் மேல் கவிழ்ந்திருந்த அவளது வாசம் அவனை மயக்கத் தில் ஆழ்த்தியது. கசங்கிய அவனது சட்டை சற்று முன் நிகழ்ந்தது கனவல்ல. நனவு என்பதை உரைத்துக் கொண் டிருந்தது. ஜனார்த்தனம் ஏதோ உலக நடப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க அவன் தன் போக்கில் மெய் மறந்தவனாக 'உம்' கொட்டிக் கொண்டிருந்தான்.

''அதனால்தான் சொல்றேன் மாப்பிள்ளை.. எலக்சன் வச்சா மட்டும் போதாதுன்னு.. என்னம்மா சாப்பாடு தயாராயிடுச்சா...''

ஜனார்த்தனம் பேச்சை நிறுத்திவிட்டு ஊர்மிளாவிடம் வினவ அவள்,

''தயாராகி விட்டது அப்பா'' என்றாள் அவனைப் பார்ப் பதைத் தவிர்த்தபடி,

''வாங்க மாப்பிள்ளை சாப்பிடப் போகலாம்.''

உள்ளே சென்று சாப்பிட அமர்ந்தபோது பலராமன் உள்ளே ஓடி வந்தான்.

''எங்கேடா போயிட்டே... வா சாப்பிடலாம்'' என்றார் ஜனார்த்தனம்.



''ஐ... மாமா'' என்று லட்சுமணனைப் பார்த்து உற்சாக மாய் கூவிய பலராமன் பூரியைப் பார்த்ததும்,

''ஐ... பூரி'' என்று அதைவிட உற்சாகமாய் கூறிவிட்டு தட்டின் முன் உட்காரப் போனான்.

''டேய்... கை கழுவி விட்டுத்தான் சாப்பிடணும்...'' ஊர்மிளா அதட்டினாள்.

''போக்கா... சிங்கமெல்லாம் கையா கழுவுது...'' என்ற படி பூரிகளை உள்ளே தள்ள ஆரம்பித்தான் பலராமன்.

''ஹாஹ்ஹா..'' என்று சிரித்தார் ஜனார்த்தனம் மகனின் பேச்சை ரசித்தவராய்,

''அது சரி.. கையைக் கழுவாமல் சாப்பிட்டா நீ சிங்க மாயிட மாட்டேடா'' என்று தம்பியிடம் கூறினாள் ஊர்மிளா.

''ஊம்... நான் சிங்கம்தான். ஆம்பளை சிங்கம். அப் பாவே அன்னைக்கு சொல்லிட்டாரே நாமள்ளாம் ஆம் பளை சிங்கங்கள்டான்னு...'' பலராமன் ஊர்மிளாவிடம் தலையை ஆட்டியபடி கூறினான்.

''ஆஹ்ஹாஹா...'' என்று இன்னும் பலமாகச் சிரித்த ஜனார்த்தனம்,

''அப்படிச் சொல்லுடா என் சிங்கக்குட்டி'' என்றார் மகனிடம்.

''அவன் சிங்கக்குட்டின்னா நான் யாராம்'' என்று சிணுங்கினாள் ஊர்மிளா.

''நீ மான் குட்டிம்மா...'' என்று மகளை செல்லம் கொஞ்சினார் ஜனார்த்தனம்.

சாப்பிட்டு முடித்த லட்சுமணன், ஊர்மிளா எதிர் பார்த்தது போல் வேண்டுமென்றே தாமதமாய் கை கழுவ வந்தான். ஜனார்த்தனம் உள்ளே சென்றுவிட பலராமன்

சமையலறையில் சத்தியவதியிடம் செல்லம் கொஞ்சிக் கொண்டிருக்க ஊர்மிளா கையில் கை துடைக்கும் துண்டைக் கொண்டு வந்து நீட்டினாள். அவளை விழுங் குவது போல் பார்த்துக் கொண்டே கை கழுவியவன் அவளது தாவணி முந்தானையில் கை துடைத்தான்.

"ஐயோ... யாராவது பார்த்திடப் போறாங்க..."

"பார்க்கட்டும்" என்றவாறே தாவணி முந்தானையை அவன் பிடித்து இழுக்க வழக்கம் போல் அவள் அவன் மேல் விழுந்தாள். அப்புறம் வழக்கம் போல் அவன் அணைப்பில் அடங்கினாள். அவன் வழக்கம் போல் முத்தமிட்டான்.

மருண்ட அவள் விழிகளைப் பார்த்தபடி முகம் விலக் கியவன் தன் கையிலிருந்து அவள் தாவணி முந்தானையை விடுவித்து,

"நீ மான் குட்டியே தான்டி.. இந்த பயம் பயப்படு கிறே?" என்றான்.

ஊர்மிளா உள்ளே விரைந்து விட்டாள். வீட்டின் முன் பக்கத்தில் இரண்டு கட்டில்கள் மெத்தை போடப்பட்டு புது விரிப்புக்கள் விரிக்கப்பட்டு தயாராக இருந்தன. அவற்றில் ஒன்றில் ஜனார்த்தனம் அமர்ந்திருக்க மற் றொன்றில் லட்சுமணன் அமர்ந்திருந்தான்.

"அப்பா பால்..." என்று ஊர்மிளா நீட்டினாள்.

"மாப்பிள்ளைக்கும் குடும்மா."

அவன் முகம் பார்க்காமல் நீட்டி விட்டு உள்ளே சென்று விட்டாள்.

உள்ளறையில் தாயின் ஒரு பக்கம் ஊர்மிளாவும் மறு பக்கம் பலராமனும் படுத்தார்கள். சற்று நேரத்தில் பகல்



பூராவும் ஊர், ஊராய் சுற்றிப் பத்திரிகை வைத்து விட்டு வந்து வீட்டிலும் வேலை செய்த அலுப்பில் சத்தியவதி தூங்கிவிட விளையாடிய களைப்பில் பலராமனும் தூங்கி விட்டான்.

தூங்காதது ஊர்மிளா மட்டும்தான். அவளால் தூங்க முடியவில்லை. கண்களை மூடினாள் அவன் உருவம்தான் தெரிந்தது.

'கள்ளன்' என்று செல்லமாய் திட்டிக் கொண்டே புரண்டு படுத்தாள். 'சட்'டென்று அவள் மேல் சிறுகல் ஒன்று வந்து விழுந்தது. பதறிப்போய் திரும்பிப் பார்த்தாள்.

ஜன்னலோரத்தில் அந்தக் 'கள்ளன்' நின்று கொண் டிருந்தான்.

குப்பென்று வியர்த்து விட்டது ஊர்மிளாவுக்கு. அவசரமாய் தாயையும் தம்பியையும் பார்த்தாள். ஆழ்ந்து உறங்கிக் கொண்டு இருந்தார்கள்.

'என்ன' என்று சைகை காட்டினாள்.

'வெளியே வா' என்று அவன் பதில் சைகை காட்டினான்.

'முடியாது' என்று தலையை ஆட்டினாள்.

'நான் போய் விடுவேன்' என்று அவன் சைகையில் கூறினான்.

'திக் திக்'கென்று மனம் அடித்துக் கொள்ள எழுந்து பின்னால் கதவு திறந்து முற்றத்திற்குச் சென்றாள். அவன் அங்கு காத்திருந்தான்.

"அப்பா...?" என்றாள் அவள் பயந்த குரலில்.

"அடித்துப் போட்டது போல் தூங்குகிறார்."

"எதுக்குக் கூப்பிட்டீர்கள் சொல்லுங்கள். நான் உள்ளே போகணும்."

''போய் என்ன செய்யப் போகிறாய்?''

''ம்ம்.. தூங்கப் போகிறேன்...''

''தூக்கம் வருகிறதா?''

அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். வீட்டிற்கு முன்னால் கைக்கு எட்டும் தூரத்தில் அவன் படுத்திருக்கும் போது தூக்கம் எப்படி வரும்?

''வீட்டிற்குள்ளே கை தொடும் தூரத்தில் நீயிருக்கும் போது என்னால் தூங்க முடியவில்லை'' அவள் மனதிலிருப்பதை அவன் கூறினான்.

அவள் மெதுவாய் கதவை மூடிவிட்டு முற்றத்து படிக் கட்டில் அமர்ந்தாள். அருகே அவன் அமர்ந்தான். நிலவின் ஒளியில் அவள் முகம் பார்த்தான்.

''எண்ணம் போல் வாழ்க்கை ஒரு சிலருக்குத்தான் அமையும். அது எனக்கு அமைந்திருக்கு ஊர்மிளா'' என்றான் மிக மெதுவான குரலில்.

''எனவாம்.'' என்றாள் அவள் கிசுகிசுப்பான குரலில்.

''நீதான் வேண்டுமென்று ஆசைப்பட்டேன். நீயே எனக்குக் கிடைத்து விட்டாய்... நீ என் மனமறிந்து நடந்து கொள்ள வேண்டும்ன்னு ஏக்கப்பட்டேன். என் மனமறிந்து உன் பயம் உதறிக் கட்டுக் காவல் தாண்டி என்னிடம் வருகிறாய்.. எனக்காக எது வேண்டுமானாலும் செய்வாய்.. இதைத்தான் சொன்னேன்.''

அவன் அவள் காதருகில் குனிந்து ரகசியம் பேசினான். அவள் முகம் சிவந்து அவன் மடியில் முகம் புதைத்தாள். அவன் சத்தமின்றி சிரித்தான். தலை கவிழ்ந்திருந்த அவள் கூந்தலில் முகம் புதைத்து வாசம் பிடித்தான். மெல்ல விலகி அமர்ந்தவன்,



''பாண்டிய மன்னன் போல் ஆராய்ச்சி செய்கிறீர்களா? பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணமா? செயற்கை மணமான்னு...?'' என்றாள்.

''உன் கூந்தலுக்கு எப்படியோ... உன் மேல் ஒரு தனி வாசம் இருக்கு.. அது முதல் உன்னை நான்..''

அவன் பேச விடாமல் வாய் பொத்தினாள் அவள்.

தன் இதழ் பொத்திய கரத்தின் விரல்களை அவன் கடிக்க அவள் கரம் விலக்கினாள். அந்தக் கையை தன் கைக்குள் பத்திரமாய் பொதித்துக் கொண்டவன்,

''இப்போ... இந்த நிமிசம் உனக்கும், எனக்கும் கல்யாணமாகவில்லைங்கிற நினைப்பே பொய் என்பது போல் இருக்கிறது. எத்தனையோ ஜென்மங்களாய் சேர்ந்து வாழ்ந்த நினைப்புத்தான் வருது'' என்று கூறினான்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.''

அவர்கள் வெகு நேரம் நிலவொளியில் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள். விடியும் நேரம் நெருங்கும்போது ஊர்மிளா,

''இனிப் போய் தூங்கலாமா?'' என்று கேட்டாள்.

''எங்கே தூங்குவது? போய் தூங்குவது போல் நடிக்கலாம்.''

விடிந்தபோது தூங்கி விட்டாள் ஊர்மிளா.

''ஊர்மிளா, ஊர்மிளா'' என்று சத்தியவதி உலுப்பி எழுப்ப அவசரமாய் விழித்து எழுந்தாள்.

''என்னம்மா ரொம்ப நேரம் தூங்கிட்டேனா?''

''அதெல்லாமில்லை.. காபி போட்டு வைச்சிருக்கேன். அப்பாவும் மாப்பிள்ளையும் வாசலில் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் எழுப்பிக் கொடுத்துட்டு வா.''

ஊர்மிளா காபித் தம்ளர்களோடு வாசலுக்கு வந்தாள்.

"அப்பா, அப்பா" என்றழைத்தாள்.

"என்னம்மா.. பால்கார முனியன் வந்திட்டானா?" என்று பதறி எழுந்தார் ஜனார்த்தனம்.

"அவன் அப்போதே வந்து பால் கறந்திட்டுப் போயிட் டான்னு சொல்லும்மா" உள்ளேயிருந்து சத்தியவதியின் குரல் வந்தது.

"பால் கணக்கை எழுதி வைத்தாளா?" ஜனார்த்தனம் கேட்க,

"வைச்சாச்சு..." உள்ளிருந்து பதில் வந்தது.

ஊர்மிளா இன்னொரு தம்ளரோடு தயங்கி நின்றாள். அப்பா முன்னிலையில் எப்படி அவனை எழுப்புவது?

"என்னம்மா..."

"அப்பா அவருக்கு காபி..."

"அடடா... மாப்பிள்ளை இருக்காரில்ல..." என்றபடி அவசரமாய் எழுந்த ஜனார்த்தனம், தூங்கிக் கொண் டிருந்த லட்சுமணனை மெதுவாய் அசைத்து எழுப்பினார்.

"மாப்பிள்ளை மாப்பிள்ளை..."

மெதுவாய் கண் திறந்தவன் படக்கென்று எழுந்து அமர்ந்தான்.

"விடிந்து விட்டதா... ஊருக்குக் கிளம்பணுமே..."

"கிளம்பலாம் மாப்பிள்ளை... முதலில் காபியைக் குடிங்க."

ஊர்மிளாவின் விழிகளை சந்தித்த விழிகள் ரகசியம் பேச காபியை வாங்கிக் கொண்டவன் ஜனார்த்தனத்திடம் கேட்டான்.



"இங்கே மெக்கானிக் யாராவது இருக்காங்களா மாமா?"

"அந்தக் கவலை உங்களுக்கு எதுக்கு? ஊர்மிளா அம்மாகிட்ட வெந்நீர் போடச் சொல்லு... நீங்க குளிச் சுட்டு சாப்பிடுங்க... நான் மெக்கானிக்கை கூட்டி வந்து வண்டியை சரி பண்ணிக் கொடுக்கறேன்."

அவன் குளிக்க முற்றத்திலிருந்த குளியலறையில் வெந்நீர் ஊற்றி வைத்த பின் பலராமன் வாங்கி வந்த புதிய பிரஷையும், பல் பசையையும் கொடுத்தாள் ஊர்மிளா.

"கல்யாணத்திற்கு முன்னாலேயே மறு வீடு வந்து மாமியார் வீட்டில் சீராடுவது போல இருக்கு" என்றான் லட்சுமணன்.

"நல்லவேளை... வேறு எதையும் சொல்லலை..."

"என்ன சொல்லுவேன்னு நினைச்சே."

"ஒன்னுமில்லை."

"பொம்பளைங்க ஒன்னுமில்லைன்னு சொன்னால்தான் எதுவோ இருக்குன்னு அர்த்தம். நீ சொல்ல வந்ததை நான் சொல்லவா?"

"வேண்டாம்."

"இல்லை. சொல்லுவேன்."

"நான் கேட்கமாட்டேன்..." ஊர்மிளா உள்ளே ஓடி விட்டாள்.

அவன் சிரித்தபடி குளிக்கப் போனான். குளித்துவிட்டு வரும்போது அவன் வண்டி தயாராகி நின்றது.

காலை உணவாக இட்லியும், தோசையும் செய்திருந் தாள், சத்தியவதி.. ஊர்மிளா ஓடி ஓடிப் பரிமாறினாள்.

அவன் கிளம்பினான்.

''வருகிறேன் மாமா, போய் வரேன் அத்தை...'' விடைபெற்றான்.

''அதுதான் நாளைக்கு மறுநாள் வந்து விடுவீங்கள்ல மாமா'' என்றான் பலராமன்.

மறுநாள் திருமணம்... முதல் நாளே மாமியார் வீட்டில் விருந்து சாப்பிடுகிறான்... லட்சுமணன் சங்கோஜத்துடன் வண்டியைக் கிளப்ப ஊர்மிளா உள்ளே கதவின் பின் மறைந்து கொண்டாள்.

சற்று நேரத்தில் வாசலில் பந்தல் போடப்பட்டது. உறவினர் கூட்டம் வந்து இறங்கிக் கொண்டே இருந்தது. வீட்டில் கல்யாணச் சூழல் கொண்டது. ஊர்மிளா வீட்டிற் குள்ளேயே அமர வைக்கப்பட்டாள். மாலை நெருங்கும் முன்னரே குளித்து புதுப்பட்டு உடுத்தி தலை வாரிப் பின்னலிட்ட ஊர்மிளாவின் பின்னலில் உறவுப் பெண் கள் பூ வைத்துத் தைத்து அலங்காரம் செய்து விட்டார்கள். நெற்றிச் சுட்டி, ஜடைப் பில்லை எல்லாம் வைத்து நகை களையும் அணிவித்த பின் ஊர்மிளா,

மணப்பெண் ஊர்மிளா ஆகி விட்டாள்.




அழகுமிகு பெருமாளின் வதனம் தீபாராதனை ஒளியில் புன்னகையுடன் பிரகாசித்தது. ஜனார்த்தனம் குடும்பத்தினரும், அவரது உறவினரும் கண்மூடி பிரார்த் தனை செய்து கொண்டிருந்தார்கள். குருக்கள் தீபா ராதனைத் தட்டுடன் வர தொட்டு ஒற்றிக் கொண்டு



குங்குமம் பெற்றுக் கொண்டார்கள். கோவிலில் இருந்து திரும்ப வந்த சிறிது நேரத்திலேயே பெண் அழைத்துப் போக கார் வந்து விட்டது.

செவ்வந்தியும், சாந்தாவும் இறங்கி வந்தனர்.

''காபி சாப்பிடுங்க'' என்று பெண் வீட்டினர் உபசரிக்க.

''கல்யாண வீட்டிலிருந்துதான் வாரோம். காபி கூட கிடைக்காமலா வந்திருப்போம்'' என்று முறைத்தாள் சாந்தா.

அந்தப் பெண்மணி உள்ளே போகத் திரும்ப,

''ஏம்மா... அதுதான் காபி வேணாம்னு சொல்லுச்சு. என்கிட்ட கேட்டயா... நான் வேணாம்னு சொன் னேனோ. காலக் கொடுமை'' என்று செவ்வந்தி சடைத்துக் கொண்டாள்.

அவசரமாய் அவளுக்கு காபி வழங்கப்பட்டது.

''காபி கொடுத்தால் கொஞ்சம் ஆத்திக் கொடுக்க மாட்டியா... சுடுகங்கை உள்ளார போட்டிருக்காப்புல இந்தக் கொதி கொதிக்குது. தொண்டை வெந்திரும் போல... காலக் கொடுமை...''

உடனே வாங்கி ஆற்றிக் கொடுத்தார்கள்.

''ஆத்தச் சொன்னால் பச்சைத் தண்ணியாய் ஆத்திக் கொடுப்பியா இதை மனுசங்க குடிப்பாங்களா... காலக் கொடுமை.''

உள்ளேயிருந்து இந்தக் கூத்தைப் பார்த்துக் கொண் டிருந்த சத்தியவதியின் அம்மா.

''இதென்னடி பெருங்கொடுமையாயிருக்கு.. இந்த ரெண்டு ராங்கிக்காரிகளும் யாருடி..'' என்று மகளிடம் கேட்டாள்.

''ஸ்ஸ்... சத்தம் போட்டுச் சொல்லாதே ஆத்தா.. இதுக ரெண்டும் மாப்பிள்ளையின் அத்தையும், சித்தியும்.''

''என்னவோ போ ரெண்டும் ரெண்டு அகப்பை... ரெண்டுமே கழண்ட அகப்பைன்னுல இருக்கு. அவசரமா மிலிடிரி மாப்பிள்ளை, சொத்து சுகம் ஏராளமா இருக்குன்னு நிச்சயம் பண்ணிப் புட்ட... இதுகளைப் பார்த்தா பெரிய ராங்கிக் கூட்டம் மாதிரியில்ல இருக்கு.''

''நமக்கென்ன ஆத்தா... மாப்பிள்ளையைப் பெத்தவங் களும், கூடப் பிறந்ததும் தங்கம்ன்னா தங்கம் சொக்கத் தங்கம்.. நமக்கு அதுதானே வேணும்.''

''அதை எப்படி சரியாச் சொல்ல முடியும்.... ஒரு பானைச் சோத்துக்கு ஒரு சோறு பதம்ங்கிறாப்புல... இதுக மாதிரிதானே இதுக குடும்பமும் இருக்கும்.'' மூதாட்டியின் குரலில் கவலை தொனித்தது.

''பாட்டி.. இவங்க விசயம் அப்படியில்லை பாட்டி. ஒரு கூடை பழத்துக்கு ஒரு பழம்ன்னு சொல்லனும். ஒரு பழம் சரியில்லைன்னா கூடைப் பழமும் அப்படியே இருக் குமா?'' ஊர்மிளா பதில் கூறினாள்.

''அடி ராசாத்தி...'' என்று பேத்தியின் கன்னம் தொட்டு வழித்தவள்,

''என் பேத்திக்குத்தான் அவங்க மாமியார் வீட்டு மேல எவ்வளவு நல்ல எண்ணம்... உன் மனம் போல நல்லாயிரு தாயி...'' என்று வாழ்த்தினாள்.

காருக்குள் பெண் கூட யார் ஏறுவது என்ற போட்டி வந்தது.

''எதுக்கு எல்லோரும் அடிச்சுக்கறீங்க. அதான் ஒரு பஸ்ஸே ஏற்பாடு பண்ணியிருக்கேனில்ல... ஊர்மிளா



கூட அவ அம்மா போகட்டும். நாம எல்லாம் சௌகர்யமா பஸ்ஸில் போகலாம். அதில போய் இடிச்சுக்கிட்டு ஏன் உட்காரனும்?''

எல்லோரும் பின் வாங்க காரின் பின் சீட்டில் சாந்தா ஏறிக் கொள்ள ஊர்மிளாவை நடுவில் உட்கார வைத்து சத்தியவதி பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். முன் சீட்டில் டிரைவர் பக்கத்தில் உட்காருவதா என்று திகைத்த செவ்வந்தி சாந்தாவை முறைத்தாள்.

'கைகாரி... எல்லாத்திலயும் முந்திக்கிறா.. காலக் கொடுமை' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே பலராமனை அழைத்து டிரைவர் பக்கத்தில் நடுவில் அமர வைத்துக் கொண்டு இவள் ஓரமாக அமர்ந்து கொண்டாள்.

ஜனார்த்தனம் கார் டிரைவர் அருகே வந்தார்.

''பாருப்பா... காரை மெதுவாகவே ஓட்டு.. எங்க பஸ் பின்னாலேயே வந்துக்கிட்டு இருக்கும்'' என்று எச்சரித்தவர்,

''ம்ம் ஏறுங்க சீக்கிரம்'' என்று அவசரப் படுத்தியவாறு திரும்பிப் பார்த்தால் அவரது சொந்தக்காரர்களின் கூட்டம் பஸ்ஸில் அதற்குள் அமர்ந்திருந்தார்கள்.

''முதலில் நீங்க சீக்கிரம் போய் பஸ்ஸில் ஏறுங்க. அவங்கள்லாம் அப்பவே ஏறியாச்சு'' என்றாள் சத்தியவதி.

அவசரமாய் போய் பஸ்ஸில் அமர்ந்து கொண்டார் ஜனார்த்தனம். கார் முன்னால் ஓட பஸ் பின் தொடர்ந்தது.

அழகான தென்னந்தோப்புக்கள் சூழ்ந்த மேலக்கால் கிராமம். வைகை ஆறு ஓடும் பூமி. தாடிக்கொம்பில் பிறந்த ஊர்மிளா நீர் சூழ்ந்த மேலக்காலின் மருமகளாக ஆக மணப்பெண்ணாய் காலடி எடுத்து வைத்துக் காரி லிருந்து இறங்கினாள்.

பெண் வீட்டார் தங்க ஊருக்குள்ளேயே பெரிய வீடு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் அங்கே இறங்கியதும் வீடியோ கேமராக்கள் ஒளிர்ந்தன.

ஊர்மிளாவிற்கு ஆவலாக இருந்தது. அவனைக் காண. அவள் விழிகள் அவனைத் தேடின. மனமோ,

'இன்று காலையில்தானே அவன் உன்னைப் பிரிந்து சென்றான்?' என்றது.

'அதற்காக?' என்று மனதிற்குள் கூறிக் கொண்டாள். வாழ்வினிலே ஒரு நாள் மறக்க முடியாத மணநாள். என்றும் நினைவில் கொள்ள வேண்டிய திருநாள். இந் நாளில் மணப்பெண் கோலத்தில் அவள் இருப்பதை அவன் பார்க்க வேண்டாமா?

ஆனால் அவன் பார்த்துக் கொண்டிருந்தான். பெண் வீட்டார் தங்கும் வீட்டிற்கு எதிர் வீடு அவனது அத்தை செவ்வந்தியின் வீடு. அதன் மாடியிலிருந்து அவர்கள் இறங்கியது முதல் உள்ளே சென்றது வரை கவனித்துக் கொண்டிருந்தான். ஊர்மிளாவின் விழிகள் அவனைத் தேடியதைக் கண்டதும் மனம் இறக்கை கட்டிப் பறந்தது. போர்க் களத்தில் பெறும் வெற்றிகளுக்கு இணையானது ஒரு பெண்ணின் மனதை வெல்வது. வென்றவன் மனதில் மிகப் பெருமிதமாக உணர்ந்தான்.

தோளில் ஒரு கை விழ திரும்பிப் பார்த்தான். நடேசன் நின்று கொண்டிருந்தான். செவ்வந்தியின் நாத்தனார் மகன். பால்ய காலத்திலிருந்து லட்சுமணனின் தோழன்.

''இங்கேயிருந்து பார்த்தால் பெண்ணின் முகம் எப்படித் தெளிவாய் தெரியும்? பக்கத்தில் போய்ப் பார்ப்பது தானே?''

''அதெல்லாம் அப்புறமாச் செய்யணும்? இறங்கிய வுடனே முன்னால் போய் நிற்கக்கூடாது?''



''உனக்குத்தானா தெரியாது? எம்டன்டா நீ...''

''சரி வா... இப்போ பெண் வீட்டார் இருக்கிற வீட்டிற்குப் போகலாம். போய் பெண்ணைப் பார்க்கலாம்.''

''ஏண்டா... வந்தவுடனே போகக்கூடாதுன்னு இப்பத் தானே சொன்னே. இப்ப மட்டும் போகலாமா? இன்னும் கொஞ்சம் நேரமாகட்டும்.''

''நீயெல்லாம், எப்படித்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறியோ.. டேய் அவர்கள் வந்து இறங்கியவுடனே முன்னால் போய் நின்றால் பறக்கா வெட்டிம்பாங்க... வந்து ரொம்ப நேரம் கழிச்சுப் போய் நின்னால் 'என்னடா நம்மளை சட்டை செய்யவே இல்லையே... இவன் ரொம்பத் திமிர் பிடிச்சவ'ன்னு நினைச்சிருவாங்க... விடிஞ்சா தாலி கட்டப் போறேன்... என் ஆளு முறுக்கிக் கிட்டா என்ன ஆகிறது?''

''ஆமாமாம்.. நாளைக்கு நைட் பர்ஸ்ட் நைட்.''

''தெரியுதில்ல... வா போய் விசாரிக்கலாம்.''

''சரிடா.. என்ன சொல்லிக்கிட்டு அங்கே போறது? இது கிராமம்.''

''டேய்... காபி குடித்தாங்களா இல்லையான்னு போய் விசாரிப்போம்.''

''ஆமாமாம். அதுதானே உன் வேலை... டேய் நீ மாப்பிள்ளைடா.''

''ஆமாம். ஊர்மிளாவின் மாப்பிள்ளை.''

சொல்லும்போதே மனம் இனித்தது லட்சுமணனுக்கு. அப்போது அங்கே வந்த சுந்தரம்,

''டேய் இங்கே நின்னுக்கிட்டு என்னடா அரட்டை? பெண் வீட்டு ஆளுக படுக்க தலையணை, ஜமுக்காளம்

வாடகைக்கு எடுத்திட்டு வந்தோமே அதையெல்லாம் எதிர் வீட்டில் போய் போடுங்க சீக்கிரம்'' என்று விரட்டினார்.

'ஆஹா' என்று மகிழ்ந்து போன நண்பர்கள் இருவரும் கீழே இறங்கி வந்து வீட்டிலிருந்த உறவினர் குழந்தைகளை அழைத்துக் கட்டி வைக்கப்பட்டிருந்த தலையணை, ஜமுக்காளங்களை தூக்கி அவர்கள் தலையில் வைத்து விட்டனர். அவர்கள் பெயருக்கு ஆளுக்கு ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டனர்.

வெற்றிகரமாய் எதிர்வீட்டில் நுழைந்து உள்ளே போய் வாண்டுகளின் தலைகளில் இருந்தவைகளை வாங்கி வைத்து விட்டு அவர்களை விரட்டி விட்டு விட்டு மிடுக்காக ஜனார்த்தனத்தைப் பார்த்தனர். லட்சுமணன்

''மாமா.. காபி சாப்பிட்டு விட்டீர்களா?'' என்று விசாரித்தான்.

கண்கள் ஊர்மிளாவைத் தேடின.

''இன்னும் காபி வரலையே மாப்பிள்ளை'' என்று அவர் கூறிக் கொண்டு இருக்கும்போது செவ்வந்தி காபிப் பாத்திரத்தை ஒரு பெண்மணி தூக்கிக் கொண்டு வர தம்ளர்களுடன் வந்து விட்டாள்.

''அது சரி.. இன்னும் மகள் கழுத்தில் தாலியே ஏறலை.. அதுக்குள்ள மாப்பிள்ளைகிட்ட புகார் சொல்றிங்களா... காலக் கொடுமை.''

லட்சுமணன் நடேசனைப் பார்க்க அவன் நிலைமையைச் சமாளித்தான்.

''அத்தை.. என்ன இங்கே நின்னுக்கிட்டு இருக்கே.. அங்கே நம்ம மாமா காபி குடிக்கலைன்னு சொல்லிக்



கிட்டிருந்தார். கனகம் சித்தி காபி போட்டுக் குடுக்கலாம்ன்னு அடுப்பைப் பத்த வைக்கப் போச்சு.. அதான் இங்கே வந்திருந்தால் ஒரு கிளாஸ் வாங்கிக்கிட்டுப் போகலாம்னு வந்தோம். இந்த மாமா இன்னும் காபி வரலைன்னு சொல்லிக்கிட்டு இருந்தார்..'' நடேசன் தன் போக்கில் அளந்துவிட செவ்வந்தி நிலை குலைந்து விட்டாள்.

''என்னது கனகம் காபி போடறேன்னாளா?''

அந்தக் கனகம் சுந்தரத்தின் அத்தை மகள். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள். சீர் வரிசை அதிகம் செய்ததால் செவ்வந்தி சுந்தரத்தின் மனைவி ஆகிவிட கனகம் வெளியூருக்கு 'வாக்கப்பட்டுப் போனாள்.' அவள் இப்போது லட்சுமணனின் கல்யாணத்திற்கு வந்திருக்கிறாள்.

காலையில் சுந்தரத்தின் வீட்டிற்கு வந்திருந்தபோது சுந்தரம்,

''என்ன கனகம் பிறந்த வீட்டுக்கு வந்தால் அப்படியே போயிடறதா.. ஒரு எட்டு வீட்டுக்கு வந்திட்டுப் போகலாம்ல? மாமன் வீட்டையே மறந்திட்டயா?'' என்று யதார்த்தமாய் விசாரித்து வைக்க அவள் போனவுடன் மனைவி போடு போடென்று போட்டுத் தாக்கியதில் உண்டு இல்லையென்று ஆகிவிட்டார்.

'மனுசன் அடங்க மாட்டேன்கிறாரே' என்று கறுவியவாறு அவள் தன் வீட்டிற்குக் கிளம்ப யத்தனிக்கும்போது சுந்தரம் எதிரே வந்து விட்டார்.

''மனுசனுக்கு நேரம் சரியில்லைடா.. இப்படியா வலிய வந்து அத்தைகிட்ட மாட்டுவார்?'' என்று லட்சுமணன் நடேசனின் காதில் கூறினான்.

''இப்பத்தான் காபி கொண்டு வர்றயா? என்னடா பார்த்துக்கிட்டு நிற்கறீங்க... வாங்கி ஊத்திக் கொடுங்கடா'' என்று லட்சுமணன் எங்கோ பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டு நடேசனிடம் அதட்டினார் சுந்தரம்.

''என்னவோ தண்ணியடிக்கிறவங்களுக்கு 'ஊத்திக் குடுங்கிற மாதிரியில்ல மாமா பேசறார்'' என்று லட்சுமண னின் காதில் பதிலுக்கு கூறிய நடேசன்,

''இதோ செய்கிறோம் மாமா'' என்று தம்ளர்களை நடே சன் வாங்க லட்சுமணன் அதற்குள் ஊர்மிளா இருக்கும் அறை வாயிலை நெருங்கி நின்று கொண்டான்.

மணப்பெண்ணாக அவள் விரித்து வைத்திருந்த ஜமுக்காளத்தில் தலை குனிந்து அமர்ந்திருக்க சுற்றிலும் மணப்பெண்ணை வேடிக்கை பார்க்க வந்த கிராமத்து ஜனங்கள் அமர்ந்திருந்தார்கள்.

''நடேசா காபியை இங்கே கொண்டு வா'' என்று லட்சுமணன் உரத்த குரலில் கூற ஊர்மிளா 'படக்'கென்று நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் 'இவ்வளவு நேரமா வருவதற்கு?' என்ற கோபம் இருந்தது. நடேசன் காபிப் பாத்திரத்துடன் ஓடி வர,

''சீக்கிரம் எல்லோருக்கும் காபி குடுடா. ஆளுக்கு ஒரு வேலைன்னு பிரிச்சுச் செஞ்சாலும் வேலை முடியாமல் இழுத்துக்கிட்டே போகுது பாரு. ஜமுக்காளம், தலையணை வாங்க இவ்வளவு நேரமாகி விட்டால் மற்ற வேலைகளை எப்போது பார்ப்பது?'' என்று ஊர்மிளாவை ஜாடையாய் பார்த்துக் கொண்டே கூறினான் லட்சுமணன்.

''பலே... தேறிட்டடா...'' என்று மெதுவான குரலில் பாராட்டிய நடேசன்,

''பொண்ணு சூப்பர்டா'' என்று விமர்சித்தான்.



''டேய்... அவ என் பெண்டாட்டிடா.''

அவர்கள் மெதுவான குரலில் பேசிக் கொள்வது தன்னைப் பற்றித்தான் என்பது புரிய ஊர்மிளா முகம் சிவந்தாள்.

''காபி'' என்று லட்சுமணன் அவளுக்கு காபி கொடுக்க,

''வாங்கிக்கங்க அண்ணி பொண்ணு பார்க்க வந்தப்ப நீங்க அண்ணனுக்கு காபி கொடுத்தீங்க. கல்யாணப் பொண்ணா வந்திருக்கீங்க அண்ணன் உங்களுக்கு காபி கொடுக்கிறாரு...'' என்று நடேசன் கூறினான்.

ஊர்மிளா வெட்கத்துடன் காபியை வாங்கிக் கொண் டாள். இருவரும் கிளம்பும்போது லட்சுமணன், ஊர் மிளாவைப் பார்த்து லேசாய் தலையசைத்து விடை பெற்றுக் கொண்டது ஊர்மிளாவிற்கு மிகவும் பிடித்திருந்தது.

இருவரும் கேலி பேசிக் கொண்டே வாசலுக்கு வந்தார்கள். செவ்வந்தி சுந்தரத்தை வறுத்து பொரித்துக் கொண் டிருந்தாள் பாவம். அவள் மேலும் தப்பில்லை. அவள் நடேசன் சொன்னதை மட்டும் நம்பி அவர் மேல் பாய வில்லை. முதலில் செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பி,

''கனகம் வந்திருந்தாப்புல போல...'' என்று கேட்டாள். சுந்தரம் அவள் காலையில் கனகம் வந்திருந்ததை கேட் கிறாள் என்று எண்ணி விட்டார்.

''ஆமாம்... வந்திருந்தாளே...''

''ஒகோ... உங்களுக்கு ஒரே தலைவலியாமே...''

''ஏண்டி.. கல்யாண வேலையில தலை வலிக்கக் கூடாதா? இது ஒரு தப்புன்னு கேள்வி கேட்கிறவ?''

''அது சரி! ஆமாம்.. தலைவலிக்கு காபி வேணும்னு தோணியிருக்குமே.''

"ஆமா. தோனுக்க. இப்ப என்ன நீ வந்து காபி போட்டுக் குடுக்கப் போறயா? நீ நல்ல நாளிலேயே தில்லை நாயகம். இன்னைக்கு உன் அண்ணன் மகன் கல்யாணம். வீட்டில தங்குவயா?"

"நான் வீட்டில தங்காட்டி... எவ வேணும்னாலும் வந்து குடித்தனம் பண்ணுவாளா? குடுமியை அறுத்திடுவேன்... பார்த்து நடங்க."

"என்னடி சொல்றே... எவ வந்து குடித்தனம் பண்ணினா...?"

சுந்தரத்திற்கு விளக்கமளிக்காமல் பாய்ந்து குதற ஆரம்பித்து விட்டாள் செவ்வந்தி. புரியாமல் விழித்துக் கொண்டிருந்தவரை நடேசனும், லட்சுமணனும் மீட்டனர்.

"அத்தை இங்கே என்ன பண்றீங்க... முகூர்த்தத்திற்கு என்ன செய்ய, எது செய்யன்னு தெரியலை. செவ்வந்தி கிட்ட கேட்கனுமுன்னு அம்மா தேடினால் 'ஏன் நானில்லையா எனக்குத் தெரியாதா'ன்னு சித்தி சொல்லிக்கிட்டு இருக்கு.." என்று லட்சுமணன் கூறியதுதான் தாமதம்.

"மனுசி கொஞ்சம் கண் மறைஞ்சிரக் கூடாதே.. நான் நான்னு நாட்டாமை பண்ண வந்திருவாளே.. காலக் கொடுமை" என்றவாறு செவ்வந்தி பறந்து விட்டாள்.

"அவ பாட்டுக்கு வந்தா. தலைவலியான்னு கேட்டு ஒரு ஆட்டம் ஆடி விட்டுப் போறாளே..." சுந்தரம் புரியாமல் புலம்பினார்.

சுந்தரத்தை சமாதானப்படுத்தி அவரையும் அழைத்துக் கொண்டு வீட்டிற்கு நடந்தபோது லட்சுமணன் திரும்பிப் பார்த்தான். அவன் எதிர்பார்த்தபடி ஊர்மிளாவின் உருவம் மாடியில் தெரிந்தது.

அவன் மனம் நிறைந்தது.





# 8

தயாநிதியின் வீடு அந்த ஊரில் மிகப் பெரிய வீடு. அந்த வீடு இருந்த தெருவும் மிக அகலமானது. அந்தத் தெருவை அடைத்துப் பந்தல் போட்டிருந்தார்கள். தயாநிதியின் வீட்டு ஹால் மிகப் பெரியது. அதில் மணவறை அமைத்திருந்தார்கள். பந்தி இன்னொரு வீட்டில் நடந்து கொண்டிருந்தது. பந்தலை நாற்காலிகள் நிறைத்திருந்தன. வீட்டின் உள்ளே மணவறையைச் சுற்றி ஜமுக்காளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. நல்ல நேரத்தில் பெண் மணவறைக்கு அழைத்து வரப்பட்டு ஏற்கனவே அமர்ந்திருந்த மாப்பிள்ளையின் அருகே உட்கார வைக்கப்பட்டாள். ஊர்மிளா அமர்ந்ததும் லட்சுமணன் நன்றாக நகர்ந்து அவளை இடித்துக் கொண்டு அமர்ந்தான். அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது. மணமேடையில் அவனை நிமிர்ந்து முறைக்க முடியாமல் மனதிற்குள் திட்டினாள்.

'கள்ளன்... வெட்கமில்லாத ராஸ்கல்.'

நாதஸ்வரம் ஒலிக்க கெட்டி மேளம் முழங்க உறவினர்கள் அட்சதை போட சுபயோக சுபநேரத்தில் அவளது உள்ளம் கவர்ந்த கள்வன் அவள் கழுத்தில் மூன்று முடிச்சு போட்டு அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டான். அவள் கரம் பிடித்து அக்கினியை வலம் வந்தான்.

ஊர்மிளா லட்சுமணனின் மனைவி ஆகிவிட்டாள். தாடிக் கொம்பு கிராமத்தில் ஜனார்த்தனம், சத்தியவதி தம்பதியின் மகளாகவும் பலராமனுக்கு தமக்கையாகவும்

இருந்தவள் இன்று தயாநிதி, ஈஸ்வரி தம்பதிகளின் மருமகளாகவும், சுபத்ராவின் அண்ணியாகவும் ஆகிவிட்டாள்.

இனி அவளது வாழ்க்கை அவனோடு. அவனது உறவினர்கள் தான் அவளது உறவினர்கள். அவன் வீடுதான் இனி காலம் முழுவதும் அவள் வீடு.

மணமக்களுக்கு பாலும், பழமும் கொடுத்தார்கள். கோவிலுக்கு அழைத்துச் சென்று குலதெய்வத்தை வணங்க வைத்தார்கள். மதிய விருந்து பரிமாறினார்கள். எல்லா நேரங்களிலும் அவளது கையை இறுகப் பிடித்துக் கொண்டே அவன் இருந்தான். விடுவிக்கவில்லை.

"அண்ணன் மகனே.. உன் பெண்டாட்டியை யாரும் விழுங்கிவிட மாட்டாங்க... கொஞ்சம் கையை விடு. காலக் கொடுமை" என்று செவ்வந்தி கூறியதை அவன் கண்டு கொள்ளவில்லை.

"இந்த வித்தையெல்லாம் எங்கேடா கத்துக்கிட்ட" என்று கைத்தாளம் பேசிய சாந்தாவின் வார்த்தைகள் அவன் காதுகளில் ஏறவில்லை.

தயாநிதி வீட்டு மாடியறை. இதமான ஊதுவத்தி வாசம். அறையை ஒட்டியிருந்த மொட்டை மாடியில் நடை பயின்று கொண்டு ஊர்மிளாவிற்காக காத்துக் கொண்டு இருந்தான் லட்சமணன்.

கொலுசு சத்தம் கேட்டது. ஊர்மிளா வருவதை அது அறிவித்தது. வந்தவள் அறைக்குள் அவன் இல்லாததைக் கண்டு திகைத்தாள். மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்த லட்சமணன்.

"இங்கிருக்கிறேன்" என்று குரல் கொடுத்ததும் அங்கே வந்தாள்.



இதமான அவள் வாசத்தோடு மல்லிகையின் வாசம் அவனைச் சமீபித்தது. கொலுசு சத்தம் ஒலிக்க வந்து நின்றாள்.

லட்சமணன் அறையிலிருந்து வந்த வெளிச்சத்தில் அழகுப் பதுமையென அருகில் வந்து நின்ற ஊர்மிளாவை ரசித்துப் பார்த்தான்.

"என்ன புதிதாய் பார்ப்பது போல் பார்வை? ம்..."

"புதிதுதாண்டி... நேற்று வரை நீ என் காதலி... இன்று என் மனைவி."

"அதற்கென்னவாம்..?"

"என்னவா... எத்தனையோ இருக்கு... இப்படி வா சொல்கிறேன்."

மொட்டை மாடியில் நிலவொளியில் அவளை அமர வைத்தான். அருகே அமர்ந்தவன் அவள் எதிர்பாராமல் அவள் மடியில் படுத்துக் கொண்டான்.

அவள் இன்ப அவஸ்தையில் சிக்கினாள். அவளது கழுத்தில் தொங்கிய மாங்கல்யத்தை தொட்டு விளையாடியவாறே அவன் பேசினான்.

"ஊர்மி... நேற்று வரை உன்னை நான் தொடலாம். தொட்டேன். அதிக பட்சமாய் என்ன செய்ய முடியும்? முத்தமிடத்தான் முடியும்."

"அதையும் முதல் நாளிலேயே செய்தாகிவிட்டதே... கள்ளன்."

அவன் நகைத்தான். அவளது கரத்தைப் பிடித்து எடுத்து விரல் பின்ன ஆரம்பித்தான்.

"அதெல்லாம் ஒரு திரில்டி... இப்போ நிலையே வேற.. அதற்கும் மேல் எத்தனையோ... அதைச் சொல்ல முடியாது. என்னா... அது சொல்லித் தெரியாதது..."

ஊர்மிளா வெட்கத்துடன் மௌனம் சாதித்தாள்.

"ஊர்மி... ஒரு பாட்டு கேட்டிருக்கிறாயா.. ரொம்ப பழைய பாட்டு... நம் பாட்டி காலத்துப் பாட்டு..." அவன் பாடினான்.

"ஆயிரம் இரவுகள் வருவதுண்டு

ஆனால் இதுதான் முதல் இரவு."

ஊர்மிளாவின் மடியிலிருந்து எழுந்து நின்றவன் அவள் கை பிடித்து எழுப்பி நிறுத்தினான். அவள் தோள் தழுவி முத்தமிட்டான். தொய்ந்து சரிந்தவளை அப்படியே கைகளில் வாரித் தூக்கிக் கொண்டு உள்ளே வந்து படுக்கையில் கிடத்தினான்.

அந்த இரவின் ஒரு வினாடி கூட அவர்கள் உறங்கவில்லை. உறவாடினார்கள். உரையாடினார்கள். இரண்டும் இல்லாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

பரிசு என்பது ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்வது. ஒருவர் விரும்புவதை மற்றொருவர் அளிப்பது... பரிசு வழங்குவதில் இருவரும் கொடை வள்ளல் கர்ணனை மிஞ்சினார்கள்.

பொழுது புலர்ந்தது. புது மண மக்களை 'மறுவீடு' விருந்திற்கு ஊர்மிளாவின் பெற்றோர் அழைத்தனர். தயாநிதி தயக்கத்துடன்,

"மச்சான் மகனும் மருமகளும் இரண்டு நாள் அங்கே தங்கட்டும். மகனுக்கு லீவு குறைச்சலா இருக்கு... அந்நால் ஒரு பத்து நாள் பக்கத்தில் கொடைக்கானல் இருக்கு போய்ட்டு வரட்டும்" என்றார்.

ஜனார்த்தனம் மகிழ்ந்து போனார். அவர் மகளும் சந்தோசப்படுவாளே.



"இதுக்கு எதுக்கு மச்சான்.. இவ்வளவு சங்கடப்பட நீங்க. நம்ம புள்ளக சந்தோசம் தானே நமக்கு முக்கியம். சடங்கு, சம்பிரதாயமெல்லாம் நம்மளை மாதிரி ஆளுகளுக்குத்தான். மாப்பிள்ளை லீவு முடியும் வரை அவங்க கொடைக்கானலில் தங்கியிருக்கட்டும். ஆகிற செலவு என்னைச் சேர்ந்தது."

"அதெல்லாம் வேண்டாம் மச்சான். எனக்கிருப்பது ஒரே பையனும் பெண்ணும் தானே. யாருக்கு செலவழிக்கப் போகிறேன்?"

இரண்டு தகப்பன்மார்களும் போட்டிபோட,

"ஹலோ... நான் என் பெண்டாட்டியோட தேன் நிலவு போவதற்கு நீங்க ரெண்டு பேரும் ஏன் செலவழிக்கணும்? என் சம்பளம் இருக்கு. நான் பார்த்துக் கொள்வேன்."

என்று லட்சுமணன் அவர்கள் போட்டிக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

"பார்த்தியா செவ்வந்தி... இந்தக் கூத்து எங்கேயும் நடக்குமா?" சாந்தா செவ்வந்தியின் காதைக் கடிக்க,

"அதுதானே.. பெண்ணைக் கட்டிக் கொடுத்தவர் செலவுக்கு கொடுக்கிறேன்னா வாங்கிக்கிட்டுப் போக வேண்டியதுதானே.. அப்பனும், மகனும் வேண்டாம்கிறானுங்க.. என் அண்ணனுக்கும் புத்தியில்லை. என் அண்ணன் மகனுக்கும் புத்தியில்லை... காலக் கொடுமை..." என்று அவள் நொடித்தாள்.

மறு வீடு விருந்து பலமாக இருந்தது. அவளை முதன் முதலாய் சந்தித்த பெருமாள் கோவிலில் கணவன், மனைவியாக இருவரும் போய் வணங்கினார்கள். கோவில் பிரகாரத்தை வலம் வரும்போது,

''இங்கேதானே நாம் உட்கார்ந்திருந்தோம்'' என்று கேட்டான்.

''ஆமாம்.''

''உட்கார்...'' என்று உட்கார்ந்து கொண்டவன் அருகில் அமர்ந்து கொண்டவளைப் பார்த்துக் கேட்டான்.

''இப்போ ஒளிந்து உட்காரவில்லையே?''

''ம்ம்... தெரியதாக்கும்.''

''இது நீ பிறந்து வளர்ந்த ஊராச்சே...''

''நீங்கள் என்னோட தாலிகட்டிய புருசனாச்சே...''

''ஹாஹ்ஹா... இதற்குத்தாண்டி உட்காரச் சொன்னேன். அப்போது பயந்து, பயந்து நீ உட்கார்ந்ததைப் பார்க்க கஷ்டமா இருந்துச்சு.''

''ரொம்பத்தான் அக்கறை.. அவ்வளவு இருந்தால் ஏன் வரச் சொல்லணும்?''

''முடியலைடி.''

ஊர்மிளாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது. படக்கென்று எழுந்து கொண்டாள். அவனும் கேள்வி கேட்காமல் எழுந்து கூட வந்தான். கோவிலைத் தாண்டியதும்...

''ஏன் எழுந்து விட்டேன்னு கேட்கவே இல்லையே...'' என்றாள் அவள்.

''காரணம் தெரிந்ததுதானே. கேட்பதற்கு என்ன இருக்கிறது?''

''என்ன காரணமாம்?''

''என் பெண்டாட்டிக்கு என் மேல் காதல் வந்து விட்டது. அம்மினிதான் கோவிலுக்குள் கொஞ்ச மாட்டீங்களே. அதுதான் வீட்டுக்கு கூட்டிக்கிட்டுப் போறீங்க... போதுமா?''



''உதைதான் கிடைக்கும். ராஸ்கல்... வீட்டில் ஒரே கூட்டம்...''

''கூட்டத்தை மீறிக் கொஞ்ச வர மாட்டாயா?''

''வரமாட்டேன்.''

''அதையும் பார்ப்போம்.''

அவன் சவாலில் ஜெயித்தான். கணவனுக்கு காபி கொடுக்க வேண்டும், அவன் முகம் கழுவ குளிய லறையில் தண்ணீர் எடுத்து வைக்க, அவனுக்கு சாப்பாடு பரிமாற என்று ஆயிரம் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டு அவனைக் கட்டித் தழுவி விலகினாள் அவள் மனைவி.

குளிர் மிகுந்த கொடைக்கானல். ஊசி மரக் கூட்டத்தின் இடையே சுற்றிப் பார்ப்பவர்களின் கூட்டம். கட்டவிழ்ந்த கன்றுகளாய் லட்சுமணனும், ஊர்மிளாவும் அங்கே சுற்றித் திரிந்தனர்.

சேலையை விட்டுப் பழையபடி சுடிதாருக்கு மாறி யிருந்தாள் ஊர்மிளா. ஜீன்ஸ், டி.சர்ட்டில் அட்டகாசமாய் இருந்தான் லட்சுமணன். கையில் இருந்த வீடியோ காமிராவில் அவர்கள் இருவரின் நிகழ்காலத்தையும் பதிவு செய்து கொண்டிருந்தான் லட்சுமணன். சில நேரம் அவனது நடமாட்டங்களை அவளும், அவளது செயல்களை அவனும் கேமிராவில் பதிவு செய்து கொண்டார்கள். சில நேரம் அவர்கள் இருவரும் சேர்ந்து நடக்க மற்றவர்கள யாராவது உதவி கேட்டு பதிவு செய்து தரச் சொன்னார்கள்.

''ஏய்ய்... குதிரையில் ஏறுவோமா?''

''ஐயோ எனக்கு ஏறத் தெரியாது...''

''நான் ஏற்றி விடுகிறேன்.''

இருவரும் ஒரே குதிரையில் ஏறிக் கொள்ள அந்தக் குதிரை மெதுவான ஓட்டத்துடன் நடந்தது.

இருவரும் இறங்கியதும் அந்த வட இந்திய இளைஞனுக்கு நன்றி சொல்லி வீடியோ காமிராவைப் பெற்றுக் கொண்டான் லட்சுமணன்.

"இதையெல்லாம் படம் பிடிக்கணுமா?"

"நிச்சயமாய்.. இனி இது போன்ற படங்கள்தான் நம் இருவருக்கும் துணை!" அவன் இயல்பாய் பேசிக் கொண்டே அவள் தோள் மீது கைபோட அவளது நடை நின்றது.

"என்னடா?" அவள் முகம் நிமிர்த்தினான். அவள் விழிகளில் கண்ணீர் முத்துக்கள்.

"ஏன் அப்படிச் சொன்னீங்க?"

"அதுக்கா கலங்குற? பைத்தியம். நீ இங்கே.. நான் அங்கேன்னுதான் நம் வாழ்க்கையில் பாதி நாள் கழியப் போகிறது... அப்போது உனக்கும், எனக்கும் துணையா இந்தப் படங்கள் இருக்கும்ன்னுதான் சொன்னேன்... மீதி நாள் உனக்கு நானும், எனக்கு நீயும் துணையிருப்போமே..."

அவள் தோளோடு அணைத்துக் கொண்டு நடந்தான். அவன் மனம் அமைதியடையாமல் ஏனோ அலை பாய்ந்து கொண்டிருந்தது.

குறிஞ்சி ஆண்டவர் கோவிலில் முருகனை வணங்கி விட்டு வெளியே வந்தனர்.

"குறிஞ்சிப் பூ பூத்திருக்கு பார்த்தாயா?"

"ஹைய்யோ... எவ்வளவு அழகாயிருக்கு."

"இந்தப் பூவோட சிறப்பு என்னன்னு தெரியுமில்ல..."



"பனிரெண்டு வருசத்துக்கு ஒரு தரம் மலரும். அது தானே."

"குறிஞ்சிப் பூப்போல்ன்னு ஏன் சொல்றாங்க தெரியுமா.. அப்படி ஒரு வித்தியாசம்ன்னு சொல்லால் உணர்த்துறாங்க."

"ஏங்க எனக்கு ஒரு ஆசை..."

"சொல்லேன். நீ கேட்க மாட்டாயான்னு தான் காத்துக்கிட்டிருக்கேன்."

"அடுத்த முறை குறிஞ்சிப் பூ பூக்கும்போது நாம் இங்கு வரலாமா?"

"வந்துட்டாப் போச்சு."

இலகுவாய் சொன்னான் லட்சுமணன். அதே நேரம் பனி படர்ந்த மலையோரம் முகாமிட்டிருந்த ராணுவ வீரர்களுக்கு போர் அறிவிப்பு செய்தி போய் சேர்ந்தது.




பண்டைய காலத்தில் சிற்றரசுகளாக சிதறிக் கிடந்த நம் இந்தியத் திருநாட்டை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தது முகலாய ராஜ்யம். ஒன்றுபட்ட இந்தியாவை அடிமைப்படுத்தி அதைத் துண்டு படுத்திக் கொடுத்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். வெள்ளையரை எதிர்த்தபோது 'நாம் இந்தியர்' என்ற எண்ணம் மட்டுமே ஒவ்வொரு இந்தியனுக்குள்ளும் இருந்தது. ஆனால் 'நான் இந்து. நீ முஸ்லீம்' என்ற வேற்றுமையைக் கொண்டு வந்தது இந்திய, பாகிஸ்தான் பிரிவினை.

என்று பாரதம் இரண்டாகப் பிரிந்து இந்தியா, பாகிஸ்தான் என்ற இரண்டு நாடுகளானதோ அன்று ஆரம்பித்தது சகோதர யுத்தம். அன்றிலிருந்து இன்றுவரை இரு நாடுகளும் ஒன்றுபடவேயில்லை.

இந்நிலையில்தான் பாகிஸ்தான் ராணுவம் எல்லையைக் கடந்து நம் இந்தியத் திருநாட்டில் 'கார்கில்' என்ற பகுதியை ஆக்ரமிப்பு செய்தது. மண்ணை விட்டுக் கொடுக்காத மானமுள்ள இந்தியா கொதித்து எழுந்தது. போர் முரசு கொட்டியது.

விடுப்பினில் சென்றிருந்த ராணுவ வீரர்கள் உடனே பணிக்குத் திரும்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

லட்சுமணனின் வீட்டிற்குச் சென்ற ராணுவ உத்தரவு அவன் கொடைக்கானல் சென்றிருந்ததை அறிந்ததும் அங்கு தேடிச் சென்றது.

இதை அறியாத ஊர்மிளா, லட்சுமணனின் அணைப்பில் சிக்கியிருந்தாள். குளிர் இரவில் காமன் கணை தாக்க அங்கே அந்த இளம் ஜோடிகளின் சல்லாபம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது.

"எப்ப... இப்ப எதுக்கு எழுந்து அங்கே போற?"

"ஏதோ சத்தம் கேட்பது போல் இருக்கிறது..."

ஊர்மிளா ஜன்னல் திரை விலக்கிப் பார்த்தாள். அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலின் கீழ்த்தளம் தெரிந்தது. ஏதோ ஒரு ஜீப் விளக்குகள் ஒளிர வந்து நிற்க அதிலிருந்து நான்கைந்து நபர்கள் இறங்குவது தெரிந்தது.

லட்சுமணனின் கரங்கள் அவள் பின்னாலிருந்து அணைத்தன.

அவனது வெப்பமான உதடுகள் அவளது பின்னங் கழுத்தில் பதிந்தன. அவன் மூச்சுக் காற்றின் சூட்டை



உணர்ந்தவளின் உடலில் அலையலையாய் உணர்வுகள் பொங்கியெழுந்தன. திரும்பிய வேகத்தில் கணவனை இறுக அணைத்தாள். கட்டியணைத்த மனைவியை இறுகத் தழுவித் தூக்கியவன் படுக்கையில் போட்டான். அவள் மேல் படர்ந்தான். கொடி போல் அவன் கழுத்தைச் சுற்றிப் பிணைந்தன அவளது கரங்கள்.

மோக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களின் நிலையை உணராமல் அலறியது அறையின் அழைப்பு மணி. லட்சுமணன் எரிச்சலுடன் விலகி எழுந்தான். அவன் முகத்தில் தடைபட்ட சந்தோசத்தின் கோபம் தெரிந்தது. ஊர்மிளாவைப் பார்த்தான். அவள் பதறி எழுந்து கதவைப் பார்த்துக் கொண்டாள். அவனை ஏறிட்டாள்.

"இந்த ராத்திரி நேரத்தில் யாரு கூப்பிடறது?"

"எந்த பூஜை வேளைக் கரடியோ... போய் பார்த்தால்தான் தெரியும்."

ஊர்மிளா அவன் கோபத்தை ரசித்து 'களுக்'கென்று சிரித்தாள்.

"பூஜையை எப்போ வேண்டுமானாலும் தொடரலாம்... முதலில் கரடியார்ன்னு பார்த்து வழியனுப்பி வைத்து விட்டு வாங்க..."

ஆனால் வந்தது வழியனுப்ப முடியாத கரடி என்பது கதவைத் திறந்த லட்சுமணனுக்குத் தெரிந்து விட்டது.

வெளியே நான்கு ராணுவச் சீருடை அணிந்த நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். லட்சுமணன் கதவை முழுவதும் திறந்தான்.

"லெப்டினன் லட்சுமணன்...?"

''யெஸ்...''

''ஐ ஆம் மேஜர் சூர்யா... கொடைக்கானல் ரெஜிமென்ட்.''

லட்சுமணன் விறைப்பாய் நின்று சல்யூட் அடித்தான். ஊர்மிளாவிற்கு அந்தக் குளிரிலும் வியர்த்தது.

''எனி நியூஸ் சார்...?'' லட்சுமணன் கேட்டான்.

''யெஸ்... அர்ஜன்ட் நியூஸ் ஃபார் யு... போர் அறிவித்திருக்கிறார்கள். நீங்கள் உடனே டியூட்டிக்குத் திரும்ப வேண்டும்.''

''என்னது?'' ஊர்மிளாவின் கண்கள் இருட்டி மயக்கம் வந்தது. அவர்கள் திருமணம் முடிந்து பதினைந்து தினங்களே ஆகியிருந்தன. எப்படியும் இன்னும் ஐந்து நாளில் அவன் கிளம்ப வேண்டும்தான். ஆனால் ஐந்து நாள்கள் இருக்கிறதே என்று நினைத்த பேதை மனம் திடீரென்று பிரிவை எதிர்கொள்ள இயலாமல் தவித்தது.

அதுவும் எப்படி? பணிக்குப் பிரிந்து செல்ல இருப்பவனை போர் முனைக்கு உடனே அனுப்புவதா?

லட்சுமணன் திரும்பி மனைவியைப் பார்த்தான். அவளது அகன்ற விழிகளில் தெரிந்த அச்சம் அவன் மனதை பிசையச் செய்தது.

என்ன செய்வது? கடமை அழைக்கின்றதே... பெருமூச்சுடன் மனைவியை அணுகினான். அவள் பின் வாங்கி நகர்ந்தாள்.

மேஜர் சூர்யாவை ஒரு வேண்டுதலோடு பார்த்தான் லட்சுமணன் அவர் புரிந்து கொண்டார்.

''வெல் மிஸ்டர் லட்சுமணன் கீழே ராணுவ ஜீப் காத்திருக்கிறது. உங்கள் மனைவியை ஊரில் விட்டு



விட்டு நீங்கள் உடனே டிரெயினை பிடித்தாக வேண்டும். அரை மணி நேரமாகுமா... நீங்கள் கிளம்பிவர?''

நாசூக்காய் அவனுக்கு கட்டளையிட்டுவிட்டு இங்கிதமாய் அவர் சென்று விட்டார். உடன் நின்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர்.

லட்சுமணன் கதவை அடைத்துவிட்டு மனைவியிடம் சென்றான். ஊர்மிளா தளர்ந்து போய் கட்டிலில் உட்கார்ந்தாள். அவள் அருகே சென்று தோளில் கை போட்டு முகம் நிமிர்த்தினான்.

''ஏய்...'' என்றான்.

சற்று முன் படுக்கையில் சொன்ன ''ஏய்...''க்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்? ஊர்மிளா உடைந்து அழுதாள். லட்சுமணன் ஆதரவாய் அணைத்துக் கொண்டான். அவன் மார்பில் முகம் புதைத்துக் கதறியவளை 'அழட்டும்' என்று விட்டு விட்டான். பத்து நிமிடம் சென்றதும் அவள் ஓய்ந்தாள்.

''ஊர்மிளா... பிரிவை எதிர்பார்த்தவர்கள்தானே நாம்?''

''இன்று எதிர்பார்க்கவில்லை.''

''ராணுவ வீரன் எப்போதும் அழைப்பிதற்குத் தயாராக இருக்க வேண்டும். ராணுவ வீரனின் மனைவி பிரிவுக்குத் தயாராக இருக்க வேண்டும்.''

''முடியவில்லையே... என்னால் உங்களைவிட்டுப் பிரிய முடியவில்லையே... நான் எப்படி இருப்பேன்...''

மீண்டும் அழ ஆரம்பித்தவளை தேற்ற முயன்றான் லட்சுமணன். இதுதான் பெண்மையின் குணம். பிறந்து வளர்ந்து ஒரு ஆணின் கரம் பிடிக்கும் வரை அவள் மனம் அவள் வசம். அவன் கரம் பற்றி அவன் பின் சென்று

விட்டால் அவள் மனம் அவன் வசம் பெற்று வளர்த்த தாய் தந்தையர் இருந்தாலும் 'உன்னை எப்படிப் பிரிவேன்?' என்று கதறுகிறாளே... இவள்தான் தமிழ்ப்பெண்.

ஒருவாறு அவளைத் தேற்றி சாமான்களை பெட்டியில் அடைத்து அறையைக் காலி செய்து ஜீப்பில் ஏறியபோது லட்சுமணனின் மனம் ஒரு கணம் தவித்தது.

'அறியாப் பெண்ணின் வாழ்வில் விளையாடி விட்டோமோ?'

மேலக்கால் கிராமமே அந்த இரவு தூங்காமல் விழித்திருந்தது. புதிதாய் தாலிகட்டி வந்து இரு வாரங்கள் கூட ஆகாமல் கணவனை வழியனுப்பும் அந்தப் புதுப் பெண்ணின் பரிதாப நிலையைக் கண்டு எல்லோருமே மனதிற்குள் இரக்கம் கொண்டார்கள்.

தாய் தந்தையின் பாதம் பணிந்து விடைபெற்ற லட்சுமணன் கூறினான்.

"அப்பா, அம்மா.. ஊர்மிளாவை உங்கள் பொறுப்பில் விட்டு விட்டுப் போகிறேன்.. பார்த்துக் கொள்ளுங்கள்."

"போய் வரேன்னு சொல்லுப்பா..." ஈஸ்வரியின் குரல் உடைந்தது.

"ஐயா... கவலைப்படாமல் போய் விட்டு வா. நம்ம சுபத்ராவை நாங்க எப்படிப் பார்த்துக்கிறோமோ.. அதைப் போல் ஊர்மிளாவையும் பார்த்துக் கொள்வோம். இது சத்தியம்டா ராசா..." தயாநிதியின் குரல் தழுதழுத்தது.

லட்சுமணன் ஊர்மிளாவின் அருகே வந்தான்.

"ஊர்மி... இது உன் வீடு. இவங்க என்னைப் பெற்றவங்க... இனி உனக்கும் பெற்றவர்கள். நான் திரும்பி வரும் வரை நீ இங்கேதான் இருக்க வேண்டும்."



ஊர்மிளாவின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது.

"இருப்பேன்... இங்குதான் இருப்பேன். இந்த வீட்டை விட்டு ஒரு அடி கூட வெளியே எடுத்து வைக்க மாட்டேன்."

அவளை அணைக்கத் துடித்த கைகளை விலக்கிக் கொண்டு யார் முகமும் பாராமல் விடுவிடுவென்று ஜீப்பில் சென்று அமர்ந்து கொண்டான்.

ஜீப் கிளம்பியது. அவர்கள் கண்களிலிருந்து மறைந்தது. ஊர்மிளா அடக்க, அடக்க அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. தரையில் அமர்ந்து முழங் கால்களில் தலையைப் புதைத்து கண்ணீரில் கரைந்து கொண்டிருந்தாள். விடிந்த பின்னும் அவள் நிலையில் மாற்றமில்லை.

ஈஸ்வரி தவித்தாள். 'ஒரு வாய் காபி கூடக் குடிக்க மறுக்கிறாளே... இந்தப் பெண். மகனிடம் வாக்குறுதி கொடுத்திருக்கிறோமே.. இவளை எப்படித் தேற்றுவது?' கையை செய்வதறியாது பிசைந்து கொண்டிருந்தாள்.

அப்போது செவ்வந்தி அங்கே வந்தாள்.

"என்ன மதினி இப்படிக் கவலையா நிற்கறீங்க.. லட்சுமணன் என்ன இன்னைக்கு புதுசாவா மிலிடிரிக்குப் போயிருக்கிறான்."

"நமக்குப் புதிதில்லை செவ்வந்தி... நம்ம வீட்டு மருமகளுக்கு புதிதாச்சே."

"சரி மதினி.. அதுக்கு என்ன செய்யறது... ஏதாச்சும் சாப்பிட்டுச்சா?"

"எங்கே... ராத்திரி அழுக ஆரம்பிச்சதுதான்.. இன்னும் ஓயலை. பல்ல விளக்கி ஒரு வாய் காபியைக் குடித்தாலாவது எனக்கு நிம்மதியாயிருக்கும்."

செவ்வந்தி ஊர்மிளாவின் அருகில் சென்று அமர்ந்தாள்.

''இது என்னம்மா பெரிய காலக் கொடுமையாயிருக்கு. லட்சுமணன் எங்களை நம்பி உன்னை விட்டு விட்டுப் போயிருக்கிறான். உன்னை நம்பி பெத்தவங்களை விட்டு விட்டுப் போயிருக்கிறான். உனக்கு மட்டுமா துயரம்? பெத்தவங்களுக்கும், கூடப் பிறந்தவளுக்கும் இல்லையா?''

செவ்வந்தியின் அதட்டலுக்கும் பலன் இருந்தது. ஊர்மிளா மெல்ல மனம் தேறினாள்.

அடுத்த நாள் ஊர்மிளாவை அழைத்துச் செல்ல அவள் பெற்றோர் வந்தனர்.




தயாநிதியும், ஈஸ்வரியும் ஊர்மிளாவின் பெற்றோரை வரவேற்று குறையின்றி உபசரித்தனர்.

''நாங்க ஊர்மிளாவை எங்களுடன் கூட்டிப் போய் கொஞ்ச நாள் கூட வைத்திருந்து அனுப்புகிறோமே'' ஜனார்த்தனம் கூறினார்.

''மாப்பிள்ளை மிலிடிரியில் இருக்கிறார். எங்களுக்கும் பெண்ணைக் கட்டிக் கொடுத்ததிலிருந்து வீடே வெறிச் சென்று இருக்கு. இந்தா இருக்கிற தாடிக் கொம்புதானே. நீங்க மருமகளைப் பார்க்கணும்னா ஒரு எட்டு வந்து பார்த்திட்டுப் போகலாமே'' என்று தன்மையாய் கூறினாள் சத்தியவதி.

''ஆமம்மா.. மேலக்காலில் இருந்து தாடிக் கொம்பு ரொம்பக் கிட்டத்தான். தாடிக் கொம்பிலிருந்து மேலக்கால் ரொம்பத்தூரம் தான். நல்லா நியாயம் பேசுறீங்க. காலக் கொடுமை'' என்றாள் செவ்வந்தி.



''அதுக்கில்லைங்க... நான் என்ன சொல்ல வரேன்னா...''

''நீங்க ஒன்னும் சொல்ல வேண்டாம்மா. எங்க அண்ணன் எதுக்கு அவர் மருமகளைப் பார்க்க உங்க வீட்டுக்கு எட்டு வைத்து வரணும்? அந்த எட்டை நீங்க வைத்து வந்தால் ஆகாதா? காலக் கொடுமை.''

சண்டைக் கோழியாய் செவ்வந்தி முறைக்க சத்தியவதி தவித்தாள். புதிதாய் திருமணமான பெண். கணவனை விட்டுப் பிரிந்திருக்கிறாள். தாய் வீட்டில் இருந்தால் அவள் மனம் ஆறும். ஆனால் இவர்கள் விட மாட்டேன் என்கிறார்களே.. மகளிடம் அவள் விழிகள் இறைஞ்சின. ஊர்மிளா பேசினாள்.

''அம்மா. நான் இங்கேயே இருக்கிறேன். நீங்களும், அப்பாவும் தம்பியைக் கூட்டிக்கிட்டு அடிக்கடி வந்து விட்டுப் போங்க.''

''என்னம்மா இது?'' ஜனார்த்தனம் வினவினார்.

''இல்லைப்பா... அவர் மிலிடிரிக்குப் போகும்போது சொன்னார். 'ஊர்மி.. இது உன் வீடு. நான் வரும் வரை நீ இங்கேதான் இருக்க வேண்டும்'ன்னு அவர் பேச்சை மீறி நான் வரலாமா?''

''என்னடா கண்ணு இப்படிச் சொல்கிறாய்?'' சத்தியவதி பதைத்தாள்.

''அம்மா.. நான் நம்ம வீட்டிற்குக் கட்டாயம் வருவேன். ஆனால் அவர் வந்த பின் அவரோடு வருவேன். அதுதான் எனக்கு மரியாதை.''

தயாநிதியும் ஈஸ்வரியும் மனம் நிறைந்து போனார்கள். அழகான மருமகளின் அறிவான சொற்கள் அவர்களைப் பெருமை கொள்ளச் செய்தது. மனம் கூம்பிய ஜனார்த்

தனத்தையும், சத்தியவதியையும் ஊர்மிளா செல்லம் கொஞ்சி சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

''என்ன செவ்வந்தி சம்பந்தி சண்டை வரும்ன்னு பார்த்தால் புஸ்வானமாப் போச்சு'' என்று செவ்வந்தியின் காதைக் கடித்தாள் சாந்தா.

''அது சரி.. எல்லோருமே பிறந்த வீடுதான் உசத்தின்னு அலைவாங்களா? புருசன் வீடு பெரிசுன்னு நினைக்க மாட்டாங்களா... காலக் கொடுமை'' என்றாள் செவ்வந்தி.

ராணுவ ஜீப்பிலிருந்து குதித்து இறங்கினான் லட்சுமணன். நேராகத் தன் மேலதிகாரியின் அறைக்குச் சென்று விறைப்பாக நின்று சல்யூட் அடித்தான். கர்னல் மௌலி நிமிர்ந்து பார்த்தார்.

''சார். நான் டியூட்டியில் ஜாயின் பண்ணுகிறேன்.''

''லஷ்மண்.. உங்களது முகாமிற்குப் போங்க... உங்களுக்கான உத்தரவு வரும்..'' அவர் குனிந்து மும்முரமாய் பைலை படிக்க ஆரம்பித்தார்.

லட்சுமணன் வெளியே வந்து அவனது அறையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான். ராணுவ டேங்குகள் தயார் நிலையில் இருந்தன. அங்கும் இங்கும் பரபரப்பாய் ராணுவ வீரர்கள் சென்று கொண்டிருந்தார்கள். போர் மேகம் சூழ்ந்திருப்பதை அந்தப் பதற்ற நிலை தெளிவு படுத்தியது.

லேசான மலைச் சரிவில் அந்த ராணுவ முகாம் அமைந்திருந்தது. எதிர்பட்ட ஜோகிந்தர் சிங் சிநேகிதமாகச் சிரித்தான்.

''ஹாய் லஷ்மண். கல்யாண மாப்பிள்ளை... வொய்ப் கூடச் சண்டை போட்டது போதும்ன்னு பாகிஸ்தான் கூட சண்டை போட வந்திட்டியா?'' என்று இந்தியில் கேட்டுச் சிரித்தவன் அவன் காதருகில் குனிந்து.



''ஹவ் இஸ் மேரிட் லைப்?'' என்று கேட்டு கண்களைச் சிமிட்டினான்.

''உன் மேரிட் லைப் போலத்தான் இருந்தது. வித்தியாசமில்லை.''

''வாவ். இன்டலிஜென்ட் ஆன்ஸர்.'' அவன் சிலாகித்தபடி விலகினான்.

அறைக்குள் லட்சுமணன் நுழைந்த போது ரஹீம் தன் ஷூ முடிச்சைப் போட்டுக் கொண்டிருந்தான். நிழல் பார்த்து நிமிர்ந்தவன் முகம் மலர்ந்தான்.

''லட்சுமணன் வந்துவிட்டாயா?'' அவன் பேச்சில் கேரள வாடை அடித்தது. மலையாளத்தில் பேசினான். அவன் பிறந்த ஊர் கேரளாவில் உள்ள திருச்சூர்.

''வந்து விட்டேன்... வந்துதானே ஆக வேண்டும்.''

''பார் இந்தக் கொடுமையை... நாம் சும்மா இருந்தாலும் அவர்கள் நம்மை வம்புக்கு இழுக்கிறார்கள். ஒரே நாள் இரவு.. விடிந்து பார்த்தால் கார்கில் பகுதியில் அவர்கள் கொடி பறக்கிறது.''

''திட்டம் போட்டுச் செய்திருக்கிறார்கள்.''

''திட்டம்தான். பாகிஸ்தான் முதலில் அது தீவிரவாதிகளின் செயல் என்றது. ஆனால் அவர்கள்தான் அதைச் செய்திருக்கிறார்கள். நிரூபணம் ஆகிவிட்டது.''

''அவரவர் நிலப் பரப்பில் அவரவர் வாழ்ந்து விட்டால் என்ன? வாழ விட்டால் தான் என்ன?''

''அமைதியாக இருந்தால் பாகிஸ்தானில் ஆட்சி செய்ய முடியாது. இதை எல்லா அதிபர்களும் நன்றாகப் புரிந்து கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவுடன் மோதா விட்டால் எந்த அதிபரும் அங்கே நிலைத்து ஆட்சி செய்ய முடியாது.''

"இதற்கு முடிவே இல்லையா?"

"அதைக் காலம் தான் முடிவு செய்ய வேண்டும்" என்றான் ரஹீம்.

லட்சுமணன் கட்டிலில் அமர்ந்து பெட்டியைத் திறந் தான். ரஹீம் வெளியே சென்று விட்டான். ஒரு இன்லண் லெட்டரை எடுத்து எழுத ஆரம்பித்தான் லட்சுமணன் முதலில் ஒரு கடிதம் பெற்றோருக்கும் தங்கைக்கு எழுதினான். மற்றொரு கடிதத்தை எடுத்து விரித்தா அதில் ஊர்மிளாவின் முகம் தெரிந்தது. அகன்ற விழிகளி கண்ணீர் நிரம்பிய காதல் முகம். லட்சுமணன் எழு ஆரம்பித்தான். எழுதி முடித்து அதில் இதழ் பதித்து கவ ஒட்டியவன் இரண்டு கவர்களையும் தபாலில் சேர்த்தா

மேலக்கால் கிராமத்தில் காலை பதினோரு மணிக்கு தான் போஸ்ட் மேன் வருவார். அவர் வந்தவுடன் சை கிளின் மணியை அடித்து.

"சார் போஸ்ட்" என்று குரல் கொடுப்பார். அந் ஒலியைக் கேட்டதும் ஊர்மிளாவின் முகம் மலரு காற்றாகப் பறந்து வருவாள். கடிதங்களைப் பெற்று கொள்வாள். மாமனார் பெயரிலிருக்கும் கடிதத்தை மா யாரிடம் கொடுத்து விட்டு தன் பெயருக்கான கடிதத்துட மாடியில் இருக்கும் தங்கள் அறைக்கு ஓடிக் கதவை தாழிட்டுக் கொள்வாள். மூச்சு இறைக்க கடிதத்தை முப்ப முறையாவது படித்து விடுவாள். லட்சுமணன் இரண் நாள்களுக்கு ஒரு முறை கடிதம் எழுதிக் கொண்டிரு தான். ஊர்மிளா உடனுக்குடன் பதில் எழுதிக் கொ டிருந்தாள்.

அன்றும் லட்சுமணன் கடிதம் வந்ததும் தனிமையி அமர்ந்து படிக்க ஆரம்பித்தாள்.



*'அன்புள்ள ஊர்மி.*

*குண்டுச் சத்தத்தின் மத்தியில் இக்கடிதத்தை எழுது கிறேன். தாய் மண்ணைக் காக்க நானும் எண்ணற்ற ராணுவ வீரர்களும் போராடிக் கொண்டு இருக்கிறோம். பாகிஸ்தானியர் பின் வாங்க மறுக்கிறார்கள். குளிர் மிகுந்த மலைப்பகுதி அவர்களுக்கு சாதகமாகவும், நமக்கு பாதகமாகவும் இருக்கிறது அன்பே! இப்போர் மேகத்தின் ஊடே உன் நினைவு என் நெஞ்சை வாட்டாமல் இல்லை. கடமையாற்றிக் கொண்டிருக் கிறேன். இந்தக் கடுமையான சூழ்நிலை மத்தியில் உன் கடிதம் ஒன்றே என் ஆறுதல். நாளை நாங்கள் எங்கு செல்ல வேண்டும்.. என்ன ஆவோம் என்று தெரிய வில்லை. இனம், மொழி, மதம் இவை எல்லாவற்றையும் மறந்து 'இந்தியர்' என்ற உணர்வுடன் யுத்தம் புரிந்து கொண்டிருக்கிறோம்.*

*வென்று திரும்பி வருகிறேன். அதுவரைக் காத்திரு.*

*உன் அன்புக் கணவன்*

*லட்சுமணன்.*

கடிதத்தைப் படித்த ஊர்மிளாவின் கண்கள் கலங்கின. அவனது அவசரம் அவனது எழுத்தில் தெரிந்தது. செல்போனில் பேச முடியாத நிலைமையில் கிடைத்த பேப்பரில் கிடைக்கும் நேரத்தில் அவசரமாய் எழுத வேண்டிய பதற்றமான போர்முனையில் கணவன் இருக் கிறான் என்பது அவள் மனத்தை பாரமாக்கியது. போர் புரியும் கணவனுக்கு அவளால் எவ்வாறு சேவை செய்ய முடியும்? தன் கடிதம் ஒன்றே அவனுக்கு புத்துணர்ச்சி தரும் என்பதை உணர்ந்திருந்த ஊர்மிளா பதில் கடிதம் எழுத ஆரம்பித்தாள்.

'அன்பானவரே!

நீங்கள் வாழ்ந்த வீடு என்பதாலேயே இந்த வீடு எனக்குப் பிடித்திருக்கிறது. நீங்கள் பிறந்து வளர்ந்த ஊர் என்பதாலேயே இந்த ஊர் எனக்குப் பிடித்து இருக்கிறது. உங்களைப் பெற்றவர்கள் என்பதால் அத்தை மாமாவையும் உங்கள் தங்கை என்பதால் சுபத்ராவையும் மிக மிகப் பிடித்திருக்கிறது.

போர் முனையில் தாங்கள் இருக்க நானோ உங்களைப் பெற்றவர்களின் பாதுகாப்பில் பத்திரமாய் இருக்கிறேன். ராணுவ வீரன் என்றால் இப்படி ஒரு நாளை எதிர் கொள்ளவேண்டும்தான். ஆனால் வள்ளுவர் சொன்னது போல் சொல்லுவது யார்க்கும் எளிது. அனுபவித்துப் பார்க்கும்போதுதான் தெரியும் அந்தத் தனிமையின் கொடுமை.

என்னடா.. ஊர் முழுவதும் நம் சொந்தங்கள், வீட்டில் பெற்றவர்களை விட மேலாகப் பார்த்துக் கொள்ளும் மாமனார், மாமியார்.. இவர்கள் மத்தியில் இருந்து கொண்டு 'தனிமை' என்கிறாளே என்று நினைக்கிறீர்களா?

ஆயிரம் ஜனங்கள் இருந்தாலும் நீங்கள் இருந்தால் தான் எனக்குத் துணை. நீங்கள் இல்லாவிடில் நான் தனிதான். அந்த வாழ்க்கை 'தனிமையான வாழ்க்கை' தான்.

தினமும் தபால்காரரின் வரவுக்காக காத்திருக்கிறேன். நீங்கள் போர் முனையில் வென்று திரும்பி வரும் நாளை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். உங்கள் முகத்தை என்று பார்ப்போமோ என்ற ஏக்கத்திலிருந்து



விடுபடும் நாளுக்காக காத்திருக்கிறேன். உங்கள் முகம் பார்க்கக் காத்திருக்கிறேன்.

உங்கள் வரவுக்காக காத்திருக்கிறேன்.

உங்களுக்காக காத்திருக்கும்

உங்கள் ஊர்மிளா

மேலே நகர்ந்து செல்ல உத்தரவு வந்த நேரத்தில் லட்சுமணனின் கையில் ஊர்மிளாவின் கடிதம் கிடைத்தது. அவசரமாய் பிரித்துப் படித்தான். மீண்டும் ஓர் முறை படித்து விட்டு சட்டைப் பையில் பத்திரப் படுத்திக் கொண்டான்.

தடதடவென்ற சத்தத்துடன் ஜோகிந்தர்சிங் ஓடி வந்தான்.

''லட்சுமணன் நாம் முன்னேற வேண்டும். கமான்.''

அவர்கள் நான்கு பேர் சேர்ந்த குழுவிற்கு லட்சுமணன் தான் தலைமை. அவன், ஜோகிந்தர்சிங், ரஹீம், ஜோசப் நால்வரும் மலைச் சரிந்து இறங்கி ஓட ஆரம்பித்தார்கள். மேலே மேலே அவர்கள் முன்னேறும்போது, திடீரென்று குண்டு மழை பொழிந்தது.

''தரையோடு படுத்துக் கொள்ளுங்கள்'' லட்சுமணன் கூவினான். அவர்கள் நால்வரும் தரையோடு படுத்து ஊர்ந்து மறைவிடத்தில் பதுங்கினார்கள். லட்சுமணனின் வயர்லெஸ் ஒலித்தது. எடுத்தான்.

''எங்கேயிருக்கிறீர்கள்...'' கர்னல் மௌலி வயர்லெஸ்ஸில் கேட்டார்.

''நாங்கள் பாகிஸ்தானியரின் சமீபத்தில் இருக்கிறோம்.''

"நிலைமை எப்படியிருக்கிறது?"

"கர்னல் அவர்கள் குண்டு வீசிக் கொண்டிருக்கிறார்கள்."

"என்ன செய்யப் போகிறீர்கள்?"

"கர்னல்... நாங்கள் முன்னேறப் போகிறோம்."

"குட்... பெஸ்ட் ஆப் லக்."

லட்சுமணன் வயர்லெஸ்ஸை அணைத்தான். மெஷின் கன்னை தயார்நிலையில் வைத்துக் கொண்டான். மற்ற மூவரும் அவனைப் பின் பற்றினர். பாகிஸ்தானியர் ஓய்ந்த வேளையில்.

"மூவ்..." என்று கத்தியபடி லட்சுமணன் பாய்ந்து முன்னே ஓடினான். மற்ற மூவரும் பின் தொடர்ந்து ஓடினர். தூரத்தில் பாகிஸ்தானியரின் முகாம் தெரிந்தது. லட்சுமணன் கை எறி குண்டை எடுத்தான். வீசினான். முகாம் தீப்பற்றி எரிந்து வெடித்தது.

அன்று இரவு கர்னல் அவனது வீரச் செயலைப் பாராட்டினார். மறுநாள் அவர்கள் முன்னேறும்போது பாகிஸ்தானியரால் சுற்றி வளைக்கப்பட்டனர். லட்சுமணன் மெஷின்கன்னை எடுக்க முயல.

"தொடாதே..." என்று அவனைக் குறி பார்த்தான் எதிரி. திடீரென்று அவர்கள் பின்னால் குண்டு வெடித்தது. லட்சுமணனும் ஜோகிந்தர் சிங்கும், ஜோசப்பும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மெஷின் கன்னை இயக்க அப்போரில் அன்றும் அவர்கள் வெற்றி பெற்றனர்.

"வேர் இஸ் ரஹீம்?" என்று ஜோகிந்தர் கேட்க ஜோசப் தேட ஆரம்பித்தான். லட்சுமணனின் பின்னாலிருந்த புதரில் இருந்து முனகல் சத்தம் கேட்டது. லட்சுமணன்



அவசரமாய் அங்கே ஓடிப்போய் புதரை விலக்கிப் பார்த்தான். குண்டடி பட்டு ரத்த வெள்ளத்தில் ரஹீம் கிடந்தான்.

"ரஹீம்... நீ எப்படி இங்கே வந்தாய்? எங்களுடன் அல்லவா இருந்தாய்? பாகிஸ்தானியரின் பின்னே எப்படிப் போனாய்?.. அப்போது... அவர்களைப் பின்னாலிருந்து தாக்கியது நீதானா?" லட்சுமணன் பரபரப்பாய் கேட்டான்.

"ஆமாம்... லஷ்மண்... இப்படி ஒரு நாளுக்காகத்தான் நான் காத்திருந்தேன். எல்லா முஸ்லீமும் பாகிஸ்தானியர் அல்ல என்று நிரூபிப்பதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தேன். இன்று அது எனக்கு கிடைத்து விட்டது. நான் இந்தியன் என்பதை உணர்த்தி விட்டேன்..."

ரஹீம் மரண வலியுடன் பேசினான். லட்சுமணன் அவனது வீரத்திற்கும் நாட்டுப் பற்றிற்கும் தலை வணங்கினான்.

தனி ஒரு ஆளாக பாகிஸ்தானியரின் பின்னே உயிரைத் துச்சமாக மதித்து ரஹீம் ஊடுருவி இருக்கா விட்டால் அன்று பாகிஸ்தானியரின் கைகளில் அவர்கள் அனைவரும் சிக்கியிருப்பார்கள்.

லட்சுமணன் ரஹீமைத் தோளில் தூக்கிக் கொண்டு முகாமுக்குத் திரும்பினான். ரஹீம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.




அன்று ஊர்மிளா பெற்றுக் கொண்ட கடிதத்தில் லட்சுமணன் இவ்வாறு எழுதியிருந்தான்.

'அன்பான ஊர்மிளா,

பாகிஸ்தானியருடன் நடந்த சண்டையில் எனது சகாவும் நண்பனுமான சோல்ஜர் ரஹீம் படுகாயமடைந்தான். மருத்துவமனையில் அவனது கால்களில் பாய்ந்திருந்த குண்டை எடுத்து உயிரைக் காப்பாற்றி விட்டார்கள். ஆனால் கடைசி வரை அவன் விந்தி விந்தித்தான் நடக்க வேண்டும். ஆம் ஊர்மிளா... அவன் ஊனமாகி விட்டான். இதுபோல் தினசரி என் கண் முன்னே நடக்கிறது. போரில் உயிர் தப்பினாலும் இதுபோல் நிகழ்வதைத் தவிர்க்க முடியாது. ரஹீம் மிகவும் சந்தோசமாக அதை ஏற்றுக் கொண்டிருக்கிறான். இது அவனுக்குக் கிடைத்த நினைவுச் சின்னம் என்று கூறுகிறான்.

ஊர்மி... நான் உன்னிடம் கேட்க விரும்புவது இதைத்தான். இது போன்ற ஒரு நிலைமை எனக்கு வந்தால்... நான் ஊனத்துடன் திரும்பி வந்தால்... அதை நீ எப்படி எதிர்கொள்வாய்? எப்படி என்னை ஏற்றுக் கொள்வாய்?

உன் லட்சமணன்'

பனி படர்ந்த மலைப் பகுதியில் அந்த ராணுவக் கூடாரத்தில் குளிரில் விறைத்துக் கிடந்த லட்சமணனின் உடல் சூடேற ஊர்மிளாவின் பதில் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

'அன்பே!

நான் அழகானவள் என்று நீங்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அது என் முக வடிவையும், நீண்ட கூந்தலையும் பார்த்து நீங்கள் கூறியவை. ஒருவேளை ஏதேனும் ஓர் விபத்தில் என் முகம் மாறி கூந்தல் கொட்டி நான்



பார்க்க விகாரமாகத் தோற்றமளிக்கும் நிலை நேர்ந்தாலும் நீங்கள் என் மேல் கொண்டுள்ள காதல் எள்ளளவும் குறையாது என்பதை நான் அறிவேன். நான் உங்கள் ஊர்மிளா என்ற நினைவு ஒன்றே போதும்... நீங்கள் என்னைக் காதலிக்க. அவ்வாறு இருக்கும்போது இப்படி ஒரு கேள்வியை என்னைப் பார்த்து நீங்கள் கேட்கலாமா?

நீங்கள் என் முன் வந்தால் போதும். அதற்காகவே காத்திருக்கிறேன்.

காதலுடன் காத்திருக்கும்

உங்கள் ஊர்மிளா.'

கொட்டும் மழையிலும், குளிரிலும் இரவு பகல் பாராமல் எல்லையைக் கவால் காக்கும் ராணுவ வீரர்களுக்கான உற்சாக மருந்து அவர்கள் குடும்பத்திலிருந்து அவர்களுக்கு வரும் கடிதங்கள்தான். அதன் மதிப்பு பிரிவில் தவிக்கும் ஒவ்வொரு ஜீவனுக்கும் தெரியும். எழுத்துக்கள் விளக்குவதை மொழியில் கூற முடியாது. பக்கம், பக்கமாக எழுதுவதை பத்து வார்த்தைகளில் பேசி முடிக்க இயலாது. செல்போன் என்னதான் அசுர வளர்ச்சியை அடைந்தாலும் தபாலுக்கு இருக்கும் மதிப்பையும், மரியாதையையும் அது குறைத்து விட முடியாது. அந்தக் காலத்தில் தூது விடும்போது மடல்கள் எழுதி அனுப்பினார்கள். லட்சமணனும் ஊர்மிளாவும் கடிதங்களில் எழுதி அனுப்பிக் கொண்டார்கள்.

மனைவியின் கடிதத்தைப் படித்த லட்சமணனின் மெய் சிலிர்த்தது. மனமெங்கும் இதம் பரவியது. உடனே அவளைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. எப்போது அவளைப் பார்ப்போம் என்ற ஏக்கம் எழுந்தது. கூடாரத்தை

விட்டு வெளியே வந்தான். பனிக்காற்று உடலைத் துளைத்தது. தோளில் ஒரு கரம் பட்டது. படக்கென்று திரும்பினான். ஜோசப் நின்றிருந்தான்.

''என்னடா... இவ்வளவு அலர்ட்டாத் திரும்புகிறாய்?''

''போர் முனையில் இருக்கிறோம். அலர்ட் இருக்க வேண்டாமா?''

''அதற்காக நம் கூடாரத்திற்குப் பக்கத்தில் பாகிஸ்தானி வந்து விடுவானா?''

லட்சுமணன் சிரித்தான். வயர்லெஸ் அழைக்க மறுநாள் போரைப் பற்றிய கட்டளைகளை மேலதிகாரிகளிடம் வாங்கிக் கொண்டான். மறுநாள் அவர்கள் மூவரும் மேலும் முன்னேறினார்கள்.

அடர்ந்த காடுகளின் இடையே சூரிய வெளிச்சம் புக முடியாமல் இருட்டாக இருந்தது. அதன் ஒவ்வொரு மரத்தின் பின்னாலும் ஒளிந்து ஒளிந்து லட்சுமணன், ஜோகிந்தர் சிங், ஜோசப் மூவரும் முன்னேறிக் கொண்டு இருந்தார்கள். தூரத்தில் பாகிஸ்தானியரின் நடமாட்டம் தெரிந்தது. தோளில் தொங்கிய பைனாகுலரை எடுத்து அவர்களின் நடவடிக்கையைக் கண்காணித்தான் லட்சுமணன்.

''ஐந்தாறு பேர்கள்தான் இருக்கிறார்கள்... இன்னும் கொஞ்சம் கிட்டப் போய் குண்டை விட்டு எறியலாம்.''

ஒரு அடி எடுத்து மேலே வைக்கும் முன் அவர்கள் பாகிஸ்தானியரால் சூழப்பட்டார்கள். மெஷின் கன்னை இயக்கியபடி அவர்கள் மூவரும் சுட்டுக் கொண்டே பின் வாங்க லட்சுமணனின் மார்பில் குண்டு பாய்ந்தது. அவன் நடக்க முடியாமல் கீழே விழுந்தான். அவன் விழுந்ததைக்



கவனிக்காத ஜோசப்பும், ஜோகிந்தர் சிங்கும் சுட்டுக் கொண்டே ஆளுக்கு ஒரு திசையில் பிரிந்து ஓடினார்கள்.

லட்சுமணன் பாகிஸ்தானியரிடம் மாட்டிக் கொண்டான். அன்று இரவு லட்சுமணன் இல்லாதது கண்டு பிடிக்கப் பட்டு ராணுவ மேலிடத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது. மறுநாள் தேடும்போது ஊர்மிளாவின் கடிதமிருந்த லட்சுமணனின் சட்டை மட்டுமே ரத்தக் கறைகளுடன் கிடைத்தது. போர்க்களத்தில் குவிந்திருந்த எண்ணற்ற சடலங்களில் லட்சுமணனின் சடலம் கூடக் கிடைக்க வில்லை.

அடுத்த ஒரு வாரத்தில் கார்கில் போர் முடிந்தது. பாகிஸ் தானியரை விரட்டி கார்கில் மண்ணில் நம் இந்தியக் கொடியைப் பறக்க விட்டது நம் வீரமிகு ராணுவம். போரில் இறந்த வீரர்களின் இல்லங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேலக்கால் கிராமத்தில் தயாநிதியின் வீட்டிற்கு முன்னால் ராணுவ ஜீப் வந்து நின்றது. வாசல் தெளித்துக் கொண்டிருந்த சுபத்ரா அண்ணன் வந்து விட்டானென்று நினைத்து மகிழ்வுடன் துள்ளிக் குதித்து உள்ளே ஓடினாள்.

''அம்மா, அப்பா, அண்ணி... அண்ணன் வந்து விட்டார்...''

சுபத்ராவின் வார்த்தைகளைக் கேட்ட ஊர்மிளா காபிக் காக காய்ச்சி கையில் தூக்கிக் கொண்டிருந்த பால் பாத் திரத்தை அப்படியே நழுவ விட்டாள். பால் கீழே கொட்டி அவள் காலைச் சுட்டதை உணராதவளாய் வாசலுக்கு ஓடினாள். அதற்குள் பின் கட்டிலிருந்த ஈஸ்வரியும் வயலுக்குச் செல்லக் கிளம்பிக் கொண்டிருந்த தயாநிதி யும் அவசரமாய் அங்கு வந்தனர். கணவனைக் கண்களால் தேடியபடி ஊர்மிளா தவித்து நின்றாள்.

ஜீப்பிலிருந்து ராணுவச் சீருடையுடன் இறங்கியவர்கள் நெருப்பின் மேல் நிற்பது போல் உணர்ந்தார்கள். இது கொடுமை. கணவனைக் காண வந்த மனைவியிடம் அவன் இனி வரவே மாட்டான்' என்று சொல்ல நேர்வது பெரும் துயரம் தரும் செயல். ஆனால் அவர்கள் இதைச் செய்து தான் ஆக வேண்டும். இறந்து விட்ட ராணுவ வீரனின் இல்லத்திற்கு அந்தச் செய்தியைத் தெரியப்படுத்த வேண்டியது அவர்களது கடமை. அந்த ராணுவ வீரனுக்கு செலுத்த வேண்டிய மரியாதைகளைச் செலுத்திவிட்டு அவனுக்குச் சேர வேண்டிய தொகைகளை அவனது குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டியது அவர்களது வேலை.

"அத்தை... அவர் வரவில்லையா... கேளுங்களேன்..." ஊர்மிளா ஈஸ்வரியின் கை பிடித்து பரிதவித்தாள்.

"எங்க பையன் வரவில்லையா?" என்று தயாநிதி கேட்டார்.

அவர்கள் மூவரும் மௌனம் சாதித்தனர். எதையோ சொல்லத் துடிக்கும் துடிப்புடன் சொல்ல முடியாத சோகத்துடன் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஊர்மிளாவின் கை ஈஸ்வரியின் கையை விட்டு விட்டது. ஊர்மிளாவின் மனம் திகிலடைந்தது.

ஊர்மிளா பட்டதாரி. உலகம் தெரிந்தவள். ராணுவ ஜீப் வந்து நிற்கிறது. இறங்கியவர்கள் எதுவும் சொல்ல முடியாமல் தவிக்கிறார்கள். ஏன்... அவள் வயிற்றில் பட்டாம் பூச்சி பறந்தது.

மனதில் அவளை முதன் முதலாய் பார்த்து "எங்கே போகிறோம்?" என்று இளநகையுடன் கேட்டுக் கொண்டு நின்ற லட்சுமணன் தோன்றினான். வந்திருந்தவர்களின் ஒருவன் ஏதோ பேச வாய் திறக்க,

"சொல்லாதீர்கள்..." என்று அலறினாள் ஊர்மிளா.

"அவரைப் பற்றிய நல்ல தகவல் இருந்தால் மட்டும் சொல்லுங்கள்..."

வந்தவர்கள் மௌனம் சாதிக்க ஊர்மிளா கண்கள் இருள பின் வாங்கினாள். தயாநிதி, ஈஸ்வரியும் பதறிப் போயினர்.

"என்ன தம்பி... என் மருமகள் பயப்படுதே... எதுவும் இல்லைன்னு வாய் திறந்து சொல்லுங்களேன்..."

"மனதை திடம் செய்து கொள்ளுங்கள்."

"என்னப்பா என்ன ஆச்சு?"

"கார்கில் போரில் லட்சுமணன் இறந்து விட்டான். அவனது ரத்தக்கறை படிந்த சட்டை மட்டுமே கிடைத்தது. சடலம் கிடைக்கவில்லை..."

"இல்ல்ல்லை..." என்ற அலறலுடன் ஊர்மிளா மயங்கிச் சரிந்தாள். ஈஸ்வரி சுவரில் முட்டி மோதிக் கதறிப் புரண்டாள்... ஒரு நொடியில் மேலக்கால் கிராமமே அந்த வீட்டில் வந்து கூடியது.

ராணுவ ஜீப்பில் இருந்தவர்களிடம் ஆள் மாற்றி ஆள் விசாரித்துக் கொண்டு இருக்க பெண்கள் வீட்டுக்குள் ஓடி ஈஸ்வரியைக் கட்டிப் பிடித்து அழுதனர். செவ்வந்தி மார்பில் அறைந்து அழுது கொண்டே ஓடி வந்தாள்.

"மதினி... இது என்ன காலக்கொடுமை... நம்ம வீட்டிலயா இப்படி எல்லாம் நடக்கணும். தெய்வமே... இது உன் சோதனையா?"

சாந்தா போட்டது போட்டபடி தன் வீட்டில் போட்டு விட்டு ஓரகத்தியின் வீட்டிற்கு ஓடி வந்தாள். தயாநிதியிடம் சென்று கதறி அழுதாள்.

''மாமா... மன்னவன் தேர்சாஞ்ச போச்சே... இதை எங்கே போய் சொல்ல... நம்ம கொடுமையைக் கேட்க ஆளில்லையா?''

ராணுவத்தினர் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பிறகு ஓர் நாள் வருவதாகக் கூறி விட்டுச் சென்று விட்டார்கள்.

தாடிக் கொம்பிற்குத் தகவல் பறந்தது. ஜனார்த்தனத்தின் தலையில் இடி விழுந்தது போலானார். சத்தியவதிக்கு மூச்சே நின்று விட்டது. பள்ளிக்குச் சென்று பலராமனை அங்கேயே சென்று தகவல் சொல்லி அழைத்துக் கொண்டு மேலக்கால் கிராமத்துக்கு டாக்ஸியில் பறந்தார்கள்.

ஊர்மிளாவின் பிறந்த வீட்டுச் சொந்தங்கள் வந்து கூடின. அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதார்கள் அவர்கள். ஊர்மிளாவின் தாய்வழிப் பாட்டி சத்தியவதியை அடிக்கப் போனாள்.

"பாவி... என் பேத்தி பாட்டுக்கு படிச்சுக்கிட்டு இருந்தாளே... கல்யாணம் வேணும்ன்னு அவ உன்கிட்ட வந்து கேட்டாளா? ஒரு நாள் கூத்துக்கு தலையைச் சிரைச்சதையா... என் பேத்தி வாழ்க்கையில் மண்ணள்ளிப் போடவா அந்தக் கூத்தை நடத்தின... சண்டாளி..."

"ஆத்தா... நான் கனவு கண்டேனா... கற்பனை தான் செய்து பார்த்தேனா... இப்படியெல்லாம் நடக்குமின்னு. பெரிய மிலிடிரி ஆபிசர்... பெரிய குடும்பம்ன்னு பொண்ணைக் கட்டிக் குடுத்தேன். என் ஆசையெல்லாம் நொறுங்கிப் போச்சே ஆத்தா.. என் மக வாழ்க்கையை நானே கெடுத்துட்டேனே ஆத்தா.. என்னைக் கொன்னா கூடத் தகும் ஆத்தா.. நான் பாவிதான் ஆத்தா பாவிதான்..."



சத்தியவதி கதறி அழுதாள்.

செவ்வந்தி சிலிர்த்து எழுந்தாள்.




அந்த வீட்டில் தயாநிதி, ஈஸ்வரிக்கு இரு வகையில் துக்கம். ஒன்று லட்சுமணனுக்காக. மற்றொன்று ஊர்மிளாவுக்காக. ஒரு பாவமும் நினைக்காதவர்களை ஏதோ கொலைக் குற்றம் செய்தவர்களைப் போல் பார்த்தது ஊர்மிளாவின் சொந்தம்.

சொல்லிச் சொல்லி அவர்கள் அழுத விதத்தில் தங்களைக் குற்றவாளிகளாகவே அவர்கள் இருவரும் உணர்ந்த நேரத்தில் செவ்வந்தி வரிந்து கட்டிக் கொண்டு வந்தாள். சத்தியவதியின் தாயைப் பார்த்து.

''ஏம்மா பெரிய மனுஷியாயிருக்கியே... கொஞ்சம் அறிஞ்சு பேசறியா? எங்கே வந்து என்ன பேசறே... எதுவும் நம் கையில் இல்லைம்மா... எங்க அண்ணன் நல்லது நினைச்சுத்தான் செஞ்சாரு.. கெடுதல் நடந்து போச்சு.. பாதிக்கப்பட்டது அவர் குடும்பம்தான்ம்மா.. என்னவோ தேடி வந்து நாங்க குத்தம் பண்ணிப்புட்டது மாதிரி பேசறதெல்லாம் இங்கே வேணாம். சேதி கேட்டதிலிருந்து தந்நினைவு இல்லாம நினைவு தப்பிக் கிடக்குதே அந்த பச்சை மண்ணு... எங்க லட்சுமணன் பெண்டாட்டி... அந்த முகத்துக்காகப் பார்க்கிறேன். அது கதி இப்படி ஆகிப்போச்சேன்கிற ஆத்தாமை உங்களுக்கு

மட்டும்தானா? எங்களுக்கு இல்லையா? ஒரு வார்த்தை வெல்லும். ஒரு வார்த்தை கொல்லும்பாங்க. இங்கே ஏற்கனவே நடந்து போயிருக்கிற கொலை பாதகம் போதாதா... இன்னும் கிளரணுமா? ஆத்த மாட்டாத துக்கத்தை அழுது தீர்த்திடுங்க. பேசித் தீர்க்க வேணாம். காலக் கொடுமை" என்று ஒரு பிடி பிடித்துவிட்டு மூக்கைச் சிந்தி கண்ணீர் விட்டுக் கொண்டே ஊர்மிளாவின் அருகில் போனாள்.

மயங்கியவள் கண் விழிக்காமலே கிடக்க முகத்தில் தண்ணீர் அடித்து மயக்கம் தெளிவிக்கப் பார்த்தார்கள். ஒரு வழியாய் கண் விழித்தவளுக்கு சூடாய் காபி கொடுத்து தெளிய வைத்து உட்கார வைத்தார்கள். இரவு வந்தது. அழுது. அழுது ஓய்ந்தவர்கள் அவர்களை அறியாமல் கண் செருகி உறங்கிப் போக ஓசைப்படாமல் ஊர்மிளா எழுந்தாள். மாடி அறைக்குள் நுழைந்தவள்.. அறையை ஒட்டிய மொட்டை மாடிக்குப் போனாள். இந்த இடத்தில்தான் லட்சுமணன் நின்றிருந்தான். இங்கேதான் அவள் மடி சாய்ந்து பேசினான்.

அந்த இடங்களைத் தொட்டுப் பார்த்தாள். தூரத்தே இருட்டில் சாலை தெரிந்தது. அந்த சாலையில்தானே அவன் ஜீப்பில் ஏறிப் போனான். அவள் விழிகள் இருட்டில் அவன் முகம் தேடித் துழாவின. இருளிடையே ஓர் வெளிச்சமாய் அவன் நின்று கொண்டு,

"வா ஊர்மிளா" என்று கூப்பிடுவது போல் இருந்தது. அவள் மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரில் சரிந்து அமர்ந்தாள்.

அவனை முதன் முதலில் சந்தித்ததிலிருந்து நடந்தவை திரைப்படக் காட்சி போல் அவள் நினைவில் அணிவகுத்து ஓடின. அவள் முன் எண்ணற்ற லட்சுமணர்கள் தோன்றினார்கள்.



"எங்கே போவது என்பதைச் சொன்னால் தேவலை" என்று அவள் கைப்பிடிக்குள் தன் கரத்தை விட்டு வைத்து அவள் முகம் பார்த்த லட்சுமணன்.

"எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது... உனக்கு என்னைப் பிடிக்காவிட்டால் சொல்லிவிடு. என் மனதை மறைத்து உன்னைப் பிடிக்கவில்லையென்று சொல்லி விடுகிறேன்" என்று அவள் விருப்பம் கேட்ட லட்சுமணன்,

பெண் பார்த்த முதல் நாளிலேயே முத்தம் கொடுத்த முரட்டு லட்சுமணன்.

பவ்யமாய் கதை சொல்லி வீட்டுக்கே வந்த லட்சுமணன்.

இன்னும் அவளைக் கரம் பிடித்து அக்கினியை வலம் வந்து ஊரறிய மனைவியாக்கிக் கொண்ட பின் கண நேரம் கூடப் பிரியாமல் அவளை அடை காத்த லட்சுமணன்.

ஏன் அவளை அப்படிக் காதலித்தான்? திருமணமாகி அவனுடன் வாழ்ந்தது வெறும் பதினைந்து தினங்கள் தான். ஆனால் ஆண்டாண்டு காலம் அவனுடன் வாழ்ந்து விட்ட நிறைவை அந்தச் சொற்ப தினங்களில் ஏன் கொடுத்தான்? 'காத்திருப்பாயா' என்று கேட்டுக் கடிதம் எழுதினானே. இன்று அவள் காத்திருக்கிறாள். ஆனால் அவளை விட்டு ஏன் போனான்?

பொங்கி அழுது முடித்தவள் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து உள்ளே வந்தாள். மேலேயிருந்த மின் விசிறியைப் பார்த்தாள். பீரோவைச் சப்தம் எழுப்பாமல் திறந்து தன் சேலையை எடுத்தாள். மின் விசிறியின் மேல்

விசி முடிச்சுப் போட்டாள். அதைக் கழுத்தில் மாட்டிக் கொள்ள முனையும்போது அது நிகழ்ந்தது.

அவளது அடி வயிற்றிலிருந்து அந்தக் குமட்டல் எழுந்தது. அடக்க முடியாமல் 'உவ்வே' என்ற சத்தத்துடன் ஓடி பாத்ருமில் அவள் வந்தி எடுக்க ஆரம்பிக்க அந்தச் சத்தத்தில் முதலில் விழித்தது சத்தியவதிதான். எழுந்தவள் அருகில் மகள் இல்லாததைக் கண்டு பதறிப் போனாள்.

''ஊர்மிளா, ஊர்மிளா'' என்று அழைத்துக் கொண்டே அவள் தேட அனைவரும் விழித்து விட்டனர்.

''அம்மா... மாடியில்தான் சத்தம் கேட்குது. அண்ணி அங்கேயிருக்காங்க போல'' என்ற சுபத்ரா மாடியேறி ஓடினாள்.

எல்லோரும் அறைக்குள்ளே போனதும் முதலில் பார்த்தது மின் விசிறியில் தொங்கிக் கொண்டிருந்த முடிச்சுப் போடப்பட்ட சேலையைத்தான்.

''ஐயையோ... நான் பெத்த மகளே என்ன காரியம் பண்ணப் பார்த்த..'' என்று சத்தியவதி அலறினாள்.

ஜனார்த்தனம் சத்தியவதியின் கன்னத்தில் அறைந்தார்.

''ஏண்டி.. பெண்ணைப் பக்கத்தில் படுக்க வைச்சவ அவ மேல ஒரு கண்ணை வைக்க வேணாமாடி... அவ இருக்கிற துக்கத்தில் இதைத்தானே யோசிப்பாள்.''

ஈஸ்வரி பாத்ருமுக்குள் ஓடினாள். நிலை கொள்ளாமல் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா. அவளை வாய் கொப்புளித்து முகம் கழுவ வைத்து கைத் தாங்கலாய் படுக்கையில் படுக்க வைத்தார்கள்.



அதற்குள் நடேசன் மின் விசிறியில் இருந்த சேலையை அவிழ்த்து எடுத்திருந்தான். அவன் விழிகள் கலங்கியிருந்தன. திருமணத்திற்கு முதல் நாள் நண்பனும் அவன் மனைவியும் இணைந்து பார்வை பரிமாறிக் கொண்டதை நினைத்து மறுகினான். அவன் கையிலிருந்த சேலையை செவ்வந்தி பிடுங்கிக் கொண்டாள்.

''சுபத்ரா தீப்பெட்டியைக் கொண்டு வா. இதைக் கொளுத்துவோம். இப்படி மனசு விட்டுப் போச்சே இந்தப் பிள்ளைக்கு. எல்லாம் காலக்கொடுமை.''

ஈஸ்வரி ஊர்மிளாவின் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

''அம்மா.. தாயே என் தலையில் கல்லைத் தூக்கிப் போட மாட்டேன்னு சத்தியம் பண்ணும்மா.. என்னை பாவியாக்கிராதே..''

ஊர்மிளா ஈனஸ்வரத்தில் கூறினாள்.

''இல்லை அத்தை. இனிமேல் இப்படிப் பண்ணமாட்டேன்.''

ஜனார்த்தனம் சத்தம் போட்டார்.

''எல்லாம் உறவு கொண்டாடியது போதும். சத்தியவதி ஊர்மிளாவைக் கூட்டிக்கிட்டு கிளம்பு. ஊருக்குப் போவோம். நம்ம பொண்ணு எப்பவும் போல் நம்ம கூடவே இருக்கட்டும். மேலே படிக்கட்டும். இப்படி வாடி வதங்க வேண்டாம். ஊர்மிளா எழுந்திரும்மா போகலாம்.''

ஊர்மிளா மறுப்பாய் தலை அசைத்தாள்.

''இல்லைப்பா. நான் வரமாட்டேன். அவர் கிளம்பிப் போகும்போது இது உன் வீடு... நான் வரும் வரை இங்கேதான் இருக்க வேண்டும்ன்னு சொல்லி விட்டுப் போனார்ப்பா...''

"பாவி மகளே... சொன்னவர் திரும்பி வராமலே போய் விட்டாரே..." சத்தியவதி முகம் மூடி அழுதாள்.

"அதற்காக அவர் சொன்ன வார்த்தைகளை நான் மீறுவதா? நான் வரமாட்டேன் அம்மா."

ஈஸ்வரிக்கு துக்கம் குமுறியது. இறைவனே ஏன் எங்களை இப்படிச் சோதிக்கிறாய்?

"இங்கே உனக்கு யார் இருக்கிறார்கள்?" ஜனார்த்தனம் அதட்டினார். "அத்தை, மாமா, சுபத்ரா... அப்புறம்... அப்புறம்... வரப் போகும் என் குழந்தை இவ்வளவு பேர் இருக்கிறார்கள் அப்பா."

"என்ன?" அனைவரும் ஒரே குரலில் கூவினார்கள்.

"என் செல்லமே" என்று ஈஸ்வரி ஊர்மிளாவைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

ஜனார்த்தனம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஊர்மிளா பிறந்த வீட்டிற்குப் போக மறுத்து விட்டாள்.

"என் மருமகள் பூவோடும், பொட்டோடும்தான் இருப்பாள். இருக்க வேண்டும். யாராவது அதைப் பற்றிப் பேசினால் கொன்று விடுவேன்" என்று தயாநிதி அழுத்தம் திருத்தமாய் கூறி விட்டார்.

"இது எண்ணண்ணே இப்படிச் சொல்றீங்க. யாராவது அதைப் பற்றி வாய் திறப்பாங்களா. அந்தப் புள்ள முகம் வாடாமலிருக்க என்ன செய்யலாம்ன்னு நாங்க கிடந்து தவிக்கிறோம். நீங்க வேற எங்களைப் பார்த்து இப்படிச் சொல்றீங்க. காலக் கொடுமை" என்றாள் செவ்வந்தி.

மசக்கையில் இருந்த மகளுக்கு கூட இருந்து பணி விடை செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் ஊரே அவளைக் காவல் காக்க சத்தியவதியும் ஜனார்த்தனமும் கொஞ்சம் மனம் ஆறினார்கள்.

ராணுவத்திலிருந்து வந்து ஒரு பெரிய தொகைக்கான செக்கைக் கொடுத்துவிட்டு பென்சன் பணம் ஊர்மிளா விற்கு வர ஏற்பாடு செய்து விட்டுப் போனார்கள்.

அப்போதுதான் ஊர்மிளா கல்லூரியில் கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்தபோது எழுதிய சர்வீஸ் கமிஷன் தேர்வில் அவளை நேர்முகத் தேர்விற்கு வரும் படி அழைத்துக் கடிதம் வந்தது. தயாநிதியும், ஈஸ்வரியும் வாடகைக் காரை வரவழைத்து அதில் மருமகளை அழைத்துக் கொண்டு நேர்முகத் தேர்விற்கு போய் வந்தார்கள்.

ஊர்மிளா ஆறு மாதக் கர்ப்பிணியாக இருந்தபோது அவளுக்கு வேலைக்கான உத்தரவு வந்தது. மதுரை கலெக்டர் ஆபிஸில் கிளார்க்காக வேலை நியமனம் ஆகியிருந்தது. ஊர்மிளா வேலையில் சேர்ந்தாள். அவள் வேலைக்குப் போய்வர கார் வாங்கிக் கொடுத்திருந்தார் தயாநிதி.

"என்ன தயாநிதி. உன் மருமக வாங்குகிற சம்பளத்துக்கா கார் வாங்கிக் கொடுத்திருக்கிற" என்று கேட்டவர்களிடம்,

"சம்பளத்துக்காக என் மருமகளை வேலைக்கு அனுப்பலை. அவ மனசில் இருக்கிற ரணம் ஆறட்டும்ன்னு அனுப்புறேன். அவ பாதுகாப்பா போய் வர கார் வாங்கிக் கொடுத்திருக்கிறேன்..." என்று கூறினார்.

"உனக்கும் ஒரு பொட்டப்புள்ள இருக்குதுப்பா... ஊரன் வீட்டுப் புள்ளைக்கு அள்ளி இறைச்சா உன் புள்ளைக்கு யார் பார்ப்பா?" என்று அந்த மனிதர் கேட்டு வைக்க தயாநிதி அவரை அடிக்கவே போய் விட்டார்.

"யாருய்யா... ஊரான் புள்ளை... என் லட்சுமணன் வாரிசை சுமந்துக்கிட்டு இருக்கிற என் வீட்டுப் புள்ளைய்யா அது. அதுக்குப் போகத்தான் மத்ததுக்கு."

ஊர்மிளா லட்சுமணன் விட்டுச் சென்ற குடும்பம் என்ற கூட்டில் பாதுகாப்பாயிருந்தாள்.




தயாநிதி ஊர்மிளாவுக்காக கார் வாங்கிக் கொடுத்ததை மட்டும் அந்த நபர் கேள்வி கேட்கவில்லை. அதை ஓட்டிக் கொண்டு ஊர்மிளாவுக்குத் துணையாக போய் வரும் நடேசனைப் பற்றித்தான் முக்கியமாய் கேள்வி கேட்டார்.

"ஏம்பா தெரியாமல்தான் கேட்கிறேன். ஊரில் இல்லாத வழக்கமா உன் மருமகளுக்கு கார் வாங்கிக் கொடுத்திருக்கிற... சரி... அதை ஓட்டவும் சொல்லிக் கொடுக்க வேண்டியதுதானே... அதை விட்டுவிட்டு ஏன் உன் தங்கச்சியோட நாத்தனார் மகன் நடேசனை ஓட்டச் சொல்லியிருக்கிற?"

"நடேசனும் மதுரையில் ஊர்மிளா வேலை பார்க்கிற அதே கலெக்டர் ஆபிசில்தான் வேலை பார்க்கிறான். ஊர்மிளா கூட துணையாவும் போய் வரட்டும்ன்னு தான் அவனை வண்டி ஓட்டச் சொன்னேன்."

"அதுக்காக பஞ்சையும், நெருப்பையும் பக்கத்தில் வைக்கலாமா?"

"யோவ்... உனக்கு புத்தி போகிற போக்கு சரியில்லை. இரண்டு பேரும் இதே ஊரில் இருந்து ஒரே ஆபிசிற்கு வேலைக்குப் போய் வர்றாங்க. அவன் என் சொந்தக்காரன். லட்சுமணனுக்கு நெருங்கின சிநேகிதன். ஊர்மிளாவுக்கு பாதுகாப்பா இவனைத் தவிர யார் இருக்க [illegible] தான் கார் வாங்கிக் கொடுத்து ஓட்டச் சொன்னேன். அவங்க வீட்டில் என் மகன் என்ன உன் மருமகளுக்கு டிரைவர் வேலை பார்க்கனுமான்னு சண்டைக்கு வந்து விடாமலிருக்கனும்ன்னு நான் பயந்துக்கிட்டு இருந்தேன். அவங்களே நம்ம வீட்டுப் பெண்ணுக்கு நாமதானே துணைக்குப் போகனும்ன்னு முதல் ஆளாச் சொல்லிட்டாங்க. எனக்கு வேறு என்ன வேணும். நீ உன் வேலையை பார்த்துக்கிட்டுப் போ."

நடேசன் ஊர்மிளாவிற்குத் துணையாக அலுவலகம் போய் வர ஆரம்பித்தது இப்படித்தான். காரின் பின் சீட்டில் ஊர்மிளா அமர்ந்திருக்க நடேசன் டிரைவர் சீட்டில் அமர்ந்து ஓட்டுவான். முதல் நாள் அலுவலகத்தில் அவளது சீட்டில் அமர வைத்து வேலைகளைக் கற்றுக் கொடுத்ததில் இருந்து அலுவலகத்தில் இருப்பவர்களின் குணாதிசயங்களைக் கூறி யார் யாரிடம் எப்படிப் பழகுவது என்று சொல்லிக் கொடுத்தது வரை ஊர்மிளாவிற்கு ஓர் ஆசானாக அவன் இருந்தான்.

காரில் வரும்போதும், போகும்போதும் அரசியலில் ஆரம்பித்து சினிமா, விளையாட்டு, கதை, பாட்டு என்று அவளுடன் பேசிச் சிரிக்கும்போது ஓர் தோழனாக அவன் ஆனான்.

ஊர்மிளா வெளியுலகில் கால் பதித்தாள். அலுவலகத்தில் வேலையில் திறமைசாலின்னு பெயர் வாங்கினாள். அதற்கு நடேசன் உறுதுணையாக இருந்தான்.

வயல் சூழ்ந்த அந்தக் கிராமத்தின் பசுமைபோல நடேசனின் மனதிலும் வறட்சி இல்லாத பாசத்தின் பசுமை இருந்தது. அது ஊர்மிளாவைத் தொடர்ந்து சென்று அவளைக் காவல் காத்தது.

"நடேசா சாயந்திரம் வரும்போது ஊர்மிளாவை டாக்டர் கிட்ட செக்கப்புக்கு கூட்டிக்கிட்டுப் போய் வந்திருப்பா" ஈஸ்வரி கூறுவாள்.

நடேசன் பொறுமையாய் அதைச் செய்து முடிப்பான்.

"அந்த பொம்மைக் கடையில் டெடி பியர் பொம்மை பார்க்க அழகாக இருக்கு" என்று ஊர்மிளா சாதாரணமாய் கூறுவாள்.

உடனே காரை நிறுத்தி அந்தப் பொம்மையை வாங்கிக் கொடுத்து விடுவான். ஊர்மிளா நெகிழ்ந்து போவாள்.

மருத்துவர்கள் கூறிய நாளுக்கு முன்னரே ஊர்மிளாவுக்குப் பிரசவ வலி வந்தபோது அவள் அலுவலகத்தில் இருந்தாள். வேலை செய்து கொண்டிருந்தவள் இடுப்பு வலியில் அலற நடேசன்தான் தாங்கிக் கொண்டான். அவளை உடனடியாய் மருத்துவமனையில் சேர்த்து விட்டு அலுவலகத் தோழிகளை துணைக்கு வைத்து விட்டு மேலக்காலுக்கு காருடன் வந்து தயாநிதி குடும்பத்தாரை அழைத்துப் போனான்.

அழகாய் பூப்போல் சிரித்தபடி லட்சுமணனின் மகன் பிறந்தான். குழந்தையைக் கொண்டு வந்து தயாநிதியிடமும், ஈஸ்வரியிடமும் நர்ஸ் காண்பித்தபோது ஈஸ்வரி, "லட்சுமணா..." என்று அழைத்து அழுதாள்.

"அம்மாடி.. ஊர்மிளா... என் தெய்வமே... என் பேரனை என் கண்ணில் காண்பித்திட்டியேம்மா. உனக்கு எப்படி நன்றி சொல்லப் போறேன்."

ஊர்மிளா மயக்கத்தில் இருக்க தயாநிதி அதட்டினார்.

"இப்ப எதுக்கு கண் கலங்குற... அதான் நம்ம பேரப் புள்ளைய கண்ணில பார்த்திட்டோம்ல்ல.. மருமகள்



முடிச்சிட்டா மகனை நினைச்சு மறுக மாட்டாளா. உன் ஆத்தாமையை அடக்கிக்க."

ஊர்மிளாவிடம் அசைவு தெரிந்ததும் குழந்தையைக் காண்பித்தார்கள். லட்சுமணனின் பிம்பமாய் அதே மூக்கு, வாய், கண்கள் என்று அவனது குழந்தை இருப்பதாகச் செவ்வந்தி கூறினாள்.

"அப்படியே என் அண்ணன் மகனின் மூக்கு முழி இருக்கு பாரு. அண்ணா உன் பேரன் சிரிப்பைப் பார்க்கிறப்போ லட்சுமணன் சிரிக்கிறது மாதிரியே இருக்குதண்ணே."

ஊர்மிளா குழந்தையைப் பார்த்தாள். லட்சுமணனின் வடிவாய் அது அவளைப் பார்த்துச் சிரித்தது. கண்கள் பனிக்க குழந்தையை வாங்கிக் கொண்டாள். இனி இவன்தான் அவள் வாழ்வின் ஆதாரம். இனி இவனே அவள் வாழ்வின் அர்த்தம்.

"அத்தை காபி சாப்பிடுங்க. ஊர்மிளாவுக்கும் கொடுங்க" நடேசன் பிளாஸ்க்கோடு உள்ளே வந்து கூறினான்.

ஊர்மிளா அவனை நன்றியோடு நிமிர்ந்து பார்த்தாள். எதிர்பார்ப்பு இல்லாமல் மழை தரும் மேகம் போல இவனால் எப்படி இருக்க முடிகின்றது. காற்றைப் போல் எப்படி மனம் வருட முடிகின்றது? இவன் மட்டும் இல்லாவிட்டால் இன்று என்ன ஆகியிருந்திருக்கும்? இவன் யார்? இவ்வளவு கருணையைப் பொழிய இவனால் எப்படி இயல்கிறது?

செவ்வந்தி பிளாஸ்கிலிருந்த காபியை தம்ளர்களில் ஊற்றியபடி, "பார்த்தியா மதினி. என் நாத்தனார் மகனுக்

குக் கூட என் பிறந்த வீட்டு மேல எவ்வளவு அக்கறை இருக்குன்னு இப்பவாவது தெரிஞ்சுக்க. புள்ளை பெத்த பச்சை உடம்புக்காரிக்கு சூடா காபி கொடுக்கணும்னு இங்க யாருக்காவது நினைப்பிருந்துச்சா...'' என்று சாந்தாவை ஜாடையாய் பார்த்துக் கொண்டு கூறினாள்.

''அப்படியில்லை செவ்வந்தி. அதிலயும் உன் கொடி பறக்கட்டுமேன்னுதான் நாங்க ஒதுங்கி நிற்கிறோம்'' என்று இடக்காகப் பதில் கூறினாள் சாந்தா.

ஜனார்த்தனமும், சத்தியவதியும் பலராமனுடன் ஓட்டமும் நடையுமாய் ஓடி வந்தனர். பெற்றுப் பிழைத்த மகளைப் பார்த்ததும் சத்தியவதி கண்ணீர் விட்டாள்.

''உன்னைக் கண்ணுக்குள்ள வைச்சு பொத்திப் பொத்தி வளர்த்தோமே. இப்படிப் பிரசவத்துக்குக் கூட பிறந்த வீட்டுக்கு வராமல் ஒதுங்கி நிற்கிறாயே.. உனக்கும் எங்களுக்கும் சண்டையா, பகையா?''

மனைவி மகளை அணைத்தபடி புலம்புவதைக் காணச் சகிக்காத ஜனார்த்தனம் முகம் திருப்பிக் கொண்டார். நிலைமையை சீராக்க விரும்பிய ஈஸ்வரி குழந்தையைத் தூக்கி பலராமனின் கையில் கொடுத்தாள்.

''பலராமா. இதுதான் உன் அக்காவின் குழந்தை. உன்னை தாய் மாமனாக்கியிருக்கும் உன் மருமகனைப் பாரு. உன்னைப் பார்த்துச் சிரிக்கிறதைப் பார்த்தியா?''

பலராமன் தன் கையிலிருந்த சிசுவைப் பாசத்துடன் தூக்கிக் கொண்டான். ஜனார்த்தனமும், சத்தியவதியும் போட்டி போட்டுக் கொண்டு குழந்தையை வாங்கிக் கொள்ள முயல அவன் குடுக்க மறுத்தான். ஊர்மிளா ஈஸ்வரியை வாத்சல்யத்துடன் பார்த்தாள்.



''எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக மனிதர்களின் மன நிலையைப் புரிந்து கொண்டு செயல்பட்டு விட்டாள்?''

ஊர்மிளா மருத்துவமனையில் மூன்று நாள்கள் இருந்தாள். அவளது நிழலாக இருந்து சத்தியவதி பாதுகாத்தாள். மேலக்காலுக்கு மகளைக் கூட்டிக் கொண்டு போன பின்பும் ஒரு மாதம் சம்பந்தி வீடு என்று பேதம் பாராட்டாமல் மகளின் கூட இருந்து கவனித்துக் கொண்டாள். ஈஸ்வரியும், தயாநிதியும் போட்டி போட்டுக் கொண்டு சத்தியவதியை உபசரித்ததில் அவளுக்கு மகளின் மாமியார் வீடு என்பது மறந்து விட்டது.

மகன் பிறந்து ஆறு மாதங்களானபோது ஊர்மிளா வேலைக்குத் திரும்பினாள்.




ஆற்றங்கரையிலிருந்து ஊருக்குள் செல்லும் பாதையில் நடந்து கொண்டு இருந்தான் நடேசன். அன்று ஞாயிறு விடுமுறை. வயலுக்குச் சென்று தண்ணீர் பாய்ச்சி விட்டு குளித்து முடித்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

''என்ன மாப்பிள்ளை.. பராக்கு பார்த்துக்கிட்டே நடக்குற.. எங்க இருக்கு உன் நினைப்பு?'' எதிரே வந்த பாலையா கேட்டான். அவன் நடேசனுக்கு மாமன் மகன் உறவு முறையாக வேண்டும்.

''என் நினைப்பு என் கிட்டத்தான் இருக்கு. நீ எங்கே கிழக்குப் பக்கமா போய்க்கிட்டு இருக்க?''

''வேற எங்கே... பொண்ணு பார்க்கத்தான்.''

''யாருக்கு?''

''இந்தக் இடக்குத்தானே வேணாம்கிறது. எனக்குத் தான்.''

''உனக்கா...? ஏண்டா தனியாவா பெண் பார்க்கப் போற?''

''தனியாவா? நம்ம ஊரில் அதுக்கு விட்டு விடுவார்களா? பத்து வண்டி கட்டி கூட்டமெல்லாம் முன்னால் போகுது.''

''உனக்கு தனியா வண்டி வருதா?''

''அது வேறயா? நீ ஏன்டா மாப்பிள்ளை வயித்தெரிச்சலைக் கிளப்பற. எனக்கு வண்டியில் இடமில்லைடா... அதான் நடந்தே போறேன்.''

''என்னடா இது... என் செவ்வந்தி அத்தை சொல்வது மாதிரி பெரியக் காலக் கொடுமையாயிருக்கு. பத்து வண்டியில் ஒத்தை வண்டியில் கூடவா உனக்கு இடமில்லை. ச்சு... ச்சு... ஆமாம். பொண்ணு எந்த ஊரு?''

''மேலத் தெருதான்...''

''என்னது நம்ம ஊரு மேலத்தெருவிலயா?''

''ஆமடா... உன் சின்னம்மா மகள் அன்னக்கிளியைத் தான் பெண் கேட்டுப் போகிறோம்.''

''அடப் பாவி. அதுக்கு ஏண்டா வண்டியைக் கட்டின?''

''வன்கொடுமைடா. மாப்பிள்ளை நடந்து போனால் நல்லாயிருக்காதுன்னு என் அப்பன் சொல்லவும் வீட்டிலிருந்த வண்டியைக் கட்டினோம்...''

''சரி... அப்புறம் என்ன ஆச்சு?''



''முதல் வண்டியில் இடமில்லை. ரெண்டாவது வண்டியா பக்கத்து வீட்டு வண்டியைக் கட்டினோம். அதிலும் எனக்கு இடமில்லை... அப்படியே பத்து வண்டியைக் கட்டியாச்சு.''

''பத்து வண்டியிலயும் உனக்கு இடமில்லை... ஹாஹ்ஹா...''

''ஏண்டா மாப்பிள்ளை சிரிக்க மாட்டே? உனக்குப் பெண் பார்க்க ஊரே கூடும்போது நீ என்ன செய்யப் போகிறேன்னு பார்க்கத்தானே போகிறேன். ஆமாம் நீ எப்படா கல்யாணம் பண்ணிக்கப் போற?''

''அந்தக் கவலை உனக்கு எதுக்கு? இப்ப உன் கல்யாணத்தைப் பத்தி மட்டும் கவலைப்படு. சீக்கிரமா போய் பொண்ணு பார்க்க உட்காரு. இல்லைன்னா பத்து வண்டியில் ஏதாவது ஒரு வண்டியில் போனவன் கூட உன் அன்னக்கிளி பறந்து போயிறப் போகுது... ஹாஹ்ஹா.''

பாலையா உண்மையிலேயே பயந்து போனவனாக ஓட்டமும் நடையுமாய் மேலத் தெரு பக்கம் போனான். அதை ரசித்து மனம் விட்டுச் சிரித்தபடி தயாநிதியின் வீட்டுக்குச் சென்றான் நடேசன். வாசலில் நின்றிருந்த ஹீரோ ஹோண்டா வண்டியைப் பார்த்ததும் 'பலராமன் வந்திருக்கிறானா?' என்று தனக்குள் நினைத்தபடி வீட்டுக்குள் சென்றான்.

பாலமுரளியைக் கையில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த பலராமன் நடேசனைக் கண்டதும் மரியாதை நிமித்தம் சிரித்தான். பாலமுரளி அவன் கையில் இருந்து திமிறிக் கொண்டு இறங்கினான். நடேசனைப் பார்த்து தளர் நடை நடந்து, ''தித்தப்பா'' என்று அழைத்தான்.

இரண்டு வயதாகப் போகும் பால முரளியை வாரி அணைத்துக் கொண்ட நடேசன், "+ 2 பரிட்சையெல்லாம் முடிந்து விட்டதா?" என்று பலராமனைப் பார்த்துக் கேட்டான்.

"நேற்றே முடிந்து விட்டது மாமா."

"ஊரில் அத்தை, மாமா சௌக்கியமா?"

"சௌக்கியமா இருக்காங்க மாமா."

"ரிசல்ட் இன்னும் இரண்டு மாதத்தில் வந்துவிடும். மேலே என்ன படிக்கப் போகிறாய்? அம்பிஷன் எதுவும் இருக்கா?"

"அவனுக்கு கம்ப்யூட்டர் பிடிக்கும். அதனால் கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஆகப் போவதாகச் சின்ன வயதிலிருந்தே சொல்லிக் கொண்டிருப்பான்" என்றாள் காபித் தம்ளர்களுடன் அங்கே வந்த ஊர்மிளா.

தம்பிக்கு ஒரு தம்ளரையும் நடேசனிடம் மற்றொன்றை கொடுத்து விட்டு மகனை வாங்கிக் கொள்ள யத்தனித்தாள். ஆனால் நீட்டிக் கொண்டிருந்த அவள் கரங்களைப் புறக்கணித்து நடேசனின் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டான். வாசல் பக்கமிருந்து துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வந்த தயாநிதி சிரித்தார்.

"என்னம்மா நடேசனைக் கண்டதும் உன்கிட்டக் கூட வரமாட்டேன் என்கிறானா பேரப்பிள்ளை."

"ஆமாம் மாமா" என்று சிரித்தாள் ஊர்மிளா.

மருமகள் சிரிப்பதைக் கண்டு மனம் குளிர்ந்தவர் பலராமனைக் கண்டதும்,

"அடடே. என் மருமகன் வந்திருக்காப்புல போல. எப்பய்யா வந்தீங்க... பரிட்சை முடிஞ்சிருச்சா" என்று



ஆர்ப்பரித்து அவனருகில் போய் அமர்ந்து கொண்டு பலராமனின் முடி கோதினார்.

அவரின் அன்பான செய்கையில் பலராமன் மனம் நெகிழ ஈஸ்வரி சிரித்தாள்.

"வாய்க்கு வாய் மருமகனேங்கறீங்க. சுபத்ராவையா கட்டிக் கொடுக்கப் போறீங்க?"

அங்கு அமர்ந்து வாய் பார்த்துக் கொண்டிருந்த இருபது வயது சுபத்ரா வெட்கமடைந்தாள்.

"போம்மா. என்னை விட நாலு வயசு சின்னவன் பலராமன். அது கூடவப் போய் என்னை இணைச்சுப் பேசறயே."

"ஹாஹ்ஹா" என்று சிரித்த தயாநிதி.

"மகாத்மா காந்தியை விட கஸ்தூரிபாய் வயதில் மூப்புத்தான். அவங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு நல்லா வாழலையா?" என்று நியாயம் பேசினார். நடேசன் ரசித்தபடி, "அதுதானே" என்று ஒத்துப் பாடினான்.

பலராமன் முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது. தலையைக் குனிந்து கொண்டு கால் விரல்களால் தரையில் கோலம் போட்டான்.

"ஆ.. ஆ... என் மச்சினனுக்கு வெட்கம் வந்து விட்டது. நான் பார்த்தாலும் பார்த்தேன். ஒரு ஆண் பிள்ளை வெட்கப்படுவதை இப்போதுதான் பார்க்கிறேன்" நடேசன் சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

பலராமன், "அக்கா..." என்று தமக்கையை துணைக்கு அழைத்தான். சுபத்ரா உள்ளே ஓடிவிட்டாள். கேலியை ஆரம்பித்து வைத்த ஈஸ்வரியே அதை முடிவுக்கு கொண்டு வந்தாள்.

"சாப்பிடாம பிள்ளை ஓடிப்போய் விடப் போகுதுடா நடேசா. கேலியை நிப்பாட்டி விட்டு சாப்பிடக் கூப்பிட்டுக்கிட்டு வா. சூடா இட்லி அவிச்சு வைத்திருக்கிறோம். ஆறி விடறதுக்குள்ள சாப்பிட்டு விடுங்க."

நடேசன் குழந்தையைத் தூக்கிக் கொண்டே பலராமனைக் கூப்பிட்டுக் கொண்டு பின்பக்கம் கை கழுவ அழைத்துப் போனான். சமையலறையை அடுத்த அறையில் ஜமுக்காளம் விரிக்கப்பட்டு தட்டுக்கள் வைக்கப்பட்டு இருந்தன. தான் அமராவிட்டால் பலராமன் அமரமாட்டான் என்பதால் அவனுடன் சாப்பிட அமர்ந்தான். அவன் மடியில் லட்சுமணனின் மகன் அமர்ந்திருந்தான். பரிமாற வந்த ஈஸ்வரி,

"புள்ளையக் கொடுத்திட்டு சாப்பிடுடா" என்றாள்.

"அவன் வந்தால் தூக்கிக்கங்க. நான் கொடுக்க மாட்டேன்."

ஊர்மிளா, ஈஸ்வரி, தயாநிதி, சுபத்ரா என்று அழைவரும் ஆள் மாற்றி ஆள் அழைத்தும் குழந்தை வர மறுத்து நடேசனிடம் ஒட்டிக் கொண்டான். குழந்தைக்கு ஊட்டி விட்டுக் கொண்டே தானும் சாப்பிட்ட நடேசனை வியப்பாகப் பார்த்தபடி சாப்பிட்டான் பலராமன்.

"இன்னும் ரெண்டு இட்லி வைச்சுக்கடா..." ஊர்மிளா உபசரிக்க,

"போதும்க்கா. இதுவே கழுத்து வரைக்கும் இருக்கும். இனிச் சாப்பிட்டேன் வாயில் முட்டிக் கொண்டு வந்து விடும்."

"ஹாஹ்ஹா.. என் மருமகன் சோக்காப் பேசறாரு" என்று தயாநிதி சிரிக்க ஆரம்பிக்க, எங்கே மீண்டும்



மூன்று முடிச்சுப் பந்தத்தைப் பேச ஆரம்பித்து விடுவார்களோ என்று பயந்து கொண்டு பலராமன் பின் பக்கம் கைகழுவ ஓடினான். சுபத்ரா சமையல் கட்டுக்குள் மறைந்து கொண்டாள்.




சாந்தா செவ்வந்தியின் வீட்டிற்குப் போனபோது அவள் வீட்டில் ராஜ்ய பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தாள். அவள் வீட்டுக்குள் போட்டுக் கொண்டிருந்த சத்தம் தெருவை எட்ட சாந்தா பீதியடைந்து வீட்டுக்குத் திரும்பி விடலாமா என்று ஒரு கணம் நினைத்தாள். மறுகணம் செவ்வந்தி வீட்டில் சத்தம் இல்லாமல் இருப்பது அலையடிக்காத கடல் இருப்பதைப் போல என்று மனதைத் திடம் பண்ணிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

"என்ன செவ்வந்தி என்ன பண்ணிக்கிட்டு இருக்க?" என்று கேட்டபடி உள்ளே நுழைந்த சாந்தாவைக் கண்டதும் மனைவியின் சண்டையில் கிழிந்து கந்தல் துணியாகிக் கொண்டிருந்த சுந்தரம் ஆசுவாசப் பெருமூச்சு விட்டார்.

"வாம்மா, சாந்தா" என்று அவ்வளவு முகமலர்ச்சியாக என்றுமே அவர் மைத்துனன் மனைவியை வரவேற்று இருக்க மாட்டார்.

கணவனின் வரவேற்பைத் தொடர்ந்து சாந்தாவைப் பார்த்த செவ்வந்தி "வா மதினி" என்றாள் சண்டையின் கடுமை குறையாதவளாய் முறைப்புடன்.

செவ்வந்தி சிரித்த முகத்துடன் இருக்கும்போதுதான் பேச வேண்டுமென்றால் ஏழேழு ஜென்மம் காத்திருக்க வேண்டுமே.

அத்தனை ஜென்மம் காத்திருக்கும் உத்தேசமில்லாத சாந்தா,

''சாப்பிட்டியா செவ்வந்தி'' என்று கேட்டு பேச்சை ஆரம்பித்தாள்.

''ஏன் சாப்பிடலைன்னு சொன்னா எங்கண்ணன் வீட்டில இருந்து ஆக்கிக் கொண்டு வரப் போறயா?''

''அங்கே ஆக்காவிட்டால் என்ன? இதுவும் எனக்கு அண்ணன் வீடுதானே இங்கே ஆக்கிப் போட்டால் போச்சு. நகரு. நான் சமையல் கட்டுக்குப் போய் பொங்கிப் போடறேன்.''

அவ்வளவுதான் சாந்தாவை விட்டு விட்டு சுந்தரத்தை பத்ரகாளி போல் முறைக்க ஆரம்பித்தாள் செவ்வந்தி. சுந்தரம் குலை நடுங்கிப் போனார்.

''ஆமா மதினி. இப்படி எத்தன பேர் கிளம்பியிருக்கீங்க? என்னை என் வீட்டை விட்டு பத்திவிட?''

''இதென்னடி ஆத்தா புதுக்கதையா இருக்கு? உன் வீட்டை விட்டு உன்னைப் பத்திவிட ஒரு மனுசப் பிறவி பிறந்து இல்ல வரணும்?''

சாந்தாவின் சாதுர்யப் பேச்சில் செவ்வந்தி கொஞ்சம் மலை இறங்கினாள். சாந்தா சுந்தரத்தைப் பார்த்த வினவினாள்.

''என்னண்ணே. எங்க செவ்வந்தி இவ்வளவு கோபப் பட்டு நான் பார்த்ததே இல்லையே.''



சுந்தரம் 'அடிப்பாவி என்னமா புளுகுகிறாய்?' என்பது போல் பார்வை பார்க்க அதைக் கண்டும் காணாதவள் போல் சாந்தா தொடர்ந்தாள்.

''அவ கோபப் படறான்னா விசயம் பெரிசாத்தான் இருக்கும். என்ன செவ்வந்தி என்ன ஆச்சு?''

கதை கேட்க ஆரம்பித்து விட்டாள் என்று சலித்துக் கொண்ட சுந்தரம் வெறும் வயிற்றோடு பசி தாங்க முடியாமல் சோர்ந்து அமர்ந்தார். பதினோரு வயது மகன் சீதாவைப் பார்த்துக் கொண்டார். வளர்கின்ற பிள்ளைப் பருவம். நேரா நேரத்திற்கு சாப்பாடு போடாமல் இந்தப் பாடு படுத்துகிறாளே என்று கவலைப்பட்டவர் விரக்தியுடன் விட்டத்தை வெறித்தார்.

''அந்தக் காலக் கொடுமையை ஏன் மதினி கேட்கிற?''

சாந்தா நாத்தனார் எந்தக் காலக் கொடுமையைப் பற்றிக் கூறுகிறாள் என்று அறியாதவளாய் நாத்தனாரின் கணவரைப் பார்த்தாள். அவர் இருக்கும் நிலையைக் கண்டு இதைவிடப் பெரிய காலக்கொடுமை எதுவும் இருக்க முடியாது என்று மனதிற்குள் பரிதாபப்பட்டுக் கொண்டு வெளியில் அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள்.

''நான் கேட்காம யார் கேட்பாங்க. நீ சொல்லு கேட்கிறேன்.''

''ஒரு வீட்டில் சமையல்கட்டுல புழங்குகிற உரிமை யாருக்கு மதினி?''

''ஏன் அந்த வீட்டுப் பொம்பளைக்குத்தான்.''

''அந்த வீட்டுப் பொம்பளைன்னா யாரு? வாக்கப்பட்டு வந்தவளா? வாக்கப்பட்டு இன்னொருத்தன் வீட்டுக்குப் போனவளா?''

'ஆஹா' என்று சுதாரித்துக் கொண்டாள் சாந்தா. பிறந்த வீட்டில் இந்த செவ்வந்தி நடந்துக்கிற நாட்டாண்மையைத் தட்டிக் கேட்க நேரம் வந்து விட்டதே.

''இது என்ன செவ்வந்தி இப்படிக் கேட்டுவிட்ட? உலகத்திற்கே தெரியுமே. தாலி கட்டிக் கொண்டு ஒரு வீட்டுக்கு வாழ வரும் பொண்ணுக்குத்தான் உரிமை இருக்கு. அடுத்த வீட்டுக்கு மருமகளா போன பின்னாலும் பிறந்த வீட்டில் ஆட்டம் போடுகிற பிறவிகளை என்ன செய்யறது? அதுகளுக்கா புத்தி இருக்கணும். இல்ல நாலு பேர் வாழறதைப் பார்த்தாவது தெரிஞ்சுக்கணும். மனச்சாட்சி இல்லாத ஜென்மங்களைப் பத்தி நமக்கென்ன பேச்சு செவ்வந்தி.''

செவ்வந்தி விழித்துக் கொண்டாள். 'வாடி என் அண்ணன் பெண்டாட்டி. நீ சந்தடி சாக்கில் சிந்து பாடுறயா?' என்று கறுவிக் கொண்டவளாய் கூறினாள்.

''மதினி பிறந்த வீடு நல்லா இருக்கணும். நாலுபேர் மெச்ச இருக்கணும்னு பாடுபட்டவளுக்கு பட்டுக் கொண்டிருக்கிறவளுக்கு பிறந்த வீடு தங்கத் தாம்பாளத்தில் மரியாதை கொடுக்கணும்.''

'ஆமாம் உனக்கு அதைக் கொடுத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன்' என்று சாந்தா முறைப்பாய் பார்க்க செவ்வந்தி தொடர்ந்தாள்.

''ஆனா என்னை மாதிரி பிறந்த வீட்டைத் தூக்கி நிறுத்துற பொம்பளைங்க யாரு இந்த மண்ணில் இருக்கிறாங்க?''

'உன் ஒருத்தியையே இந்த மண் தாங்காது. இதில் இன்னொருத்தியா?' சாந்தா பல்லைக் கடித்துக் கொண்டாள்.



''இப்ப என் வீட்டையே எடுத்துக்க மதினி. இந்த மனுசன் கூடப் பொறந்தவன்னு ஒருத்தி இருக்காளே...''

'உன்னை அண்ணன் பொண்டாட்டியாக்கிய பின்னாலும் அவள் இருக்கிறாளே. அதுவே அதிசயம்தான்' சாந்தா மனதில் நினைவு ஓடியது.

''அவ இன்னைக்கு காலையில இங்க வந்திருந்தா மதினி?''

''யாரு சுப்புத்தாயா? உன் வீட்டுக்கு வந்தாளா?'' சாந்தா ஆச்சரியமாய் கேட்டாள்.

சுந்தரம் இரண்டு சகோதரன்களோடும் ஒரு சகோதரியுடனும் பிறந்தவர். எல்லோருமே உள்ளூரில்தான் வசித்து வந்தனர். சுந்தரத்தின் அக்கா சுப்புத்தாயுடைய மகன்தான் நடேசன். சகோதரனைப் பார்க்க அவள் விரும்பினாள் மகனிடம் சொல்லி விடுவாள். சுந்தரம் தான் போய்ப் பார்ப்பார். தம்பி மனைவியான செவ்வந்திக்கும் அவளுக்கும் என்றுமே ஆகாது. அவள் வந்திருந்தாளா?

சாந்தா ஆச்சர்யப்படுவதைப் பார்த்தவுடன் செவ்வந்தி முறைத்தாள். ''இது என்ன மதினி, வரக்கூடாத வீட்டிற்கு வந்திட்டாப்புல கேட்கறே?'' சாந்தா சுதாரித்துக் கொண்டு பதில் கூறினாள்.

''அப்படியில்ல செவ்வந்தி. வரக்கூடாதவ வந்திருக்காளேன்னுதான் கேட்டேன். பாரு காலங்கார்த்தால அடுப்பைக்கூட பத்த வைக்காம அண்ணன் கூட மல்லுக்கு நிற்கிறயே. நீங்க சண்டை போட்டு நான் பார்த்ததே இல்லையே.''

அவள் விசமமாகக் கூற 'இதுவும் என் நேரமா?' என்று செவ்வந்தியை சுந்தரம் விழியால் கேட்க செவ்வந்தி சாந்தாவை முறைத்தாள்.

"வீட்டுக்கு வீடு வாசப்படி மதினி. நீயும் எங்க சின்ன அண்ணனும் எப்பப் பார்த்தாலும் கொஞ்சிக்கிட்டே இருக்கிறது போல மத்தவங்க வீட்டை கேலி பேசுறயா? போன வாரம் உனக்கும் அண்ணனுக்கும் வந்த சண்டையில் நான் மட்டும் தலையிட்டு நிப்பாட்டலைன்னா நீ பொறந்த வீட்டுக்கு பொட்டியைக் கட்டியிருப்ப."

சாந்தா அடங்கிப் போனாள். இப்படி பதிலடி கொடுக்கிறாளே என்று பொறுமியபடி அடுப்பைப் பார்க்க அதில் கொஞ்சம் தணல் இருந்தது.

"அடுப்பைப் பத்த வச்சிட்டுத்தான் சண்டையை ஆரம்பிச்சியா?"

"அத நான் பத்த வைக்கலை மதினி. வயித்தெரிச்சலைக் கிளப்பாதே."

"வேற யார் பத்த வச்சா? அண்ணனா?"

"இல்ல. உங்க அண்ணனோட அக்கா."

"யாரு நடேசனோட அம்மாவா? எதுக்கு இங்க வந்து அடுப்பெரிச்சுச்சு. அதுக்கு என்ன உனக்கு ஆக்கிப் போடனும்னு தலை எழுத்தா?"

சாந்தா சுப்புத்தாயின் மேல் மரியாதை வைத்திருப்பவள். தானுண்டு. தன் வேலையுண்டு என்று இருக்கும் மகராசி சுப்புத்தாய்.

"அது ஆக்கிப் போட்டுச் சாப்பிடணும்னு எனக்கும் தலை எழுத்தில்லை. மகராசி விடிஞ்சும் விடியாம வந்தாள். இன்னைக்கு ஞாயித்துக்கிழமை. சீத்தாவுக்கு பள்ளிக்கூடம் லீவு. அதனால கொஞ்சம் கண் அசந்துட்டேன். தம்பியைப் பார்த்து சாப்பிட்டாச்சான்னு கேட்டுச்சு. இல்லைக்கான்னார் இந்த மவராசன். உடனே அடுப்பைப் பத்த வச்சு கல்லைத் தூக்கிப் போட்டுறுச்சு."



"கல்லைத் தூக்கி போட்டுருச்சா? யார் மேல?"

"ம்ம். என் மேலதான். அடுப்பில தோசைக் கல்லைத் தூக்கிப் போட்டுறுச்சு மதினி. இந்த மனுசன் வக்கணையா தட்டை வச்சுக்கிட்டு உட்கார்ந்துட்டார்."

"பாவம், சாப்பிட்டாரா இல்லையா?" அனுதாபத்துடன் வினவினாள் சாந்தா.

"யார் வீட்டில யாரு வந்து அடுப்பெரிக்கிறது. நான் எந்திருச்சு வந்து நல்லா நாலு கொடுத்தேன். வாங்கிக்கிட்டுப் போயிருச்சு."

"அப்போ... அண்ணன் இன்னும் சாப்பிடவே இல்லையா?"

சாந்தாவுக்குச் சிரிப்பு வந்தது. செவ்வந்தி அடுப்பை பற்ற வைத்து தோசைக் கல்லை எடுத்து வைத்தாள். மாவைக் கரைத்தவாறு மகளை விரட்டினாள்.

"ஏண்டி சீதா.. மரமாட்டம் நிற்காதே. தேங்காய் சட்னியை மிக்சியில் அரைத்து எடு."

"ஏன் செவ்வந்தி, கேஸ் அடுப்பை வாங்கி மூலையில் வைத்துவிட்டு விறகு அடுப்பை எரிக்கிற?"

"காடு கரையில் இருக்கிற மரம் மட்டையை என்ன செய்யறது?"

"அதுதானே நீதான் வடிகட்டின கஞ்சமாச்சே."

"சேர்த்து வைச்சு என்ன செய்யப் போறேன்? கொண்டுக்கிட்டாப் போகப் போறேன்? எல்லாம் என் மகளுக்குத்தானே."

சுந்தரத்தின் தட்டில் தோசைகளைப் போட்டு அதில் சட்னியை சீதா ஊற்ற அவர் சாப்பிட ஆரம்பித்தார். கொஞ்சம் பசி அடங்கட்டும் என்று பொறுமை காத்த

செவ்வந்தி, சுந்தரம் பத்து தோசைகளை உள்ளே தள்ளியதும் சாந்தாவைப் பார்த்துக் கேட்டாள்.

''அவங்க அக்கா எதுக்கு வந்துச்சுன்னு தெரியுமா மதினி?''

செவ்வந்தி பீடிகைபோட சாந்தாவிற்கு ஆர்வம் பிறந்தது. ஆவலாக ''எதுக்காம் செவ்வந்தி?'' என்று கேட்டாள்.

''அதை அவரையே கேளு. எல்லாம் காலக் கொடுமை. அடியே சீதா.. உன்னை வெத்தல பாக்கு வெச்சு சாப்பிட அழைக்கணுமா? வா வந்து சாப்பிடு.''

மகளுக்கு பரிமாறுவதில் அவள் முனைய சாந்தா சுந்தரத்தைப் பார்த்தாள்.

''என்னங்கண்ணா. என்ன விசயம்? எதுவும் முக்கியமான செய்தியா?''

சுந்தரம் பசியடங்கி நிதானத்திற்கு வந்திருந்தார். யோசனையாய் மைத்துனன் மனைவியைப் பார்த்தபடிக் கூறினார்.

''முக்கியமான விசயம்தாம்மா. முதலில் உன்கிட்டத் தான் சொல்லி யோசனை கேட்கணும்னு இருந்தேன். நீயே வந்து விட்டாய்.''

சுந்தரம் செய்தியைக் கூறினார். சாந்தா நம்ப மாட்டாமல் திகைத்தாள்.




சாந்தா நம்ப முடியாம திகைப்புடன் சுந்தரத்திடம் வினவினாள்.



''என்ன அண்ணே சொல்றீங்க. நம்ம சப்புத்தாயி அக்காவா சொல்லுச்சு.''

''சப்புத்தாயின்னு சொல்ல வேண்டியதுதானே. அது என்ன அக்கா போடறே?'' செவ்வந்தி வக்கணையாய் தட்டில் தோசைகளைப் போட்டுக் கொண்டு வாயில் பிட்டுப் போட்டபடி பேசினாள்.

சுந்தரம் மனைவியை முறைத்தார். அவள் அலட்சியமாக சட்னியை தோசையில் ஊற்றிக் கொண்டே கூறினாள்.

''கூடப் பிறந்த பிறப்பு மாதிரி என் மதினிக்குப் பாசம் பொங்கி வழியுதே அதேன் கேட்டேன். என்ன மதினி நான் சொன்னது தப்பா?''

''நீ என்னைக்குத் தப்பாப் பேசியிருக்கிற? ஆனா செவ்வந்தி உன் நாத்தனாருக்கு எப்படி இப்படி ஒரு நினைப்பு வந்துச்சு. ஆச்சரியமாயிருக்கே.''

''எப்படி நினைப்பு வந்துச்சு. ஏன் நினைப்பு வந்துச்சுங்கிறது இப்ப பிரச்சினை இல்லை மதினி. இது சரி வருமா வராதாங்கிறதுதான் பிரச்சினை.''

சாந்தா யோசனையுடன் சுந்தரத்தைப் பார்த்தாள்.

''ஏண்ணே. செவ்வந்தி சொல்ற மாதிரி இது சரிப்பட்டு வருமா?''

''ஏம்மா வராது? ஒரு வாடின பயிரைப் பாத்தால் தண்ணி ஊத்தி அதைக் காப்பாத்தி வளர்க்கிறவன்தான் விவசாயி. நான் உண்மையான விவசாயி. அது பச்சை இளங்குருத்து. பட்டுப் போய் நிக்குது. அது வாழ்க்கையில தண்ணீரைப் பாய்ச்சிக் காப்பாத்தணும் எங்க அக்கா நினைக்கிறதை நான் நினைச்சுப் பார்க்கிறப்போ ரொம்பப்

பெருமையாயிருக்கு. ஊருக்குள் எத்தனை பேருக்கு இப்படி ஒரு நினைப்பு வரும்? எங்க அக்கா வைரம். அது மதிப்பு தெரியாதவங்க ஒரு நாள் தெரிஞ்சுக்குவாங்க."

எதற்கும் வாயடித்து வாய் மூட வைக்கும் செவ்வந்தி மௌனமாக இருந்தாள். சாந்தாவுக்கும் சுந்தரத்தின் நினைவு தான். கிராமத்தில் இப்படி ஒரு மனுஷியா?

"இப்ப என்ன அண்ணே செய்யச் சொல்றீங்க?"

"உன் புருசன் கிட்ட இதைப் பத்திப் பேசு. நான் என் பெரிய மச்சான் கிட்டப் பேசுறேன். நல்ல காரியத்தை நடத்தி விடலாம்."

செவ்வந்தி பேசாமல் சாப்பிட்டு முடித்த பாத்திரங்களை கழுவி வைக்க ஆரம்பித்தாள். சாந்தா ஒரு முக்காலியைப் போட்டுக் கொண்டு அவள் அருகில் வாகாய் அமர்ந்து கொண்டாள்.

"நீ என்ன செவ்வந்தி ஒன்னும் பேச மாட்டேங்கிற. அண்ணன் சொன்னதை கேட்டுக்கிட்டுத்தான இருந்தே?"

"அவர் சொன்னதையும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். அவர்கிட்ட அவங்க அக்கா சொன்னதையும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்.

செவ்வந்தி பாத்திரங்களை அடுக்கி வைக்க ஆரம்பித்தாள்.

"அப்புறம் ஏன் பேசாம இருக்க?"

"நான் பேசறது இருக்கட்டும். நீ இதைப்பத்தி என்ன நினைக்கிற மதினி. அதைச் சொல்லு முதலில்."

"இதில நான் பேச என்ன இருக்கு செவ்வந்தி?"

"அதனாலதான் பேசாம இருக்கேன். இதில நான் பேச எதுவும் இல்லை. பேசவும் போறதில்லை மதினி. இந்த



ஒரு பொண்ணோட வாழ்க்கைப் பிரச்சினை என் புருசன் சொன்ன மாதிரி அவ பச்சை இளம் குருத்துதான். அவ வாழ்க்கையில மறுபடி சந்தோசம் தழைச்சா நல்லதுதான்."

"நல்லதுதான்னு இழுவை இழுக்கறே. ஏன் செவ்வந்தி."

"உனக்குத் தெரியாதா மதினி. முள்ளு மேல சேலை விழுந்தா பார்த்து பக்குவமாத்தான் எடுக்கணும். பதறிப் போய் வேகமா இழுத்தா சேலை கிழிஞ்சுறக் கூடாது. அவ்வளவுதான் சொல்வேன்."

"நீ சொல்றதும் சரிதான் செவ்வந்தி. பதறின காரியம் சிதறித்தான் போகும். நான் உங்க சின்ன அண்ணன் கிட்டச் சொல்றேன்."

சாந்தா வீடு வந்து சொன்ன செய்தியைக் கேட்ட கலைமதி அதிர்ந்து விட்டார்.

"என்ன புள்ள சொல்ற? நம்ம சுப்புத்தாயி மதினியா சொல்லி விட்டிருக்க."

"அப்படித்தான் உங்க தங்கச்சி செவ்வந்தி சொல்றா."

"செவ்வந்தி சொன்னால் அது உண்மையாத் தானிருக்கும்."

கலைமதி சொன்னது உண்மையென்பதை அறிந்திருந்த சாந்தா மௌனம் சாதித்தாள். செவ்வந்தி பொய் உரைப்பவள் அல்ல.

"ஏன் சாந்தா. இதை அண்ணன் கிட்ட நாம எப்படிப் பேசறது?"

"அவரே பேசிக்கறேன்னு சுந்தரம் அண்ணே சொன்னாரே."

"ஓகோ. அப்படியா. நீ என்ன நினைக்கிற சாந்தா?"

''செவ்வந்தியும் இதைத்தான் கேட்டாள். அவகிட்ட சொன்னதைத்தான் உங்ககிட்டயும் சொல்றேன். இதில் நான் பேச எதுவும் இல்லை. சம்பந்தப்பட்டவங்ககிட்ட இந்தக் கேள்வியைக் கேளுங்க. அவங்க என்ன நினைக்கிறாங்க என்பதுதான் இதில் முக்கியம்.''

''சுப்புத்தாயி தானாக் கேட்டாப்புலயா? இல்ல ராமையா அண்ணன் சொல்லிக் கேட்டாப்புலயா?''

''ராமையா மாமா சொல்லித்தான் கேட்டாப்புலயாம்.''

''ரெண்டு பேருக்குமே ரொம்பப் பெரிய மனசு.''

''அதை உங்க தங்கச்சியே ஒத்துக்கிட்டாள்.''

''நான் அண்ணன் கிட்டப் பேசும்போது சுந்தரம் சொன்னதை என்கிட்டச் சொல்லாம இருக்க மாட்டார். அவர் என்ன நினைக்கிறார்ன்னு தெரிஞ்சுடும்.''

''எல்லோருடைய நினைப்பையும் கேட்கறீங்களே. உங்க நினைப்பு என்ன?''

''நல்லதே நடக்கட்டும்ன்னுதான்'' மனமாரச் சொன்னார் கலைமதி.

சுந்தரம் தயாநிதியின் வீட்டினுள் நுழைந்தபோது நடேசன் பாலமுரளியைத் தூக்கிப் போட்டு விளையாடிக் கொண்டிருந்தான். அருகில் ஊர்மிளா இணைந்து நின்று மகனின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சியைக் கண்டதும் கண்ணும் மனமும் சேர்ந்து நிறைந்து விட்டது சுந்தரத்திற்கு. ஒரு வினாடி அங்கே நடேசன் மறைந்து லட்சுமணன் தோன்றினான். ஊர்மிளாவும், அவனும் இணைந்து தாங்கள் பெற்ற பிள்ளையுடன் விளையாடுவதுபோல் இருந்தது. நடேசன் குழந்தையின் கைகளைத் தூக்கி முத்தமிட்டபடி திரும்பினான்.



''அடடே நீங்க எப்ப வந்தீங்க மாமா?'' என்று தன் தாய்மாமனை வரவேற்றான். ஊர்மிளா மரியாதையுடன் சேரைத் தூக்கிப் போட்டாள். அதில் அமர்ந்தபடி,

''நீ எப்ப வந்தே?'' என்று பதிலுக்குக் கேட்டார் சுந்தரம்.

''நான் காலையிலிருந்து இங்கேதான் இருக்கிறேன். சூடா இட்லி, சாப்பிட்டாச்சு. மதியம் கோழிக் குழம்பாம். சமைத்து முடிக்கட்டும்ன்னு காத்திருக்கிறேன். பலராமன் ஊரிலிருந்து வந்திருக்கிறான். அவனுக்கு விருந்து வைக்கும்போது எனக்கும் கொஞ்சம் கிடைக்கிறது. நெல்லுக்கு பாய்ச்சும் தண்ணீர் புல்லுக்கும் சேர்த்து பாய்வது போல. என்ன பலராமா நான் சொல்வது சரி தானே.''

பலராமன், ''போங்க மாமா'' என்று வெட்கிச் சிரித்தான். அவனுக்கு நடேசனை மிகவும் பிடித்திருந்தது. அவன் தன் தமக்கையிடமும், தமக்கையின் குழந்தையிடமும் காட்டுகிற பரிவும், பாசமும் அவனை வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தது.

சுந்தரம் பலராமனைப் பார்த்து, ''பரிட்சையெல்லாம் முடிந்து விட்டதா?'' என்று ஆரம்பித்து ஊரிலிருந்த மாடு, கன்று, தோட்டம் துரவு மற்றும் பலராமனது பெற்றோர் நலமா என்று சம்பிரதாயக் கேள்விகளைக் கேட்டு முடித்தார். காலையிலிருந்து மாற்றி, மாற்றி அனைவரும் கேட்கும் இந்தக் கேள்விகளை மாதம் இருமுறை அக்காவைக் காண வரும் போதெல்லாம் காது புளிக்கக் கேட்டு வாய் வலிக்கப் பதில் சொல்லும் வழக்கத்தில் அவன் பதில் கூறிக் கொண்டிருந்தான்.

''வா சுந்தரம். காலையில் வயல் பக்கம் போகலையா?'' என்று கேட்டவாறு தயாநிதி பின்பக்கமிருந்து வந்தார்.

"வயக்காட்டுப் பக்கம் போகலைன்னா நம்ம பிழைப்பு எப்படி ஓடும் மச்சான். விடிஞ்சதும் போய் தண்ணி பாய்ச்சிட்டுத்தான் வந்தேன்."

"நல்லதாப் போச்சு. உங்க அக்கா கோழி அடிச்சு குழம்பு வச்சுக்கிட்டு இருக்கா. மருமகன் வந்திருக்காரு இல்ல... ஹாஹ்ஹா... இருந்து சாப்பிட்டு விட்டு செவ்வந்திக்கும், சீதாவுக்கும் தூக்குச் சட்டியில கோழிக் குழம்பைக் கொண்டு போ."

"அதுக்கென்ன மச்சான். சாப்பிட்டுட்டால் போச்சு. உங்ககூடக் கொஞ்சம் பேசணும். மாடிப் பக்கம் போக லாமா?"

தயாநிதி கேள்வியுடன் தங்கை கணவரைப் பார்த்தார்.




சுந்தரமும், தயாநிதியும் பேசிக் கொண்டிருந்ததைக் கவனிக்காமல் நடேசனும், ஊர்மிளாவும், பலராமனும் அரட்டை அடித்துக் கொண்டு இருந்தனர். சுந்தரம் அவர் களைப் பார்ப்பதை உணர்ந்த தயாநிதி,

"நடேசன் கிட்ட பலராமனுக்கு கொள்ளைப் பிரியம். எப்பவும் வந்ததும் ஓடிப் போய்விடுகிற புள்ள இருந்து சாப்பிட்டு விட்டு சாயந்திரமாப் போன்னு. நடேசன் சொன் னதும் சரின்னு சொல்லிருச்சு" என்று பெருமையாய் பேசியபடி எழுந்து மாடிப்படிக்கட்டில் ஏறினார்.

"என்ன விசயம் சுந்தரம்? செவ்வந்தி கிட்ட எதுவும் சொல்லணுமா?"



"இது என்ன மச்சான் புதுசா கேட்கறீங்க. பொண்டாட்டி கிட்ட தூது விட்டு எனக்குப் பழக்கமில்லையே. எங்க தகராறை நாங்களேதானே இத்தனை நாள் பார்த்துக்கிட்டு இருக்கோம். உங்க பஞ்சாயத்துக்கு எப்பக் கொண்டு வந்தோம்?"

"கோபப்படாதே சுந்தரம். தனியாப் பேசணும்ன்னு கூட்டிக்கிட்டு வந்திருக்கயே. அதான் என்னவோ ஏதோன்னு கேட்டு விட்டேன்."

"ஒன்னுமில்லை மச்சான். காலையில எங்க அக்கா வீட்டுக்கு வந்திருந்தது. அது ஒரு விசயம் உங்க கிட்ட கேட்கச் சொல்லுச்சு. அதைக் கேட்டு விட்டுப் போகலா முன்னுதான் வந்தேன்."

"யாரு சுப்புத்தாயா? எங்கிட்ட பேசணும்ன்னா நேராப் பேச வேண்டியதுதானே.. உன் கிட்ட என்ன சொல்லி யனுப்புறது?"

"நேராய் கேட்க வேண்டிய விசயமில்லை மச்சான்."

"நீ சுற்றி வளைக்காமல் விசயத்துக்கு வா."

அவர்கள் மொட்டை மாடியில் நின்று பேசிக் கொண் டிருந்தார்கள். வீட்டின் பின் பக்கம் தெரிந்தது. பலராமன் முரளியைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்க சற்றுத் தள்ளி ஊர்மிளாவும், நடேசனும் மெல்லிய குரலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். சுந்தரத்தின் பார்வை அங்கே போனது.

"நடேசனுக்கு ஊர்மிளா மேல் அக்கறை ஜாஸ்தி இல்லையா மச்சான்?"

"ஆமாம் சுந்தரம். ஞாயித்துக் கிழமைகூட ஊர் மிளாவைத் தேடி வந்து விடுவான். லட்சுமணன் மகனைத்

தூக்கினால் கீழே இறக்கிவிட மாட்டான். அவ்வளவு அன்பு.''

''அந்த அன்பும் பாசமும் என்னைக்கும் நிலைச்சிருக்கணும்னு ஆசைப்படறீங்களா மச்சான்.''

''நிலைக்காம எங்கே போகப் போகுது. நடேசன் சின்ன வயதிலிருந்தே லட்சுமணன் கூட சிநேகிதமா இருந்தவன், இப்ப ஊர்மிளாவுக்கும் சிநேகிதனா இருக்கான்.''

''எத்தனை நாளைக்கு இருக்க முடியும் மச்சான். நாளைக்கே அவனுக்கு கல்யாணம் காட்சின்னு நடந்தால் அவன் பெண்டாட்டி அவனைச் சொந்தம் கொண்டாட மாட்டாளா?''

தயாநிதி திகைத்தார். இவன் என்ன சொல்ல வருகிறான்.

''சுந்தரம் என்னை என்ன செய்யச் சொல்றேப்பா? அதுக்காக நடேசனுக்கு கல்யாணம் ஆக வேணாம்னு நினைக்க முடியுமா?''

''மச்சான் நான் இப்ப சொல்றதைக் கேட்டு அதிர்ச்சியாயிரக் கூடாது. எங்க அக்கா நடேசனுக்கு ஊர்மிளாவைக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்னு நினைக்குது. என்னைப் பெண் கேட்கச் சொல்லுது. அதைச் சொல்லத்தான் காலையிலேயே என் வீடு தேடி வந்திருந்தது.''

தயாநிதி வாயடைத்துப் போய் நின்றார். என்ன இது? பூகம்பம் கிளம்புகிறதே. அவருடைய மருமகளுக்கு மறுமணமா? உணர்வு தவிக்கையில் அறிவு இடித்தது. வாழ வேண்டிய இளம் வயதில் அவள் வாடி நிற்கலாமா? அவளது குழந்தையை தன் குழந்தையாக நினைக்கும் ஒருவனுடன் அவளைச் சேர்த்து வைத்தால் தான் என்ன?



நினைக்கும்போதே நெஞ்சில் அது லட்சுமணனின் குழந்தையாயிற்றே என்று மனம் பரிதவித்தது.

எங்கே போய் விடப் போகிறார்கள்? அவர் கண் முன் இந்த ஊரில் தானே இருக்கப் போகிறார்கள்? என்று அறிவு எடுத்துரைத்தது. இருப்பார்கள் ராமையா, சுப்புத் தாயின் மருமகளாகவும், பேரக் குழந்தையாகவும் அல்லவா இருப்பார்கள்? தயாநிதி, ஈஸ்வரியின் மருமகளாகவும் பேரக் குழந்தையாகவும் இருக்க மாட்டார்களே என்று உணர்வு குமுறியது.

உன் சுயநலம்தான் உனக்குப் பெரிதா? என்று அறிவு கேட்டது. அந்தப் பெண்ணின் மகிழ்ச்சிக்காக எதுவும் செய்வேன் என்றாயே. இவ்வளவுதானா உன் வாக்குறுதியின் தரம்? என்று இடித்துரைத்தது.

அந்த நேரம் பார்த்து மொட்டை மாடியில் அவர்கள் நின்று கொண்டிருப்பதை கவனிக்காமல் நடேசனும், ஊர்மிளாவும் அவர்களுக்கு நேர் கீழே பேசிக்கொண்டே நகர்ந்து வந்து நின்றனர். இப்போது கீழே நின்று கொண்டிருந்தவர்கள் பேசியது மாடியில் நின்று கொண்டிருந்த சுந்தரத்திற்கும் தயாநிதிக்கும் நன்றாகக் கேட்டது.

''யோசித்துப் பார் ஊர்மிளா. நான் சொல்வதுதான் சரியென்று உனக்கே புரியும்.''

''எனக்கு என்னவோ எனக்காகவும் பாலமுரளிக்காகவும் தான் நீங்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது.''

''அப்படி இருந்தால்தான் என்ன?''

''உங்கள் விருப்பம் என்றால் நான் மறுக்க மாட்டேன். எங்கள் மேல் கருணையென்றால் இது வேண்டாம்.''

''என்ன ஊர்மிளா இப்படிச் சொல்கிறாய். பாலமுரளி மேல் எனக்குப் பாசம் இருக்கக் கூடாதா? உங்களிருவரின் மேலும் எனக்கு அக்கறை இருக்கக் கூடாதா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை.''

''நீ எப்படியும் சொல்ல வேண்டாம். நான் சொல்வதற்கு சம்மதமா, இல்லையா?''

''நான் சம்மதம் சொன்னால் போதுமா?''

''வேறு யார் சொல்ல வேண்டும்?''

''சொல்ல வேண்டியவங்க சொல்லணும்.''

அவர்கள் சிரித்துக் கொண்டே பலராமனின் அருகே சென்றார்கள். பின்னர் அவனுடன் பேசிக் கொண்டே வீட்டுக்குள் சென்றார்கள். சுந்தரம் தயாநிதியைப் பார்த்தார். அவர் கண்கள் 'பார்த்தாயா' என்று வினவியது.

''இதை என்னன்னு சொல்றது சுந்தரம். நான் இப்படியெல்லாம் நினைச்சே பார்க்கலையே. இவங்க ரெண்டு பேரும் யதார்த்தமாப் பேசி பழகுறதா நினைச்சட்டேனே. கதை இப்படிப் போகுதே.''

''கலங்க ஒண்ணுமேயில்லை மச்சான். எங்க அக்கா என்கிட்ட கேட்டது மாதிரி நடேசன் ஊர்மிளா கிட்டக் கேட்டிருக்கணும். அதான் நான் சம்மதம் சொன்னால் போதுமா? பெரியவங்க சொல்ல வேணாமான்னு கேட்டுட்டுப் போகுது.''

''அதுக்குச் சம்மதம்தான் போல இருக்கே.''

''அதைத்தான் நாம ரெண்டு பேரும் நம்ம காதால் கேட்டோமே. அப்புறம் என்ன மச்சான் சந்தேகம்.''

தயாநிதி சிந்தனையுடன் கீழே வந்தார். ஈஸ்வரி இலைகளைப் போட்டு விட்டுச் சாப்பிடக் கூப்பிடவும். இருவரும் போய் மற்றவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டனர்.



சாப்பாடு முடிந்ததும் பலராமன் சொல்லிக் கொண்டு கிளம்ப தயாநிதி அவன் அருகே வந்தார்.

''பலராமா.. உங்க அப்பாவையும், அம்மாவையும் ஒரு எட்டு வந்து போகச் சொல்லுப்பா. மாமா முக்கியமான விசயம் பேசணும்ன்னு சொன்னார்ன்னு சொல்லு. நாளைக்கே வரச் சொல்லு.''

''சரிங்க மாமா'' என்றுபடி அவன் அனைவருக்கும் கையாட்டி விட்டு வண்டியைக் கிளப்பிச் சென்று விட்டான்.

ஊர்மிளா மகனுடன் ஓய்வெடுக்க மாடிக்குச் சென்று விட்டாள். நடேசனும், சுந்தரமும் அவர்களின் வீட்டிற்குச் சென்று விட்டனர். சுபத்ரா டி.வி.யில் படம் பார்த்துக் கொண்டிருந்தாள். தயாநிதி உள்ளறைக்குப் போனார். அங்கிருந்து குரல் கொடுத்தார்.

''ஈஸ்வரி இங்க வந்துட்டுப்போ.''

''என்னங்க.''

''ஈஸ்வரி... உன்கிட்டக் கொஞ்சம் பேசனும் இப்படி உட்காரு.''

ஈஸ்வரி உட்கார்ந்தாள். தயாநிதி விசயத்தைச் சொன்னார். அவள் பதைத்துப் போனாள்.

''என்னங்க என் தலையில கல்லைத் தூக்கிப் போட றீங்க.''

''பையனைப் பெத்தவ சுப்புத்தாயி. அவளே மறு கல்யாணம்கிறதைப் பெரிசா நினைக்காம நம்ம மருமகளைக் கட்டிக்க முன் வரும்போது நாம தடையா இருக்கலாமா.. நீயே சொல்லு.''

ஈஸ்வரியின் உள்ளம் குமுறியது. 'அதற்காக?' என்று கேள்வி கேட்டது. மருமகளையும் பேரனையும் விட்டுத் தர விரும்பாமல் முரண்டியது.




சிறு குழந்தைகபோல் மல்லுக்கட்டிய மனைவியை வழிக்குக் கொண்டு வர அவர் முயற்சி செய்து கொண்டிருந்தபோது கலைமதியும் சாந்தாவும் அங்கே வந்தனர். ஈஸ்வரி பொங்கி வரும் அழுகையை முந்தானையால் வாயடைத்துக் கட்டுப்படுத்திக் கொண்டு அவர்களைப் பார்த்து வரவேற்கும் பாவனையில் தலை அசைத்தாள். சாந்தாவின் கூர்விழிகள் நிலைமையைக் கண்டு பிடித்து விட்டன. கணவனிடம் ஜாடை காட்டினாள். அவர் அண்ணனைப் பார்த்தார். தயாநிதி துண்டை எடுத்து அடிக்கடி முகத்தைத் துடைத்துக் கொள்வதைக் கண்டு இரக்கப்பட்டவர், "சுந்தரம் வந்தானா அண்ணே" என்று கேட்டு விட்டார், தயாநிதி தம்பியை ஆழமாய் நோக்கி.

"அவன் எதுக்கு வந்தான்னு தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும்ண்ணே. என்னிடம் சொல்லி விட்டுத்தான் வந்தான்" என்றார் கலைமதி சங்கடத்துடன்.

இப்போது ஈஸ்வரி பொங்கி அழுக ஆரம்பித்து விட்டாள். சாந்தா அவசரமாய் அறைக்கதவை அடைத்து விட்டு வந்தாள். ஈஸ்வரியின் கரம் பிடித்து ஆறுதல் கூறினாள்.



"அக்கா இங்க பாரு. அழுது என்ன ஆகப் போகுது. அழுகையை நிப்பாட்டு."

"எனக்கு மனசு தாங்கலையே சாந்தா. என் பேரன் முகத்திலதானே என் லட்சுமணன் முகத்தைப் பார்த்துக்கிட்டு இருக்கேன். ஆண்டவன் அதற்கும் வழிவிட மாட்டாரா?"

சாந்தா மௌனம் சாதித்தாள். கலைமதி அண்ணனிடம் வினவினார்.

"நீங்க சுந்தரத்துக்கு என்ன பதில் சொன்னீங்க அண்ணே."

"நான் என்னத்தைச் சொல்றதுன்னு நீயே சொல்லு. பையனைப் பெத்தவங்க தயங்காம பொண்ணு கேட்கும் போது நாம என்ன செய்யறது?"

"ஊர்மிளாவோட மனசில் என்ன இருக்கோ. அதைக் கேட்காமல் எதையும் முடிவு பண்ணிடாதீங்க மாமா" சாந்தா கூறினாள்.

"அதுக்கும் சம்மதம் இருக்கும்போலத் தெரியுதேம்மா."

"என்னது" என்று மற்ற மூவரும் ஒரே குரலில் கேட்க தயாநிதி, தானும் சுந்தரமும் மொட்டை மாடியில் நின்று கொண்டு இருந்தபோது கீழே நடேசனும், ஊர்மிளாவும் பேசிக் கொண்டிருந்ததை விவரித்தார். ஈஸ்வரியின் அழுகை நின்று விட்டது.

"என்னால் நம்பவே முடியலையே" சாந்தா ஆச்சர்யத்துடன் கூறினாள்.

ஈஸ்வரி எதுவும் பேசவில்லை. முகத்தை துடைத்துக் கொண்டாள். அவளது முகம் இப்போது தெளிவடைந்திருந்தது. கணவரைப் பார்த்தாள்.

"அதனாலதான் பலராமனிடம் ஊர்மிளாவோட பெத்தவங்களை வரச் சொல்லி விட்டீங்களா?"

"ஆமாம் ஈஸ்வரி. நாளைக்கு அவங்க வந்ததும் அவங்ககிட்டயும் ஒரு வார்த்தை கேட்டு விடலாம். பெத்தவங்க இல்லையா?"

"சரி. வரட்டும் பேசி ஒரு முடிவுக்கு வாங்க."

ஈஸ்வரியின் திடீர் அமைதியும் மாற்றமும் சாந்தாவை கவலை கொள்ளச் செய்தது. பெண் மனம் பெண்ணறியும்.

"அக்கா உங்களுக்கு இதில் சம்மதமா?"

"மருமகளே சரின்னு சொல்லியிருக்கு. அதுவும் நடேசன் கிட்டவே சொல்லியிருக்கு. இனிமே நான் பேச என்ன இருக்கு சாந்தா? அதுக்கு இதுதான் சரின்னு பட்ட பின்னால் நாம பெரியவங்களா இருந்து செய்ய வேண்டியதைச் செய்து விடலாம்."

அவள் எழுந்து சென்று விட்டாள். அந்த வினாடியிலிருந்து ஈஸ்வரி அதிகம் பேசவே இல்லை. தன் போக்கில் வீட்டு வேலைகளைக் கவனித்தாள். மகளும், மருமகளும் கேட்பதற்கெல்லாம் 'உண்டு, இல்லை' யென்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள். பேரனை மட்டும் தன்னோடு வைத்துக் கொண்டாள். ஊர்மிளா இது எதையும் அறியாதவளாய் வளைய வந்தாள்.

தாடிக் கொம்பில் பலராமன் போய் சேர்ந்ததும் சத்தியவதியும் ஜனார்த்தனமும் வழக்கப்படி மகளைப் பற்றி விசாரித்தனர். பேரனைப் பற்றிக் கேட்டு மகிழ்ந்தனர்.

"பாலமுரளி எவ்வளவு சேட்டை பண்ணுகிறான் தெரியுமா? கைக்குள் அடங்கி இருக்க மாட்டேன் என்கிறான்ம்மா. நடேசன் மாமா தூக்கினால் மட்டும் அவர்கிட்ட எவ்வளவு சமத்தா இருக்கிறான் தெரியுமா? எனக்கே மாமா



மேல் பொறாமை வந்திருச்சு. அவ்வளவு அட்டாச்மெண்ட்டா பாலமுரளி அவர்கிட்ட ஒட்டுகிறான்ம்மா."

"அந்தத் தம்பி அங்கேதான் இருந்துச்சா?"

"இல்லைம்மா. நான் போன பின்னால்தான் வந்தார். என்னைப் பார்த்ததும் எனக்காக நாள் பூராவும் அக்கா வீட்டிலேயே இருந்தார். அக்காவும், அவரும் குட் பிரெண்ட்ஸ் தெரியுமா?"

"அப்படியா... ஊர்மிளாவின் மாமனார் மாமியார் நல்லா இருக்காங்களா?"

"ம்ம்... அப்பா, உங்களையும், அம்மாவையும் மாமா நாளைக்கு மேலக்காலுக்கு வரச் சொன்னார். ஏதோ முக்கியமாய் பேசணுமாம்."

ஜனார்த்தனமும் சத்தியவதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"எதற்குன்னு சொன்னாராடா?" ஜனார்த்தனம் வினவினார்.

"இல்லைப்பா. ஆனால் கட்டாயம் உங்களை வரச் சொன்னார்."

அதற்கப்புறமும் வெகுநேரம் நடேசனைப் பற்றியே பேசிக் கொண்டு இருந்துவிட்டு பலராமன் தூங்கிவிட சத்தியவதியும், ஜனார்த்தனமும் மறுநாள் மேலக்கால் போவதற்கான வேலைகளைச் செய்து விட்டுத் தூங்கினார்கள்.

மறுநாள் மகனிடம் வீட்டையும், தோட்டத்தையும், மாடுகளையும் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கிளம்பிச் சென்றனர்.

"வாங்க மச்சான். வாம்மா சத்தியவதி" என்று சுரத்தில்லாமல் வரவேற்றார் தயாநிதி. ஈஸ்வரி அதைக் கூட வாய் விட்டுச் சொல்லவில்லை.

மௌனமாய் தலையை மட்டும் வரவேற்கும் விதமாய் ஆட்டினாள்.

'என்னவோ நடந்திருக்கிறது' என்று புரிந்து விட்டது ஊர்மிளாவின் பெற்றோர்களுக்கு. சத்தியவதி வாங்கிக் கொண்டு போன பழங்களையும், பிஸ்கெட் வகையறாக்களையும் ஈஸ்வரியிடம் கொடுத்துவிட்டு,

''ஊர்மிளா வேலைக்குப் போய் விட்டாளா'' என்று விசாரித்தாள்.

''ம்ம்'' என்றாள் ஈஸ்வரி. ஜனார்த்தனத்தின் முகத்தை ஒரு தரம் பார்த்து விட்டு, ''பேரன் எங்கே?'' என்றாள் சத்தியவதி.

''தூங்கறான்'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டாள் ஈஸ்வரி.

'என்னவாக இருக்கும். மாமியார் மருமகள் சண்டையோ?' என்று குழம்பியவாறு இருவரும் தயாநிதியின் முகத்தைப் பார்த்தார்கள். அவர் தயக்கத்துடன், ''நம்ம நடேசனைத் தெரியுமில்லையா?'' என்று கேட்டார்.

ஜனார்த்தனத்தின் முகம் மலர்ந்தது.

''தெரியாமல் என்ன? பலராமன் விடிய விடியத் தூங்கவேயில்லை. நடேசன் புராணம்தான். நடேசனை அவ்வளவு பிடித்திருக்கு அவனுக்கு.''

உள்ளே காபிக் கலந்து கொண்டிருந்த ஈஸ்வரியின் கண்கள் கலங்கின. மௌனமாக காபியை தம்ளர்களில் ஊற்றி எடுத்து வந்து கொடுத்தாள்.

''மதினி ஏன் என்னமோ மாதிரி இருக்காங்க அண்ணே'' தாள மாட்டாமல் சத்தியவதி வினவினாள்.

தயாநிதி மனைவியை ஏறிட்டார். அவள் பதில் சொல்லாமல் உள்ளே போகத் திரும்ப தயாநிதி ''ஈஸ்வரி'' என்று



கடினமாக அழைத்தார். நின்று திரும்பிப் பார்த்தாள் அவள்.

''இப்படி வந்து உட்காரு.''

பேசாமல் அவள் வந்து உட்கார்ந்தாள். ஜனார்த்தனம் புரியாமல் விழிக்க,

''மச்சான் நடேசனோட அம்மா பொண்ணு கேட்கிறாங்க?'' என்று படாரென்று சொல்லி விட்டார்.

''யாருக்கு பொண்ணு கேட்கிறாங்க?''

''நடேசனுக்குத்தான்.''

''யாரை?'' புரியாமல் கேட்டார்கள் இருவரும். தயாநிதி விட்டத்தைப் பார்த்துக் கொண்டே பதில் கூறினார்.

''உங்க பெண் ஊர்மிளாவை.''

''என்னது.''

ஜனார்த்தனத்திற்கும் சத்தியவதிக்கும் நம்பவே முடியவில்லை. நடேசன் அவன் வீட்டிற்கு ஒரே மகன். அவனுக்கு எப்படி மறுமணம் செய்யும் பெண்ணை அதுவும் குழந்தையுடன் இருக்கும் பெண்ணை மணம் முடிக்க விரும்புகிறார்கள்?

ஈஸ்வரியின் பாராமுகத்திற்கு பொருள் விளங்கியது அவர்களுக்கு.




ஜனார்த்தனத்திற்கும் சத்தியவதிக்கும் மறுப்பேதும் இல்லை என்று தெரிந்தவுடன் மனம் உடைந்து போனாள்

ஈஸ்வரி. அதை அறியாதவர்களாய் அவர்கள் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அவங்க உங்ககிட்ட நேரா வந்து பொண்ணு கேட்டாங்களா அண்ணே."

"இல்லம்மா. நம்ம செவ்வந்தியோட புருசன் தான் நடேசனோட தாய் மாமன். அவன்தான் வந்து அவங்க பெண் கேட்டதாச் சொன்னான்."

"நம்ம ஊர்மிளா கிட்ட சம்மதம் கேட்டிங்களா. இல்லை நாங்க பேசி சம்மதம் வாங்கணுமா?"

ஈஸ்வரியின் விழிகளில் ஏளனம் தெரிந்தது. தயாநிதி விழியால் மனைவியை எச்சரித்தவாறு,

"அவங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டப்போ."

"யாரு ரெண்டு பேரும் அண்ணே..."

"நடேசனும், ஊர்மிளாவும்மா."

"ஓகோ அவங்க என்ன பேசிக்கிட்டாங்க."

தயாநிதி சொன்னார். சத்தியவதியின் முகத்தில் நிம்மதி வந்தது. சற்று நேரத்தில் அவர்கள் வந்திருக்கும் செய்தி அறிந்து செவ்வந்தியும் சுந்தரமும் முதலில் வந்தனர். கலைமதியும் சாந்தாவும் பின்னால் வந்தனர்.

"எப்போ வந்தீங்க மதினி." சாந்தா சம்பிரதாயமாய் கேட்டாள்.

"இப்பத்தான் வந்தோம். அண்ணன் நல்ல செய்தி சொல்றாரு. செவ்வந்தியோட வீட்டுக்காரர்தான் இந்தப் பேச்சை ஆரம்பித்து வைத்தாராமே." என்று சாந்தாவிடம் பேச்சை ஆரம்பித்து செவ்வந்தியின் முகத்தைப் பார்த்து சத்தியவதி பேசி முடிக்க செவ்வந்தி முகத்தில் எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் சிலை போல் நின்றாள்.



ராமையா, சுப்புத்தாய் இருவரையும் சுந்தரம் அழைத்து வர எல்லோரும் கலந்து பேசினார்கள். மாலை நெருங்கியது.

"இப்ப நடேசனும் ஊர்மிளாவும் வந்திருவாங்க. நாம பேசி முடிவு பண்ணிட்டோம்ங்கிறத அவங்ககிட்ட சொல்லிடலாம்' என்றார் தயாநிதி. சாந்தாவையும், செவ்வந்தியையும் தவிர மற்றவர்கள் ஆமோதித்தனர். ஈஸ்வரியும் சுபத்ராவும் இடிவிழுந்தது போல் இடிந்து போய் அமர்ந்து இருந்தனர். வாசலில் கார் சத்தம் கேட்டது. நடேசன் ஏதோ சொல்ல ஊர்மிளா சிரித்தபடி உள்ளே வந்தாள். பெற்றோரைக் கண்டதும்,

"அம்மா, அப்பா எப்ப வந்தீங்க" என்று முகம் மலர அவர்களிடம் சென்றாள். பின்னாலேயே தொடர்ந்து வந்த நடேசன் தன் பெற்றோரைக் கண்டதும் வியந்தான்.

"என்னப்பா.. நீங்களும் அம்மாவும் இங்கே இருக்கீங்க. ஏதும் விசேஷமா? எல்லோரும் கூடிப் பேசிக்கிட்டு இருக்கீங்களே."

"எல்லாம் உன் கல்யாண விஷயம்தாம்ப்பா" என்றார் ராமையா.

"என் கல்யாணமா.. ஊர்மிளா உங்ககிட்ட சொல்லிட்டாளா?" என்று ஊர்மிளாவை செல்லமாய் அவன் முறைக்க அவள் கலகலவென்று சிரித்தபடி மறுத்தாள்.

"ஐயோ. நான் ஒன்றும் சொல்லலைப்பா. இவங்களுக்கே விசயம் தெரிந்து பேசுகிறார்களோ என்னவோ."

"அம்மா. நான் உன்னிடம் சொல்லணும்னு நினைச்சேன். நான் ரொம்ப நாளாவே..." என்று தாயிடம் நடேசன் மென்று விழுங்க,

''காதலிக்கிறார்'' என்று சிரித்தாள் ஊர்மிளா.

அங்கே பெரியவர்களிடம் தர்ம சங்கடமான மௌனம் நிலவியது. ஊர்மிளா அதைக் கவனத்தில் போட்டுக் கொள்ளாமல் தொடர்ந்தாள்.

''அத்தை. உங்க மகனை நீங்க கவனிக்கிறதே இல்லை. அவர் எவ்வளவு நாளா சின்சியரா காதலிக்கிறேன்னு பினாத்திக்கிட்டு இருக்கார் தெரியுமா? நீங்க மட்டும் கவனிச்சிருந்தால் எப்பவோ கல்யாணப் பேச்சை ஆரம்பித்திருப்பீங்க. இப்ப மட்டும் எப்படித் தெரிந்தது அத்தை.''

ஊர்மிளா சுப்புத் தாயிடம் உற்சாகமாய் வினவ அவள் புன்னகைத்தாள்.

''எல்லாம் ஓர் யூகம்தான்ம்மா. நீ என் மகனைக் கவனிச்சுக்குவங்கிற நம்பிக்கையில்தான் இந்தப் பேச்சை ஆரம்பித்தேன்ம்மா.''

''இது என்ன அத்தை இப்படிச் சொல்லிட்டீங்க. உங்க மகன் எனக்கும் என் மகனுக்கும் எவ்வளவோ செய்திருக்கார். பதிலுக்கு அவரை நல்ல முறையில் கவனிக்க மாட்டேனா என்ன.''

தயாநிதி தொண்டையைச் செறுமிக் கொண்டார்.

''அப்போ கல்யாணத்துக்கு நாள் குறிச்சிரலாமா?''

மற்றவர்கள் தலை அசைக்க ஊர்மிளா வினவினாள்.

''பொண்ணைப் பார்க்காமல் பொண்ணு வீட்டுக்காரங்களைக் கேட்காமல் நீங்களாவே நாள் குறிப்பதா?''

சுப்புத்தாய் புரியாமல் விழித்தாள்.

''பொண்ணு பார்க்கிறதா? அதுதான் நீ இருக்கிறயேம்மா?''



''நான் பார்த்தால் மட்டும் போதுமா அத்தை. நீங்களும் பார்க்க வேண்டாமா? என் மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கைக்கு ரொம்ப நன்றி அத்தை. ஆனால் நீங்கள், மாமா ரெண்டு பேரும் வரப்போகிற மருமகளை ஒரு தடவைப் பார்த்துவிட்டு அப்புறம் அவங்க அப்பாம்மாகிட்டப் பேசி நாள் குறித்து விடறது நல்லது அத்தை.''

ஊர்மிளா பேசப்பேச செவ்வந்தியின் முகம் ஒளிர்ந்தது. சாந்தாவின் முகத்தில் கறுமை மாறியது. ஈஸ்வரி நிமிர்ந்து உட்கார்ந்தாள். சுபத்ரா தன் அண்ணியின் முகத்தை அன்புடன் பார்த்தாள். மற்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். நடேசன் வெட்கத்துடன் வாசலைப் பார்த்தான். செவ்வந்தி சாந்தாவை ஓர் தரம் பார்த்துக் கொண்டு வாய் திறந்தாள். அவளது ஒவ்வொரு வார்த்தையும் மிகக் கவனமாக வெளிவந்தது.

''ஊர்மிளா நடேசனுக்கு வரப்போகிற பொண்ணு நல்லவளா இருக்கணும்னு தான் நாங்க எல்லோரும் ஆசைப்படறோம். உன்னை மாதிரி படிச்ச பெண்ணா அழகும், அறிவும் இருக்கிற பொண்ணா இருக்கணும்னுதான் நாங்க கேட்கிறோம்.''

ஊர்மிளாவைத்தான் மணப்பெண் என்று அவள் குறிப்பிடவில்லை. ஆனால் ஊர்மிளாவைத் தவிர வேறு ஒரு பெண் என்றும் அவள் தெரிவிக்கவில்லை. உண்மை அறியாமல் வாய் விட அவள் தயாராக இல்லை.

செவ்வந்தி கெட்டிக்காரி. ஒரு வகையில் ஆழ்ந்த அறிவாளி. மனிதரை எடை போடுவதில் அவள் கணக்கீடு என்றுமே பிசகியதில்லை. ஊர்மிளா லட்சுமணனை மறந்து இன்னொரு ஆணை கனவில் கூட நினைத்துப் பார்க்க மாட்டாள் என்பது அவளது அனுமானம்.

அதே நேரத்தில் நடேசன் சம்மதம் கேட்க ஊர்மிளா 'நான் சம்மதித்தால் போதுமா' என்று கூறியிருக்கிறாள். அது ஏன்? எதற்கு? என்ற கேள்விக்கு தெளிவான விடை கிடைக்கவில்லை.

இவை எல்லாவற்றிற்கும் விடை அளிக்க முடிவு கட்ட ஊர்மிளாவாலும், நடேசனாலும் மட்டுமே முடியும். எனவே இனியும் அமைதி காக்காமல், வாய்திறந்து ஊர்மிளாவின் வாயைத் திறக்க வைப்பதே உசிதம் என்று செவ்வந்தி முடிவெடுத்து செயல்படுத்த ஆரம்பித்தாள்.

செவ்வந்தி மிகச் சாதுர்யமாய் உரையாடினாள். இரண்டு தரப்பிற்கும் பொதுவானதாக ஒவ்வொருவருக்கும் சார்புடையதாக தோன்றும் வகையில் அவள் பேசினாள். ஊர்மிளா இலகுவாகப் பதில் கொடுத்தாள்.

"இது என்ன சித்தி இப்படிக் கேட்கறீங்க. நடேசனுடைய நல்ல மனத்திற்கு என்னைவிட பெட்டரான பொண்ணே கிடைச்சிருக்கே."

செவ்வந்தி எல்லோரையும் 'அட முட்டாள்களா' என்று ஓர் பார்வை பார்த்தாள். ராமையா, சுப்புத்தாய் இருவரின் முகத்திலும் குழப்பம் நிலவியது. ஜனார்த்தனம், சத்தியவதியின் முகங்களில் ஏமாற்றம் தென்பட்டது. தயாநிதி, ஈஸ்வரி ஆகியோரின் முகங்களில் நிம்மதி கலந்த பரவசம் தோன்றியது. கலைமதி, சுந்தரம் இருவரின் முகத்திலும் வியப்பு உதயமானது.

முகம் மாறாமல், இதுதான் நடக்கும் என்பதை அறிந்தவர்களாய் சாந்தாவும், செவ்வந்தியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஊர்மிளாவிற்கும் நடேசனுக்கும் உற்சாகம் மட்டுமே இருந்தது.





## 20

ஏதையுமே நேரில் கேட்டுத் தெளிவு படுத்திவிடும். 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' வழக்கமுடைய செவ்வந்தி ஒரு பண்பான பெண்ணின் வாழ்க்கைப் பிரச்னையில் மிக அமைதியாக இருந்தாள். எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற செயல்பாடு இந்த விசயத்தில் சரி வராது என்பதில் மிகவும் தெளிவாக இருந்தாள். மற்றவர்களின் ஆர்ப்பாட்டம் அவளுக்கு கவலையை அளித்தது. அதே சமயம் திருமணம் முடிந்து பதினைந்து தினங்கள் மட்டுமே கணவனோடு வாழ்ந்த சிறு பெண்ணிற்கு மறுவாழ்வு கிடைக்க விடாமல் செய்து விட்டாளென்ற பழி தன் மீது விழுந்து விடும் அபாயம் இருந்ததால் எந்தவிதமான அபிப்ராயத்தையும் கூறி விடாமல் மௌனித்தாள்.

ஊர்மிளாவின் பெற்றோர் மகிழ்ச்சியடைவதில் நியாயம் உள்ளது. சுந்தரமும், கலைமதியும் இரக்கம் கொள்வதில் மனிதாபிமானம் உள்ளது. தயாநிதியும், ஈஸ்வரியும் விட்டுக் கொடுப்பதில் கடமை உள்ளது. ஆனால் இவை யாவுமே எப்போது செல்லுபடியாகும்? ஊர்மிளா உண்மையிலேயே மறு வாழ்வை விரும்பினால் மட்டுமே செல்லுபடியாகும். மறுமணத்தை விரும்பாத பெண்ணின் மனதை எந்தவித ஆசைகளும் இல்லாதபோது அவளை இரக்கத்தின் பெயரில் வற்புறுத்துவது நிர்ப்பந்தமாகாதா?

செவ்வந்தியின் நிதானமான ஆனால் புத்திசாலித்தனமான அணுகுமுறைக்கு வெற்றி கிடைத்து விட்டது. ஊர்மிளாவும், நடேசனும் மடைதிறந்த வெள்ளமாகப் பேச ஆரம்பித்து விட்டனர்.

''அத்தை. எங்கள் ஆபிசில் வேலை பார்க்கும் அபிராமிக்கு நடேசன் மேல் காதல். சாருக்கும் அப்படித்தான்'' நடேசனைப் பார்த்து குறும்பாக நகைத்தபடி பேசினாள் ஊர்மிளா.

''ஏய்.. நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை. உன் பிரண்ட் தான் உருகி வழிந்தாள்'' என்றான் நடேசன்.

''ஓஹோ அப்படியா.. மதியம் தனியாகச் சாப்பிடுவீர்கள். இந்த இரண்டு மாதங்களாக ஏன் எங்களுடன் சாப்பிட வந்தீர்களாம்.''

''அது வந்து.. சும்மா பேசிக்கிட்டே சாப்பிடலாம்ன்னு..''

''அது சரிதான்... யார் கூட பேசிக்கிட்டு சாப்பிட வந்தீங்க.''

''ஏன் உன்னுடன் பேசிக்கிட்டு சாப்பிடலாம்ன்னு தான்.''

''காரில் போகும் போதும் வரும் போதும் பேசிக் கொள்கிறோம். அப்புறம் நீங்கள் வீட்டிற்கு வரும்போது பேசுகிறோம்.''

''இப்போ என்ன சொல்ல வருகிறாய்...?''

''நீங்கள் உண்மையை ஒத்துக் கொள்ளனும்னு சொல்கிறேன்.''

''ஓ.கே... அம்மா, அப்பா நான் அபிராமிங்கிற பெண்ணைக் காதலிக்கிறேன். அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன். சொல்லிட்டேன் போதுமா...'' நடேசன் சிரிக்க ஊர்மிளாவும் இணைந்து நகைத்தாள்.

ஊர்மிளாவின் பெற்றோர் முகத்திலும் நடேசனின் பெற்றோர் முகத்திலும் ஈ ஆடவில்லை. பிரமித்துப் போய் அமர்ந்திருந்தனர். தியாநிதிக்கும் சுந்தரத்திற்கும் மட்டும்



அன்று கேட்ட உரையாடல் நினைவு வந்தது. அதில் பேசப் பட்ட விசயங்கள் பொய்யா? அடுத்து ஊர்மிளாவும், நடேசனும் பேசிய பேச்சுக்கள் அந்த மர்மத்தையும் உடைத்தன.

''அத்தை ஆக்சுவலா அபிராமி தன் விருப்பத்தைச் சொல்லி ஆறு மாதங்களாகிறது. உங்கள் மகன்தான் சரி கொடுக்கவில்லை. நான்தான் கரைப்பாய் கரைத்து ஒரு வழிக்குக் கொண்டு வந்தேன்.''

''காதல் எல்லாம் நம் குடும்பத்தில் பழக்கமில்லை ஊர்மிளா. அவள் திடீரென்று சொல்லி விட்டாள். எனக்கு யோசிக்க அவகாசம் வேண்டாமா?''

''நல்லா யோசிச்சீங்க போங்க. நாலு மாதம் கழித்து இரண்டு மாதங்களுக்கு முன்னால்தான் பதிலுக்கு ஐ லவ் யூன்னு சொல்லியிருக்கீங்க.''

''ஊர்மிளா. அப்பா அம்மா முன்னால் மானத்தை வாங்காதே.''

''அது எப்படி. அவர்களுக்கும் எல்லாம் தெரிய வேண்டாமா? நீங்க கேளுங்க அத்தை. இந்த இரண்டு மாதங்களாக கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லாமல் இழுத்தடிச்சார்.''

''எனக்கென்று சில நிபந்தனைகள் இருக்காதா?''

''என்ன நிபந்தனை? மதுரையிலே பிறந்து வளர்ந்தவளை மேலக்காலில்தான் இருக்க வேண்டுமென்று நீங்கள் போடும் நிபந்தனை. அவள் வீட்டுக்கு ஒரே பெண். அவள் பெயரில் ஒன்றுக்கு நான்கு வீடுகள் மதுரையில் இருக்கின்றன...''

ஊர்மிளா பேசிக் கொண்டிருக்க இந்த விசயத்தைக் கேட்டதும் நடேசனின் பெற்றோர் முகத்தில் பல்ப் எரிந்தது.

'அவ்வளவு பெரிய இடத்துப் பெண்ணா நடேசனுக்கு கிடைத்திருக்கிறாள்' என்ற சந்தோசம் பொங்க ராமையா கூறினார்.

"ஏன்ப்பா ஊர்மிளா சொல்வதும் சரிதானே. மதுரையில் ஒன்னுக்கு நாலு வீடு இருக்கிறப்போ இந்தப் பட்டிக் காட்டில் வந்து இருக்கச் சொல்லி அந்தப் புள்ளையை ஏன் கஷ்டப்படுத்தறே?"

ஜனார்த்தனமும், சத்தியதியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். 'மனிதர்கள் வினாடி நேரத் திற்குள் எப்படி மாறி விடுகிறார்கள்?' என்ற அங்கலாய்ப்பு அதில் இருந்தது.

தயாநிதிக்கு சங்கடமாய் இருந்தது. சரியாக விசாரிக் காமல் தாடிக் கொம்பிலிருந்து அவர்களை வரவழைத்து தவறு இழைத்து விட்டதாக அவரது மனச்சாட்சி உறுத்த ஆரம்பித்தது.

ஆனால் இன்னும் ஏன் அவர்கள் அப்படிப் பேசிக் கொண்டார்கள் என்பதற்கு விடை கிடைக்கவில்லையே.

"அப்பா.. மேலக்காலை விட்டுவிட்டு என்னால் போக முடியாது" எனறான் நடேசன் தீவிரமான முகத்துடன்.

"எங்கே போகப் போகிறாய். இந்தா இருக்கிற மதுரைக் குப் போகப் போகிறாய்."

"மாமா... எனக்கு என்னவோ என்மேல் இருக்கிற அக்கறையினால்தான் அவர் மதுரைக்குப் போக மாட் டேன் என்கிறார் என்று தோன்றியது" ஊர்மிளா மெதுவான குரலில் கூறினாள்.

அங்கு ஒரு வினாடி அமைதி நிலவியது. நடேசன் அதைக் கலைத்தான்.



"அக்கறை இருந்தால் தப்பில்லை ஊர்மிளா. நீ என் தங்கையைப் போல லட்சுமணன் போருக்குப் போவதற்கு முன் என்னிடம் நான் வரும்வரை ஊர்மிளாவிற்கு பாதுகாவலாக இரு என்று சொல்லிவிட்டுச் சென்றான். நான் அவனுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்."

ஊர்மிளாவின் சிரிப்பு மறைந்து முகத்தில் சோகம் கவிழ்ந்தது.

"உங்களால் முடிந்தவரை பாதுகாப்பு கொடுத்து விட்டீர்கள். எனக்கு அண்ணன் இல்லை. தம்பி சிறு வயது. என் பெற்றவர்களின் ஊருக்குப் போவதில்லை யென்று இருக்கிறேன். அத்தை, மாமா வயதில் பெரிய வர்கள். சுபத்ரா சிறு பெண். என்னைக் காக்க ஓர் அண் ணன் போல் என்றும் இருந்தீர்கள். பால முரளியை உங்கள் தோளில் சுமந்து வளர்க்கிறீர்கள். இது போதும். இனி உங்களுக்கு என்று ஒருத்தி வந்தால் அவளுக்கு மட்டும் நீங்கள் சொந்தமாக இருக்க வேண்டும். அதுதான் நியாயமும் கூட இதை நான் சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறீர்களே."

"இதையே எத்தனை முறை சொல்வாய் ஊர்மிளா. நான் அபிராமியைக் காதலிக்கிறேன். அவளும் என்னை உண்மையாகக் காதலித்தால் என் உணர்வுகளையும் ஏற்றுக் கொளவாள். மதிப்பாள். கல்யாணம் செய்து கொண்டால் கடமையிலிருந்து தவற வேண்டுமா? நீ என் கூடப் பிறந்த தங்கையாக இருந்திருந்தால் உன்னையும், பால முரளியையும் காக்கும் கடமையிலிருந்து என்னை விலகச் சொல்வாயா? உங்கள் இருவருக்காகவும் நான் என் சம்பளத்தை செலவழிக்கிறேனா? சொத்தைக் கொடுக் கிறேனா? என் நேரத்தை செலவழிக்கிறேன். என் பாசத்தைக்

கொடுக்கிறேன். அதை தடை செய்ய உனக்கு உரிமையில்லை ஊர்மிளா.''

ஈஸ்வரி பொங்கி அழுதாள். ஊர்மிளா பதறி எழுந்து தன் மாமியாரின் அருகே போக தன் மருமகளைக் கட்டிக் கொண்டு அவள் முகம் பார்த்து, ''என் தெய்வமே ராஜாத்தி... உன் காலடி மண்ணை எடுத்து என் நெற்றியில் இட்டுக் கொண்டாலும் என் பாவம் போகுமா'' என்று அழுதாள்.

என்றும் போல் தனது நிலையை எண்ணித்தான் தன் மாமியார் அழுகிறாள் என்றே ஊர்மிளா நினைத்துக் கொண்டாள். மூன்று நாள்களாக அவள் மனதில் இருந்த கசடு மறைந்து அழுகிறாள் என்பதை பாவம் அவள் அறியவில்லை.



வழக்கம்போல் முதலில் சுதாரித்துக் கொண்டவள் செவ்வந்திதான். ஆளுக்கு ஒரு நினைவில் அனைவரும் உறைந்து போயிருக்க ஒரு அதட்டல் போட்டு சூழ்நிலையைச் சீராக்கினாள்.

''ஐயையே. என்ன மதினி. எதுக்கு இந்த அழுகை அழுகறே. உனக்கு உன் பிள்ளை நினைப்பு வந்திட்டால் போதுமே. நிலை கொள்ள மாட்டியே. அதுதான் உன் பிள்ளைக்குப் பிள்ளையா உன் மருமகள் இருக்கிறாளே. தங்கம் போல் உன் பேரன் இருக்கிறானே. அப்புறம் உனக்கு என்ன குறை? அழுகையை நிப்பாட்டு. அட கண்ணைத் துடைச்சுக்க மதினி.''



ஈஸ்வரி கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஊர்மிளாவின் தலையைப் பாசத்துடன் தடவி முத்தமிட்டாள். மனதின் பாரம் மறைய என்றும் தன் மருமகளும், பேரனும் தன்னை விட்டுப் போக மாட்டார்கள் என்ற உண்மை புரிந்தவளாய் நிம்மதியுடன் எழுந்தாள்.

''என்ன அக்கா. எல்லோரும் நடேசன் கல்யாணத்தைப் பத்திப் பேசிக்கிட்டு இருக்கோம். நீ மட்டும் எங்கே போற?'' என்றாள் சாந்தா.

''நடேசன் நம்ம வீட்டுப் பிள்ளை. அவன் கல்யாணச் செய்தியைச் சொல்லி இருக்கிறான். ஒரு இனிப்புச் செய்து நிமிசமா கொண்டு வரேன்.''

ஈஸ்வரி சுறுசுறுப்பாய் சமையலறைக்குப் போக சுபத்ரா துள்ளிக் குதித்தபடி பின்னாலேயே ஓடினாள். சாந்தா செவ்வந்தியின் காதைக் கடித்தாள்.

''பாரு உன் பெரிய மதினி பதினாறு வயசுப் பொண்ணு மாதிரி சுறுசுறுன்னு போறதை. மூணு நாளா முகமே செத்துப் போயிருந்துச்சு. இப்ப புது ரத்தம் பாய்ஞ்சிருச்சில்ல.''

செவ்வந்தி முகவாயை தன் வழக்கப்படி தோள் பட்டையில் இடித்துக் கொண்டு பதில் கூறினாள்.

''மனுசரை புரிஞ்சிக்கணும். மூணு வருசமா ஒரே வீட்டில் குடித்தனம் பண்ணி என்ன பிரயோசனம். சொந்த மருமக குணம் பிடிபடலே. இந்த மதினிக்கு வயசாகி என்ன பிரயோசனம்?''

''அது சரி செவ்வந்தி. நான் கேட்கணுமுன்னு இருந்தேன். நீ வாயைத் திறக்காமல் இருந்தியே. உனக்கு இப்படித்தான் கதை இருக்குமுன்னு ஏற்கனவே தெரியுமா?''

''நானும் தெரியாமத்தான் கேட்கிறேன். நான் மட்டுமா வாயைத் திறக்காமல் இருந்தேன். நீயும்தான் கம்முன்னு இருந்தே. உனக்கு மட்டும் தெரியுமா?''

''நிச்சயமாய் தெரியாது. ஆனால் ஊர்மிளாவும் லட்சுமணனும் ஒருத்தர் மேல ஒருத்தர் உயிரை வைச்சிருந்தாங்கன்னு தெரியும். லட்சுமணன் இல்லைன்னதும் சாகப் போன பொண்ணு ஊர்மிளா. பிள்ளைக்காக வாழ்கிற பொண்ணு. அதுகிட்ட போய் ஏடாகூடமா ஏதாச்சும் கேட்டிருந்தா அது மனசு என்ன பாடுபடும்? இப்பப் பாரு. அவங்க ரெண்டு பேரும் அண்ணன் தங்கச்சியா பழகி இருக்காங்க. அவசரப்பட்டு இதுக ஏதாவது பேசித் தொலைச்சிருந்தா கதை கந்தலாகியிருக்கும்.''

''அதைச் சொல்லு. இதுக வாயைத் திறக்க விடக் கூடாதுன்னுதான் நான் ஆளாப் பறந்து வந்தேன்.''

இவர்கள் இங்கு முணுமுணுத்துக் கொண்டிருக்க ஆண்கள் பக்கம் சுந்தரம் தயாநிதியிடம் தாழ்ந்த குரலில் கூறினார்.

''பனை மரத்துக்குக் கீழே நின்று பாலைக் குடிச்சாலும் கள்ளைக் குடிச்சதா நினைக்கிற புத்தி நமக்குக் கூட வந்திருச்சே மச்சான்.''

''காமாலைக் கண் கொண்டவனுக்கு பார்க்கிறதெல்லாம் மஞ்சளாத்தானே தெரியும் சுந்தரம். நாம ஒரே நினைப்பா நடேசனையும், ஊர்மிளாவையும் சேர்த்து வைச்சு நினைச்சோம். அதுக என்னன்னா அண்ணன், தங்கச்சியாய் பேசியிருக்குதுக. செவ்வந்தி சொன்ன மாதிரி இது எவ்வளவு பெரிய காலக்கொடுமை.''

ஜனார்த்தனம் மெதுவாய் நகர்ந்து சத்தியவதியின் அருகில் வந்தார்.



''நல்லவேளை. இவங்க பேசினதை நம்பி நாம வாயைத் திறக்கலை. நாம தெரியாத்தனமா பேசி வைச்சிருந்தால் என்ன ஆகறது? நம்ம மகள் ஏற்கனவே நம்ம வீட்டுக்கு வர மாட்டேன்னு இருக்கிறாள். நாம தப்பாப் பேசியிருந்தால் முகத்திலேயே முழிக்காதேன்னு சொல்லியிருப்பாள்.''

''சொல்லாதீங்க. நினைக்கும்போதே நெஞ்சம் பதறுது.''

ராமையாவோ, சுப்புத் தாயிடம் இவ்வாறு கிசுகிசுத்தார்.

''பாரு... இந்தக் காலத்து பிள்ளைக பழகுற விதத்தை. சிநேகிதன் பெண்டாட்டியைக் கூடப் பிறந்தவளா நம்ம மகன் நினைக்கிறான். புருசனோட சிநேகிதனுக்காக விழுந்து விழுந்து பொண்ணு தேடுது ஊர்மிளா பொண்ணு. ஒன்னும் ஒன்னும் ரெண்டுன்னு இதுக கூடிக் கூடிப் பேசறதைப் பார்த்திட்டு முடிவுக்கு வந்தாயே. இது இருபதாம் நூற்றாண்டுடி. ஒன்னும் ஒன்னும் நாலாக் கூட வரும்.''

''எது எப்படியோ. என் மகனுக்கு நான் நினைச்சபடியே படிச்ச அழகான பொண்ணு. அதுவும் சொத்து சுகத்தோட அமையப் போகுது.''

கலைமதிக்கு முணுமுணுக்க ஆள் கிடைக்காததால் சாந்தாவைப் பார்த்தார் அவளோ செவ்வந்தியுடன் திடீர் பாசப்பிணைப்பு ஏற்பட்டவளாக தீவிரமான பேச்சு வார்த்தையில் இருந்தாள். 'ஸ்ஸ்' என்று சப்தம் எழுப்பிப் பார்த்தார்.

'அடச்சே. ஒருத்தியைக் கண்டால் மற்றவளுக்கு ஆகாது. எப்போதும் ஒருவர் காலை ஒருவர் வாரி விடுவதில் குறியாய் இருப்பார்கள். இப்பப் பாரு. என்னவோ ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள் போல் பின்னிப்

பிணைந்து கொள்வதை' என்று மனதிற்குள் எரிச்சலுற்றவர் ஒரு சிறு காகிதத் துண்டை எடுத்து உருட்டித் தன் மனைவியின் மேல் விட்டு எறிந்தார். மேலே எதுவோ விழுகவும் 'சட்' என்று கூறிக் கொண்டே அதைத் தட்டி விட்டவள் திரும்பிப் பார்த்தாள். கலைமதி 'வா'வென்று கை அசைத்தார்.

''அடக் கடவுளே. எங்க சின்ன அண்ணனுக்கு காலம் போன கடைசியில் காதல் வந்திருக்கு பாரு. போ மதினி. போய் கொஞ்சிட்டு வா.''

செவ்வந்தி நொடித்துக் கொள்ள சாந்தா பெருமை பொங்க கணவரை காதல் பார்வை பார்த்துக் கொண்டு அவர் அருகில் போனாள். கலைமதியை அவளது காதல் பார்வை இம்சை செய்ய 'கருமம்' என்று மனதிற்குள் தலையில் அடித்துக் கொண்டார்.

''ஏண்டி இந்தப் பார்வை பார்க்கிற எருமை மாடே. அண்ணன் வீடுடி'' அவர் கிசுகிசுப்பாய் பேச அதே கிசுகிசுப்புக் குரலில் சாந்தா பதில் அளித்தாள்.

''தெரியுதில்ல. இங்க உட்கார்ந்துக்கிட்டு காகிதத் துண்டை மேல விட்டு எறிஞ்சு 'வா'ன்னு கூப்பிட்டது யாராம். நீங்கதானே.''

''அடச்சே. நேரம் காலமில்லாம எதையாவது பினாத்திக்கிட்டு. ஏன்டி இங்க நடக்கிற கூத்தைப் பார்த்தே இல்ல. உனக்கு மட்டும் இது நடக்காதுன்னு நிச்சயமாத் தெரிஞ்சிருக்கு. உனக்குத் தெரிஞ்ச அளவு கூட எனக்கு மனுசரோட தராதரம் தெரியாமல் போயிருச்சு பார்த்தியா. அதைச் சொல்லக் கூப்பிட்டா.''

''இதுல பெருமைப்பட ஒன்னுமேயில்லை. உங்க கண்ணுக்குத் தெரியாத விஷயம் பொம்பளைக எங்க கண்ணுக்குத் தெரிஞ்சுடும்.''



''ஏண்டி சமயம் கிடைச்சா எங்க மதினியை வாறுவ. அண்ணன் மேல ஆயிரம் குறை சொல்லுவ. அவங்க மருமகள் மேல மட்டும் உனக்கு எப்படி இவ்வளவு நல்ல அபிப்பிராயம் இருந்துச்சு.''

''அதென்ன நல்ல அபிப்ராயம். ஊர்மிளா மறுமணம் செஞ்சு இருந்தால் அவள் மேல் கெட்ட அபிப்ராயம் வந்திருக்குமா? அப்படியெல்லாமில்லை. விதவை மறுமணம் தப்பில்லை. ஆனால் ஊர்மிளா பண்ணிக்க மாட்டா. அவ்வளவுதான். அது எனக்குப் புரிஞ்சது. வாயைத் திறக்கலை.''

கலைமதிக்கு இப்போது உண்மையிலேயே சாந்தாவின் மேல் காதல் வந்து விட்டது. காதலாய் அவர் மனைவியைப் பார்க்க அவள் வெட்கிப் போனாள்.

'க்கும்' என்று கனைத்து சின்ன அண்ணனை இந்த உலகத்திற்கு கொண்டு வந்த செவ்வந்தி,

''நடேசன் கல்யாணப் பேச்சைத் தவிர எல்லாப் பேச்சையும் எல்லோரும் பேசியாகி விட்டது. காலக் கொடுமை'' என்றாள்.

தங்கையின் பேச்சை ரசித்துச் சிரித்தார் தயாநிதி. உள்ளேயிருந்து ஈஸ்வரி தயார் செய்த இனிப்பின் மணம் அவர்கள் நாசியில் ஏறியது. எல்லோரும் சாப்பிடத் தயாரானார்கள்.




செவ்வந்தியும் சாந்தாவும் ஒரு இடத்தில் ஒன்று கூடி விட்டால் போதும். எப்பேர்ப்பட்ட மன்னாதி மன்னரை

யும் மண்ணைக் கவ்வ வைத்து விடுவார்கள். இவர்களது ஜாடைப் பேச்சுக்கள் தங்களைப் பற்றித்தான் என்று தெரிந்தாலும் எதிராளி வாயே திறக்க மாட்டாள். ஏனென்றால் இவர்கள் இருவரின் பெயரும் அவ்வளவு பிரசித்தி பெற்றிருந்தது. ஊர்மிளாவின் கல்யாணத்தில் இவர்கள் 'கலக்கிய கலக்கல் இன்றளவும் ஊர்மிளாவின் உறவினர்களால் பேசப்படுகின்றது. அப்பேர்ப்பட்ட பெண்மணிகள் இருவரும் நடேசனுடன் ஊர்மிளா சேர்ந்து காரில் வேலைக்குப் போய் வருவதைப் பற்றி ஓர் சொல் சொல்லவில்லை. அவர்களின் நெருக்கமான பழக்கம் கண்டு நடேசனின் தாயே பெண் கேட்க முனைந்தபோது சொந்த நாத்தனார் என்ற போதும் செவ்வந்தி மௌனம் சாதித்தாள். சாந்தாவோ கட்டிய கணவனிடம் கூட சந்தேகப்பட்டு எந்த வார்த்தையும் கூறவில்லை.

பெருந்தன்மை மிக்க தயாநிதியும் முற்போக்கு சிந்தனை கொண்ட சுந்தரமும் சூழ்நிலையால் நடேசனும் ஊர்மிளாவும் காதலிப்பதாக நினைத்தனர். அதை இந்த இரு பெண்களும் துளிக்கூட நம்பவில்லை.

இதுதான் இறைவனின் படைப்பில் நாம் காணும் அதிசயம். முள் போன்ற வெளித்தோற்றமுடைய பலாப் பழத்தின் தோலைப் படைத்தவன் உள்ளே இனிப்பான பலாச்சுளைகளை வைத்தான். கொட்டுகின்ற தேனீக்களின் கூட்டில் இனிப்பான தேனை வைத்தான். செவ்வந்தியும், சாந்தாவும் இவை போலத்தான். வெளியே பார்த்தால் தெரியும் தன்மை அவர்கள் மனதில் இல்லை.

ஊர்மிளாவைப் பற்றி இருவருமே மிக உயர்வாக நினைத்தார்கள். அருமையாக நினைத்தார்கள். பெருமையாக நினைத்தார்கள்.



அடுத்த நாளே அபிராமியின் வீட்டுக்கு அனைவரும் பெண் கேட்டுப் போனார்கள். அவர்களது வழக்கமான டாடா சுமோவில் போய் மதுரையில் இறங்கினார்கள்.

"ஏண்ணே அபிராமியின் வீடு இவ்வளவு பெரிசா? பரவாயில்லையே. நடேசன் பிடிச்சாலும் பிடிச்சான் புளியங்கொம்பா பிடிச்சிருக்கான்" என்று ஆச்சரியப்பட்டபடி செவ்வந்தி டாடா சுமோவில் இருந்து இறங்கினாள்.

"ஏலேய் சுந்தரம். உன் பெண்டாட்டியை வாயை அடக்கி வை. எங்க நடேசன் ஒன்னும் புளியங்கொம்பைத் தேடி வளைக்கலை. அதுவா என் மகனின் அழகையும், அறிவையும் கண்டு வளைஞ்சு வருது. அதை விட்டுவிட்டு என் மகன் தேடி அலைஞ்சான்னு பட்டம் கட்டினால் நான் சும்மா இருக்க மாட்டேன். சொல்லி வை" சுப்புத்தாய் பொரிந்தாள்.

"ஆமாம். உங்க தங்கச்சி புருசன் சொல்லி வைச்சா உடனே சரிங்க மாமான்னு அடக்க ஒடுக்கமா உங்க தங்கச்சி கையைக் கட்டி வாயைப் பொத்திக்கப் போறது போல சுப்புத்தாயி அக்கா தம்பி கிட்ட புலம்புதே" சாந்தா கலைமதியின் காதோடு கூறினாள்.

அதற்கேற்றார் போல் சுந்தரம் சாதாரணமாய் திரும்பி யதார்த்தமாய் ஒரு பார்வை மனைவியைப் பார்த்து வைக்க அவள் சுட்டெரிக்கும் சூரியன் ஆகிப் போனாள்.

"என்ன பார்வை ஒரு மாதிரியா இருக்கு? என்ன விசயம்? அக்கா போட்டுக் கொடுத்ததும் தம்பி பாயத் துடிக்கறீங்களோ. பெரிய சீமையில் இல்லாத சம்பந்தம் எங்க அண்ணன் மருமகள் ஊர்மிளா இல்லைன்னா இந்த சம்பந்தம் உங்க அக்காவுக்கு வாய்ச்சிருக்குமா? சும்மா வெட்டி வாய் பந்தல் போட்டுக்கிட்டு இருந்தால் தாய்

மாமன் சொந்தம் கொண்டாடிக்கிட்டு நீங்க முன்னாடி நிற்க முடியாமல் செய்திருவேன் ஜாக்கிரதை. உங்க அக்காவுக்கு இந்த பவிசெல்லாம் புதுசு. எனக்கு அப்படியில்லை. என் பிறப்பென்ன, வளர்ப்பென்ன... உங்களுக்கு வாக்கப் பட்டு இதுககிட்ட எல்லாம் உறவு முறை கொண்டாட வேண்டியிருக்கு. காலக் கொடுமை."

சுந்தரம் பல்லைக் கடித்தார்.

"அடியேய்... ஊர் விட்டு ஊர் வந்திருக்கிறோம். கொஞ்சம் மலை ஏறாமல் கூட வா. அந்தப் பொண்ணு பாவம் தெரியாத்தனமாய் நம்ம நடேசனை காதலித்து வைத்திருக்கிறது. நம்ம குடும்ப வரலாறு தெரிஞ்சுக் கன்னு வை. அவனிருக்கிற திசை பக்கமே திரும்பிப் பார்க்காது. ஒரு காதலைப் பிரிச்ச பாவம் உனக்கு வேணாம்டி கை எடுத்துக் கும்பிடறேன். பொறுத்துப் போடி தாயே."

சுப்புத்தாய் தம்பியின் முதுகில் ஒரு போடு போட்டாள்.

"ஏண்டா. எருமை மாடு மாதிரி வளர்ந்திருக்கிறாயே. பொண்டாட்டியை அடக்கி வைக்க துப்பு இல்லை. கையெடுத்துக் கும்பிடு போடறான். எனக்கு அசிங்கமா இருக்குடா."

"அக்கா. இதுக்கு அசிங்கத்தைப் பார்த்தே. இந்த வீடு பொண்ணு பார்க்கிற வீடா இல்லாமல் பஞ்சாயத்து பண்ணி வைக்கும் வீடா மாறி விடும். ஒத்தைப் பிள்ளையைப் பெத்து வைச்சிருக்க. அவனுக்கு நல்லபடியா கல்யாணம் நடக்கணும். நீ இதையெல்லாம் கண்டுக்காதே."

"எப்படியோ போய்த் தொலை" என்று தலையில் அடித்துக் கொண்டு கூறினாள் சுப்புத்தாய்.

செவ்வந்தி வெகுண்டு திரும்ப அந்த போர்டிகோ போர்க் களமாக ஆகிவிடும் அபாயம் உருவானது. நல்லவேளை



யாக அபிராமியின் அப்பா தணிகைநாதன் கைகூப்பி வரவேற்றபடி வந்து விட்டார்.

"வாங்க வாங்க. பிரயாணம் சௌகர்யமாய் இருந்ததா? உள்ளே வாங்க. தெய்வநாயகி இங்கே வா."

உள்ளேயிருந்து பெண்ணின் தாயார் தெய்வநாயகி விரைந்து வந்தாள். அவள் உடுத்தியிருந்த பட்டுச்சேலையின் அகலமான கெட்டிக்கரையையும் கைகளில் குலுங்கிய தங்க வளையல்களின் பருமனையும் கண்டு சாந்தாவும், செவ்வந்தியும் கண்களால் 'பார்த்தாயா' என்று வினவிக் கொண்டார்கள்.

அனைவரும் உள்ளே சென்று அமர்ந்ததும் அபிராமி சாபி தம்ளர்களுடன் வந்தாள். மாநிறம். ஒடிசலான உடல். இடுப்பு வரை இருந்த அடர்த்தியான தலைமுடி இவற்றுடன் இருந்தவளை 'சராசரி' என்று ஒதுக்க முடியாமல் செய்தது அவளின் பெரிய காதுவரை அகன்ற கருவிழிகள். நடேசன் அவள் கண்ணோடு கண் கலக்க அவளும் அவனுக்கு பதிலுக்கு பார்வைகளை அனுப்பி வைத்துக் கொண்டிருந்தாள்.

தணிகைநாதன் பேச ஆரம்பித்தார்.

"எங்களுக்கு எல்லாமே திருப்தி. ஆனால் மாப்பிள்ளை கல்யாணத்துக்கு அப்புறம் எங்க பொண்ணை கிராமத்துக்குத்தான் வரணும்ன்னு கண்டிச்சு சொல்லிட்டாராம். அதுதான் சங்கடமாயிருக்கு."

"இதில் சங்கடப்பட என்ன இருக்கு? கிராமத்தில் இருக்கிறவங்க மனுசங்க இல்லையா? டவுனில் உங்க வீட்டிலே இருக்கிற வசதிகள் எல்லாம் எங்க கிராமத்து வீட்டில் இருக்கு. சொத்து சுகம் குறையாமல் ராணி மாதிரி உங்க பொண்ணு இருக்கலாம். அதை விட்டு விட்டு

எதையோ தப்பாச் சொல்லிட்ட மாதிரி பேசறீங்க. காலக் கொடுமை,'' என்றாள் செவ்வந்தி.

ஆரம்பிச்சுட்டாளா? என்று சுந்தரம் தலைமேல் கை வைத்துக் கொள்ள சாந்தா அடுத்து ஆரம்பித்தாள்.

''எல்லா கண்டிசனுக்கும் சம்மதித்துத்தானே பெண் பார்க்க வரச் சொன்னீங்க. இப்ப புதுசா பேசுற மாதிரி பேச்சை ஆரம்பிக்கறீங்க. இது எல்லாம் எங்கள் குடும்பத்தில் பழக்கமில்லை.''

'எங்களுக்கு மட்டும் பழக்கமா?' என்று கேட்கத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டு தெய்வநாயகி கணவனைப் பார்த்தாள். அதற்குள் அபிராமி முந்திக் கொண்டாள்.

''அப்பா. கல்யாணம் ஆனபின்னால் ஹஸ்பெண்ட் வீட்டில் இருந்தால்தான் எனக்கு மரியாதை. நானும் அதைத்தான் ஆசைப்படறேன். அதனால் இனி இந்தப் பேச்சு வேண்டாமே ப்ளீஸ்.''

முளையிலேயே பிரச்சனை கிள்ளப்பட்டு விட அபிராமி, நடேசனின் திருமணத்தை நிச்சயம் செய்துவிட்டு வெற்றிகரமாய் அந்தக் குடும்பக் குழு திரும்பி வந்தது.




அபிராமி வேலையில் சேர்ந்தவுடன் ஊர்மிளாவின் பக்கத்து இருக்கை அவளுக்குக் கொடுக்கப்பட்டது. கழுத்தில் தாலியுடனும் நெற்றியில் பொட்டுடனும் இருந்தாலும் ஊர்மிளா கணவனைப் பறிகொடுத்தவள் என்ற



உண்மை தெரிய வந்தபோது அபிராமி வேதனைப் பட்டாள். மென்மையான அதிர்ந்து பேசாத ஊர்மிளா உதவும் மனப்பான்மை கொண்டவளாய் இருந்தாள். அவளது இருக்கைக்கு பக்கத்து இருக்கை என்பதால் அபிராமியின் வேலைகளை சொல்லிக் கொடுத்தாள். காலப்போக்கில் இருவரும் தோழிகள் ஆனார்கள்.

ஊர்மிளாவின் உறவினர் என்ற முறையில் அறிமுகமான நடேசனின் கண்ணியமான குணம் அபிராமியை மிகவும் கவர்ந்துவிட்டது. ஊர்மிளா தன் தோழியென்று அறிமுகப்படுத்தியபோது முகம் பார்க்காமல் அவன் 'ஹலோ' சொன்னது அவளுக்கு ஒரு வகையில் எரிச்சலைக் கிளப்பினாலும் அதையும் மீறி வியப்பு எழுந்தது. மெல்ல, மெல்ல அவள் மனம் அவன் வசப்படுவதை உணர்ந்தாள் அபிராமி. ஓர் நாள் ஊர்மிளாவைத் தேடி அவன் வந்தபோது ஊர்மிளா சூப்பரிண்டெண்ட் அறையில் இருக்க தன் மனதை நடேசனிடம் தெரியப்படுத்தினாள் அபிராமி.

''ஊர்மிளா இல்லையா?''

''ஏன் ஊர்மிளாகிட்டத்தான் பேசுவீங்களா? என்னிடம் பேச மாட்டீர்களா?''

நடேசன் புருவம் தூக்கினான். இவள் இத்தனை நாளாய் இப்படி உரிமை எடுத்துப் பேசியவள் அல்ல. கேள்வியாய் பார்த்தான்.

''ப்ளீஸ் ஒரு நிமிடம் உட்காருங்களேன். உங்களிடம் நான் கொஞ்சம் பேச வேண்டும். ஊர்மிளா வருவதற்குள் பேசி விடுகிறேன்.''

''ஏன் அவள் வந்தால் என்ன? அவளுக்குத் தெரியாமல் பேச நம்மிருவரின் இடையே என்ன இருக்கிறது?''

''என் மனதில் உங்கள் மேல் காதல் இருக்கிறது'' அபிராமி படாரென்று தன்மனதில் உள்ளதை போட்டு உடைக்க, 'இது என்ன புதிதாய் ஒரு கதை கிளம்புகிறது?' என்று நடேசன் திகைத்துப் போனான்.

''ஏன் மௌனமாய் இருக்கிறீர்கள்?''

''பேச வார்த்தைகள் இல்லாதபோது வேறு என்ன செய்வது?''

''வார்த்தைகள் இல்லாமல் போவதேன்? இதற்கு நான் என்ன அர்த்தம் எடுத்துக் கொள்வது?''

''அபிராமி. நீங்கள் ஊர்மிளாவின் தோழி. என்னுடைய கோ. வொர்க்கர். இந்த முறையில் தான் நான் இதுவரை உங்களிடம் பேசியிருக்கிறேன். வேறு கண்ணோட்டத்தில் பார்த்ததில்லை.''

''நான் உங்களை என் காதலராகத்தான் பார்க்கிறேன்.''

''என் பார்வையும் உங்கள் பார்வையும் வித்தியாசப்படும்போது என்ன பேசுவது என்றே எனக்குத் தெரியவில்லை.''

''காதல் என்பது மாயவலை. அந்த வலையில் நான் சிக்கிவிட்டேன். உங்களால் மட்டுமே என்னை மீட்க முடியும். இதை உங்களிடம் தெரிவிப்பது மட்டுமே என் நோக்கம். நீங்கள் என் காதலை ஏற்றுக் கொள்வதும், மறுத்து விடுவதும் உங்கள் விருப்பம்.''

நடேசன் இப்போது அவள் முகத்தை நேராகப் பார்த்தான். அவள் விழிகளில் காதல் சுடர் தெரிந்தது. அதில் உண்மை இருந்தது.

''எனக்கு யோசிக்க அவகாசம் வேண்டும் அபிராமி.''

''இது போதும் எனக்கு. நான் காத்திருக்கிறேன்.''



அவளது கடைசி வார்த்தையில் நடேசனின் மனம் சிதைந்தது. ஊர்மிளா லட்சுமணனிடம் கூறிய வார்த்தை அது. 'காத்திருக்கிறேன்' அவள் காத்திருக்கிறாள். அவளை காத்திருக்கச் சொன்னவன்தான் திரும்பி வரவே'யில்லை. காலமெல்லாம் காத்திருப்பது மட்டும்தான் பெண்களின் விதியா? அவன் மனம் கசிந்தது. அபிராமியின் பால் புதிதாய் அன்பு சுரந்தது.

''வந்து நேரமாயிற்றா?'' என்ற ஊர்மிளாவின் குரல் கேட்டுத் திரும்பினான் நடேசன். அபிராமி ஏதோ வேலை செய்வது போல் பாவனை செய்ய ஆரம்பித்தாள்.

''ஆமாம் கொஞ்ச நேரம் ஆகிவிட்டது.''

''என்ன விசயம்?''

''முரளிக்கு பால் பவுடர் டின் தீர்ந்துவிட்டது என்றாயே. இப்போது கடைவீதிக்குப் போகிறேன். வாங்கி வந்து விடவா? வேறு சாமான் எதுவும் தேவையா?''

''ஆமாம். மழைக்காலம் வந்துவிட்டது. சிரப்பாட்டில் ஒன்று வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். அப்புறம் ஜான்ஸன் பேபி ஸோப் ஒன்று...''

''சரி வாங்கி வருகிறேன்.'' அவன் போய்விட்டான். அவன் போவதையே அபிராமி பார்த்துக் கொண்டிருப்பதை ஊர்மிளா பார்த்தாள்.

மதிய உணவு இடைவேளையில் அபிராமியின் முகத்தையே வைத்த கண் மாறாமல் ஊர்மிளா பார்க்க அபிராமி தலைகுனிந்து கொண்டாள்.

''ஏண்டி அப்படிப் பார்க்கிற?''

''ம்ம்... உன் முகத்தில் இத்தனை நாளாக இல்லாத கள்ளத்தனம் இப்போது வந்திருக்கிறதே. அது தான் பார்த்தேன்?''

"என்னடி என்ன என்னவோ சொல்கிறாய்?"

"நீ மட்டும் நடேசனிடம் என்ன என்னவோ சொல்லலாம். நான் உன்னிடம் சொல்லக் கூடாதா?"

அபிராமியின் தொண்டைக்குள் உணவு சிக்கிக் கொண்டது. புரையேறி அவள் தவிக்க தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொடுத்தாள் ஊர்மிளா. அவசரமாய் அதை வாங்கிக் குடித்தாள் அபிராமி.

"மனசுக்குள் சிக்கல் இருந்தால் சாப்பாடும் சிக்கிக் கொள்ளும். மெதுவாய் சாப்பிடு."

"நீ என்னவோ பூடகமாய் சொல்வது போல் இருக்கிறது."

"என்னவென்று நீதான் கண்டுபிடியேன்."

"நான் நடேசனிடம் பேசியதை நீ கேட்டுவிட்டாய். சரிதானே?"

"ஒட்டுக் கேட்கணும்னு நினைக்கலை. நான் அப்போதே வந்து விட்டேன். சூப்பரின்டெண்ட் ஒரு ஃபைலைக் கேட்டார். பீரோவில் எடுத்துக் கொண்டிருந்தேன். பீரோ மறைவிலிருந்த என்னை நீங்கள் பார்க்கவில்லை."

"ஊர்மிளா.. உன்னிடம் மறைக்கணும்னு நான் நினைக்கவில்லை. அவரிடம் பேசுவதற்கு முன் உன்னிடம் சொன்னால் நீ எனக்காக அவரிடம் வாதாடுவாய். எனக்கு அதில் விருப்பமில்லை."

"ஏன்?"

"காதலில் சிபாரிசு இருக்கக் கூடாது ஊர்மிளா. அது தானாக வர வேண்டும். நடேசன் மேல் அளவுகடந்த



காதல் எனக்கு இருக்கிறது. அதில் ஒரு பெர்ஸெண்டேஜ் குறைவாக அவருடைய காதல் இருந்தால் கூட அதைத் தாங்கிக் கொள்ள மாட்டேன்."

ஊர்மிளாவிற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவளுடைய லட்சுமணன்தான் அவள்மேல் காதல் கொண்டான். நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்பதை மறக்கடித்து துரத்தித் துரத்திக் காதலித்தான். அவனிடம் பேச்சு வார்த்தை நடத்தும் முறையே கிடையாது. எல்லாமே செயல் வேகம்தான். புயல் வேகம்தான். காட்டாற்று வெள்ளம் போல் திடீரென்று பிரவகித்து அவளது மலர் மனதை அடித்துச் சென்றுவிட்டான். காதல் சொல்லிப் பதிலுக்காக காத்திருக்கும் அபிராமியின் நிலையில் காதலித்து அந்தக் காதலுக்காக காத்திருந்து இன்று அக்காதலனின் நினைவுடன் வாழும் ஊர்மிளா இல்லைதான்.




மாலையில் வீடு திரும்பும்போது நடேசன் ஆபிஸைப் பற்றிப் பேசினான். முரளியைப் பற்றிப் பேசினான். லட்சுமணனும் அவனும் சிறு வயதில் செய்த குறும்புகளைப் பற்றிப் பேசினான். இன்னும் நாட்டு நடப்பைப் பற்றிக் கூடப் பேசினான்.

மறந்தும் அபிராமி அவனிடம் காதல் சொன்னதைப் பேசவில்லை. அந்த நிமிடம் தான் தனிமைப்பட்டுவிட்ட ஏக்கம் சூழ்ந்தது. ஊர்மிளாவின் மனதில் காதல் அந்

தாங்கமான விசயம். அது காதலிக்கும் இருவருக்கு மட்டுமே சொந்தமானது என்பதை உணர்கையில் தனக்கு நெருக்கமான நட்பாக இருந்த அவ்விருவரும் ஒன்று பட்டு தான் தனியாக நிற்பதாக உணர்ந்தாள் ஊர்மிளா.

பகலில் நடேசன் வரும் நேரம் வேண்டுமென்றே அடுத்த செக்சனில் வேலை இருப்பது போல் போய் விடுவாள் ஊர்மிளா. காத்திருக்கும் அபிராமியின் கூர் விழியை சந்திக்கும் நடேசனின் மனதில் காதல் மோகம் சூழும். முதல் நாள் தன் காதலைச் சொன்னபின் மறந்தும் அதை நினைவு படுத்தி பதில் கேட்கவில்லை அபிராமி. அவளின் அந்தப் போக்கு மனதிற்குள் ஓர் இதத்தைத் தர தன் மனம் அவள் மேல் காதல் கொள்வதை உணர்ந்தான் நடேசன்.

ஒரு மழைக்கால மதியத்தில் தன் காதலைச் சொன்னான் நடேசன்.

''சாப்பிட்டாச்சா?''

''இன்னும் இல்லை. ஊர்மிளா வரணும்.''

''ஓ.. நானும் சாப்பிட வரலாமா?''

''தாராளமா வாங்களேன். இதற்கு பெர்மிசன் கேட்கணுமா?''

''தேவையில்லைதான். உன்னோடு சேர்ந்து சாப்பிடும் உரிமையுள்ளவன் நான் மட்டும்தானே. நான் பெர்மிசன் கேட்கக் கூடாதுதான்.''

''என்ன சொன்னீர்கள்.. இன்னும் ஓர் தரம் சொல்லுங்கள்.''

முகத்தில் மத்தாப் பூ ஒளிர அபிராமி பரபரத்தாள். நடேசன் அவள் முன்னால் அமர்ந்து டேபிளில் இரு



கைகளையும் ஊன்றி அதில் முகம் பதித்து அவள் முகம் பார்த்தான் அவன்.

''என்ன சொல்லணும்?''

''நீங்கள் சொன்னதைச் சொல்லணும்.''

''சொல்லித்தான் தெரிய வேண்டுமா?''

வாய் வார்த்தைகள் எதற்கு என்று அவனது கண்கள் கேட்டன. காதல் பொழிந்த அவன் முகத்தைப் பார்த்தவாறு அவள் இருக்க இருவரும் சிலையாய் அமர்ந்துவிட்டனர். அவர்களின் நிஷ்டையைக் கலைத்தாள் ஊர்மிளா.

''என்ன.. ரெண்டு பேரும் கனவில் மிதக்கிற மாதிரி இருக்கே...''

நடேசன் ஊர்மிளாவின் முன் எப்படிச் சொல்வது என்று சங்கோஜமாய் தலைகுனிய அபிராமி முகம் சிவந்தாள்.

''அவர் கனவில் மிதக்கிறாரோ இல்லையோ நான் மிதக்கிறேன், ஊர்மிளா. அவர் என் காதலை ஏற்றுக் கொண்டார்.''

''ஊர்மிளாவிற்குத் தெரியுமா?'' நடேசன் சங்கடப்பட்டான்.

''நீங்கள் சொல்லாவிட்டால் தெரியாமல் போகுமா?'' ஊர்மிளாவின் சிரிப்பில் குற்றச்சாட்டு இருந்தது.

''ஊர்மிளா... எனக்கு குழப்பமாக இருந்தது. அது தெளிவாகி நானே ஒரு முடிவிற்கு வந்த பின்னால் உன்னிடம் சொல்லலாம் என்று நினைத்தேன். ஒரு வேளை எனக்கு அபிராமி மேல் காதல் ஏற்படாவிட்டால் இதைப் பற்றி உன்னிடம் கூடப் பேசுவதில்லை என்ற முடிவில் இருந்தேன். அபிராமி என் மேலுள்ள காதலை

வெளிப்படுத்தினாள். நான் ஏற்றுக்கொள்வதும், மறுப்பதும் என் விருப்பம் என்று சொன்னாள். நான் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்ற முடிவிற்கு வந்தால் அவள் என்னிடம் தன் காதலைச் சொன்னதை நான் யாரிடமும் விளம்பரப் படுத்தக்கூடாது என்பது என் கருத்து. இது அவளது காதலுக்கு நான் கொடுத்த மரியாதை. அவள் என்மீது வைத்த நம்பிக்கைக்கு நான் கொடுத்த பாதுகாப்பு."

இதுவும் காதலின் அங்கங்களில் ஒன்று என்ற பாடத்தை அங்கு கற்றாள் ஊர்மிளா. கண்ணும் கண்ணும் கலப்பது மட்டும் காதல் அல்ல. கருத்தால் கூடத் தன்னைக் காதலித்தவளுக்கு தீங்கு இழைக்காதது தான் காதல். ஒரு வார்த்தை தன்னை நம்பி ஒருத்தி சொன்னால் அதைக் கொச்சைப்படுத்தாமல் கோவில் கட்டுவதுதான் காதல்.

நடேசன் அபிராமியிடம் சில நிபந்தனைகளை வைத்தான். அபிராமிக்கு அவற்றை ஏற்றுக் கொள்வதில் சில சிரமங்கள் இருந்தன.

''மேலக்கால் கிராமத்தை விட்டு நான் வரமுடியாது அபிராமி. அங்கே எங்களுக்கு வயல் தோட்டம் எல்லாம் உள்ளது. என் பெற்றவர்களுக்கு நான் ஒரே பிள்ளை. அவர்களால் தனியே அவற்றைக் கவனித்துக் கொள்ள முடியாது.''

''அவர்கள் ஏன் தனியாக இருந்து கஷ்டப்படணும்? நம்முடன் மதுரையிலேயே இருக்கலாமே. இதோ பாருங்கள் நடேஷ். என் பெயரில் நான்கு வீடுகள் வாங்கிப் போட்டு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். அதில் ஒன்றில் நாம் இருக்கலாமே.''

''பரம்பரையாய் பயிர் செய்துவரும் நிலம். தரிசாய் போடலாமா?''



''தரிசாய் போடுவானேன். இப்போது நீங்கள் காரில் வந்து போவது போல் அவர்களும் காலையில் காரில் போய் தோட்டம் துரவைப் பார்த்துவிட்டு வரட்டுமே.''

''இல்லை அபிராமி. அது சரிவராது. நான் மேலக்காலை விட்டு வருவேன் என்று ஒரு போதும் நினைக்காதே. உனக்கு என்னுடன் வாழ வேண்டும் என்ற எண்ணமிருந்தால் மேலக்காலில்தான் வாழ வேண்டும் என்ற நினைவுடன் வா. இல்லையென்றால்...''

நடேசன் வாக்கியத்தை முடிக்காமல் விட அவன் என்ன சொல்ல வந்தான் என்பது புரிந்துவிட அபிராமி பதறிப்போனாள்.

''என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள். நான் பிறந்து வளர்ந்தது மதுரை டவுனில்தான். எனக்கு கிராமம் பழக்கம் கிடையாது. பாத்ரூம் வசதி, தண்ணீர் வசதி இல்லாமல் நான் எப்படி அங்கே இருப்பேன்? இங்கே எனக்கு சொந்தமாய் வீடுகள் இருக்கும்போது ஏன் வீணாய் கஷ்டப்படணும்னு..''

''வீணாய் கஷ்டப்படப் போகிறாயா? என்னவோ காதல் வந்தால் மாட மாளிகை கூட கோபுரத்தைக் கூடத் துறந்து வருவார்கள். குடிப்பது கூழாக இருந்தாலும் மகிழ்ச்சியாய் குடிப்பார்கள். குடியிருப்பது குடிசை என்றாலும் மன நிறைவோடு குடித்தனம் பண்ணுவார்கள்னு கதைகளில் படித்திருக்கிறேன். சினிமாவில் பார்த்திருக்கிறேன். கடைசியில் அதெல்லாம் வெறும் கப்ஸாதானா? உண்மையில்லையா?''

''அது இல்லீங்க. நான் என்ன சொல்ல வரேன்னா..''

''அபிராமி. பாத்ரூம் வசதியும், தண்ணீர் வசதியும்தான் உன் பிரச்சனைன்னா.. எங்கள் ஊரில் அந்தப் பிரச்சனை கிடையாது. எங்கள் வீட்டில் போர் போட்டிருக்கிறோம்.

நல்ல தண்ணீர் தங்கு தடையில்லாமல் பொழிந்து கொண் டிருக்கும். பாத்ரூம் என்ன.. வீட்டிற்கு மார்பிள்ஸே போட்டு இருக்கிறோம். மூன்று போகம் விளையும் பூமிம்மா. உனக்கு வாடகைப் பணம் வந்தால் எனக்கு நெல்விற்ற பணம், தென்னந்தோப்பு குத்தகைப் பணம்ன்னு பலவழி களில் பணம் வருகின்றது.''

''நடேஷ். இது ஈகோ பார்க்கும் நேரமில்லை.''

''நானும் ஈகோ பார்க்கவில்லை. எனக்குச் சில கடமை கள் இருக்கின்றன. அதை நிறைவேற்ற நாம் மேலக் காலில்தான் வசித்தாக வேண்டும். அப்புறம் உன் இஷ்டம்.''

அபிராமி யோசித்தாள். நடேசன் பிடிவாத குணமுள்ள வன். அவனை மாற்றுவது கடினம். அதை விட தன்னைப் பெற்றவர்களின் கருத்தை மாற்றுவது எளிது. அதைச் செய்தாள். முடிவு சுபமானதாக இருந்தது. இதோ கல் யாணம் பேச நடேசனைப் பெற்றவர்கள் வீடு தேடி வந்து விட்டனர். அவள் காதலில் வெற்றி பெற்றுவிட்டாள்.

மேலக்கால் கிராமத்தில் தெரு அடைக்கப் பந்தல் போட்டு மூன்று மைக் செட் கட்டி சீரியல் பல்ப் போட்டு மூன்று நாள் விருந்து போட்டு பக்கத்து கிராமங்களை யெல்லாம் கலக்கி அபிராமி, நடேசனின் திருமணம் நடந்து முடிந்தது. அந்தக் கல்யாணத்தை ஒரு கலக்கு கலக்கி செவ்வந்தியும், சாந்தாவும் சுற்றி வந்தனர்.




லட்சுமணனின் வீட்டு மொட்டை மாடியிலிருந்து சீரியல் பல்புகளால் ஜொலிக்கும் நடேசனின் வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.



இதுபோல்தான் அவளை பெண் அழைத்துக் கொண்டு வரும்போது லட்சுணனின் வீடும் சீரியல் பல்புகளால் ஜொலித்தது. அவளது லட்சுமணன் அவளைப் பார்க்க ஜமுக்காளம் கொடுக்கும் சாக்கில் வந்தான். இன்று அவனில்லை. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. மாடிப்படியில் யாரோ ஏறிவரும் ஓசை கேட்டது. கண் களைத் துடைத்துக் கொண்டுத் திரும்பிப் பார்த்தாள். செவ்வந்தி வந்து கொண்டிருந்தாள்.

''அடேங்கப்பா. டவுனில் இருந்தா அவ தலையில என்ன கொம்பா முளைச்சு இருக்கு? அவ பார்வையும், பேச்சும், பவிசும் என்ன அலட்டு அலட்டறா தெரியுமா? மதுரைக்காரிக்கு இந்த மேலக்கால் செவ்வந்தியைப் பத்தித் தான் இன்னும் தெரியலை. என்னமோ அவதான் மாப்பிள்ளையைப் பெத்தது மாதிரி ராங்கி காட்டறா. காலக் கொடுமை.''

''யாரைப் பத்தி சொல்றீங்க சித்தி?''

''அவதான் அந்த அலட்டல் அலங்காரி, மதுரைச்சீமை அகங்காரி தெய்வநாயகியைச் சொல்றேன். என்னமோ இவ கிட்டத்தான் பட்டும், பனாரஸும் இருக்கிற மாதிரி இதுவரைக்கும் பத்துத் தடவை சேலையை மாத்தி சோக்குக் காட்டறா மகராசி. கழுத்திலயும், கையிலயும் இருக்கிற நகைகளை அள்ளிப் பூட்டிக்கிட்டு வீடியோவுக்கு விழுந்து விழுந்து போஸ் கொடுக்கிறா. கல்யாணம் இவளுக்கா இல்லை இவள் மகளுக்கான்னே தெரியலை. காலக்கொடுமை.''

''தெய்வநாயகி அம்மாவை சொல்கிறீர்களா சித்தி. அவர்கள் எப்போதுமே பளிச்சென்று டிரஸ் பண்ணிக் கொண்டு இருப்பார்கள். அது அவர்களது இயல்பு சித்தி.''

''அதுக்காக? ஆடுகிற ஆட்டத்தை அவள் வீட்டில் இல்ல ஆட வேண்டும். இந்த செவ்வந்தியோட நாத்தனார் வீட்டிலயா ஆட வேண்டும்?''

''அந்த வீட்டில்தானே அவங்க மகளைக் கொடுக்கப் போறாங்க?''

''மகளைத்தானே கொடுக்கப் போறா? என்னமோ மகனைப் பெத்த மாதிரி அதிகாரம் பண்ணிக்கிட்டு இருக்கா?''

''ஏன் என்ன பண்ணினார்கள்?''

''தலையை வலிக்குது. காபி கொடுன்னு கேட்கிறா?''

''பாவம். தலையை வலித்திருக்கலாம். கேட்டிருப்பார்கள். காபிதானே கொடுக்கச் சொல்லயிருக்கலாமே.''

''அதை யார் கிட்ட கேட்டாத் தெரியுமா?''

''யார்கிட்ட கேட்டாங்க?''

''என்கிட்டக் கேட்கிறா. எனக்கு பத்திக்கிட்டு வந்திருச்சு. நல்லா நாலு கேள்வி கேட்டு விட்டுத்தான் வர்றேன். யாருகிட்ட ஆட்டம் காட்டறா? காலக் கொடுமை.''

''ஐயையோ.. என்ன கேள்வி கேட்டிங்க சித்தி.''

''நீ ஏம்மா பதட்டப்படறே. 'ஏம்மா உனக்கு கையிருக்கில்ல. காலிருக்கில்ல அந்தா இருக்கிற அடுப்பங்கரையில் காபி வைச்சிருக்கு. போய் ஊத்திக் குடி. காணாததை கண்டது மாதிரி காபிக்கு இந்தப் பறப்பு பறக்கிற'ன்னு சொன்னேன். அந்தப் பொம்பள மூஞ்சி சூம்பிப் போயிருச்சு.''

''அடக்கடவுளே. அவங்க காபி குடிச்சாங்களா இல்லையா?''

''யாருக்குத் தெரியும். ரோசக்காரின்னா இழுத்துப் போர்த்திக்கிட்டுப் படுத்திருக்கணும். இவள் வெட்கமில்



லாமல் வேற சேலையை மாத்திக்கிட்டு நலங்கு வைக்க முதல் ஆளா வந்து நிற்கிறாள். எல்லாம் காலக் கொடுமை.''

''சித்தி இது அவங்க மகளோட கல்யாணம். பிரச்னை பண்ண வேண்டாம்ன்னு நினைத்திருக்கலாம் இல்லையா?''

''என்னத்தையோ நினைச்சிட்டுப் போகட்டும். நமக்கென்ன? நான் வந்த வேலையை விட்டு விட்டு ஊர் கதையை பேசிக்கிட்டு இருக்கேனே. ஆமாம் ஊர்மிளா... நீ ஏன் மாடியிலேயே முடங்கிக்கிட்டு இருக்கிற?'' நடக்கிறது உன் சிநேகிதங்களோட கல்யாணம். பொண்ணு அழைக்கவும் வரமாட்டேன்னு சொல்லிட்ட. அங்க நலங்கு ஆரம்பிக்கப் போறது. இதுக்கும் வராமலிருந்தால் என்ன அர்த்தம்?''

''இல்லை சித்தி. முரளிக்கு கூட்டம்ன்னா அலர்ஜி.''

''யாருக்கு உன் மகனுக்கா? அவன் வீட்டிலயா இருக்கான். அப்பவே ஈஸ்வரி மதினி பேரனை இடுக்கிக்கிட்டு கல்யாண வீட்டுக்கு வந்திருச்சு. அங்க இருக்கிற அத்தனை பேரோடும் உரையாடிக்கிட்டு இருக்கான் உன் புள்ள.''

''அப்படியா?'' சுரத்தில்லாமல் கூறினாள் ஊர்மிளா.

''இப்ப எதுக்கு உன் முகம் வாடிக் கிடக்கு? லட்சுமணன் நினைவு வந்திருச்சா?'' செவ்வந்தி இதமாய் கேட்க, என்னவென்று வாய்விட்டுச் சொல்ல முடியாமல் இதயத்தைத் துளைக்கும் சோகத்தை வாய் விட்டு அழுது கொட்டித் தீர்த்து விட்டாள் ஊர்மிளா.

தோளில் சாய்ந்து கதறியவளை ஆதரவாய் அணைத்துத் தட்டிக் கொடுத்த செவ்வந்தி.

''அழுதுவிடும்மா. மனப்பாரம் குறையும். அழுது முடித்த பின்னால் முகத்தைக் கழுவி தலை சீவி புடவை

மாற்றிக் கிட்டு என் கூட கிளம்பிவா. ஊருக்குள்ள விசேஷம் நடக்கிறப்போ தனியாக் கிடந்து பழசை நினைச்சுக்கிட்டு உட்காரக் கூடாது'' என்று கண்டிப்புடன் கூறினாள்.

''வேணாம் சித்தி. எனக்கு மனம் சரியில்லை.''

''ஏன் சரியில்லை?'' என்று மாடிப்படியிலிருந்து குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தனர். நடேசன் நின்று கொண்டிருந்தான்.

ஊர்மிளா அவசரமாய் முகத்தைத் துடைத்துக் கொள்ள அவன் ஊர்மிளாவை முறைத்துக் கொண்டு அருகில் வந்தான்.

''இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க?''

''இல்லை. எனக்கு ஒரே தலைவலி. அதுதான் சித்தி வந்தாங்க'' ஊர்மிளா உளறிக் கொட்டி கிளறி மூடினாள்.

''அப்போ சரி. உன் தலைவலி சரியான பின்னால் நானும் அபிராமியும் கல்யாணம் பண்ணிக் கொள்கிறோம். அத்தை போய் பொண்ணு வீட்டை பேக்கப் பண்ணுங்க.''

''நிஜமாவாடா சொல்றே?'' செவ்வந்தி உற்சாகமாய் தெய்வநாயகியை விரட்டத் தயாரானாள்.

''ச்சு. நல்ல காரியம் நடக்கப் போகிறது. அபசகுனமாய் இது என்ன பேச்சு?''

''தெரியுதில்ல. அப்பக் கிளம்பி கல்யாண வீட்டுக்கு வா.''

''நடேசன்..'' ஊர்மிளா தயங்கினாள்.

''அங்கே யாராவது எதையாவது சொல்லி விட்டால்...?''

''இப்படிப் பேசுவது நீதானா? எந்தக் காலத்தில் இருக்கிற? நீ சுமங்கலி. என் லட்சுமணன் வாழ்ந்துகிட்டுத்தான் இருக்கான். இப்படி கிறுக்குத்தனமாய் எதையாவது பினாத்திக்கிட்டு இருந்தால் எனக்கு கெட்ட கோபம் வந்துவிடும். கிளம்பு...'' நடேசன் அதட்டினான்.



''அடியாத்தே. ஏண்டியம்மா இந்தப் பயத்தாலா வராமல் இருந்த? வாதாயி. நீ நடந்து வர்ற பாதையில பூ மலரும் கண்ணு. உன்னை நீயே தாழ்த்தி நினைக்கலாமா? காலக்கொடுமை.''

செவ்வந்தியும் நடேசனும் ஊர்மிளாவை அதட்டி மிரட்டி கூட்டிக் கொண்டு போயினர். கல்யாண வீட்டில் நலங்கு ஆரம்பிக்கப் போகும் தருணம் அவர்கள் உள்ளே நுழைந்தனர். அபிராமியின் முகம் தோழியைக் கண்டதும் மலர்ந்தது. அவள் அருகில் அழைக்கத் தட்ட மாட்டாதவளாய் ஊர்மிளா அவள் அருகில் சென்று நின்றாள். அவள் பயந்தது போலவே நடந்தது. கல்யாண வீடு களேபர வீடு ஆனது.




பெண் வீட்டாரில் ஊர்மிளாவை அறிந்த அபிராமியின் உறவுக்கார பெண்மணி ஒருத்தி இருந்தாள். ஊர்மிளாவின் அழகையும், வடிவையும் கண்டவர்கள் கல்யாணப் பெண்ணை விட்டு விட்டு ஊர்மிளாவை வேடிக்கைப் பார்க்க ஆரம்பிக்க அவளுக்கு அது பொறுக்கவில்லை. செவ்வந்தி அவளைக் கவனிக்காமல் விட்டு விட்டாள். தாய் மாமன் மனைவி என்று தான் இருக்கும்போது தன் வரவிற்குக் காத்திராமல் நலங்கை ஆரம்பித்து விட்ட கோபத்தில் அவள் இருந்தாள்.

அபிராமி ஏதோ கூற ஊர்மிளா பல் வரிசை தெரிய அழகாய் சிரித்தாள். வீடியோவின் கேமிரா கூட்டத்தை விட்டு அவளிருக்கும் திசைப் பக்கம் திரும்பி விட்டது.

நலங்கு ஆரம்பிக்க எல்லோரும் நலங்கு வைக்க ஆரம்பித்தனர். அபிராமியை விட்டு அப்போதும் வில காமல் ஊர்மிளா நிற்க அந்தப் பெண்மணிக்கு கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

ஊர்மிளா மேல் தவறு இல்லை. அவளை நகர விடா மல் அபிராமி ஊர்மிளாவின் கையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். எனவே நகராமல் தோழியின் அருகில் அவள் நிற்க அந்த உறவுக்காரப் பெண்மணி படக்கென்று இடத்தை விட்டு எழுந்த ஊர்மிளாவின் அருகே வந்தாள்.

''ஏம்மா. ஒன்னு தானாத் தெரியனும். இல்லை யாரா வது சொல்லியாவது கொடுக்கனும். இங்கே உனக்கும் தெரியலை. யாருக்கும் சொல்லனும்கிற எண்ணம் வர்ற மாதிரியும் எனக்குத் தெரியலை.''

''ஏங்க என்னாச்சு?''

''இன்னும் என்ன ஆகனும்? கல்யாணப் பெண்ணுக்கு நலங்கு வைக்கிற இடத்தில் உனக்கு என்ன வேலை? வந்தோமா, பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டோமா, ஓரமாய் ஒதுங்கி உட்கார்ந்து வேடிக்கை பார்த்தோமான்னு இல லாமல் இங்க வந்து போஸ் கொடுக்கிற?''

அதுவரையில் அவள் எதையோ பேசுகிறாள் என்று நினைத்துக் கொண்டு அசட்டையாய் பார்வை பார்த்தபடி அருகில் வந்த செவ்வந்தி அவள் பேசியதன் பொருள் புரியவும் பொங்கி எழுந்து விட்டாள்.

''ஏய்ய்... எங்கே வந்து யாருகிட்ட என்ன பேசுற? தானாத் தெரியனும் இல்லை சொல்லித் தெரியனுமா?



யாருக்கு எது தெரியனும்? இங்கே எல்லோருக்கும் எல்லாமும் தெரிஞ்சுதான் இருக்கு. உனக்குத் தான் வளமை தெரியலை. கழுத்தில் தாலியைக் கட்டிக் கிட் டால் நீ சுமங்கலியா? உன் கதை எனக்குத் தெரியாதா? கட்டிக்கிட்டவன் ஓடிப்போய் இருபது வருஷமாச்சு. அவன் எங்கே போய் எவகூட குப்பை கொட்டறான்னு தெரியலை. நீயெல்லாம் நியாயம் பேசிக்கிட்டு நலங்கு வைக்க வந்துட்ட. பந்தியிலே உட்கார்ந்து சாப்பிட நீதான் முந்தனும். இது எங்க வீடு. நாங்க நடத்தற கல்யாணம் எங்கே வேனும்னாலும் நிற்போம். எப்போ வேனும்னாலும் சாப்பிடுவோம். ஓரமாய் ஒதுங்கிப் போக வேண்டியவ நீதான். எங்க வந்து நாட்டாண்மை பண்ற? காலக் கொடுமை.''

''என்னது நான் ஒதுங்கிப் போகனுமா? தணிகை நாதா. தெய்வ நாயகி இதைக் கேட்டிங்களா?''

''உனக்கு மட்டும்தான் வாய் இருக்கிறதா? நீ மட்டும் தான் கூப்பிடுவாயா? நானும் கூப்பிடறேன். டேய் நடேசா இங்கே வாடா.''

தணிகைநாதன் பதறிக் கொண்டு வந்தார். நடேசன் கேள்வியாய் நோக்கியபடி வந்தான்.

''என்னக்கா என்ன பிரச்னை. தெய்வ நாயகி இங்கே என்ன நடந்தது? ஏன் அக்கா கோபமா இருக்கு?''

''என்னத்தை சொல்ல. இங்கே வந்ததில் இருந்தே நமக்கு மதிப்புக் கொடுக்காமல் இவங்க இருக்கிறதை கவனித்துக் கிட்டுத்தான் இருந்தேன். இப்ப ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஆளைக் கடித்த கதையாய் உங்க அக்காவை அவமானப்படுத்தறாங்க.''

''இந்தம்மாவை நாங்க அவமானப் படுத்தினோமா? காலக் கொடுமை. நடேசா.. இந்தம்மா நம்ம ஊர்மிளாவை என்ன சொல்லுச்சு தெரியுமா?''

''சித்தி வேண்டாம் சித்தி'' ஊர்மிளா தடுத்தாள். அவமானத்தில் அவள் முகம் ஜிவுஜிவுவெனச் சிவந்திருந்தது. நடேசன் அவள் முகத்தைப் பார்த்தான்.

''அத்தை நீங்க ஒன்றும் சொல்ல வேண்டாம். அபிராமி! இங்கே ஊர்மிளாவை யார் பேசியிருந்தாலும் அவங்க இந்த இடத்தை விட்டு உடனே போகணும்.''

தணிகை நாதன் கொதித்து விட்டார்.

''மாப்பிள்ளை'' என்று அவர் சத்தம் போட,

''இன்னும் நான் உங்கள் மாப்பிள்ளை ஆகவில்லை'' என்றான் அவன்.

''அப்போ நீங்கள் செய்வதுதான் நியாயம். அதை நாங்க ஏன்னு கேட்டால் மிரட்டுவீங்க. அப்படித்தானே.''

''அப்படித்தான்.''

''ஒரே பொண்ணு. ஊர்பட்ட சொத்து. வரிசையில் நின்னு பொண்ணு கேட்டாங்க. எல்லோரையும் விட்டு விட்டு அவ காதலிக்கிறேன்னு சொன்ன ஒரே காரணத்துக்காக உங்களுக்கு பொண்ணு கொடுக்க சம்மதிச்சேன் பாருங்க. எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்.''

''இதுவே போதும்ன்னு தான் நான் நினைக்கிறேன்.''

''நடேசன்'' என்று பதற்றத்துடன் ஊர்மிளா குறுக்கிட்டாள்.

''லட்சுமணனின் மேல் ஆணை. நீ வாயைத் திறக்கக் கூடாது. இந்த இடத்தை விட்டு நகரவும் கூடாது'' அவன் ஆணையிட்டான்.



தயாநிதி, கலைமதி, சுந்தரம், ராமையா எல்லோரும் உள்ளே வந்து விட்டனர். ஈஸ்வரி மருமகளின் அருகே வந்து நின்று கொண்டாள். சாந்தா செவ்வந்தியின் அருகே வந்து நின்று கொண்டாள்.

''தணிகை நாதா. நான் நாட்டு வழக்கத்தைத்தான் சொன்னேன்'' என்றாள் அவரின் அக்கா.

''எங்க நாட்டில் இதுதான் பழக்கம்'' என்றாள் செவ்வந்தி சட்டமாக.

''இங்கே பாருங்க. பெண்ணைப் பெற்றால் முதுகெலும்பு இல்லாமல் இருக்கணுமா?'' தெய்வ நாயகி கொதிப்பாய் கூறினாள்.

''மாப்பிள்ளை வீடுன்னா வளைஞ்சு கொடுக்கனுமா?'' சாந்தா பதிலடி கொடுத்தாள்.

''இங்கே பாருங்க நீங்க எல்லாம் இந்தக் குடும்பத்துப் பெரியவங்க. எங்க அக்காவை வெளியேறச் சொல்வது நல்லாவா இருக்கு? நீங்களே ஒரு நியாயத்தைச் சொல்லுங்க.''

தணிகைநாதன் தயாநிதியிடம் கூற அவர் கலைமதியின் முகம் பார்த்தார். கலைமதி சுந்தரத்தைப் பார்க்க சுந்தரம் ராமையாவைப் பார்த்தார். ராமையா முன்னே வந்தார்.

''உங்க அக்கா இங்கே இருக்கணுமின்னு என் மகனே சொன்னாலும் நாங்க ஒத்துக்கிற மாட்டோம்ங்க. எங்க வீட்டுப் பெண்ணை எங்க கண் முன்னாடியே மனசு புண்பட பேசினவங்க ஒரு நல்ல காரியம் நடக்கிறப்போ இங்கே நிற்கக் கூடாது. அவங்க நின்னா எங்க வீடு தாங்காது. அதனால் அவங்களை அனுப்பிட்டு கல

யாணத்தை நடத்துங்க. இல்லைன்னா உங்க பெண்ணைக் கட்டிக்க வரிசையில் நிற்கிறவன் எவனுக்காவது ஒருவனுக்கு உங்க பெண்ணைக் கட்டிக் கொடுங்க.''

தணிகை நாதன் திகைத்து விட்டார். ஊரே ஒன்று கூடி இந்தப் பெண்ணைக் காவல் காக்கிறதே.

ஊர்மிளாவை இது வரையில் மகளின் தோழி, மாப்பிள்ளையின் உறவுக்காரப் பெண் என்ற முறையில் பார்த்தவர் முதல் முறையாய் மிக மரியாதையுடன் பார்த்தார்.

''அக்கா'' என்று அந்தப் பெண்மணியை அழைத்துக் கொண்டு வெளியில் சென்று காரில் ஏற்றி அனுப்பி வைத்து விட்டு வந்தார்.

''நீ நலங்கு வைம்மா'' என்று ஊர்மிளாவைப் பார்த்துக் கூறினார். நடுங்கும் கரங்களால் ஊர்மிளா அபிராமியின் கையை இறுகப் பிடிக்க அபிராமி தோழியின் கரங்களை ஆதரவாய் தட்டிக் கொடுத்தாள்.




''ஹலோ நான்தான் நெடுஞ்செழியன். தர்மபுரியிலிருந்து மாற்றலாகி வந்திருக்கிறேன்'' ஊர்மிளாவின் முன் கரம் நீட்டி அவன் சொன்னான்.

''மாற்றல் வாங்கிட்டு வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க'' என்றாள் அபிராமி.

நீட்டிய அவனின் கரங்களைப் புறக்கணித்து 'வணக்கம்' சொன்ன ஊர்மிளா,



''உங்க நேட்டிவ் தர்மபுரியா?'' என்று வினவினாள்.

''ஊஹூம். இந்த சங்கத் தமிழ் வளர்த்த மதுரை தான் சாருக்கும் சொந்த ஊர் யூனியனிஸ்ட். மேலிடத்தோட மோதினார். தர்மபுரிக்கு தூக்கி அடிச்சிட்டாங்க. இப்பத் தான் சொந்த ஊருக்குத் திரும்பி வருகிறார்'' அபிராமி விளக்கினாள்.

''ஏண்டி அவர்கிட்ட கேள்வி கேட்டால் நீ பதில் சொல்கிறாயே. எப்படி? உனக்குத் தெரிந்தவரா?''

''நான் இந்த ஆபிஸிற்குத் தெரிந்தவன். 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே'ங்கிற மாதிரி நான் வருவதற்கு முன்னாலேயே என்னைப் பற்றிய செய்திகள் வந்திருக்கும்.''

நெடுஞ்செழியன் சிரித்தபடி கூறிவிட்டு ஊர்மிளாவின் வலப்பக்கம் இருந்த இருக்கையில் அமர்ந்தான். போன வாரம் வரை அந்த சீட்டில் வேலை பார்த்த மலர்விழி மணமாகி கணவனின் ஊருக்கு மாற்றல் வாங்கிப் போய் விட்டிருந்தாள்.

ஊர்மிளா இடது புறமாக அமர்ந்திருந்த அபிராமியின் பக்கம் திரும்பி, ''என் கூடவே தானே இருக்கிறாய்? எப்போது இதையெல்லாம் கண்டு பிடித்தாய்?'' என்று வினவினாள்.

''அதுக்குப் பெயர் இன்வெஸ்டிகேஷன் டெக்னாலஜிங்க'' என்று நெடுஞ்செழியன் குரல் கொடுத்தான்.

''இன்வெஸ்டிகேட் ஜர்னலிசம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இது என்ன புதுசா ஒரு டெக்னாலஜி?''

''புலனாய்வுங்க.''

''அப்படின்னா...?''

"இதோட ஒரிஜினல் பெயர் புறம் பேசுதல். நம்மைப் பற்றி நாலு பேர் வாயைக் கிளறி அவர்கள் நாலு விதமாப் பேசுவதைத் தெரிந்துகொண்டு 'அப்படியாம், இப்படியாம்'ன்னு பத்திரிகையில் எழுதினால் அது இன்வெஸ்டிகேட் ஜர்னலிசம். ஆபிஸில் இதுபோல் பேசுவதும் அது போல்தான்."

நெடுஞ்செழியன் விளக்கம் சொன்ன விதத்தில் ஊர்மிளாவிற்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. அபிராமி அவன் வாயை மேலும் கிளறினாள்.

"நீங்கள் பெரிய போராளியாமே."

"சத்தம் போட்டுச் சொல்லாதீங்க. தீவிரவாதின்னு பிடிச்சிட்டுப் போயிடப் போறாங்க."

"அப்ப நீங்க தீவிரவாதி இல்லையா?" வம்புக்கு இழுத்தாள் அபிராமி.

"சரியாப் போச்சு. திரும்பவும் தண்ணியில்லாக் காட்டுக்கு என்னைப் பத்தி விடணும் என்கிற முடிவோட இருக்கீங்க போல. ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு பெரிய நல்ல மனது இருக்கக் கூடாது மிஸஸ் நடேசன்."

"அவர் நடேசனின் வொய்ப் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

ஊர்மிளா ஆச்சரியமாய் வினவ நெடுஞ்செழியன் புன்னகைத்தான்.

"லேடிஸ்தான் இன்வெஸ்டிகேசன் பண்ணுவீங்களா? ஆண்கள் நாங்கள் புலனாய்வு பண்ண மாட்டோமா?"

"அதுவும் பெண்களைவிட கோடி மடங்கு அதிகமாகப் புலனாய்வு பண்ணுவார்கள். புறம் பேசுவார்கள்" கேலியாகக் கூறினாள் அபிராமி.



"ஆண்கள் மேல் எவ்வளவு நல்ல அபிப்ராயம்? இவ்வளவு நல்ல அபிப்ராயத்தை வைத்துக் கொண்டு எப்படித் திருமணம் என்ற ஒரு பந்தத்தை ஒரு ஆணுடன் ஏற்படுத்திக் கொண்டீர்கள்?"

"எனக்கு கால் வலி சார். நாலு இடத்திற்கு அலைந்து, புலனாய்வு பண்ணிப் புறம் பேச முடியவில்லை. இதே ஒரு ஆண் என்றால் ஆபிஸ் அக்கப் போர் முதல் உலக நடப்பு வரை விரல் நுனியில் வைத்திருப்பாரே. அதனால் அலைச்சலில்லாமல் செய்தி கேட்டுக் கொள்ள ஒரு ஆணைத் திருமணம் செய்து கொண்டேன்."

"ஹாஹா" என்று பலமாகச் சிரித்தான் நெடுஞ்செழியன்.

"மெல்லச் சிரிங்க சார். இது பிரிட்டிஷ்காரங்க காலத்தில் கட்டின கட்டிடம். சுவரெல்லாம் அதிருது பாருங்க. விழுந்து வைக்கப் போகுது."

அபிராமி சிரிக்காமல் எச்சரித்தாள். ஊர்மிளாவால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. வாய் பொத்தி அவள் சிரிப்பை அடக்க முயன்றால் கண்ணில் கண்ணீரே வந்து விட்டது.

நெடுஞ்செழியன் அவளைக் கனிவாகப் பார்த்தான்.

"இப்படி ஒரு ஆட்டோ பாம் தோழிக்குப் பக்கத்தில் அமைதியே வடிவாய் நீங்களா? ஆச்சரியமாக இருக்கிறது."

ஊர்மிளா ஒரு வழியாய் சிரித்து முடித்து விட்டு அபிராமியைப் பார்த்துக் கூறினாள்.

"கொஞ்சம் வாயைக் குறைத்துக் கொண்டு வேலையைப் பாருடி."

"அப்படியென்றால் என்னை ஆபரேசன் பண்ணிக் கொள்ளச் சொல்கிறாயா?"

''எதற்கு ஆபரேசன் பண்ண வேண்டும்? உனக்கு உடம்புக்கு என்ன?'' பதட்டமாய் தோழியை வறிட்டாள் ஊர்மிளா.

''நீதானே வாயைக் குறைத்துக் கொள்ளச் சொன்னாய். நீளத்தை குறைத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஆபரேசன் பண்ண வேண்டாமா?''

''எனக்குன்னு வந்து பிரெண்டா வாச்சிருக்கயே'' தலையில் அடித்துக் கொண்டாள் ஊர்மிளா.

''இது என்னடி இப்படி அலுத்துக் கொள்கிறாய். என் வீட்டுக்காரரே இப்படிப் புலம்பியது இல்லை'' என்று அபிராமி கூற.

''பாவம் வெளியே சொல்லாமல் மனதில் பூட்டி வைத்திருக்கிறார் போல'' என்றான் நெடுஞ்செழியன்.

ஊர்மிளா 'களுக்'கென்று சிரிக்க அபிராமி அவனை முறைத்தாள்.

''இதுக்கு மட்டும் சிரி. என் வாய் நீளம். அவருக்கு வாயே கிடையாதா? நானும் பார்க்கிறேன். எல்லோருமே ஆண்கள்ன்னா பேசப் பயப்படுகிறார்கள். அதே பெண்கள் என்றால் அட்வைஸ் மழை தான் கொட்டும்.''

''சரி சரி சரி... தெரியாமல் சொல்லி விட்டேன். ஸாரி'' ஊர்மிளா காதைப் பிடித்துக் கொள்ள,

''மன்னித்தேன். மறந்தேன். வேலையைப் பார்'' என்றாள் அபிராமி.

''அப்பாடி இப்போதாவது விட்டாயே.''

அதற்குப் பின்னர் அவர்கள் அரட்டையை மறந்து வேலையில் மூழ்கினார்கள். மதியச் சாப்பாட்டு நேரத்தில் நடேசன் அங்கே சாப்பிட வந்தவன் நெடுஞ்செழியனைக் கட்டி அணைத்துக் கொண்டான்.



செழியா, எப்படிடா இருக்க? நீ திரும்பவும் மதுரைக்கே வர போகிறாய்ன்னு தெரிந்ததும் நான் எவ்வளவு சந்தோசப் பட்டேன் தெரியுமா?''

''ஆனால் உன் வொய்ப்க்குத்தான் அவ்வளவு சந்தோச மில்லை போல் தெரிகிறது.''

''ஏன் நீ அவ பெஸ்ட் பிரண்டுன்னு அவகிட்ட சொல்லி யிருக்கலே. என் அபிராமி நீ அதைச் சொல்லவில்லையா?''

''அதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் சொன் னேன்.''

''ஒருவேளை நீங்க திக் பிரண்ட்ஸ் என்றதும் அபி ராமிக்கு பொறாமை வந்து விட்டதோ என்னவோ'' ஊர்மிளா குறும்பாக நகைத்தாள்.

நடேசனும் சிரித்தபடி, ''வாடா சாப்பிடலாம்'' என்றான்.

''ஓகே'' என்றபடி தன் கேரியரை எடுத்துக் கொண்டு அவர்களுடன் இணைந்து கொண்டான் நெடுஞ்செழியன்.

இப்படித்தான் ஆரம்பமானது நெடுஞ்செழியனின் நட்பு. அவர்கள் நால்வரும் இணைந்து சாப்பிட்டார்கள். துரையில் கடை வீதிக்கும், கோவிலுக்கும் செல்வதாக இருந்தால் சேர்ந்தே வெளியில் போனார்கள். நாளா வட்டத் தில் அவர்களின் நட்புச் சங்கிலி இறுகிப் பலமானது.

நெடுஞ்செழியன் ஊர்மிளாவிற்கு நடேசன் அபி ராமியைப் போல் ஒரு நெருங்கிய நல்ல நண்பன் ஆகிவிட்டான். கண்ணியம் காப்பாற்றும் தன்மையில் நடேசனையும் மிஞ்சியவனாய் அவனிருக்க அவள் ஆண் என்ற பேதமின்றி தோழமையில் அவன் அவனுடன் பழக ஆரம்பித்தாள்.

அலுவலக அக்கப் போர்களில் அவர்களின் நட்பை பற்றிய பொறாமை கலந்த பேச்சுக் கிளம்பியது.

நடேசன், நெடுஞ்செழியன் என்ற இரண்டு இரும்புத் தூண்களின் பாதுகாப்பில் ஊர்மிளா பத்திரமாய் இருந்த தால் அலுவலகம் பதுங்கிப் பேச்சை அடக்கியது.

ஒரு நாள் அவர்கள் நால்வரும் பாலமுரளியின் பிறந்த நாளுக்காக உடை வாங்கப் போனார்கள். நாலு கடை ஏறி இறங்கிப் பார்த்துப் பிடித்ததாகத் தேர்வு செய்து பணத்தைக் கொடுத்து விட்டுக் காரில் ஏறி உட்கார்ந்து கொஞ்ச தூரம் போனதும் அபிராமி கேட்டாள்.

''ஊர்மிளா டிரெஸ்ஸை வெளியில் எடு ஒரு தரம் பார்க்கலாம்.''

''ஏய், உன்னிடம்தானே டிரஸ் இருக்கிறது?''

''இல்லையே. நான் எடுத்து வரவில்லையே. ஏங்க நீங்கள் எடுத்து வந்தீர்களா?''

''நானா.. இல்லையே.. செழியா நீ கொண்டு வந்தாயா?''

''இல்லையேடா.''

''சரியாப் போச்சு. ஒன்றுக்கு இரண்டு ஆண் பிள்ளை கள் கூட வந்தீங்கன்னு தான் பேரு. ஒரு டிரெஸ் பேகை ஒழுங்காய் எடுத்து வரும் பொறுப்பு ஒருத்தருக்குக்கூட இல்லை'' அபிராமி திட்டினாள்.

''ஏண்டி இதையே நான் திருப்பிச் சொல்லக் கூடாதா?'' நடேசன் பதிலுக்கு மோதிக் கொண்டிருக்கையில் வெளியே சடசடவென்று மழை கொட்ட ஆரம்பித்தது.

''இப்போது என்ன செய்வது?'' நடேசன் முணுமுணுத் தான்.

''என் தெருவின் இந்த முனையில் நாம் இருக்கிறோம். அந்த முனையில் கடை இருக்கிறது. காரைத் திருப்ப வேண்டியதுதானே.''



ஊர்மிளா புரியாமல் கூறினாள். அந்தத் தெரு ஒரு வழிப் பாதையில் இருக்கிறது. நடேசன் இன்னும் பல தெருக்கள் சுற்றித்தான் அந்தத் தெருவிற்குள் வர வேண்டும்.

''மழை வேறு பெய்கிறதே...'' அபிராமி கவலையுடன் கூறினாள். அவளுக்கு ஒரு வாரமாய் நல்ல காய்ச்சல். இன்றுதான் சற்றுக் குணமாகியது போல் இருக்க அலுவலகம் வந்திருந்தாள்.

''இது ஒன்வே ஊர்மிளா. காரைத் திருப்ப முடியாது'' நடேசன் கூறிக் கொண்டிருக்கும்போது நெடுஞ்செழியன்,

''குடை இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''ம்ம்.. இருக்கிறது'' என்றாள் ஊர்மிளா.

குடையை வாங்கி விரித்துப் பார்த்தபடி காரிலிருந்து இறங்கிய நெடுஞ்செழியன்.

''நான் போய் எடுத்து வருகிறேன். ஆமாம். டிரெஸ் என்ன கலர்?'' என்று கேட்டான்.

''நீங்கள் பார்க்கவில்லையா?'' என்று அபிராமி கேட்க,

''அவன் இதையெல்லாம் ஆழமாய் பார்க்க மாட்டான்'' என்ற நடேசன் ஊர்மிளா பக்கம் திரும்பி,

''நீ கூடப் போய் எடுத்து வா'' என்றான்.

''இன்னொரு குடை இல்லையே'' என்று ஊர்மிளா தயங்க,

''பரவாயில்லை. ஒரு குடையில் இருவரும் போகலாம்'' என்றான் நடேசன்.

ஊர்மிளா இறங்கி நெடுஞ்செழியனுடன் கடை நோக்கி நடந்தாள். ஒரே குடையின் கீழ் இருவரும் அந்தக் கொட் டும் மழையில் கடை நோக்கி நடந்ததையும் உள்ளே

போன கொஞ்ச நேரத்தில் துணி பார்சலோடு வெளியில் வந்து கார் நோக்கி நடந்து காரில் ஏறிக் கொண்டதையும் ஒருவன் சுவாரஸ்யமாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கலெக்டர் ஆபிஸிற்கு பக்கத்திலிருக்கும் கார்ப்பரேசன் ஆபிஸில் வேலை பார்க்கிறான். பக்கத்திலிருந்த அவன் நண்பன்.

''என்ன வீரபத்ரா. அவங்களை அப்படிப் பார்க்கிறாய்?'' என்று கேட்டான்.

''அந்தப் பொம்பளையும் அந்த ஆளும் எங்க ஆபிஸிற்குப் பக்கத்தில் இருக்கும் கலெக்டர் ஆபிஸில் வேலை பார்க்கிறவங்கடா.''

''இருக்கட்டுமே. அதற்கா அந்தப் பார்வை பார்க்கிறாய்.''

''அதெல்லாம் இல்லை. இதுக இந்த ஆட்டம் போடுதுகளேன்னு பார்க்கிறேன்.''

''ஏண்டா. மழை கொட்டுதுன்னு மழைக்கு ஒதுங்கி வந்து நின்னால் ரோட்டில் அப்பாவியாய் நடந்து போறவங்களைப் பார்த்து எகனைக்கு மொகனைக்கு பேசிக்கிட்டு இருக்க. பேசாமல் இருக்கிறாயா இல்லை மழையில் பிடிச்சுத் தள்ளி விடவா? ஏண்டா. அவங்க ரெண்டு பேரையும் பார்த்தால் நல்ல குடும்பத்து ஆள்கள் மாதிரித் தெரியுது. உன் குணத்தைக் காண்பிக்காதே. அபாண்டமாய் பேசாதே. சொல்லி விட்டேன். சே. மழை விட்டால் ஓடி விடுவேன். இந்தக் காட்டு மழையில் உன்கிட்ட வந்து மாட்டிக் கொண்டேனே.''

''ஏய்ய். அடங்கறியா. அவங்க ரெண்டு பேரும் நல்ல குடும்பமா? முதலில் அவங்க ரெண்டு பேரும் ஒரே குடும்பமில்லை. அதைத் தெரிஞ்சுக்க.''



''இப்ப நீ என்ன தான் சொல்ல வருகிறாய்?''

''டேய். அந்தப் பொம்பளை ஒரு விடோடா.''

''சேச்சே. பார்த்தால் தெரியலையே.''

''அவ அப்படித்தான் அலப்பரையா இருப்பாள்.''

''அடுத்த வீட்டுப் பெண்களை அவள் இவள்ன்னு சொன்னே.. பல்லை பேத்துடுவேன் ராஸ்கல்.''

''பாருடா. புத்தி சொல்ல வந்திட்டாரு.''

''இப்ப என்னங்கிறே. அவங்க விடோவாயிருந்தால் அது தப்பா?''

''அது தப்பில்லை. அந்த ஆம்பிளை அவ கூட வேலை பார்க்கிறவன். அவங்க சேர்ந்துதான் வேலை பார்ப்பாங்களாம். சேர்ந்துதான் சாப்பிடுவாங்களாம். இப்பப் பார்த்தியே. இது போல சேர்ந்துதான் ஊர் சுத்துவாங்களாம்.''

''உனக்கு யார் சொன்னது?''

''அட. அந்த ஆபிஸில் வேலை பார்க்கும் என் பிரண்ட் சொன்னான்டா.''

''உன்னை மாதிரி ஆளோட பிரண்ட் எப்படியிருப்பான் உன்னை மாதிரி தானே இருப்பான். மழை விடாவிட்டாலும் பரவாயில்லை. உன் பக்கத்தில் நின்று நீ பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதற்கு நனைந்தாலும் பரவாயில்லைன்னு நான் இடத்தைக் காலி பண்ணுவது தான் எனக்கு நல்லது.''

எரிச்சலுடன் நனைந்து கொண்டே போய் விட்டான் நல்ல குணமுள்ள அந்த மனிதன். ஏளனமாய் அவனைப் பார்த்துச் சிரித்த அந்த வீரபத்ரன் அடுத்த இரு மாதங்களில் ஊர்மிளாவின் நாத்தனார் சுபத்ராவைப் பெண் பார்க்க வந்தான்.




சுபத்ராவை பெண் பார்க்க வந்த வீரபத்ரனுக்கு அவள் ஊர்மிளாவின் நாத்தனார் என்று தெரியாது.

''வீட்டுக்கு ஒரே பொண்ணு. அண்ணன் மிலிட்டரி ஆபிசர். கார்கில் போரில் போய் விட்டான். மருமகள் ஏதோ கவர்ன்மெண்ட் வேலை பார்க்குது கேட்ட நகை போடுவாங்க. லாரி, லாரியாய் சீர் வரிசை கொடுப்பாங்க. ஆற்றுப் பாசனம். மூணு போகம் விளையற பூமி. கடைசி வரைக்கும் செய்முறை செய்யும் வளமையான குடும்பம்.''

பணத்தாசை பிடித்த வீரபத்ரனின் குடும்பத்திற்கு உறவுக்காரர் ஒருவர் இவ்வாறு தகவல் சொன்னார்.

''என்னடா, அண்ணன்காரன் இல்லை. ஒரு பொண்ணு தான். நாளைக்கு சொத்தில் கூடப் பங்கு கேட்கலாம். ஆற்றுப் பாசன பூமிடா. லட்சக் கணக்கில் விலை போகும்'' வீரபத்ரனின் தந்தை மாத்தாண்டம் கணக்குப் போட்டார்.

''பங்கு எதுக்கு? சொத்தே அந்தப் பொண்ணுக்கு மட்டும்தான்னு அடிச்சுக் கேட்டால் பெத்தவங்களால என்ன செய்ய முடியும்? அந்த மருமகள்காரிக்கு கையில் ரொக்கம் எதையாவது கொடுத்து கையெழுத்தை வாங்கிக் கொண்டு விரட்டி விட்டால் சரியாகிப் போகிறது'' என்று வழி சொன்னாள் வீரபத்ரனின் அன்னை மங்கையர் குல திலகம் மங்கம்மாள்.

வீரபத்ரனுக்கு அவர்களது பேச்சு மிகவும் பிடித்திருந்தது. நான்கு பெண்களுக்குப் பின் பிறந்த மகன்



அவன். பெண்களைக் கரையேற்ற குடும்பச் சொத்து முழுவதும் கரைந்து விட குடியிருக்க சொந்த வீடு கூட இல்லாமல் வாடகை வீட்டில்தான் அவன் குடும்பம் வசித்து வந்தது. அவனுக்கு இந்த நிலைமை பிடிக்கவில்லை. பற்றாக்குறை வாழ்வில் திண்டாடிக் கொண்டு வாழும் இந்த வாழ்வில் உயர்வு வர வேண்டுமானால் அது தன் சம்பாத்தியத்தால் முடியாது என்பதை நன்கு அறிந்திருந்தவன் தன் திருமணத்தின் மூலம் அந்த உயர்வைப் பெற்று விடத் துடித்தான்.

ஊர்மிளாவை அவனுக்குப் பிடிக்காமல் போனதற்குக் காரணம் அவள் நடேசன் அபிராமியின் திருமணத்திற்குப் பாலமாக இருந்தாள் என்பதால்தான்.

அவன் முதலில் அபிராமியைத்தான் திருமணம் செய்து கொள்ள குறிக்கோள் வைத்திருந்தான். அவனது அலுவலக நண்பன் ஒருவன்,

''அதோ போகுது பார். அந்தப் பொண்ணு பேரு அபிராமி. அப்பன் ஆத்தாளுக்கு ஒரே பெண் வாரிசு. இந்த மதுரையிலேயே நாலு பங்களா இந்தப் பொண்ணு பேரிலேயே வாங்கிப் போட்டிருக்காங்கன்னா பார்த்துக்க. இந்தப் பொண்ணெல்லாம் வேலைக்கு வரணும்னு அவசியமே இல்லை. ம்ம்... எவனுக்கு கொடுத்து வச்சிருக்கோ'' என்று ஒரு நாள் பெருமூச்சு விட்டு வைக்க வீரபத்ரன் உஷாரானான்.

அதற்குப் பின்னால் அந்த நண்பனின் உறவையே அறுத்துக் கொண்ட வீரபத்ரன் கலெக்டர் ஆபிசில் ஒரு நண்பனை புதிதாக உருவாக்கிக் கொண்டான். அவன் கல்யாணமானவன் என்பதை அறிந்த பின்னால்தான் அவனுடன் பழகவே ஆரம்பித்தான். அந்த அளவு

ஜாக்கிரதையாய் செயல்பட்ட வீரபத்ரன் தினம் ஒரு உடையணிந்து அடிக்கடி அபிராமியின் கண்ணில் படும் படி அந்த நண்பனைப் பார்க்கும் சாக்கில் அவளையே சுற்றி வந்தான்.

காத்திருந்தவன் காதலியை நேற்று வந்தவன் தள்ளிக் கொண்டு போன கதையாய் அபிராமியின் திருமணப் பத்திரிக்கையை அந்த நண்பனின் மேஜையில் பார்த்தவன் அழுது விடுபவன் போல் ஆகி விட்டான். ஒன்றும் அறியாதவன் போல்,

''யாருக்குக் கல்யாணம்?'' என்று விசாரித்தான்.

''எதிர்த்த டேபிள் அபிராமிக்குத்தான்.''

''அப்படியா? மாப்பிள்ளை எந்த ஊர்?''

''எந்த ஊரா? இதே ஆபிஸில்தான் வேலை பார்க்கிறான்.''

''இந்த ஆபிஸா?'' அதிர்ந்து போனான் வீரபத்ரன். அவனுக்கு தெரியாமல் யார் அவளை அணுகியது.

''காதல் திருமணமா?''

''ஆமாம். ஆனால் பத்திரிக்கை கொடுக்கிற வரை யாருக்குமே தெரியாது'' என்று அவன் சொல்ல,

'அதுதான் தினமும் வந்து காவல் காக்கிறேனே. எனக்கே தெரியாதே' என்று நினைத்துக் கொண்டு பல்லைக் கடித்தான் வீரபத்ரன்.

''எப்படிக் காதல் ஆரம்பித்ததாம்?'' அக்கறையில்லாதவன் போல் அவன் வினவ யதார்த்தமாய் பதில் கூறினான் அவனது நண்பன்.

''அதை ஏன்ப்பா கேட்கிற. எதிர்த்தாப்புல அபிராமி சீட்டுக்குப் பக்கத்தில் இருக்குதே அந்தப் பொண்ணு பேரு ஊர்மிளா. அதுகூட அபிராமி ரொம்ப சிநேகிதம்.



அந்த ஊர்மிளாவோட சொந்தக்காரன் தான் இப்ப அபிராமியைக் கல்யாணம் பண்ணிக்கப்போற நடேசன். ஊர்மிளாவைப் பார்க்க அது டேபிளுக்கு இவன் வர அபிராமிக்கு இவன் மேல் காதல் வந்து விட்டது. அப்புறம் ஊர்மிளா வீட்டில் சொல்லி பெண் கேட்டு வந்து கல்யாணம் முடிவாகிருச்சுப்பா.''

'அடிப்பாவி! என் குடி கெடுத்த குடிகேடி நீதானா?' வீரபத்ரன் ஊர்மிளாவைச் சாம்பலாக்குவது போல் பார்த்துக் கொண்டே நண்பனிடம்,

''சொந்தக்காரன் என்றால் அண்ணன் தம்பி முறையா?'' என்று வினவினான்.

''இல்லைப்பா. அத்தை மகன் மாமன் மகன் சொந்தம் தான்.''

''அப்ப இந்தப் பொண்ணே கட்டியிருக்க வேண்டியது தானே.'' மனதின் கடுப்பு வெளியில் தெரியாமல் மலர்ச்சி யாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான் அவன்.

''நீ வேற. அந்தப் பொண்ணு விடோப்பா. குழந்தை இருக்கான்.''

நண்பன் பேச்சை முடித்துக் கொள்ள சொர்க்கத்தை பறி கொடுத்தவன் போல் அபிராமியைப் பார்த்துக் கொண்டே வீரபத்ரன் வெளியேறினான். அதன் பின்னால் ஊர்மிளாவைக் கண்டாலே மிளகாயை அரைத்து மேனியில் பூசியது போல அவனுக்கு இருக்கும். அதன் விளைவாக அதன் பின் ஊர்மிளாவைப் பற்றி அவதூறாய் பேசுவதும் அவ தூறு பரப்புவதுமே அவனது வேலையா ஆகிப் போனது.

நாம் நம் வேலையைப் பார்த்துக் கொண்டு தானுண்டு. தன் வேலையுண்டு என்று இருப்போம். ஆனால் நம்மைப்

போல் நம்மைச் சுற்றியிருக்கும் உலகம் இல்லை. அது கோடிக்கணக்கான கண்களைக் கொண்டு நம்மைக் கண்காணிக்கிறது என்பதை அறிய மாட்டோம். நம்மைப் போலவே பிறரையும் நினைப்போம்.

ஊர்மிளாவும் இது போன்ற அப்பாவிதான். அவள் தன்னைப் பற்றி மற்றவர் பேச என்ன இருக்கிறது என்ற எண்ணத்துடன் அப்பழுக்கில்லாத நடத்தையுடன் வாழ்ந்து வந்தாள். ஆனால் அவளையும் எதிரியாய் நினைக்க ஓர் அயோக்கியன் இருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியாமல் போனது. அதை விடப் பெரிய அநியாயம் அவனே அவளது நாத்தனாரைப் பெண் கேட்டு வந்தது.

மீண்ட சொர்க்கம் போல் இந்த மேலக்கால் பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அவனது லட்சியம் உயிர் பெற்றது. பெண்ணின் மூலம் வரும் சொத்து மதுரையில் பங்களாக்களாக இருந்தால் என்ன? மேலக் கால் கிராமத்தில் வயல்களாக இருந்தால் என்ன?

அவன் அன்றே விவரம் சொன்ன உறவுக்காரரை நல்ல முறையில் கவனித்தான். அவனது தாய் தகப்பனோ வீட்டில் கோழிப் பண்ணையை இறக்கி மூன்று நேரமும் வறுவல், பிரியாணி என்று தூள் பரத்தி விட்டனர். கையிலும் கணிசமாக பணம் பெற்றுக் கொண்ட அந்த பொய் பேசும் உறவுக்காரர் மேலக்காலில் போய் இறங்கி தயாநிதி வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். தயாநிதிக்கு அவர் தூரத்து சொந்தம்.

''வாப்பா. வீட்டில் பெண்டாட்டி பிள்ளைக சௌக்கியமா? ஈஸ்வரி காபித் தண்ணியைப் பாரு. விருந்தாளி வந்திருக்கு. அப்புறம் என்ன விசயம்? இந்தப் பக்கமா என்ன சோலியா வந்தே?''



ஈஸ்வரி காபி கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகத் திரும்பினாள்.

''ஈஸ்வரியம்மா. நீயும் கொஞ்சம் இப்படி வந்து உட்காரு. நல்ல சமாச்சாரம் பேச வந்திருக்கிறேன். நீயும் யோசிச்சு ஒரு முடிவைச் சொல்லணும்.''

ஈஸ்வரி கேள்வியாய் பார்த்தபடி எதிரே தரையில் அமர்ந்தாள். தயாநிதி யோசனையாய் பார்த்தார்.

''என்னப்பா பீடிகையெல்லாம் பலமா இருக்கு.''

''இல்லாமல் போகுமா? நம்ம சுபத்ராவுக்கு நல்ல சம்பந்தம் கிடைச்சிருக்கு. அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

''இப்போ அது கல்யாணத்துக்கு என்ன அவசரம்?''

''என்ன தயாநிதி இப்படிப் பேசுற? அதுக்கும் வயசாகலையா? புள்ளையை நினைச்சுக்கிட்டு பொண்ணைக் கவனிக்காமல் விட்டால் எப்படி? அதுவும் நீ பெத்த பிள்ளை தானே.''

தயாநிதியும் ஈஸ்வரியும் யோசித்தார்கள். வந்தவர் சொல்வதில் இருக்கும் உண்மை உறைக்கப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தார்கள்.

''பையன் யாரு? என்ன வேலை பார்க்கிறான்.''

''தங்கமான பையன். கார்ப்பரேசனில் ஆபிஸரா இருக்கான். அருமையான குடும்பம். அக்காமார்கள் நான்கு பேர். இவன் ஒருத்தன் தான் மகன். அக்காக்களுக்கு கல்யாணம் பண்ணிவிட்டுத்தான் தனக்கு கல்யாணம்ன்னு பிடிவாதமா தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தான். இப்போ நாலு பெண்களும் கல்யாணம் ஆகி நல்லா வாழறாங்க. அவனுக்கும் கல்யாணம் பண்ணிடனும்னு பொண்ணு தேடுறாங்க.''

நாக்கில் தேன் தடவி நயவஞ்சகமாய் அவர் பேசினார். வஞ்சகர்களை வாழ வைக்கும் தெய்வங்கள் என்றார். அடங்காப் பிடாரி மங்கம்மாவை அமைதியின் மறு வடிவம் என்றார். பேராசை மார்த்தாண்டத்தை பெருந் தன்மை மிக்கவர் என்றார். கூனி போல் குணம் படைத்த வீரபத்ரனின் உடன் பிறப்புக்களை குணக்குன்று என்றார். மொத்தத்தில் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் எல் லோருமே பத்தரை மாற்றுத் தங்கம் என்றார்.

"சொந்த வீடு இருக்கா?" ஈஸ்வரி வினவினாள்.

"கூடிய சீக்கிரத்தில் வாங்கிடுவாங்கம்மா."

"வேற சொத்து சுகம்...?"

"அந்தப் பையனின் குணமே பெரிய சொத்தும்மா ஈஸ்வரி. நீ பெண்ணைக் கொடுத்துப் பார். அப்புறம் நீயே சொல்வாய்."

"அவள் என்ன என்ன வார்த்தைகளில் தன்னை சபிப்பாள்" என்று கற்பனை செய்து கொண்ட அவரின் உடல் நடுங்க அவர் மனதாரப் பொய் சொன்னார்.

"சரி பொண்ணு பார்க்க வரச் சொல்லுங்க."

சாப்பிட்ட கறியும் சோற்றிற்குத் தன்னால் ஆன கைமாறை செய்துவிட்ட திருப்தியோடு அவர் போய்ச் சேர்ந் தார். செய்தி அறிந்ததும் வீரபத்ரன் மனம் சிறகடித்தது.

வெள்ளை வெளேரென்ற சலவை வேட்டி அணிந்து பெரிய மனிதத் தோரணையுடன் மார்த்தாண்டம் கிளம்பி னார். கூட அடக்கமே வடிவானவர் போல் இரவல் பட்டுப் புடவை உடுத்தி இரவல் நகைகளைப் போட்டுக் கை எடுத்து கும்பிட வைக்கும் மரியாதையான தோற்றத்துடன் மங்கம்மா சென்றாள். இவர்களுடன் இந்தப் பெண்



பார்க்கும் படலத்திற்கு என்று எடுத்த புதிய பேண்ட், சட்டையணிந்து ஒரு பாட்டில் செண்டில் குளித்து பவுடர் மணக்க ஒரு மணி நேரம் தலை சீவி யோக்கியமே வடிவமாய் வீரபத்ரன் சேர்ந்து கொண்டான்.

வாடகைக் காரில் இவர்கள் போய் இறங்கியபோது நடேசன் வந்து வரவேற்க 'அட துரோகி' என்று மனதில் புகைந்து கொண்டு வெளியே சிரித்தபடி வணக்கம் சொன்ன வீரபத்ரனின் மனதில் 'இவன் எங்கே இங்கு வந்தான்?' என்ற எண்ணம் ஓடியது. அபிராமி வந்து எல் லோருக்கும் காபி கொடுத்துப் போக அவள் கை நழுவிப் போனாளே என்ற ஏக்கத்துடன் வீரபத்ரன் இருந்தபோது அதை போக்கப் பிறந்து வந்தவள் போல் அழகே வடிவான சுபத்ரா எதிரே வந்து அனைவருக்கும் கரம் குவித்து வணக்கம் சொல்லிவிட்டு அமர்ந்தாள். அவளது அழகைக் கண்ட வீரபத்ரன் அபிராமியை இழந்த சோகத்தை மறந்து விட்டான். சுபத்ராவிடம் சொக்கி விட்டான்.

எல்லோரும் பேசிக் களித்து சுபத்ராவின் முகத்தில் நாணம் கலந்த சம்மதத்தைக் கண்டு மகிழ்ந்து ஒரு முடிவிற்கு வந்து வெற்றிலை பாக்கு மாற்றி நாள் குறித்து முடித்தவுடன் வீரபத்ரனின் தலையில் இடி இறங்கியது.

கூடத்தில் அமர்ந்திருந்த ஈஸ்வரியன் மடியில் அமர்ந் திருந்த ஐந்து வயதுச் சிறுவனைப் பார்த்து,

"இதுதான் உங்க பேரனா?" என்று மங்கம்மாள் மயக்கும் புன்னகையுடன் கேட்டாள்.

"ஆமாங்க" என்று பாசத்துடன் பேரனைக் கட்டிக் கொண்டாள் ஈஸ்வரி. அதை எரிச்சலுடன் பார்த்த மார்த் தாண்டம்,

"பையன் படிக்கலையா?" என்று கேட்டார்.

"படிக்கிறானே. மதுரையில் டி.வி.எஸ். பள்ளிக் கூடத்தில் யு.கே.ஜி. படிக்கிறான்" நடேசன் பெருமையுடன் கூறினான்.

''பள்ளிக் கூடத்திற்கு எப்படி இங்கேயிருந்து போய் வர்றான்?'' என்று மங்கம்மாள் விசாரித்தாள்.

''கார் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அதில் என் மருமகள் மகனைப் பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு ஆபிஸிற்குப் போவாள். திரும்ப வரும்போது கூட்டிக் கொண்டு வருவாள்'' தயாநிதி கூறினார்.

'இதுகளுக்கு கார் வேறா?' என்று எரிந்த வீரபத்ரன்,

''உங்க மருமகளுக்கு பாவம் வீண் அலைச்சல். பேசாமல் மதுரையிலேயே ஒரு வீடு வாடகைக்கு பார்த்து அவர்கள் இருந்திருக்கலாம்'' என்று அக்கறை போல் யோசனை கூறினான்.

''எங்க கட்டை வேகிற வரை எங்க மருமகளைத் தனியாக விட மாட்டோம். எங்க கடைசி காலம் வரை எங்கள் கண் பார்வையில் தான் எங்கள் மருமகள் இருப்பாள்.''

ஈஸ்வரி வெடுக்கென்று கூறினாள். மங்கம்மாள் மகனை விழிகளால் எச்சரித்தாள். அவன் வாயை மூடிக் கொண்டான். சம்பந்தகாரியின் கோபத்தை தணிக்க அவளை வார்த்தைகளால் குளிப்பாட்ட விரும்பி,

''பேரன் மூக்கும் முழியுமா அழகா இருக்கான்,'' என்று கூறினாள்.

''அப்படியே என் மகன் ஜாடை'' என்றாள் ஈஸ்வரி கண்கலங்க.

''அடப்பாவமே மகனை நினைச்சிட்டிங்களா. ஆமாம் நாங்கள் வந்ததில் இருந்து உங்க மருமகளையே பார்க்க வில்லையே,'' என்று அவள் கேட்டு வைக்க,

''ஊர்மிளா,'' என்று ஈஸ்வரி உள் பக்கம் பார்த்து அழைத்தாள் வீரபத்ரனுக்கு மனதிற்குள் 'வதக்' என்றது.



'அந்த ஊர்மிளாவா?' என பயந்தான். அவன் பயந்தது போலவே ஊர்மிளா வெளிவந்தாள்.

'அடிப்பாவி. இங்கேயும் இவள்தானா?' இந்தக் கல் யாணம் ஒழுங்காய் நடக்குமா என்ற கவலை மேகம் அவனைச் சூழ்ந்து கொண்டது.

அதை அறியாத அப்பாவி ஊர்மிளா எல்லோருக்கும் மரியாதையுடன் வணக்கம் சொல்லிவிட்டு மரியாதை நிமித்தம் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

பெண்பார்க்க வரும்போது சிரித்த முகத்துடன் வந்த மகன் திரும்பி வரும்போது பேயறைந்தது போல் ஏன் வருகிறான் என்பதைப் புரியாத அவனது தாய் மேலக் காலில் இருந்து வந்த மூன்றாள் நாள் அதைப்பற்றி அவனிடம் விளக்கம் கேட்டாள். அவள் மகனிடம் வினவும் போது வீரபத்ரனின் கடைசி அக்காவின் கணவன் சிங்கவராயன் மாமியார் வீட்டிற்கு கல்யாணச் செய்தியை விசாரிக்க வந்திருந்தான்.

''ஏண்டா மகனே மூஞ்சியை உம்முன்னு வைச்சிருக்கிற. அதுதான் நம்ம மனசு போல நல்ல இடத்தில் சம்பந்தம் அமைஞ்சு போச்சே.''

''ஏம்மா வயித்தெரிச்சலைக் கிளப்பறே. அந்த வீட்டில் மருமகள்ன்னு ஒரு ஆட்டக்காரி இருக்காளேன்னு தான் கவலைப்படறேன்.''

தன் போக்கில் வீரபத்ரன் அவன் பரப்பி வந்த கட்டுக் கதைகளை வீட்டிலும் அவிழ்த்து விட பெண்கள் விசயத் தில் மோசமான சிங்கவராயன் அதை மிக ஆர்வமாக கேட்டுக் கொண்டான்.

விளைவு பெரும் விபரீதமானது.




சிங்கவராயன் பிறந்து சீரழிந்து வளர்ந்த ஊர் ஆந்திராவின் அருகில் இருந்தது. தொலைதூரத்தில் விசாரிக்காமல் பெண் கொடுத்து விட்ட வீரபத்ரன் வீட்டாருக்கு அவன் சுயரூபம் தெரியாது. அதனால் மருமகன் தானே என்ற நினைவில் மங்கம்மாளும் அக்காள் கணவன்தானே என்ற உறவில் வீரபத்ரனும் அவன் இருப்பதை பொருட்படுத்தாமல் உரையாடிக் கொண்டிருந்தனர்.

''ஏண்டா அப்படிச் சொல்றே. அவள் பார்க்க அழகா ரதி மாதிரி இருந்தாலும் அடக்க ஒடுக்கமாத்தானே தெரியறா?''

மங்கம்மாளின் வார்த்தைகளில் 'ரதி' என்ற வார்த்தை அவள் மருமகனின் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்து விட்டது. கெட்ட நடவடிக்கையால் உள்ளூரில் பெண் கிடைக்காமல் அயலூரில் அண்டங்கருப்பில் இருந்த வீரபத்ரனின் அக்கா காளிஸ்வரியை மணம் முடித்த கடுப்பில் இருந்தவனுக்கு அழகான பெண்களின் மேல் எப்போதுமே மோகம்.

''ஏம்மா நீ வேற. அதெல்லாம் வீட்டில்தான்'' என்று அவன் சராமாரியாய் ஆரம்பித்து சரடு விட சிங்கவராயன் மனதில் தீய எண்ணம் விதைக்கப்பட்டுவிட்டது.

எந்த நேரம் திருமணம் தடைபடுமோ என்ற பயத்துடன் இருந்த வீரபத்ரன் திருமண நாள் நெருங்க நெருங்க குளிர் ஜூரம் பிடித்தவன்போல் ஆகிப்போனான்.



''என்னடா மாப்பிள்ளை மந்திரிச்சு விட்ட கோழி போல் ஒரு மார்க்கமா அலையற?'' நண்பர்கள் கிண்டல் பண்ணினர்.

''ஏண்டா தம்பி என்னவோ போல் இருக்க? எவ கண்ணு பட்டுச்சோ கல்யாணம் நெருங்கி வர்ற சமயத்தில் என் தம்பி கருக்குளிச்சுப் போயிட்டானே,'' அக்காகாரிகளில் ஒருத்தி அங்கலாய்க்க,

''ஆமாம் மச்சான் ஏற்கெனவே யானைச் சிவப்பில் இருந்தாரு. இப்போது புதுசா கருத்துப் போயிட்டாரு பாவம்,'' அக்காள் கணவர்களில் ஒருவர் கிண்டலடித்தார்.

ஒரு வழியாய் திருமண நாளும் வந்தது. ஆயிற்று விடிந்தால் திருமணம். மதுரையில் நடைபெறும் திருமணத்திற்கு பெண் அழைத்துக் கொண்டு வந்தாகி விட்டது. மண்டபத்தில் மனநிம்மதி இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தான் வீரபத்ரன்.

'கல்யாணம் ஒழுங்காய் நடைபெறவேண்டும்' என்று முதன் முதலாய் கடவுளிடம் வேண்டிக் கொண்டான்.

விடிந்தது. மணமேடையில் மாப்பிள்ளையாக அமர்ந்து விட்டான். அருகே மணப்பெண் அலங்காரத்தில் சுபத்ரா வந்து அமர்ந்தாள். முகூர்த்த நேரம் நெருங்கி தாலியை அவன் கையில் எடுக்கும்போது அது நிகழ்ந்தது.

''வீல்,'' என்ற கூக்குரல் எழுந்தது. தொடர்ந்து 'டம்டம்' என்ற சத்தம் கேட்டது.

''அது ஊர்மிளாவின் சத்தம் போல் தெரிகிறதே,'' என்ற அபிராமி கவலையுடன் விரைய தயாநிதியும் ஈஸ்வரியும் மணமேடையை விட்டு ஓடினர்.

அதை விடப் பெரிய கொடுமைஎன்னவென்றால் மணப்பெண் கோலத்தில் மாலையும் கழுத்துமாய்

அமர்ந்திருந்த சுபத்ரா முதல் ஆளாய் எழுந்து ஓடிவிட்டது தான்.

வீரபத்ரன் வெறிகொண்ட வேங்கை ஆனான். 'இவள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? அவனை வாழ விடக்கூடாது என்று கங்கணம் கொட்டிக் கொண்டு அலைகிறானே' என்று பல்லைக் கடித்தவாறு தாலியை கையில் பிடித்துக் கொண்டு சுபத்ரா சிக்கினால் கழுத்தில் கட்டிவிடும் உத்தேசத்துடன் எழுந்து வேகமாகச் சென்றான்.

ஸ்டோர் ரூமின் உள்ளே சத்தம் கேட்டது. எல்லோரும் உள்ளே சென்று பார்த்தனர். ஊர்மிளா சிங்கவராயனை அங்கே இருந்த பிளாஸ்டிக் முறத்தை வைத்து அடித்துக் கொண்டிருந்தாள். அபிராமி அருகே போய் ஊர்மிளாவின் கை பிடித்து,

"என்ன ஆச்சுடி," என்று வினவினாள்.

'என்ன ஆகியிருக்கும்' என்பதை அங்கிருந்த அனைவரும் ஓரளவு யூகித்து இருந்தனர்.

"அபிராமி.. இவன்.. இவன்.. என்னை..." அவள் வார்த்தைகளை கூற முடியாமல் தடுமாற நடேசன் பாய்ந்து அவனை இழுத்துப்போட்டு மிதித்தான்.

மேலக்காலில் உள்ள ஆண்கள் அனைவரும் அவனை துவைத்து எடுத்துவிட்டனர். தன் கல்யாணம் என்பதை மறந்தும் நினைவில் கொள்ளாதவர்களைச் சீற்றத்துடன் பார்த்த வீரபத்ரன், தன்னை அறியாமல் வாய்விட்டு விட்டான்.

"யோவ். இப்ப என்ன நடந்திருச்சுன்னு இந்தக் குதி குதிக்கறீங்க. இவளைப் பற்றி எனக்குத் தெரியாதா?"

"ஏய்ய்.. நீ கல்யாண மாப்பிள்ளையாய் இருப்பதால் சும்மா விடுகிறேன். அவ இவன்னே பல்லு முப்பத்



ரெண்டையும் பேர்த்து விடுவேன் ஜாக்கிரதை. அவளா இல்ல. உனக்கெல்லாம் பொண்ணு கொடுக்கணும்னு எங்க அண்ணன் நினைச்சார் பாரு. அதுதான் நீ இப்படி தாரம் தெரியாமல் பேசற. நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் அது 'ளொள்'ன்னுதான் குலைக்குமாம். செருப்பை வாசலில்தான் விடணும். அதை வீட்டுக்குள் போட்டு வரக் கூடாது. உன்னை வீட்டுக்குள் கொண்டு வர நினைச்சார் பாரு எங்க அண்ணன். அவரைச் சொல்லணும். எங்க வீட்டு குல விளக்குடா அது. அதைப் பேய் அவள்ங்கிறே. காலக் கொடுமை."

செவ்வந்தி சீறிச் சினந்தெழ வீரபத்ரன் மனம் விண்டு விட்டான். இனிக் கல்யாணம் நடக்காதோ என்ற தவிப்பில்,

"அட நிறுத்தும்மா நீ வேற. கொட்டுற மழையில் அதோ நிற்கிறானே பாண்டியன் நெடுஞ்செழியன் பரம்பரைன்னு ஒருத்தன். வெடுவெடுன்னு உயரமா... அவன் கூட ஒரே குடையில் ஊர் சுத்தினவதானே உங்க வீட்டு குல விளக்கு." என்று விஷத்தைக் கக்கினான்.

அது வரையில் அவன் என்ன பேசுகிறான் என்பதை அறியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நெடுஞ்செழியன் ஓங்கி ஓர் அறை விட்டான். வீரபத்ரன் மூலையில் போய் விழுந்தான். தொடர்ந்து சென்று அவனைத் தூக்கி சட்டையைப் பிடித்தவன் மீண்டும் அடிக்கலானான். எல்லோரும் பிரித்து விட,

"பாவி. அந்தப் பொண்ணை என் தங்கையா நினைக்கிறேன்டா. அக்கா தங்கை கூடப் பிறக்காத நானே என் கூட வேலை பார்க்கும் பெண்ணைத் தங்கையாய் நினைக்கிறேன். நான்கு அக்காமார்கள் கூடப்பிறந்த நாய்... நீ... கண்டபடி பேசுற. உன் நாக்கை கட் பண்ணி

விடுவேன். அடங்கு. இந்தச் செழியனைப் பற்றி உனக்கு தெரியவில்லைன்னு நினைக்கிறேன். விசாரித்துப்பார். நான் கொலை பண்ணக்கூட அஞ்சாதவன்னு சொல்லு வாங்க,'' என்று கொதித்தான் நெடுஞ்செழியன்.

வீரபத்ரன் செழியனைப் பற்றி அறிந்தவன்தான். அவனைப் பற்றி அலுவலகத்தில் பேசப்படும் அனைத்து கதைகளையும் அறிவான். எனவே சப்த நாடியும் ஒடுங்க பெற்றவர்களைப் பார்த்தான். மகனின் பார்வையில் பொருள் புரியாமல் போகுமா அவர்களுக்கு?

புலி பதுங்குவது பாய்வதற்காக. பயத்தினால் அல்ல. அந்தக் கூட்டம் இது பதுங்க வேண்டிய நேரம் என்று முடிவு செய்தார்கள். அவர்கள் தரப்பு பெரிய மனிதர் ஒருவர் நியாயம் பேசினார்.

''சரிங்க. நடந்தது நடந்து போச்சு. அக்காள் புருசன் பண்ணிய தப்பிற்கு மாப்பிள்ளை என்ன பண்ணுவார்? அவங்க அக்கா குடும்பத்தை மண்டபத்தை விட்டுப் போகச் சொல்லி விடலாம். நல்ல நேரம் முடிவதற்குள் கல்யாணத்தை முடித்துவிடலாம்.''

''அப்போ எங்க வீட்டுப் பெண்ணை மாப்பிள்ளை சார் பேசியதற்கு என்ன சொல்கிறீர்கள்'' நடேசன் கோபமாய் கேட்டான்.

''ஏன் தம்பி. சின்ன விசயத்தை பெரிது பண்ணாதீங்க. அக்காள் புருசனை அடிச்சால் யாருக்கும் கோபம் வரத் தானே செய்யும். அந்தக் கோபத்தில் ஏதோ தெரியாமல் நாலு வார்த்தை முன்னே பின்னே பேசி விட்டார். வேணும்னால் மன்னிப்புக் கேட்கச் சொல்கிறேன்.''

''மன்னிப்பு கேட்டால் எல்லாம் சரியாகிவிடுமா?'' இதைக் கேட்டது வேறு யாருமல்ல. மணப்பெண் சுபத்ரா.



''ஏம்மா பெரியவங்க நாங்க பேசி ஒரு முடிவுக்கு வருவோம்ல்ல? கல்யாணப் பெண்ணா லட்சணமா வாயை மூடிக்கிட்டு அடக்க ஒடுக்கமா இரும்மா. நீ சின்னப் பெண். உனக்கு உலகம் தெரியாது.''

''சார். ரெண்டு விசயத்தைத் தெரிஞ்சுக்கங்க. முதலாவது எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லை. அதனால் நான் கல்யாணப் பெண்ணில்லை. இரண்டாவது நான் சின்னப் பெண்ணில்லை. எனக்கு இருபத்தி நான்கு வயதாகிறது.''

''ஏம்மா. வாய் புளிச்சதா மாங்காய் புளிச்சதான்னு பேசக் கூடாதும்மா. ஊர் கூடி மண்டபத்தில் உட்கார்ந்து இருக் கோம். கல்யாணத்தில் இஷ்டமில்லைன்னா என்ன அர்த்தம்? உங்க வீட்டு பத்திரிக்கைக்கு மதிப்புக் கொடுத்து வந்த நாங்க எல்லாம் கேணப் பயலுகளா?''

''அதை உங்களுக்கு பத்திரிக்கை கொடுத்த மாப் பிள்ளை வீட்டுக்காரங்க கிட்டக் கேளுய்யா. எங்க வீட்டுப் பெண்ணை உங்க வகையறாவில் கொடுக்க நாங்க கேண ஜனங்களில்லை. காலக் கொடுமை.''

''இந்தாம்மா செவ்வந்தி. கொஞ்சம் பொறுத்துப் பேசு. கோபம் வந்தால் சண்டை சச்சரவு வருவது சகஜம்தான். இதுக்காக ஒரு கல்யாணத்தையே நிறுத்தலாமா? மாப் பிள்ளை என்ன கூனா? நொண்டியா? முடமா?''

''குணம் கெட்டவன்,'' என்றாள் சுபத்ரா அறுவெறுப் பாக.

''என்னைக் கல்யாணம் பண்ணினால் என் அண்ணி என்ன முறை ஆகவேண்டும்? தங்கை முறை ஆக வேண் டும். தங்கை முறையில் இருக்கும் பெண்ணை தரக் குறைவாய் பேசுபவன் குணம் எப்படி இருக்கும்? இங்கே

பாருங்கள். எனக்கு என் அண்ணியின் கௌரவம் மிக முக்கியம். அதில் தூசு படியும்படி யார் பேசினாலும் பேசியவர்களை வெட்டி விடுவேன். என்னைக் கொலை காரி ஆக்காமல் உங்கள் மாப்பிள்ளையை கூப்பிட்டுப் போய் விடுங்கள்.''

''என்னை விரட்டுகிறாயா? உன்னை யார் கட்ட வரு வார்கள் என்று நான் பார்க்கிறேன்,'' வீரபத்ரன் குளுரைக்க,

''நான் கட்டப் போகிறேன். நன்றாகப் பார்த்துக் கொள்,'' என்றான் நெடுஞ்செழியன்.




''என்ன?'' என்று எல்லோரும் நெடுஞ்செழியனைப் பார்க்க அவன் தயாநிதியின் அருகே வந்து கரம் குவித் தான்.

''எம்.ஏ. பொருளாதாரம் படித்திருக்கிறேன். கலெக்டர் ஆபிஸில் வேலை பார்க்கிறேன். ஒரு அண்ணன் இருக் கிறார். திருமணம் ஆகி விட்டது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர். அம்மா, அப்பா அண்ணனுடன் இருக்கிறார்கள். அண்ணன் குடும்பம் சென்னையில் இருக்கிறது. மதுரை யில் சொந்த வீடுகள் எனக்கும் என் அண்ணனுக்கும் இருக்கின்றன. பக்கத்து கிராமத்தில் வயல்கள் உண்டு. குத்தகைக்கு விட்டு இருக்கிறோம். எனக்கு உங்கள் பெண்ணைக் கொடுப்பீர்களா?''

தயாநிதி குவிந்த அவன் கரங்களைப் பிடித்துக் கொண் டார், ''கட்டாயம் கொடுப்பேன். உன் வேலைக்காகவோ,



படிப்பிற்காகவோ, சொத்திற்காகவோ இல்லை. என் மருமகளை தங்கை என்று சொன்னாயே அந்த ஒரு வார்த்தைக்காக என் பெண்ணைக் கொடுக்கிறேன் கட்டிக் கொள்ளுங்கள்.''

''கல்யாணச் செலவு செய்து மண்டபம் பிடித்து விருந்து ஆக்கி வைத்திருப்பது நாங்க. நோகாமல் நீ வந்து தாலி கட்டுவியா?'' வீரபத்ரனின் அக்காள் கணவர்களில் ஒருவன் சிலும்பினான்.

''ஓகோ. எங்கேயிருந்துய்யா அதுக்கெல்லாம் செலவு பண்ண உங்களுக்கு பணம் வந்துச்சு. எங்க அண்ணன் கிட்ட ரொக்கப் பணமா ஒரு லட்ச ரூபாய் கை நீட்டி வாங்கி அதிலதான 'அம்மாகும்மா' கொளுத்திக்கிட்டு இருக்கீங்க. இதுக்கு செலவானது போக மிச்சப்பணம் எங்கே. எண்ணி எடுத்து வச்சிட்டு நடையைக் கட்டு. யாருகிட்ட விளையாட்டு காட்டறே. காலக் கொடுமை.''

சிங்கம் போல் செவ்வந்தி சிலிர்த்து எழ வீரபத்ரன் கூட்டம் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று மண்டபத்தைக் காலி செய்தது.

விதியின் விளையாட்டை என்னவென்று சொல்ல. காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதையாய் நடேச னும் அபிராமியும் காதல் கல்யாணம் செய்து கொள்ள அதற்குக் காரணம் ஊர்மிளாதான் என்று பயந்து நடுங்கிய வீரபத்ரனின் அச்சம் உண்மையிலேயே மெய்யாகி விட்டது.

ஊர்மிளாவால் தன் திருமணம் தடைபடும் என்ற அவனது அடிமனதின் ஆழமான பயத்தால் ஊர்மிளாவால் உண்மையிலேயே அவன் கல்யாணம் நின்றுபோய் விட்டது.

கெட்டி மேளம் முழங்க சுபத்ராவின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டான் நெடுஞ்செழியன்.

மணமக்கள் தயாநிதி, ஈஸ்வரியின் கால்களில் விழுந்து வணங்கி எழுந்தனர். வரிசையாக பெரியவர்கள் அனைவரின் கால்களிலும் விழுந்து வணங்கி எழுந்த சுபத்ரா,

''அண்ணி அண்ணி... அண்ணி எங்கே?'' என்று தன் கணவனுடன் தேடிச் சென்றாள்.

ஊர்மிளா ஒதுங்கி மண்டப வாசலருகில் நின்று கொண்டிருந்தாள். ''அண்ணி இங்கேயா இருக்கீங்க?'' என்று சுபத்ரா, நெடுஞ்செழியனுடன் அங்கே சென்று பாதம் பணியக் குனிய முனைய,

''வேண்டாம் சுபத்ரா'' என்று தடுத்தாள் ஊர்மிளா.

''எனக்கு உங்கள் ஆசிர்வாதம் வேண்டும் அண்ணி.''

''நீ வாழ வேண்டிய பெண் சுபத்ரா. என் காலில் விழுகாதே.''

''ஏன் அண்ணி. உங்களுக்கு என்ன குறை?''

''பேச நன்றாகத்தான் இருக்கிறது. வாழ்கிறவர்களுக்குத் தெரியும் அதன் வருத்தம்.''

'கோரிக்கையற்று கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலா' என்று எந்த நேரத்தில் கவிஞன் பாடி வைத்தானோ தெரியவில்லை. கணவனைப் பிரிந்த பெண்களை வேலியில்லாத பயிர்ன்னுதானே இந்தச் சமூகம் நினைக்குது. யார் வேணும்னாலும் அவளைப் பேசலாம். யார் வேணும்னாலும் அவளைச் சீண்டிப் பார்க்கலாம்ன்னு தானே ஆகிப்போச்சு...''

''அண்ணி அழுகாதீர்கள் அண்ணி உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம்.''



''யார் இருந்து என்ன பயன் சுபத்ரா? உன் அண்ணன் என் அருகில் இருப்பது போல் ஆகுமா? இந்த மண்டபத்தில் நூற்றுக் கணக்கில் பெண்கள் இருந்தார்கள். அந்த நாய் யாரிடமாவது வாலாட்டியதா? என்னிடம் மட்டும் ஏன் வாலாட்டியது? நான் காவல் காக்க யாருமில்லாதவள் என்றுதானே...''

ஊர்மிளா குமுறிக் குமுறி அழுதாள். தன் கண்களை மூடிக் கண்ணீரைக் கட்டுப்படுத்த அவள் முனைந்து கொண்டு இருந்த போது ஒரு கரம் அவளின் கண்ணீரைத் துடைத்தது.

'அந்த ஸ்பரிஸம்' எதையோ அவளுக்கு உணர்த்த அதிர்ச்சியாய் விழி திறந்தாள். கண்ணீர் விழிகளை திரையாய் மறைக்க கண்ணீர் திரையின் வழியே எதிரே நின்றவன் தெரிந்தான்.

அவன்.. அவன்.. அவன்.. லட்சுமணன் அல்லவா?

'ஹா...' என்று இதயம் கூச்சல் போட்டது. எப்படி.. இது எப்படி சாத்தியம்? இது கனவா இல்லை நனவா? அவள் கணவன் உயிரோடு இருக்கிறான். அவள் எதிரில் ஊனும் உயிருமாய் வந்து நிற்கிறான்.

நம்ப முடியாமல் மயங்கிச் சரிந்தாள் ஊர்மிளா. அனைவரும் சூழ்ந்து கொள்ள மனைவியை வாரி மணப்பெண்ணின் அறைக்கு தூக்கிச் சென்று கட்டிலில் படுக்க வைத்து மின் விசிறியைப் போட்டு விட்டான் லட்சுமணன். விழிகள் மனைவி மீது இருக்க சுற்றி வளைத்த சொந்தங்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டு இருந்தான்.

ஈஸ்வரி மகனைக் கட்டிக் கொண்டு கதறினாள். தயாநிதி அவன் முடி கோதி நாத்தழுதழுக்க துடித்தார். சுபத்ரா அவன் கரம் பற்றி அழுதாள்.

''என்னடா ஆச்சு,'' நடேசன் உடல் பதற வினவ அவன் எடுத்துச் சொல்ல ஆரம்பித்த அதே நேரத்தில் ஊர்மிளாவிற்கு மயக்கம் தெளிந்து விழிப்பு வந்துவிட்டது. எனினும் கணவனைப் பேச விட்டு கண்கள் மூடியபடி படுத்திருந்தாள் அவள்.

'காத்திரு' என்று சொல்லிவிட்டுச் சென்றவன் சொன்னபடி திரும்பி வந்துவிட்டான். பதினைந்து தினங்கள் மட்டுமே அவனுடன் வாழ்ந்தாள். அவை பதினைந்து யுகங்களாய் தோன்றுமளவிற்கு அவள் மனதில் குடியேறியவன் அவளைத் தேடி வந்துவிட்டான். 'இதுதான் உன் வீடு' என்று அவன் ஆணையிட்டுச் சென்றதற்காக பிறந்த வீட்டை மிதிக்காமல் அவள் வாழ்ந்து வந்தாளே. அந்த விரதத்தின் பலனைக் கொடுக்க அவன் வந்து விட்டான். பெற்ற பிள்ளையின் முகத்தில் அவன் முகம் கண்டாளே... அந்த பிள்ளைச் செல்வத்தின் முகம் பார்க்க அவன் வந்து விட்டான்.

'கோரிக்கை'யற்று கிடப்பதாய் புலம்பினாளே. அந்தக் கோரிக்கை கடவுள் செவிகளில் விழுந்ததால் அவளுக்கு உரியவன் அவளை மீட்க வந்துவிட்டான்.

பெரும் காற்றினிலே காத்திருந்த ஊர்மிளாவின் துயரம் தீர்க்க அவள் மனம் கவர்ந்து மணந்த மணாளன் வந்து விட்டான். காதல் கொண்டவளின் கஷ்டம் தீர்க்க வந்து விட்டான்.

'எல்லாக் கதவுகளும் அடைபடும்போது, ஏதேனும் ஓர் கதவைத் திறந்து கொண்டு ஆற்று வெள்ளம் போல் வா' என்று கீதாஞ்சலியில் ரவிந்தீரநாத் தாகூர் மண்டியிட்டு கேட்டாரே... அவர் அழைத்த கடவுள் போல் மனம் சோர்ந்து இனி வாழ்ந்து பயன் என்ன என்று ஊர்மிளா மனம்



நொறுங்கி கதறும்போது அவளைக் கரை சேர்க்க அவள் கணவன் வந்துவிட்டான்.

'பூ இன்னும் மலரவில்லை.

காற்றுத்தான் பெருமூச்சு விட்டபடி செல்கிறது.'

'அவன் ஆசனத்தை தரையில் விரிப்பதில் நேரம் கழிந்துவிட்டது.

அவன் வரவிற்காக காத்திருக்கிறேன்.'

கீதாஞ்சலியில் தாகூர் இப்படித்தான் உருகினார். அதைப் போல் நூறு மடங்கு ஊர்மிளா அவனுக்காக உருகினாள். காலமெல்லாம் காத்திருந்தாள். அவள் காத்திருப்பிற்கு பலன் கிடைத்து விட்டது. அவளது நாயகன் அவளைத் தேடி வந்துவிட்டான்.

இனி அவன் முகத்தை என்று பார்ப்போம் என்று கதறி அழுதாள். இன்று அவன் முகம் காட்ட வந்துவிட்டான். இமை சோர வைத்த விழி மாறாமல் அவன் சென்ற பாதை நோக்கி அவன் நிழல் தேடி தினம் அழுதாள். 'நிழலில்லை நான். நிஜமாய் வந்துவிட்டேன்' என்று அவன் நிஜமாக வந்துவிட்டான்.

ஊர்மிளாவின் காத்திருப்பிற்கு ஒரு முடிவு வந்தது. அவளது கணவன் அவளைத் தேடி வந்துவிட்டான்.




''அன்று நான், ஜோகிந்தர், ஜோசப் மூவரும் பாகிஸ்தானியரை எதிர்த்து தாக்குதல் நடத்திக் கொண்டு இருந்த

போது பாகிஸ்தானியர் எங்களை சுற்றி வளைத்து விட்டனர். நாங்கள் மூவரும் ஆளுக்கு ஒரு திசையில் பிரிந்து ஓடினோம். என் மேல் குண்டு பாய்ந்து விட்டது. நான் கீழே விழுந்துவிட்டேன். ஜோகி, ஜோ இரண்டு பேரும் என்னைக் கவனிக்கவில்லை. பாகிஸ்தானியர் என்னைச் சிறை பிடித்துவிட்டனர்...'' லட்சுமணன் விவரித்துக் கொண்டிருந்தான்.

''அப்போ ஊர்மிளாவின் கடிதம் இருந்த ரத்தக்கறை படிந்த உன் சட்டை எப்படி நம்மவர்களின் கையில் கிடைத்தது?'' நடேசன் வினவினான்.

''அது ஓடும்போது ஒரு மரத்தில் என் சட்டை மாட்டிக் கிழிந்து ரத்தம் கொட்ட ஆரம்பித்து விட்டது. சட்டையைக் கழற்றாவிட்டால் நான் நகர முடியாது. அதனால் சட்டையை கழட்டி விட்டு ஓட ஆரம்பித்தேன்...''

''இத்தனை வருடங்களாய் எங்கிருந்தாய்...?'' தயாநிதி கண்கலங்க கேட்டார். ஈஸ்வரி இன்னும் விசும்பிக் கொண்டிருந்தாள்.

''போன மாதம் வரை நான் பாகிஸ்தான் சிறையில் இருந்தேன். போன மாதம் கைதி பரிவர்த்தனை நடந்த போது..'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கையில் செவ்வந்தி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''அப்படின்னா என்னப்பா?''

''ஒவ்வொரு வருடமும் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் அவரவர் தரப்பில் பிடிபட்டு சிறையிலிருக்கும் போர் கைதிகளை விடுவிப்பார்கள். இந்தியா ஆறு பாகிஸ்தானியரை விடுதலை செய்து அனுப்பி வைத்தால் பாகிஸ்தானும் ஆறு இந்தியரை விடுதலை செய்து அனுப்பி வைக்கும். அதுதான் கைதிகளின் பரிவர்த்தனை... அத்தை.''



''அப்போ நீ பாகிஸ்தான் சிறையில் இருந்தது இந்தியாவிற்கு தெரியுமா?'' கலைமதி கேட்டார்.

''தெரியாது சித்தப்பா. என்னை உயிருடன் பார்த்ததில் என் மேலதிகாரிகளுக்கு மிகவும் ஆச்சர்யம்.''

''ஒரு மாதமாகி விட்டதே நீ வெளியில் வந்து. இங்கு வர ஏன் இவ்வளவு நாளாச்சு,'' சுந்தரம் கேட்டார்.

''நான் திரும்பி வந்த செய்தி கேட்டதும் முறை பிரகாரம் செய்ய வேண்டிய வேலைகள் ராணுவத்தில் நிறைய இருந்தன மாமா. எனது சர்வீஸ் ரிகார்டுகளில் நான் உயிருடன் இருக்கிறேன் என்பது பதிவாக வேண்டும். அதைப் பதிவு பண்ணிவிட்டு உடனே கிளம்பி இன்று அதிகாலையில் மேலக்கால் வந்து சேர்ந்துவிட்டேன். நம் பண்ணை வேலையாள்கள் சுபத்ராவின் கல்யாணத்தைப் பற்றிச் சொல்லி அட்ரஸ் கொடுத்தார்கள். உடனே நேரே இங்கு வந்து விட்டேன்.''

''அப்போ இங்கே நடந்த காலக்கொடுமையை எல்லாம் பார்த்தாயா ராசா?''

''ஆமாம் அத்தை. என் ஊர்மிளாவிற்கு நேர்ந்த அவலங்களை எல்லாம் கண்ணால் பார்த்தேன். காதால் கேட்டேன். நான் முதன் முதலாய் அவளைப் பார்த்தபோது அறியாப் பெண்ணாய் கடவுள் முன் கை கூப்பி வணங்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். ரொம்பச் சின்னப்பெண். கல்யாணம் என்கிற பெயரில் அவள் சிறகொடித்து சிறை வைத்து விட்டேன்.''

''அப்படிச் சொல்லாதீர்கள்,'' என்று பதறி எழுந்தாள் ஊர்மிளா. பெரியவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ஜாடை செய்து கொண்டு அறையை விட்டு வெளியேற கடைசியாய் சென்ற நடேசன் கதவை அடைத்து விட்டுச் சென்றான்.

லட்சுமணனின் விரித்த கைகளுக்குள் தஞ்சம் புகுந்தாள் ஊர்மிளா. கதறித் தீர்த்தாள். பிரிவின் சோகத்தை வேதனையை கண்ணீரால் கரைத்தார்கள் அவர்கள்.

அவளது உச்சியில் முத்தம் பதித்தான் அவன். காற்றில் பிடிமானம் இல்லாமல் ஆடிய தளிர் கொடி போல் தவித் தவள் மெல்ல அவனது அருகாமை உணர்ந்து அமைதி யுற்றாள்.

கணவனின் மார்பிலிருந்து முகம் விலக்கி அவனது முகம் பார்த்தாள் ஊர்மிளா. அவனது முகத்திலிருந்த தழும்புகள் அவளுக்கு வேதனையை ஊட்டின. காய்த்துப் போயிருந்த அவன் உள்ளங்கையில் தவிப்புடன் முகம் புதைத்தாள். அவளது முடி கோதியவன் கூறினான்.

''இவையெல்லாம் வீரத்தின் விழுப்புண்கள். இந்த நாட்டிற்காக நான் போராடிய போராட்டத்தின் நினைவுச் சின்னங்கள். இன்னும் உடம்பில் நிறைய காயம் பட்ட வடுக்கள் இருக்கின்றன. அதைப் பார்த்தால் பயந்து விடுவாய்.''

''பயந்துதான் போய்விட்டேன். இனி எப்படி இந்த உலகில் வாழப் போகிறோம். எப்படி உங்கள் குழந்தையை வளர்க்கப் போகிறோம் என்று...''

''குழந்தை...? என்ன சொல்கிறாய் ஊர்மிளா?'' அவன் பரபரப்பாய் கேட்டான். அவன் விழிகள் மின்னின. அதே நேரம் கதவு திறந்தது. பால முரளி உள்ளே வந்தான். லட்சுமணனைப் பார்த்ததும் மகிழ்வாக,

''அப்பா,'' என்றான்.

அந்த வார்த்தைக்குத்தான் எத்தனை சக்தி? 'அம்மா' என்றுதான் ஓர் குழந்தை முதலில் அழைக்கும். அந்த ஓர் வார்த்தையில் உலகை மறப்பாள் அந்தத் தாய். அதே குழந்தை விவரம் அறிந்து தளர் நடைபோடும் வயதில் 'அப்பா' என்று அழைக்கும். அந்த ஓர் வார்த்தையில் உலகையே வென்றுவிடுவான் அந்தத் தகப்பன்.



பாலமுரளிக்கு தன்தந்தையின் நினைவு என்றும் இருக்க வேண்டும் என்பதில் ஊர்மிளா குறியாய் இருப் பாள். மகனை மடியில் அமர வைத்துக் கொண்டு போட்டோ ஆல்பத்தில் லட்சுமணன் முகம் காட்டி தினமும் கதை சொல்லுவாள்.

'இதோ பார்டா முரளி. இவர்தான் உங்க அப்பா. எங்கே அப்பா சொல்லு. குட் அப்பா மிலிடிரியில் பெரிய ஆபிஸர். அவர் நம்ம எதிரி நாட்டோட சண்டை போட்டார். எப்படித் தெரியுமா டிஷ்யூம்.. டிஷ்யூம்.. அப்புறம் துப்பாக்கியை எடுத்து அவங்களை ஷூட் பண்ணிட்டார். எப்படி டுமில். டுமில்ன்னு.. நீயும் அப்பா மாதிரி பெரிய வீரனா ஆகணும்.. சரியா?''

தினமும் தாய் சொல்லும் கதை கேட்டு தந்தையின் முகத்தை போட்டோவில் பார்த்து வளர்ந்தவன் பால முரளி. அவனுக்கு தந்தையை உடனே அடையாளம் தெரிந்துவிட்டது.

லட்சுமணனால் நம்ப முடியவில்லை. தன் மகனா? அவன் பிறந்ததைக் கூட லட்சுமணன் அறியவில்லை. ஆனால் அவனோ வாய் நிறைய 'அப்பா' என்று அழைக் கிறான். மெய்சிலிர்க்க மகனை வாரி எடுத்து முத்தங்கள் வழங்கினான் லட்சுமணன். பாலமுரளியும் தந்தையின் தோள் சாய்ந்து தன் அன்பை வெளிப்படுத்தினான்.

விலகி நின்ற உறவினர் கூட்டம் உள்ளே வந்தது. செவ்வந்தி தகப்பனையும் மகனையும் சேர்த்துக் கண்ட நிறைவுடன்,

''இவன் கையைப் பிடித்து கண்ணில் ஒற்றிக் கொள் லட்சுமணா. இவன் மட்டும் உன் பெண்டாட்டி வயிற்றுக் குள் இருந்து கொண்டு அவளை வாந்தி எடுக்க வைக்காமல் இருந்திருந்தால் உன் பெண்டாட்டி இந்நேரம் சாம்பலாத்தான் இருந்திருப்பாள்,'' என்று கூறினாள்.

''ஏன் அத்தை...''

''அவ தூக்கு மாட்டிக்கப் போனாள்டா.. அப்ப வாந்தி வரவும் திகைச்சுப் போய் அந்த நினைப்பை விட்டாள். அப்புறம் உன் மகனுக்காக உயிர் வாழறாள்.''

லட்சுமணன் ஊர்மிளாவைப் பார்த்த பார்வையில் ஆயிரம் கோடி அர்த்தங்கள்... உணர்வுகள் இருந்தன. அவை அவர்கள் இருவருக்கு மட்டுமே புரியும் உணர்வுகள்.

''இப்போதாவது எங்களை ஆசிர்வதிப்பீர்களா அண்ணி,'' சுபத்ரா நெடுஞ்செழியனுடன் அண்ணன், அண்ணியின் தாள் பணிந்தாள். மனமார மணமக்களை ஆசிர்வாதம் செய்த ஊர்மிளாவின் நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டின் மேல் குங்குமம் இட்டு விட்டாள் அபிராமி.

மறுநாள் லட்சுமணனும், ஊர்மிளாவும் மகனுடன் தாடிக்கொம்பு போனார்கள்.




ஜனார்த்தனத்திற்கு உடம்பு சரியில்லாததால் சத்திய வதி அவரை உடனிருந்து பார்த்துக் கொள்ள வேண்டி இருந்தது. எனவே அவர்களால் சுபத்ராவின் திருமணத் திற்கு போக முடியவில்லை.



பலராமனை அனுப்பலாம் என்றால் அவனுக்கு அன்று தான் முக்கிய வேலை ஒன்று வந்துவிட்டது. அதனால் ஜனார்த்தனத்தின் உடல்நிலை சரியானதும் மேலக் காலுக்கு சென்று திருமணத்தை விசாரித்து விட்டு வரலாம் என்ற நினைவுடன் இருந்தாள் சத்தியவதி.

உள்ளே ஜனார்த்தனம் கட்டிலில் படுத்திருக்க அவர் அருகில் அமர்ந்து அவர் குடிக்க கஞ்சியை ஆற்றிக் கொண்டு இருந்த சத்தியவதி வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

வாசலில் பாலமுரளி நின்று கொண்டிருந்தான்.

''பாட்டி'' என்று மழலையாய் அவன் அழைக்க,

''டேய் முரளி... யார் கூட வந்தே,'' என்று கேட்டபடி ஆர்வமாய் பாசத்துடன் தூக்கிக் கொண்டு சத்தியவதி வினவ,

''அப்பா அம்மா கூட வந்தேன்'' என்றான் அவன்.

''யாரு அபிராமியும், நடேசனுமா வந்திருக்காங்க,'' என்றபடி அவள் வாசல் பக்கம் சென்று தேட,

''அம்மா,'' என்றபடி சத்தியவதியின் பின்னாலிருந்து கண் பொத்தினாள் ஊர்மிளா.

''ஊர்மி.. என் கண்ணே..'' என்று கரம் விலக்கி நம்ப முடியாமல் மகள் முகம் பார்த்த சத்தியவதி,

''என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லையே. இப்பவாவது பெற்றவங்க மேல் உனக்கு இரக்கம் வந்ததே. அவர் இல்லாமல் வரமாட்டேன்னு பிடிவாதமா இருந்தவ மனம் இரங்கி எங்களைப் பார்க்க வந்து விட்டாயே...''

''அம்மா அவர் இல்லாமல் நான் எப்படி வருவேன்? அவரோடுதான் வந்திருக்கிறேன்.''

ஓர் வினாடி மகளுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று மனம் கலங்கிவிட்டாள் சத்தியவதி.

''அம்மாடி ஊர்மிளா... உடம்புக்கு என்னம்மா செய்கிறது. உள்ளே வாடி கண்ணு,'' என்று பரிதவித்தவள் சுவர் மறைவில் இருந்து வெளிப்பட்ட மருமகனைப் பார்த்ததும் மயங்கியே விழுந்துவிட்டாள்.

சத்தம் கேட்டு எழுந்து வந்த ஜனார்த்தனம் மனைவிக்கு மயக்கம் தெளிவிக்க மறந்தவராய் மகளையும், மருமகனையும் விழியகல பார்த்தார்.

அதற்குள் அக்கம் பக்கம் கூடி விட அவர்கள் முதலில் சத்தியவதியின் மயக்கம் தெளிவித்தனர். மயக்கம் தெளிந்து எழுந்தவள் ஆனந்தத்தில் அழுது ஓய்ந்தாள்.

''நான் கும்பிடும் பெருமாள் என்னைக் கைவிட மாட்டாருன்னு எனக்குத் தெரியும் ஊர்மி. அவர் ஏன் இப்படிச் செய்தார்ன்னு நான் நினைக்காத நேரமில்லை. எது செய்தாலும் நல்லதிற்குத்தான் செய்வார்ன்னு அவர் உணர்த்திட்டார். கண் திறந்து என்னைப் பார்த்துவிட்டார். என் கவலையை தீர்த்துவிட்டார்.''

அவள் திரும்பத் திரும்ப புலம்பினாள். சுவையாய் விருந்து சமைத்துப் பரிமாறினாள். ஜனார்த்தனம் மகளையும் மருமகனையும் பக்கத்தில் பக்கத்தில் அமரவைத்து சாப்பிட வைத்து கண்களில் நீர் மல்க ரசித்துப் பார்த்தார்.

வாசலில் சத்தம் கேட்டது. பலராமன் உள்ளே வந்தான்.

''அக்கா,'' என்று திகைத்தவன்,

''மாமா...'' என்று ஆச்சர்யமாய் கூறினான்.

தன் தமக்கையின் கணவரின் போர்க்கள அனுபவங்களை கேட்டுக் கொண்டே பாலமுரளியைத் தூக்கிக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தான் பலராமன்.



கணவனின் மறுபக்கம் அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டு ஊர்மிளா நடந்து கொண்டு இருந்தாள்.

அவர்கள் தாடிக்கொம்பு பெருமாள் கோவிலுக்குள் பிரவேசித்தார்கள். பெருமாளுக்கு அர்ச்சனை அபிஷேகம் எல்லாம் சிறப்பாக செய்து விட்டு கண்மூடி வேண்டி நின்றாள் ஊர்மிளா.

'உன் முகம் பார்க்காமல் இத்தனை நாள் இருந்து விட்டேன். எனை நீதான் அவ்வாறு இருக்க வைத்தாய். என்றாவது ஓர் நாள் எனை அழைத்து தரிசனம் தருவாய் என்று மனதார நம்பினேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. எனக்குத் தரிசனம் கொடுத்து விட்டாய் பெருமாளே.'

கண்மூடி அவள் நின்ற கோலம் முதன் முதலில் அவளைப் பார்த்த நாளை நினைவூட்ட அந்நாளின் நினைவில் குறும்பு கொப்புளிக்க மனைவியைப் பார்த்தபடி நின்றான் லட்சுமணன்.

வேண்டி முடித்துக் கண் திறந்தவள் அர்ச்சகர் கொடுத்த பூவையும் குங்குமத்தையும் பெற்றுக் கொண்டு,

''போகலாமா?'' என்று கணவனைப் பார்த்து வினவினாள்.

''எங்கே என்று சொன்னால் தேவலை,'' என்று அன்று போல் இன்றும் அவன் அவள் விழியைப் பார்த்துக் கூற ஊர்மிளாவிற்கு அந்நாளின் நினைவு வந்துவிட்டது.

''அடேங்கப்பா. கூப்பிட்டவுடன் வந்துவிடும் ஆளைப் பார்.''

''நீ முதலில் கூப்பிட்டுப் பார்.''

''ஸ்ஸ். பக்கத்தில் தம்பி இருக்கிறான்.''

''ம்ம். என் மகனுடன் பேசிக் கொண்டு இருக்கிறான்.''

"உங்களைத் திருத்தவே முடியாது."

"வீணாய் முயற்சி பண்ணாமல் விட்டுவிடு."

"இனி விடுவதாக இல்லை." ஊர்மிளா கண்கலங்கக் கூறினாள்.

அந்த நேரம் பார்த்து பாலமுரளி இறங்கி கோவில் பிரகாரத்தில் ஓட பலராமன் துரத்திக் கொண்டு சந்தோசமாய் பின்னால் ஓடினான். லட்சுமணனும் ஊர்மிளாவும் கோவில் பிரகாரத்தில் நடந்து வந்தார்கள். அவர்களது வழக்கமான இடம் வந்ததும் ஊர்மிளாவின் நடை நின்றுவிட்டது.

"வெரிகுட் மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறாய்."

"நீங்கள் மட்டும் மறந்துவிட்டீர்களா?"

"ம்ம். உட்காருடி போகலாம்."

ஊர்மிளா அவன் அருகில் அமர்ந்தாள். லட்சுமணன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு அவளருகில் நெருங்கி அமர்ந்தான். ஊர்மிளா விலகி அமர்ந்தாள்.

"ஏண்டி?"

"இது கோவில் சுவாமி. உங்களுக்கு காதல் பண்ண வேறு இடம் கிடைக்கவில்லையா?"

"ஆரம்பித்துவிட்டாயா?"

"நீங்கள்தான் ஆரம்பித்துவிட்டீர்கள்."

"எங்கே ஆரம்பிப்பது.. நேற்று இரவு பூராவும் ஊர் ஆள்கள் மத்தியில் உட்கார்ந்து கொண்டு கார்கில் சண்டை பற்றிப் பெருமை பேசி முடித்தாகிவிட்டது. காலையில் கிளம்பி உன் தாய் வீட்டிற்கு வந்தால் இங்கேயும் அதே கதைதான்.. அப்புறம் எங்கே.. எப்படி.. ஆரம்பிப்பது..."

ஊர்மிளா படக்கென்று எழுந்து கொண்டாள். லட்சுமணன் எழுந்து கொள்ளாமல் உட்கார்ந்து இருக்க முறைத்தாள்.



"இப்போ வரப்போகிறீர்களா இல்லையா?"

"பெண்டாட்டியைக் கோபப்படுத்தி பார்ப்பதில் தனி சுகம் இருக்குடி. அதை அனுபவதித்துக் கொண்டிருக்கிறேன்."

ஊர்மிளாவின் முகம் சிவந்தது. மனம் மிருதுவானது. மெல்ல கணவன் கரம் பிடித்து இழுத்து எழுப்பியவள் அவனுடன் இணை சேர்ந்து வீடு நோக்கி நடந்தாள். அவள் மனம் கூறியது.

'நன்றி பெருமாளே!'




கொடைக்கானலின் ஏரியில் படகு சவாரி செய்து கொண்டிருந்தார்கள் அவர்கள். பாலமுரளி ஆனந்தமாய் துள்ளிக்குதித்து அந்த படகுச் சவாரியை அனுபவித்தான். ஊசி மரக் காடுகளில் அலைந்தார்கள். மகனை குதிரைச் சவாரி செய்ய வைத்து படம் பிடித்தான்.

"புதிதாய் கல்யாணமாணவர்கள் சுபத்ராவும், நெடுஞ் செழியனும். அவர்கள் சென்னைக்கு போக நாம் கொடைக் கானல் கிளம்பி வந்துவிட்டோமே. அத்தை மாமா என்ன நினைப்பார்கள்."

"நீதான் சொல்லேன்."

"நீங்கதான் விட்டுப் போன தேனிலவுன்னு சொல்லிட் டிங்களே. அப்புறம் என்ன சொல்லுவாங்களாம்."

"என் அப்பா அம்மாவைப் பற்றி நான் சொல்லியா உனக்குத் தெரியணும்?"

"அவர்களாவது என் மாமனார் மாமியார் என் பக்கம் நின்றார்கள். செவ்வந்தி சித்தியும், சாந்தா அத்தையும் நம் கல்யாணத்தில் பேசிய விதத்தைப் பார்த்து நான் ரொம்ப பயந்து விட்டேன் தெரியுமா? ஆனால் அவர்கள் இரண்டு பேரும் என்னைப் புரிந்து கொண்டு எவ்வளவு ஆதரவாய் இருந்தார்கள் தெரியுமா?"

"ஒரு ராணுவ வீரன் தன் மனைவியை பெற்றவர்கள் உற்றவர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு கடமையாற்றச் செல்கிறான். அவன் திரும்பி வரும் வரை இப்படிக் காவல் காக்கும் சொந்தங்கள் இருந்துவிட்டால் அவன் பாடுபட்ட தற்கு ஓர் அர்த்தம் கிடைக்கும்."

"எவ்வளவு பேருக்கு அது வாய்த்திருக்கிறது? எனக்குக் கிடைத்த சொந்தங்கள் போல் மற்ற ராணுவ வீரர்களின் மனைவிகளுக்கு சொந்தங்கள் கிடைத்தால் அவள் பாக்கியசாலி."

"ஆனால் நிறையப் பேருக்கு அப்படி அமைவதில்லை என்பதுதான் உண்மை. என் கூட பணி புரிந்த ஒவ்வொரு ராணவ வீரனின் குடும்பத்திலும் ஓர் கதை உண்டு. நிறையப் பேருக்கு சொந்தங்கள் சோதனைகளாக அமைந் திருக்கின்றன."

"அதே சமயம் நிறையப் பேருக்கு எனக்கு கிடைத்தது போல் மகிழ்வான வாழ்வு கிடைத்திருக்கிறது என்பதும் உண்மைதான்."

"நீ மகிழ்வாய் இருக்கிறாயா?"

"ஆமாம்."

"மனதாரச் சொல். என்னுடன் வாழ்ந்த வாழ்வில் என்ன கண்டாய்? வேதனையும் சோதனையும் தானே?"

"யாருக்காக கஷ்டப்பட்டேன்? காவல் காக்க நீங்கள் சென்றிருந்தீர்கள். போர் புரிந்தீர்கள். வெற்றியுடன் மீண்டு



வந்திருக்கிறீர்கள். உங்களுக்காக காத்திருப்பதும் தனி சுகம்தான்."

இரவில் மகனை உறங்க வைத்து விட்டு மனைவியின் அருகில் நகர்ந்து படுத்தான் அவன். உறங்கிக் கிடந்த அவள் உணர்வுகள் விழித்துக் கொண்டன. அவனால் மட்டும் எழுப்பக் கூடிய உணர்வுகள்.. அவனைப் பார்த்தால் மட்டும் எழும் உணர்வுகள்.. அவனை மட்டும் வேண் டும் உணர்வுகள்.. பொங்கி எழுந்தன.

அவள் இதழோடு இதழ் சேர்த்தான் அவன். அன்று விட்டுப் போன கதையை தொட்டுத் திரும்பி வந்தார்கள். விடியலின் அருகாமையில் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு துயிலில் ஆழ்ந்தார்கள்.

பதினான்கு தினங்கள் சென்றபின் மேலக்கால் திரும்பி னார்கள்.

"உண்மையிலேயே சொல்கிறாயா? நீ மிலிடிரிக்குத் திரும்பப் போகப் போவதில்லையா?" நடேசன் சந்தோச மாய் கேட்டான்.

"ஆமாம்டா. நான் வரும்போதே என் சர்வீஸை நீடிக்க விருப்பமில்லை என்று எழுதிக் கொடுத்து விட்டு வந்து விட்டேன். பதினைந்து வருடங்கள் ராணுவத்தில் இருந் திருக்கிறேன். ஒரு போரைச் சந்தித்து போர் புரிந்திருக் கிறேன். அதில் சில வெற்றிகள் பெற்றிருக்கிறேன். ஆறு வருடம் சிறையில் கழித்து விட்டேன். நாட்டிற்கு கடமை யாற்றிவிட்ட மனநிறைவுடன் விருப்ப ஓய்வு வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். இனி வீட்டிற்கு ஒரு நல்ல மகனாக, அண்ணனாக, கணவனாக, தகப்பனாக என் கடமையை ஆற்ற வேண்டும். எக்ஸ்-சர்வீஸ்மேன் கோட்டாவில் நிச்சயம் எனக்கு அரசு வேலை கிடைக்கும். அதுவரை அப்பாவிற்கு உதவியாக நிலங்களைப் பார்த்துக் கொள்ளப் போகிறேன்."

ஊர்மிளா வேலைக்கு சென்று வந்தாள். அதே கார்தான். ஒரு வித்தியாசம் என்னவென்றால் டிரைவர் சீட்டில் நடேசனுக்குப் பதில் லட்சுமணன் அமர்ந்து இருந்தான். கார் வாங்கிய இத்தனை நாள்களில் முன் சீட்டில் அமர்ந்திராத ஊர்மிளா முன் பக்கம் கணவன் அருகில் அமர்ந்து வேலைக்குச் சென்று வந்தாள்.

நடேசன் கடமை முடிந்த நிறைவுடன் தாய், தந்தையை அழைத்துக் கொண்டு அபிராமியின் ஆசைப்படி மதுரையில் வசிக்கப் போய் விட்டான்.

சுபத்ராவும் நெடுஞ்செழியனும் மதுரையில் தனிக் குடித்தனம் நடத்தினார்கள். மனைவியை மகாராணி போல் வைத்துக் கொண்டான் நெடுஞ்செழியன்.

பலராமன் மதுரையில் இருந்த பொறியியல் கல்லூரியில் பொறியியல் நான்காமாண்டு படித்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு வாரமும் ஊர்மிளாவும், லட்சுமணனும் மகனுடன் தாடிக்கொம்பு சென்று வந்தார்கள். மறக்காமல் பெருமாள் கோவிலுக்கு சென்று வந்தனர். ஊர்மிளா மறுபடியும் கர்ப்பமானாள். இந்த முறை பிறந்த வீட்டில் அவள் சீராடினாள்.

பதினாறு வயதான கலைமதியின் மகன் ராமசாமியும் பதினான்கு வயதான செவ்வந்தியின் மகள் சீதாவும் ஒரு மார்க்கமாய் பார்வைகளை பரிமாறிக் கொண்டார்கள். அதைக் கண்டும் காணாமல் இரு தாய்மார்களும் மனதிற்குள் மகிழ்ந்து கொண்டார்கள்.

பிரிந்து சென்ற லட்சுமணனின் வரவிற்காகக் காத்திருந்த ஊர்மிளாவின் கதையைக் கேட்டால் கல்லும் உருகும். அவள் காத்திருப்பதை ஒரு தவமாய் செய்தாள். தவத்திற்கு பலன் கிடைத்தது. அவளது கணவன் மீண்டு வந்தான். மீண்டும் அவளைக் காண வந்துவிட்டான்.

காத்திருப்போம். பலன் கிடைக்கும்.

*